1531

T.N.L.A. Debates

Official Report

Vol. 6 No. 1

1980

D 1
V211,31 N80
N81.6.1
123065

34/81

வெளியீடு 28-12-1980] [Issued 28-12-1980

DEPARTMENT OF TAMIL NADU ARCHIVES AND HISTORICAL RESEARCH
1981

(531)

# தமிழ் நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## பணித்துறை வெளியீடு—OFFICIAL REPORT

சனிக்கிழமை 1980 ஜூலை 26—தொகுதி VI—எண் 1
Saturday 26th July 1980—Volume VI—No. 1

©
தமிழ் நாடு அரசு—GOVERNMENT OF TAMIL NADU
1980

சட்டமன்றப் பேரவைத் துறை, சென்னை–600 009
Assembly Department, Fort, St, George, Madras-600 009.

விலை 3-15 காசுகள்] [Price 3-15 Paise

123065

# உள்ளடக்கம்.

26—7—1980

பக்கங்கள்.

(i) தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் .. .. .. .. i—iv

(ii) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் .. .. .. .. v—vi

(iii) தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பெற்ற) பெயர் பட்டியல் .. .. .. vii—xv

1. வினாக்கள்-விடைகள்—
   உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. 1—33

2. அறிவிப்புகள்— 34
   (அ) மதிப்பீட்டுக் குழு—தேர்தல் .. 35
   (ஆ) பொதுக்கணக்குக் குழு—தேர்தல் .. 36
   (இ) பொது நிறுவனங்கள் குழு—தேர்தல் .. 124—127
   (ஈ) பேரவை அலுவல் .. .. .. 128
   (உ) அலுவல் ஆய்வுக் குழுவிற்கு நியமனம் ..

3. கவன ஈர்ப்புகள்—
   (அ) சென்னை அரசினர் ஸ்டான்லி மருத்துவமனை கடைநிலை ஊழியர்கள் பிரச்னை .. 37—39
   (ஆ) சிற்றார் அணை நீர் குறிப்பிட்ட நேரத்தில் திறந்து விடுதல் .. .. 39—41

4. ஒழுங்குப் பிரச்னை—
   அலுவல் ஆய்வுக் குழு மதிக்கப்பெறவில்லை என்பது .. .. .. .. 42 60

பக்கங்கள்.

5. வரவு-செலவுத் திட்டம் 1980-81 வாக்கெடுப்பு (தொடர்ச்சி)—

(அ) கோரிக்கை எண் 22 கால்நடை வளர்ப்பு .. .. .. } 61—124
(ஆ) கோரிக்கை எண் 30—சமூக நலன் .. }

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் 61, 62, 118—123
திரு. ஜே. சி. டி. பிரபாகரன் .. .. 62—65
திரு. சி. கணேசன் .. .. .. 65—72
திரு. கே. ஆர். சுந்தரம் .. .. 72—79
திரு. சீ. சிவப்பிரகாசம் .. .. .. 79—82
திரு. ஜி. மூர்த்தி .. .. .. 83—86
திரு. ரீ. டி. கருப்பையா .. .. 86—89
செல்வி. வி. விசயலட்சுமி .. .. 89—91
திரு. சு. முத்துக்கிருஷ்ணன் .. .. 91—94
டாக்டர் கே. பி. இராமலிங்கம் .. 94—100
திரு. குமரி அனந்தன் .. .. .. 100—108
திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் .. 109—114
திரு. கோவைத்தம்பி .. .. .. 114—118

**பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** .. 128

## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்.

### தமிழ்நாடு ஆளுநர்

### திரு. பிரபுதாஸ் பட்வாரி.

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. **மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்** (முதலமைச்சர்)—பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சி பணியாளர், மாவட்ட வருவாய் அதிகாரிகள், மாவட்ட துணை ஆட்சியாளர் சம்பந்தப்பட்டவை, காவல், இலஞ்ச ஒழிப்பு, பொதுப்பணித் துறை மற்றும் பொதுப் பணித்துறை (நிறுவனம்) சம்பந்தப்பட்ட அலுவல்கள்.

2. **மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** (நிதி அமைச்சர்) —நிதி, திட்டம், சட்டமன்றம், தேர்தல்கள், உணவு, மீன் வளம், பிற்பட்ட வகுப்பினர், இளைஞர் அணி, விலைவாசிக் கட்டுப்பாடு, முன்னாள் ராணுவத்தினர்.

3. **மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்** (மின்துறை அமைச்சர்)—மின்சாரம், இரும்பு எஃகு கட்டுப்பாடு.

4. **மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி** (ஊரகத் தொழில் அமைச்சர்)—கிராம குடிசை சிறு தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள்; பால், பால் பெருக்குத் திட்டம், ஆவணப் பதிப்புத் துறை.

5. **மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்** (வருவாய்த் துறை அமைச்சர்)—வருவாய்கள், வணிக வரிகள், ஆயத்துறை, மக்கள் தொகைக் கணக்கு.

6. **மாண்புமிகு திரு. இராம.வீரப்பன்** (செய்தி அறநிலையத் துறை அமைச்சர்)—செய்தி, விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், திரைப்படச் சட்டம், இந்து அறநிலையத் துறை, காடுகள், சின்கோனா, மது அனுமதிச் சீட்டு வழங்கல்.

7. **மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்** (கல்வி அமைச்சர்)—தொழில் நுட்பக் கல்வி உள்ளிட்ட கல்வி, ஆட்சி மொழி.

8. **மாண்புமிகு திரு. கா.காளிமுத்து** (வேளாண்மைத்துறை அமைச்சர்)— வேளாண்மை, வேளாண்மை மறுநிதி, வேளாண்மை பொறியியல் பிரிவு மற்றும் வேளாண்மை பொறியியல்.

9. மாண்புமிகு திரு. சி. பொன்னையன் (கூட்டுறவு-சட்ட அமைச்சர்)—சட்டம், நீதிமன்றங்கள், சிறைகள், எடைகள், மற்றும் அளவைகள் பற்றி சட்டம் இயற்றல், நிறுவனங்கள் பதிவு, கடன் வழங்கல் மீதான நிவாரணச் சட்டம், சீட்டு பற்றிய சட்டம், கூட்டுறவு.

10. மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு (உள்ளாட்சித்துறை அமைச்சர்)—நகராட்சிகள், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், சமுதாய வளர்ச்சி, கிராமப்புற கடன் நிவாரணம், பூமி தானம், கிராமதானம், நெடுஞ்சாலைகள்.

11. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் (தொழிலாளர் நலத்துறை அமைச்சர்) தொழிலாளர், வீட்டு வசதி, குடிசை மாற்று வாரியம், புள்ளி விவரங்கள், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், நகர அமைப்பு, இட வசதிக் கட்டுப்பாடு.

12. மாண்புமிகு டாக்டர் திரு. எச். வி. ஹண்டே (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்)—மக்கள் நல்வாழ்வுத் துறை.

13. மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது (நீர்ப்பாசனத் துறை அமைச்சர்)—வேளாண்மை பணி, கூட்டுறவு சங்கங்கள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டங்கள், வஃபு.

14. மாண்புமிகு திரு. எஸ். முத்துசாமி (போக்குவரத்துத் துறை அமைச்சர்)—அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம், துறைமுகங்கள்.

15. மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு (தொழில் அமைச்சர்) பெருந் தொழில்கள், சுரங்கங்கள், கனிப் பொருள்கள், நெசவாலைகள்.

16. மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் (கைத்தறி, கதர்த்துறை அமைச்சர்)—கைத்தறி, கதர், மது அனுமதிச் சீட்டு வழங்கல் நீங்கலாக மதுவிலக்கு, பயண இசைவுச் சீட்டு.

17. மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி (அரிசன நலத் துறை அமைச்சர்)—அரிசன நலம், எழுது பொருள்-அச்சுத் துறை, அரசு அச்சகம், அச்சுக் காகிதக் கட்டுப்பாடு, மலை வாழ் பழங்குடியினர், பிணைத் தொழிலாளர், வேலை வாய்ப்பும் பயிற்சியும்.

18. மாண்புமிகு திருமதி. கோமதி சீனிவாசன் (சமூக நலத் துறை அமைச்சர்)—மகளிர், குழந்தைகள் நலம் உள்ளிட்ட சமூக நலம், கால்நடை பராமரிப்பு, பிச்சைக்காரர்கள் விடுதி, அனாதை விடுதிகள், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள், வெளியேற்றப்பட்டவர்கள் நலம், சீர்திருத்த நிர்வாகம்.

## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

153)

*Governor of Tamil Nadu*

THIRU PRABHUDAS PATWARI.

### MEMBERS OF THE COUNCIL OF MINISTERS.

1. HON. THIRU M. G. RAMACHANDRAN (Chief Minister)—Public, General Administration, Indian Administrative Service, District Revenue Officers, Deputy Collectors, Police, Prevention of Corruption Public Works Department and Establishment Matters relating to Public Works Department.

2. HON. Dr. V. R. NEDUNCHEZHIYAN (Minister for Finance)—Finance, Planning, Legislature, Elections, Food, Fisheries, Backward Classes, Youth Service Corps, Price Control and Ex-Servicemen.

3. HON. THIRU S. RAMACHANDRAN (Minister for Electricity)—Electricity, Iron and Steel Control.

4. HON. THIRU K. A. KRISHNASAMY (Minister for Rural Industries)—Rural Industries including Village, Cottage and Small Industries, Milk, Dairy Development and Registration.

5. HON. THIRU S. D. SOMASUNDARAM (Minister for Revenue)—Revenue, Commercial Taxes, Excise and Census.

6. HON. THIRU R. M. VEERAPPAN (Minister for Information and Religious Endowments)—Information and Publicity, Film Technology, Tourism, Tourism Development Corporation, Cinematograph Act, Hindu Religious and Charitable Endowments, Forest and Cinchona and Grant of Liquor Permits.

7. HON. THIRU C. ARANGANAYAGAM (Minister for Education)—Education including Technical Education and Official language.

8. HON. THIRU K. KALIMUTHU (Minister for Agriculture)—Agriculture, Agricultural Refinance, Agricultural Engineering Wing and Agro-Engineering.

9. HON. THIRU C. PONNAIYAN (Minister for Co-operation and Law)—Law, Courts, Prisons, Legislation on Weights and Measures. Registration of Companies, Debt Relief including Legislation on Money Lending and Legislation on Chits and Co-operation.

10. HON. THIRU P. KULANDAIVELU (Minister for Local Administration)—Municipal Administration, Panchayats and Panchayat Unions, Community Development, Rural Indebtedness, Bhoodan and Gramdhan and Highways.

11. HON. THIRU S. RAGHAVANANDHAM (Minister for Labour)—Labour, Housing, Slum-Clearance Board, Statistics, Tamil Nadu Water Supply and Drainage Board, Town Planning and Accommodation Control.

12. HON. Doctor H. V. HANDE (Minister for Health)—Health.

13. HON. THIRU K. RAJA MOHAMMED (Minister for Irrigation)—Agro-Service Co-operative Societies, Irrigation including Minor Irrigation and Wakf.

14. HON. THIRU S. MUTHUSAMY (Minister for Transport)—Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Ports.

15. HON. THIRU S. THIRUNAVUKKARASU (Minister for Industries)—Large Scale Industries, Mines and Minerals and Textiles.

16. HON. THIRU S. N. RAJENDRAN (Minister for Handlooms and Khadi)—Handlooms, Khadi, Prohibition excluding grant of Liquor permits and Passports.

17. HON. THIRU M. VIJAYASARATHI (Minister for Harijan Welfare)—Harijan Welfare, Stationery and Printing, Government Press, News Print Control, Hill Tribes and Bonded Labour and Employment and Training.

18. HON. THIRUMATHI GOMATHI SRINIVASAN (Minister for Social Welfare)—Social Welfare including Women and Children Welfare, Animal Husbandry, Beggars Home, Orphanages, Indians Overseas, Refugees and Evacuees and Correctional Administration.

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்.

### பேரவைத் தலைவர்

*மாண்புமிகு திரு. க. இராசாராம்.

### பேரவைத் துணைத் தலைவர்

*மாண்புமிகு திரு. பி. எச். பாண்டியன்.

### † மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

1. திரு. இரா. முத்தையா,
2. திரு. கோ. விஸ்வநாதன்,
3. திரு. பெ. சு. திருவேங்கடம்,
4. திரு. ஓ. சுப்ரமணியன்,

### சட்டமன்றப் பேரவைச் செயலாளர்.

திரு. கி. மு. அழகர்சாமி, பி.ஏ., பி.எல்.

### துணைச் செயலாளர்கள்,

திரு. த. இராதாகிருஷ்ணன்,

திரு. கே. பாலகுரு, பி.ஏ.

### குழு அலுவலர்,

திரு. ச. பாஷ்யம், பி.ஏ. (ஆனர்ஸ்).

---

* 1980-ம் ஆண்டு ஜூன் திங்கள் 21-ம் நாளன்று தேர்ந்தெடுக்கப் பெற்றார்கள்.

† 1930-ம் ஆண்டு ஜூன் திங்கள் 26-ம் நாளன்று நியமனம் செய்யப் பெற்றார்கள்.

## சார்புச் செயலாளர்கள்.

திரு. வி. சீதாராமன், பி.காம்.,
திரு. பி. எம். பத்மநாபன் நம்பியார், பி.ஏ.,
திரு. பெ. பள்ளிகொண்ட பெருமாள், பி.ஏ., பி.எல்.,
திரு. செ. க. ஜானகிராமன், பி.ஏ., பி.எல்.,
திரு. பெ. ச. கனகசபாபதி, பி.ஏ., பி.எல்.,
திரு. பெ. பாலகிருஷ்ணன், பி.காம்.,
திரு. ஜெ. ரெஜினால்ட் ஜான், பி.ஏ., (எஸ்டேட் அதிகாரி).
திரு. ப. கோதண்டராமன்—பேரவைத் தலைவரின் தனிச் செயலாளர்.

## தலைமை நிருபர்.

திரு. மா. சந்திரசேகரன்.

## விவாதப் பதிப்பாளர்.

திரு. டி. எஸ். அனந்தநாராயணன், பி. லிட்.

தொகுதிகள் உள்ளிட்ட தமிழ் நாடு சட்ட மன்றப் பேரவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பெற்ற பெயர்ப் பட்டியல்.

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 1 | அங்குசாமி, திரு. ச. .. | திருவாடானை. |
| 2 | அப்துல் ரசாக், திரு. கே. எம். | ஆலந்தூர். |
| 3 | அப்பாதுரை, திரு. மு. .. | ஓட்டப்பிடாரம் (செவ). |
| 4 | அம்பிகாபதி, திரு. மு. .. | மன்னார்குடி. |
| 5 | அரங்கநாதன், திரு. எஸ். .. | தர்மபுரி. |
| 6 | அரங்கநாதன், திரு. மு. .. | கூனூர் (செ.வ.). |
| 7 | அரங்கநாயகம், திரு. செ. .. | கோவை (மேற்கு). |
| 8 | அரங்கராசன், திரு. வெ. .. | உப்பிலியாபுரம். |
| 9 | அருணாசலம், திரு. இரா. .. | நாமக்கல் (செ.வ.) |
| 10 | அழகர்சாமி, திரு. சோ. .. | கோவில்பட்டி. |
| 11 | அன்பழகன், திரு. க. .. | புரசைவாக்கம். |
| 12 | அன்பழகன், திரு. தி. .. | நாட்ராம்பள்ளி. |
| 13 | அன்பில் தர்மலிங்கம், திரு. .. | லால்குடி. |
| 14 | ஆண்டி அம்பலம், திரு. மெ. | நத்தம். |
| 15 | ஆண்டித் தேவர், திரு. எஸ். | உசிலம்பட்டி |
| 16 | ஆறுமுகம், திரு. எம். .. | அவினாசி (செ.வ.) |
| 17 | சேலம் ஆறுமுகம், திரு. மு. .. | சேலம்-2. |
| 18 | ஆறுமுகம், திரு. த. .. .. | அரியலூர். |
| 19 | இரத்தினம், திரு. எம்.வி. .. | பொள்ளாச்சி. |
| 20 | இராசகுமார், திரு. மே.அ. .. | மருங்காபுரி. |
| 21 | இராசமாணிக்கம், திரு. இரெ. | குத்தாலம். |
| 22 | இராசரத்தினம், திரு. து. .. | பூந்தமல்லி. |
| 23 | இராசாம்பாள், திரு. தா. .. | தலைவாசல் (செ.வ.) |
| 24 | இராசாராம், திரு. க. .. | பனமரத்துப்பட்டி. |
| 25 | இராசாராமன், திரு. எஸ். | பாபநாசம். |
| 26 | இராசு, திரு. ஜே. எஸ். .. | பெரம்பலூர் (செ.வ.) |
| 27 | இராசேந்திரன், திரு. எஸ்.என். | தூத்துக்குடி. |

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 28 இராமச்சந்திரன், திரு. எம்.ஜி. | மதுரை (மேற்கு). |
| 29 இராமச்சந்திரன், திரு. கே. கே. எஸ்.எஸ்.ஆர். | சாத்தூர். |
| 30 இராமச்சந்திரன், திரு. ச. .. | பன்ருட்டி. |
| 31 இராமச்சந்திரன், திரு. செஞ்சி ந. | செஞ்சி. |
| 32 இராமசாமி, திரு. த. .. | இராமநாதபுரம். |
| 33 இராமசுப்பிரமணியன், திரு. என். | ஸ்ரீவைகுண்டம். |
| 34 இராமலிங்கம், திரு. ஏ. .. | காட்டுமன்னார் (செ.வ.) |
| 35 இராமலிங்கம், டாக்டர், கே.பி. | இராசிபுரம். |
| 36 இராமலிங்கம், திரு. செ. .. | திருவிடைமருதூர். |
| 37 இராஜசேகரன், திரு. வெ. .. | இராதாகிருஷ்ண நகர். |
| 38 இராஜாராம் நாயுடு, திரு. தெ. இரா. | தல்லி. |
| 39 இராஜேந்திரன், திரு. எஸ்.எஸ். | ஆண்டிப்பட்டி. |
| 40 இளையபெருமாள், திரு. எல். | எழும்பூர் (செ.வ.) |
| 41 ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், திரு. பி. | அம்பாசமுத்திரம். |
| 42 உகம்சந்த், திரு. எஸ்.டி. .. | மதுராந்தகம். |
| 43 உச்சி, திரு. கே. .. .. | கூடலூர். |
| 44 உத்திராபதி, திரு. பொ. .. | திருத்துறைப்பூண்டி (செ.வ.). |
| 45 உமாநாத், திரு. ரா. .. | நாகை. |
| 46 கண்ணன், திரு. ம. .. .. | கண்டமங்கலம் (செ.வ.) |
| 47 கணபதி, திரு. கே. ஆர். .. | சிதம்பரம். |
| 48 கணேசன், திரு. இ. .. .. | இடப்பாடி. |
| 49 கணேசன், திரு. சி. .. .. | அச்சரப்பாக்கம் (செ.வ.) |
| 50 கந்தசாமி, திரு. கா. வே. .. | கிணத்துக்கடவு. |
| 51 கந்தசாமி, திரு. பி. .. | பொங்கலூர். |
| 52 கபாலி. திரு. டி. கே. .. | மைலாப்பூர். |
| 53 கருணாநிதி, டாக்டர் மு. .. | அண்ணாநகர். |
| 54 கருப்பசாமிப் பாண்டியன், திரு. வி. | பாளையங்கோட்டை. |



| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 55 கருப்பையா, திரு. இரா. .. | குளித்தலை. |
| 56 கருட்பையா, திரு. ஏ. டி. .. | வால்பாறை. |
| 57 கல்லன், திரு. கே. .. | உதகமண்டலம். |
| 58 கலிதீர்த்தான், திரு. சோ. .. | சங்கராபுரம். |
| 59 கலியமூர்த்தி, திரு. பெ. .. | மங்களூர் (செ.வ.) |
| 60 நன்னிலம் கலையரசன், திரு. அ. | நன்னிலம் (செ.வ.) |
| 61 காளிமுத்து, திரு. கா. .. | திருப்பரங்குன்றம். |
| 62 கிட்டப்பா, திரு. என். .. | மாயவரம். |
| 63 கிருஷ்ணசாமி, திரு. கா. கோ. | காங்கேயம். |
| 64 கிருஷ்ணசாமி, திரு. கே. ஏ. | ஆயிரம்விளக்கு. |
| 65 கிருட்டிணமூர்த்தி, திரு. சா. .. | ஆண்டிமடம். |
| 66 கிருஷ்ணமூர்த்தி, திரு. வி. .. | நெல்லிக்குப்பம். |
| 67 கிருஷ்ணராஜ், திரு. ஜி. .. | சேலம்-1. |
| 68 கிருஷ்ணன், திரு. ரா. .. | வாசுதேவநல்லூர். |
| 69 குப்புசாமி, திரு. என். .. | மொரப்பூர். |
| 70 குப்புசாமி, திரு. கே. .. | ஒட்டன்சத்திரம். |
| 71 குப்புசாமி, திரு. செ. .. | வந்தவாசி (செ.வ.) |
| 72 குமரி அனந்தன், திரு. .. | திருவொற்றியூர். |
| 73 குருசாமி, திரு. ப. .. .. | அந்தியூர் (செ.வ.) |
| 74 குருசாமி என்கிற அண்ணாதாசன், திரு. எம். .. | திருவரும்பூர். |
| 75 குலசேகர், திரு. ஏ. டி. .. | சிங்காநல்லூர். |
| 76 குலசேகர பாண்டியன், திரு. ந. | வாணியம்பாடி. |
| 77 குழந்தைவேலு, திரு. ப. .. | உடுமலைப்பேட்டை. |
| 78 கேசவ ஆதித்தன், திரு. சி. | திருச்செந்தூர். |
| 79 கோபால், திரு. சி. .. .. | சோளிங்கர். |
| 80 கோபாலகிருஷ்ணன், திரு. கா. | பெரியகுளம். |
| 81 கோபாலன், திரு. ஆர். டி. .. | கம்பம். |
| 82 கோமதி சீனிவாசன், திருமதி. | வலங்கை (செ.வ.) |
| 83 கோவேந்தன், திரு. எம். ஆர். | பேராவூரணி. |
| 84 கோவைத்தம்பி, திரு. .. .. | பேரூர். |

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| 85 சக்கரபாணி, திரு. ஆர். | பொன்னேரி. |
| 86 சங்கரய்யா, திரு. என். | மதுரை (கிழக்கு). |
| 87 சட்டநாத கரையாளர், திரு. கி. | தென்காசி. |
| 88 சண்முகம், திரு. இரா. | திருத்தணி. |
| 89 சண்முகம், திரு. ஏ.சி. | ஆரணி. |
| 90 சத்தியமூர்த்தி, திரு. வ. | கடலாடி. |
| 91 சந்திரசேகரன், திரு. ஏ. | சோழவந்தான். |
| 92 சபாபதி, திரு. சி. | அரூர் (செ.வ.). |
| 93 சமரசம், டாக்டர் கே. | காவேரிப்பட்டணம். |
| 94 சாகுல் ஹமீது, திரு. ஏ. | கடையநல்லூர். |
| 95 சாமிக்கண்ணு, திரு. தா. | செங்கம். |
| 96 சித்தன், திரு. என்.எஸ்.வி. | திருமங்கலம். |
| 97 சிதம்பரம், திரு. சி. த. | காரைக்குடி. |
| 98 சிவசாமி, திரு. செ. | இளையான்குடி. |
| 99 சிவஞானம், திரு. ந. | திருவோணம். |
| 100 சிவப்பிரகாசம், திரு. சீ. | சேந்தமங்கலம் (செ. வ.) |
| 101 சிவபெருமாள், திரு. மு. | ஓமலூர். |
| 102 சிவராமன், திரு. எஸ். | சின்ன சேலம். |
| 103 சின்னசாமி, திரு. எம். | கரூர். |
| 104 சின்னதுரை, திரு. ஏ. | மேல்மலையனூர். |
| 105 சின்னராசு, திரு. க. இரா. | கிருஷ்ணகிரி. |
| 106 சின்னராஜ், திரு. எம் | தொண்டாமுத்தூர். |
| 107 சுந்தரம், திரு. கே. ஆர். | குடியாத்தம். |
| 108 சுந்தரம், திரு. ப. | திருப்பத்தூர். |
| 109 சுந்தரம், திரு. மு. | ரிஷிவந்தியம். |
| 110 சுந்தரமூர்த்தி, திரு. ஆர். | முகையூர். |
| 111 சுந்தரராஜ், திரு. நா. | திருமயம். |
| 112 சுந்தரராஜன், திரு. மு. | விருதுநகர். |
| 113 சுப்பிரமணியன், தி. உ. | சிவகங்கை. |
| 114 சுப்பிரமணியன், திரு. கே.எம். எஸ். | போடிநாயக்கனூர். |
| 115 சுப்பிரமணியன், திரு. மா. | திருவையாறு. |



| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| 116 சுப்பிரமணியன், திரு. வி. | திருநாவலூர். |
| 117 சுப்பிரமணியன், திரு. ஜி. கே. | பவானிசாகர். |
| 118 சுவாமிநாதன், திரு. வி. வி. | புவனகிரி. |
| 119 செங்கோட்டையன், திரு. கு.அ. | கோபிச்செட்டிப்பாளையம் |
| 120 செம்மலை, திரு. செ. | தாரமங்கலம். |
| 121 செல்லமுத்து, திரு. எம். | திருவாரூர் (செ.வ.). |
| 122 செல்வராசன், திரு. அ. | துறைமுகம். |
| 123 சென்னிமலை என்கிற கந்தசாமி, திரு. ப.செ. | அரவக்குறிச்சி. |
| 124 சேதுராமன், திரு. ஏ. எம். | ஆற்காடு. |
| 125 சொக்கலிங்கம், திரு. கெ. | திருப்போரூர். |
| 126 சோமசுந்தரம், திரு. எஸ்.டி. | பட்டுக்கோட்டை. |
| 127 சோமு, திரு. என்.வி.என். | பூங்கா நகர். |
| 128 சௌந்திரராசன், திரு. கே. | திருச்சி-2. |
| 129 டாக்டர் சௌரிராஜன், திரு. கே. | தி. நகர். |
| 130 தங்கமணி கவுண்டர், திரு. கே.எம். | திண்டிவனம். |
| 131 தங்கராசு, திரு. ஏ. | குறிஞ்சிப்பாடி. |
| 132 தங்கவேல்ராஜ், திரு. பி.எம். | கிருஷ்ணராயபுரம் (செ.வ.). |
| 133 தங்கவேலு, திரு. பி. | செயங்கொண்டான். |
| 134 தவசி, திரு. ஆர். | பரமக்குடி (செ.வ.). |
| 135 தனபால், திரு. ப. | சங்கரி (செ.வ.). |
| 136 தனுக்கோடித் தேவர், திரு. கே. | முதுகளத்தூர். |
| 137 தாமரைக்கனி, திரு. இரா. | ஸ்ரீவில்லிப்புத்தூர். |
| 138 தியாகராசன், திரு. ஆர். | விருத்தாச்சலம். |
| 139 திருச்சி ஆர். சௌந்திரராஜன், திரு. | ஸ்ரீரங்கம். |
| 140 திருநாவுக்கரசு, திரு. எஸ். | அறந்தாங்கி. |
| 141 திருமாறன், திரு. பெ. | ஆலங்குடி. |
| 142 திருமான், திரு. | ஏற்காடு (செ.வ.). |
| 143 திருவேங்கடம், திரு. பெ.சு. | கலசப்பாக்கம். |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| 144 தீர்த்தராமன், திரு. ப. .. | பென்னகரம். |
| 145 துரைசாமி, திரு. பி.எஸ். .. | பர்கூர். |
| 146 துரைமுருகன், திரு. .. .. | இராணிப்பேட்டை. |
| 147 துரை ராமசாமி, திரு. .. | வெள்ளக்கோவில். |
| 148 துரைராஜ், திரு. பி. .. | சங்கரநாயினர் கோவில் (செ.வ.). |
| 149 தேவராஜ், திரு. வி.எம். .. | வேலூர். |
| 150 நடராசன், திரு. எஸ். .. | தஞ்சாவூர். |
| 151 நரசிம்மன், திரு. பூ.மு. .. | பள்ளிப்பட்டு. |
| 152 நல்லப்பன், திரு. தி.கா. .. | பெருந்துறை. |
| 153 நவநீதகிருஷ்ணபாண்டியன், திரு. | ஆலங்குளம். |
| 154 நாச்சிமுத்து, திரு. கே.பி. .. | மேட்டூர். |
| 155 நாராயணசாமி, திரு. கே. .. | திருவண்ணாமலை. |
| 156 நாராயணன், திரு. பி.ஜி. .. | பவானி. |
| 157 நெடுஞ்செழியன், டாக்டர் இரா. | திருநெல்வேலி. |
| 158 நெடுமாறன், திரு. ப. .. | மதுரை (மத்திய). |
| 159 பக்கீர் முகமது, திரு. இ.எஸ். எம். | கும்பகோணம். |
| 160 பட்டாபிராமன், திரு. செ. .. | திருவள்ளூர். |
| 161 பம்மல் நல்லதம்பி, திரு. .. | தாம்பரம். |
| 162 பரமசிவகவுண்டர், திரு. பி. என். | பல்லாடம். |
| 163 பலராமன், திரு. இல. .. | போளூர். |
| 164 பழனிசாமி, திரு. சு. .. | மேட்டுப்பாளையம். |
| 165 பழனிமுத்து, திரு. சி. .. | ஆத்தூர். |
| 166 பழனியப்பன், திரு. கு.ப. .. | விழுப்புரம். |
| 167 பழனிவேல், திரு. என். .. | பழனி (செ.வ.). |
| 168 பாண்டியன், திரு. பி.எச். .. | சேரன்மாதேவி. |
| 169 பாபு கோவிந்தராஜன், திரு. .. | கடலூர். |
| 170 பாபு ஜனார்த்தனன், திரு. .. | செய்யாறு. |
| 171 பாரமலை, திரு. க. .. | மானாமதுரை (செ.வ.) |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| 172 பாலகிருஷ்ணன், திரு. ச. .. | மொடக்குறிச்சி. |
| 173 பாலகிருஷ்ணன், திரு. வி. .. | சிவகாசி. |
| 174 பாலசுப்பிரமணியன், திரு. க... | சீர்காழி (செ.வ.). |
| 175 வேடசந்தூர் பாலசுப்பிரமணியன், திரு. வி.பி. | வேடசந்தூர். |
| 176 பாலன், திரு. சு. .. .. | பெரம்பூர் (செ.வ.). |
| 177 பாலுச்சாமி, திரு. ஏ. .. | சமயநல்லூர் (செ.வ.). |
| 178 பிச்சை, திரு. எம். .. | அருப்புக்கோட்டை. |
| 179 பிரபாகரன், திரு. ஜே.சி.டி. | வில்லிவாக்கம். |
| 180 புருஷோத்தமன், திரு. து. .. | சைதாப்பேட்டை. |
| 181 பூங்காவனம், திரு. என்.ஏ. .. | காட்பாடி. |
| 182 பெரியசாமி, திரு. ஏ. .. | தாராபுரம் (செ. வ.). |
| 183 பெரியசாமி, திரு. ரா. .. | தொட்டியம் (செ.வ.). |
| 184 பெருமாள், திரு. என். .. | வரகூர் (செ.வ.). |
| 185 பெருமாள், திரு. ரா. கு. .. | விளாத்திகுளம். |
| 186 பொன்னம்மாள், திருமதி. ஏ.எஸ். | நிலக்கோட்டை (செ.வ.). |
| 187 பொன்னுரங்கம், திரு. ப. .. | ராயபுரம். |
| 188 பொன்னையன், திரு. சி. .. | திருச்செங்கோடு. |
| 189 மணி, திரு. டி. .. .. | விளவங்கோடு. |
| 190 மணிமாறன், திரு. ஆர். .. | திருப்பூர். |
| 191 மாணிக்கம், திரு. எம்.எஸ். .. | வேதாரண்யம். |
| 192 மாரிமுத்து, திரு. த. .. | குளத்தூர் (செ.வ.). |
| 193 முகமது இஸ்மாயில், திரு. பி. | பத்மநாபபுரம். |
| 194 முசிறிப்புத்தன், திரு. பி. .. | திருச்சி-1. |
| 195 முத்துக்கிருஷ்ணன், திரு. சு. | கன்னியாகுமரி. |
| 196 முத்துசாமி, திரு. சு. .. | ஈரோடு. |
| 197 முத்துராமலிங்கம், திரு. இ. .. | ராதாபுரம். |
| 198 முத்துவேல், திரு. என். .. | வானூர் (செ.வ.). |
| 199 முத்தையா, திரு. இரா. .. | சேடப்பட்டி. |
| 200 முனிரத்தினம், திரு. இரா. சா. | கும்மிடிபூண்டி. |
| 201 முனுசாமி, திரு. மு.ப. .. | பாலக்கோடு. |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 202 மூர்த்தி, திரு. ஜி. .. .. | பேரணாம்பட்டு (செ. வ.) |
| 203 மொக்கையன், திரு. பி. .. | ராஜபாளையம் (செ.வ.) |
| 204 யசோதா, திருமதி. டி. .. | ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.) |
| 205 ரகுமான்கான், திரு. அ. .. | சேப்பாக்கம். |
| 206 ரங்கசாமி, திரு. ஆர். .. | சத்தியமங்கலம். |
| 207 ரங்கசாமி, திரு. க. .. .. | உளுந்தூர்பேட்டை (செ.வ.). |
| 208 ரமணி, திரு. கு. .. .. | கோயம்புத்தூர் (கிழக்கு). |
| 209 ராமசாமி, திரு. எஸ். என். .. | சாத்தான்குளம். |
| 210 ராஜமாணிக்கம், திரு. எஸ். கே. | முசிறி. |
| 211 ரெத்தினராஜ், திரு. எஸ். .. | குளச்சல். |
| 212 வரதராஜன், திரு. என். .. | திண்டுக்கல். |
| 213 வால்மீகி, திரு. வி. .. .. | திருப்பத்தூர். |
| 214 விசயலட்சுமி, செல்வி. வி. .. | வீரபாண்டி. |
| 215 வின்சென்ட், திரு. மி. .. | நாகர்கோவில். |
| 216 விஜயசாரதி, திரு. எம். .. | அரக்கோணம் (செ.வ.) |
| 217 விஜயபாலன், திரு. என். .. | பூம்புகார். |
| 218 விஜயரெகுநாத தொண்டமான், திரு. | புதுக்கோட்டை. |
| 219 விஜயராகவன், திரு. பொ. | கிள்ளியூர். |
| 220 விஸ்வநாதன், திரு. கோ. .. | அணைக்கட். |
| 221 வீராசாமி, திரு. த. .. .. | ஒரத்தநாடு. |
| 222 வீரானம்பலம், திரு. க. வெ. .. | மேலூர் |
| 223 வெங்கடசுப்பிரமணியம், திரு. ப. | காஞ்சி. |
| 224 வெங்கடரெட்டி, திரு. டி. .. | ஓசூர். |
| 225 வெங்கடேசன், திரு. பி.எம்... | பெரணமல்லூர். |
| 226 வெள்ளைச்சாமி, திரு. ஆ. .. | ஆத்தூர். |
| 227 வேணுகோபால், திரு. த. .. | தண்டராம்பட்டு. |
| 228 வேலப்பன், திரு. சி. வி. .. | கபிலர் மலை. |
| 229 ஜகத்ரட்சகன், திரு. எஸ். .. | உத்திரமேரூர். |
| 230 ஜான் வின்சென்ட்; திரு. மு. | நாங்குனேரி. |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 231 ஜெகதீசன், ஆனூர், திரு. பு. கோ. | செங்கல்பட்டு. |
| 232 ஜெயராமன், திரு. வே. இரா. | தேனி. |
| 233 ஹாஜா செரீப், திரு. கே.எஸ்.ஜி. | திருவல்லிக்கேணி. |
| 234 ஹேமசந்திரன், திரு. ஜே. .. | திருவட்டார். |
| 235 மார்கரெட் எலிசபெத் பிலிக்ஸ், திருமதி. | நியமன உறுப்பினர். |

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்கள்.**

1. மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்—அமைச்சர்.
2. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்—அமைச்சர்.
3. மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே—அமைச்சர்.
4. மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது—அமைச்சர்.
5. திரு. க. வெங்கடசாமி—வழக்கறிஞர் (பொறுப்பு.)

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

---

**சனிக்கிழமை, 1980 ஜூலை 26.**

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :**

'தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்'

கற்பு நெறி உள்ளிட்ட எல்லா வகையிலும் தன்னைக் காத்துக்கொண்டு தன் கணவனையும் காப்பாற்றி தகுதி அமைந்த புகழையும் காத்து உறுதி தளராமல் வாழ்கின்றவளே பெண்.

### 1. வினாக்கள்-விடைகள்.

**உடுக்குறியிட்ட வினாக்கள்.**

**மீனவர் பயிற்சி மையங்களில் பயிலும் மாணவர்கள்.**

* **வினா எண் 46—திரு. த. வேணுகோபால் :** மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மீனவர் பயிற்சி மையங்களில் பயிலும் மாணவர்களின் உதவித் தொகையை உயர்த்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) ஆம்.

(ஆ) மீனவர் பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெறும் மாணவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 50 வீதம் அளிக்கப்படும் உதவித்தொகையை உயர்த்துவது பற்றி அரசு பரிசீலனை செய்து வருகின்றது.

**திரு. த. வேணுகோபால் :** பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு நிதியமைச்சரவர்கள் மீனவர் பயிற்சி பெறும் மாணவர்களுக்கு உதவித்தொகை அளிப்பது பரிசீலனையில் இருப்பதாகக் கூறினார்கள். அது எப்போது அளிக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

[1980 ஜூலை 26

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** பேரவைத் தலைவரவர்களே, இப்போது அவர்களுக்கு 50 ரூபாய் உதவித்தொகை அளித்துவரப்பெறுகிறது. மகாபலிபுரம் சிற்ப பயிற்சிக் கூடத்திலும், கிராம மறுமலர்ச்சி நிலையத்திலும் பயிற்சி பெறுகின்றவர்களுக்கு எவ்வளவு உதவித்தொகை அளிக்கப்படுகின்றது என்ற விவரத்தைக் கேட்டிருக்கிறோம். அந்த விவரங்கள் வந்தபிறகு அதையும் வைத்துக்கொண்டு ஒரு நியாயமான அடிப்படையில் அவர்களுடைய உதவித் தொகையை நிர்ணயிக்கலாம் என்று அரசு கருதுகிறது. ஆகவே, விரைவில் அதுபற்றிய முடிவு எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. த. வேணுகோபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மீனவர் பயிற்சி பெறும் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இப்போது மீனவர் பயிற்சி பெறும் நிலையங்கள் ஆறு இடங்களில் அமைந்திருக்கின்றன. சென்னை, கடலூர், நாகை, தூத்துக்குடி, குளச்சல், மண்டபம் ஆகிய ஆறு இடங்களில் மீனவர் பயிற்சி பெறும் நிலையங்கள் இருக்கின்றன. மண்டபம் நிலையத்தில் பயிற்சி பெறுகின்றவர்கள் 60 பேர்கள் இருக்கிறார்கள். மற்றைய ஐந்து இடங்களில் 50, 50 பேர்கள் பயிற்சி பெற்று வருகிறார்கள். இதுவே போதுமான அளவு எண்ணிக்கை உடையதாக அமைந்திருக்கின்றது. ஆகவே, மேலும் பயிற்சி தரவேண்டு மென்றால் அதற்கான வசதி வாய்ப்புக்களையும் பெருக்க வேண்டி வரும். ஆகவே, இப்போதே போதுமான அளவு இருப்பதாகக் கருதப்படுகிறது.

**திரு. செ. சிவசாமி:** பேரவைத் தலைவரவர்களே, ஆறு இடங்களில் பயிற்சி தருவதாகச் சொன்னார்கள். குறிப்பாக இந்த ஆறு இடங்களிலும் மொத்தமாக 300 பேர்கள் பயிற்சி பெறுகிறார்கள். இவர்களது பயிற்சி முடிந்த பிறகு அவர்களுக்கு வேலை உத்தரவாதம் உண்டா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, அவர்களுக்குக் கட்டாயம் வேலை கொடுத்தே தீருவோம் என்று உத்தரவாதம் சொல்ல முடியாது. பயிற்சி பெற்றவர்களுக்கு முன்னுரிமை அளித்து வேலை தரப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. க. பாலசுப்பிரமணியன்:** பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் ஆறு இடங்களிலே பயிற்சி நிலையங்கள் இருப்பதாகத் தெரிவித்தார்கள். இன்னும் அதிகமான நிலையங்களை அமைப்பதற்கு அரசு முடிவு எடுக்குமா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.



1980 ஜூலை 26]

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, தேவையைப் பொறுத்துதான் பயிற்சி அளிக்கப்படுகிறது. ஆகவே, தேவை அதிகமாக இருந்தால் பயிற்சி பெறுபவர்கள் எண்ணிக்கையையும் அதிகப் படுத்த வேண்டி வரும். ஆகவே, அது ஆராய்ந்து செய்யப்பட வேண்டிய ஒன்று என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ப. பொன்னுரங்கம்:** தலைவர் அவர்களே, இந்த மீனவ பயிற்சி மையங்களில் பயிற்சி பெறுகிற மாணவர்களுக்கு 50 ரூபாய் உதவிப்பணம் பல்லாண்டுக் காலமாக தரப்பட்டு வருகிறது. இப்போது நமக்கெல்லாம் கூடச் சம்பளம் எல்லாம் உயர்த்தப்பட்டிருக்கிறது. தியாகிகளுக்கு பென்ஷன் உயர்த்தப்பட்டிருக்கிறது. பயிற்சி பெறுகிறவர்களுக்கு வேலை வாய்ப்பு நிச்சயம் இல்லை என்று சொல்லப்படுகிறது. படகுகளும் தற்போது கொடுக்கப் படுவது இல்லை. இந்த நிலையில் மத்திய அரசில் 'ஸீ மேன்' (Sea Man) போஸ்ட் எடுக்கும்போது இவர்களுக்கு முன் உரிமை தரும் வகையில் மாநில அரசு முயற்சி எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே பயிற்சி பெறுகிற நேரத்தில் அவர்களுக்கு விசைப் படகுகளை ஓட்டுவது எப்படி, படகு கட்டுதல், நவீன முறையில் மீன் பிடித்தல், வலை பின்னுதல், வலையைப் பழுது பார்த்தல் ஆகியவற்றில் பயிற்சிகள் கொடுக்கப்படுகின்றன. ஆகவே, பயிற்சி முடிந்த பிறகு அவர்களுக்கு அரசின் சார்பாகத்தான் வேலை கொடுக்க வேண்டும் என்று இல்லை. தனியார் களிடத்திலும் வேலை செய்யலாம். தனியாக தாமாகவே தொழில் நடத்தவும் முன்வரலாம். அந்த வகையில் உதவி செய்யும் அடிப்படையில்தான் இந்தப் பயிற்சி அவர்களுக்கு கொடுக்கப்பெறுகிறது.

**திரு. த. இராமசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, மீனவர்கள் பயிற்சி நிலையம் எப்பொழுது ஆரம்பிக்கப்பட்டது? அதில் எவ்வளவு பேர்கள் பயிற்சி பெறுகிறார்கள்? அவர்களில் எவ்வளவு பேர்கள் வேலை வாய்ப்புப் பெறுகிறார்கள்?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** பேரவைத் தலைவர் அவர்களே, பல ஆண்டுகளுக்கு முன்பாகவே இந்தப் பயிற்சி நிலையங்கள் இயங்கி வருகின்றன. சரியாக எப்பொழுது ஆரம்பிக்கப்பட்டது என்பதற்காக குறிப்புகள் என்னிடத்தில் இல்லை. இதில் ஆண்டுதோறும் 310 பேர்களுக்கு மேல் பயிற்சி பெறுகிறார்கள்.

[1980 ஜூலை 26

**திரு. மு. அம்பிகாபதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் கடற்கரை மிகவும் நீளமான கடற்கரை, சுவையான மீன்கள் அதிகமாகக் கிடைக்கும் கடற்கரை. அத்தகைய மீன்களை அதிகமாகப் பிடிப்பதற்கும், நாகப்பட்டினத்தில் இருக்கும் நிலையத்தை மூடப்போவதாகச் சொன்னீர்கள், அதை மூடாமல் இருக்கவும், பயிற்சி பெறுபவர்களுக்கு நாள் ஒன்றுக்கு 1.50 ரூபாய்தான் கொடுக்கிறீர்கள், அதை உயர்த்துவதற்கும் அரசு ஆவன செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** பேரவைத் தலைவர் அவர்களே, பயிற்சி பெற்றவர்களுக்கு வேலை வாய்ப்பு இல்லை என்று முன்பே ஒரு உறுப்பினர் குறிப்பிட்டிருக்கிறார். இப்போது மாண்புமிகு திரு. அம்பிகாபதி அவர்கள் வினாக்களைச் சேர்த்து நீண்ட கேள்வியாக கேட்டிருக்கிறார்கள். தேவையின் அடிப்படையில்தான் அவர்களுக்கு பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. விசைப்படகுகள் ஓட்டவும், நவீன முறையில் மீன்களை பிடிக்கவும். வலைகளைப் பின்னவும், பழுது பார்க்கவும் அவர்களுக்குப் பயிற்சி கொடுக்கப் பெறுகிறது. அரசுத் துறையிலோ, தனியார் துறையிலோ, அல்லது தானாக சொந்தமாகவோ வேலை வாய்ப்பினைப் பெற அது அவர்களுக்கு உதவி செய்யும் என்ற அடிப்படையில் தான் இந்தப் பயிற்சி கொடுக்கப் பெறுகிறது.

அவர்களுக்கு இப்போது கொடுத்து வரும் உதவித் தொகை 50 ரூபாய் போதாது என்று அரசு கருதிய காரணத்தினால்தான், அதை உயர்த்த வேண்டும் என்கிற உத்தேசத்தில் அரசு பரிசிலனை செய்துகொண்டிருக்கிறது. இப்போது மகாபலிபுரத்தில் உள்ள சிற்பக் கலைக் கூடத்திலும், கிராம மறுமலர்ச்சி நிலையத்திலும் உதவித் தொகை தருகிறார்கள். அது எவ்வளவு என்று அறிய இந்த அரசு அவர்களை விவரங்கள் கேட்டிருக்கிறது. அதன் அடிப்படையில் இவர்களுக்கும் கொடுக்க வேண்டும் என்கிற எண்ணத்தில்தான் அந்த விவரங்கள் கோரப்பட்டிருக்கின்றன.

தவிர நாகப்பட்டினம் படகு கட்டும் நிலையம் மூடுவது சம்பந்தமாக நான் மானியத்தின் மீது பேசுகையிலேயே விரிவாக விளக்கியிருக்கிறேன். அந்த கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை.

**திரு. உ. சுப்பிரமணிரன் :** தலைவர் அவர்களே, மண்டபத்தில் உள்ள பயிற்சிக் கூடத்தில் பயிற்சி தருவதற்கான எந்தவிதமான சாதனங்களும் இல்லை என்று சொல்கிறார்கள். எந்த அடிப்படையில் பயிற்சி கொடுக்கிறார்களோ தெரியவில்லை. நாகப்பட்டினத்தில் இருக்கும் பயிற்சி நிலையமும் எந்தவித வசதியோ சாதனங்களோ இல்லாமல் பர்ண சாலை போன்று



1980 ஜூலை 26]

மோசமான நிலையில் இருக்கிறது. ஆகவே, அவற்றின் தரத்தை உயர்த்துவதற்கு நல்ல தரமான சாதனங்களை வைத்து பயிற்சி அளிக்கும் வகையில் அரசு ஆவன செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, பயிற்சி நிலையங்களில் போதுமான அளவுக்கு கருவிகள் இல்லை என்கிற நிலைமை ஏற்பட்டால் அதுபற்றி அரசு முடிவு எடுக்கும். ஆனால், அதுபற்றி என்னிடத்தில் எந்தவிதமான குறிப்புகளும் இல்லை.

**கிழக்கு முகவை மாவட்ட மீனவர்களுக்கு வீடுகள்.**

***வினா எண் 47—**திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மீனவர்களுக்கு வீடு கட்டிக்கொள்ள அரசாங்க உதவித் திட்டம் ஏதும் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், கிழக்கு முகவை மாவட்ட மீனவர்களுக்கு இந்த திட்டத்தின்கீழ் அரசு வீடு கட்டிக் கொடுத்துள்ளதா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) மீனவர்களுக்கு அரசு வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டம் உள்ளது.

(ஆ) கிழக்கு இராமநாதபுரத்தில் 13 கிராமங்களில் மீனவர்களுக்கு 1,168 வீடுகள் கட்ட அரசு அனுமதி அளித்துள்ளது. அவைகளில் 400 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. 768 வீடுகள் கட்டப்படுகின்றன.

**திரு. வ. சத்தியமூர்த்தி :** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் கடற்கரையோர நீளம் ஆயிரம் கிலோ மீட்டர் இருப்பதாக சொல்லப்படுகிறது. என்னுடைய கடலாடி தொகுதி மட்டும் சுமார் 100 கிலோ மீட்டர் தூரம் உள்ளது. வீடு கட்ட ஒதுக்கப்பெற்ற தொகையில் பத்தில் ஒரு பங்கு என்னுடைய தொகுதிக்குச் சேர வேண்டும். முப்பது கிராமங்களுக்கு மேல் மீனவர்கள் குடியிருக்கும் கிராமங்களாக என்னுடைய தொகுதியில் இருக்கிறது. ஆகவே, இவைகளை கருத்தில் கொண்டு, பிற்பட்ட பகுதியாக இருக்கும் என் தொகுதி மீனவர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் வகையில் விரைவில் நடவடிக்கை எடுக்க அதிகாரிகளுக்கு அரசு உத்தரவு இட முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-10)

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே. கடற்கரை நீளத்தை அளந்து அதற்கேற்றபடி வீடுகள் கட்டுவது என்பது இயலாத ஒன்று. கடற்கரைப்பகுதியில் எங்கெங்கு மீனவர்கள் குடியிருப்புப்

[1980 ஜுலை 26

பகுதிகள் இருக்கின்றனவோ அந்தக் குடியிருப்புக்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு வீடுகள் கட்ட வேண்டியவர்களாக இருக்கிறோம். இராமநாதபுரம் கடற்கரையோரத்தில் மட்டும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிற வகையில் 13 கிராமங்களில் இப்போது வீடுகள் கட்டும் திட்டமிருக்கிறது. தேவிப்பட்டிணம் 104, ஏர்வாடி 60, நம்புதாளை 150, கீழ்முண்டல் 50, முடிவீரப்பட்டிணம் 34, பாசிப்பட்டிணம் 50, திருப்பாலைக்குடி 250, முள்ளிமுனை 50, கண்கொள்ளாப்பட்டிணம் 50, தொண்டி 64, பாம்பன் 100, வாலிநோக்கம் 120, ஆக 1,082 வீடுகள் கட்ட திட்டமிட்டு 400 வீடுகள் கட்டப்பட்டு விட்டன. எஞ்சிய 682 வீடுகள் கட்டப்படுகிற நிலையில் இருக்கிறது.

**திரு. வ. சத்தியமூர்த்தி :** என் தொகுதியில் முப்பது கிராமங்களில் இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்த முப்பது கிராமங்களில் எந்தக் கிராமத்திலும் வீடு கட்டும் திட்டம் வந்து சேரவில்லை. இந்த வீடு கட்டுவதற்கான நிதி எந்த நிர்வாகத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது ? அவர்கள் கிராமங்களைத் தேர்ந்தெடுப்பதற்கு முன் அந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினரிடம் கலந்து எந்தக் கிராமங்களில் வீடுகள் கட்டும் திட்டத்தைக் கொண்டு வரவேண்டும் என்று ஆலோசனை செய்தால் தான் கஷ்டப்படுகிற மீனவர்கள் குடும்பங்களுக்கு இந்த உதவி சென்றடைய வாய்ப்பாக இருக்கும். ஆகவே அப்படிச் செய்யவேண்டும் என்று அறிவுரை அளிப்பார்களா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** எந்தெந்த இடங்களில் எந்தெந்த குடியிருப்புப் பகுதிகளில் வீடுகள்கட்ட வேண்டும் என்பதை மீனளத் துறையினர் முடிவுசெய்கிறார்கள். ஆனால், கட்டுகிற பொறுப்பு தமிழ்நாடு அரசாங்க ஹரிஜன வீடு கட்டும் வாரியம் மூலம் கட்டப்பட்டு வருகிறது. எல்லா இடங்களிலும் இந்த ஆண்டே கட்டி முடிக்க முடியாது. ஆண்டுக்காண்டு திட்டங்களை மேற்கொள்ளவேண்டும். இப்போது சிலபல கிராமங்கள் எடுக்கப்பட்டிருக்கின்றன. எதிர்காலத்தில் விடப்பட்ட கிராமங்கள் எடுத்துக் கொள்ளப்படும். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் தங்கள் தொகுதி நிலைமை பற்றி மீன்துறை இயக்குநரிடமோ மற்றவர்களிடமோ தெரிவிப்பார்களேயானால் அவர்கள் ஆராயும்போது அந்தத் தொகுதியில் வீடு கட்டவேண்டியது நியாயம் என்று படுமானால் அவசியம் என்று படுமானால் அந்தந்தக் கிராமங்களை அவர்கள் தேர்ந்தெடுப்பார்கள். எனவே மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் அதற்கான குறிப்புகளை உரிய அதிகாரிகளிடத்தில் தரலாம்.



1980 ஜுலை 26]

**திரு. செ. சிவசாமி :** திருப்பாளக்குடியில் 250 வீடுகள் கட்டப்படுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். 250 வீடுகளுக்கு திட்டமிருந்தாலும் இப்போது 40 வீடுகள்தான் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். மற்ற வீடுகள் எப்போது கட்டிமுடிக்கப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** விரைவில் கட்டிமுடிக்கப்படும்.

**டாக்டர் கே. சமரசம் :** மீனவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்க அரசு ஒரு வீட்டிற்கு எவ்வளவு தொகை ஒதுக்குகிறது ? அதில் எவ்வளவு மானியமாக வழங்கப்படுகிறது என்ற விவரத்தை அறிவிக்க இயலுமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** கிட்டத்தட்ட ரூ. 4,000 பெறுமான வீடுகள் தாழ்த்தப்பட்டவர்களுக்கு கட்டப்பட்ட அதே அடிப்படையில்தான் மீனவர்களுக்கும் கட்டவேண்டும் என்ற திட்டத்தின் அடிப்படையில்—எற்கனவே ரூ. 4,000-க்கு இலவசமாக வீடுகள் கட்டிக் கொடுத்த காலத்தில், அந்த அளவில்தான் அவர்களுக்குக் கட்டிக்கொடுக்கப்பட்டது—தாழ்த்தப்பட்டவர்களுக்கு தரப்படுகிற அதே அடிப்படையில் ஆயிரம் ரூபாய் மானியமாகவும், கடனும் தருகிற வசதி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. தாழ்த்தப்பட்டவர்களுக்கு கட்டிக்கொடுக்கப்பட்டதுபோல் இப்போது மீனவர்களுக்கும் கொஞ்சம் அதிகமான அளவில் வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டத்தின் அடிப்படையில் செய்யலாமா என்பதுபற்றி அரசு ஆராய்ந்து கொண்டிருக்கிறது. இந்த ஆண்டு மீனவர்களுக்காக ஒரு கோடி ரூபாய் நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

**திரு. உ. சுப்பிரமணியன் :** ஆண்டுதோறும் புயலாலும் கடல் கொந்தளிப்பாலும் பாதிக்கப்படுகிற மீனவர்களுக்கு நாம் இப்படிப்பட்ட வீடுகள் கட்டும்போது புயலாலும் கடல் கொந்தளிப்பாலும் பாதிக்கப்படாத வகையில், கடலுக்கு சிறிது தூரத்தில், பக்கா கட்டடம் கட்டிக் கொடுக்க அரசாங்கம் முன்வருமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போன்ற கருத்துக்களை மனதிலே வைத்து, உள்ளடக்கி அந்த வீடுகளைக் கட்டுகின்றவர்கள் அதை மேற்கொள்வார்கள் என்று கருதுகிறேன். ஏனென்றால் அவர்கள் கூறுகின்றபடி பாதிப்பு ஏற்படாத வகையிலே அந்தக் கட்டிடங்களுக்கு பழுது ஏற்படாத வகையிலே அது சம்பந்தப்பட்ட வீடு கட்டும் வாரியம் மேற்கொள்வார்கள்.

## ஆற்காடு தொகுதியில் மின் இணைப்புத் திட்டம்.

*வினா எண் 48—திரு. ஏ. எம். சேதுராமன் : மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆற்காடு தொகுதியில், அரிசன மற்றும் ஏழைகள் குடிசைகளுக்கு மின்விளக்கு இணைப்பு கொடுப்பதை விரிவுபடுத்தி, விரைவுபடுத்தும் திட்டம் ஏதும் உள்ளதா ?

(ஆ) ஏழை விவசாயிகட்கு, பம்புசெட்டுக்கான இணைப்பு கொடுப்பதில் நெடுநாட்களாக காலதாமதம் ஏற்படுவதைத் தடுக்க எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. எ. இராமச்சந்திரன் : (அ) ஆம். தமிழகம் முழுதும் இத்திட்டம் நிறைவேற்றப்படும்.

(ஆ) பதிவுசெய்த தேதியின் அடிப்படையில் மட்டும் முன்னுரிமை அளித்து பம்புசெட்டுக்கு மின்சாரம் வழங்குவதில் துரிதப்படுத்துவதன் நோக்கத்தில் புதிய முறை 1—7—1978 முதல் அமுலாக்கப்பட்டுள்ளது.

## பம்புசெட்டுகளுக்கு மின் இணைப்பு வழங்கல்.

*வினா எண் 49—திரு. இல. பலராமன் : மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1979-80-ல் விவசாய பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு கோரி வந்த மனுக்கள் எவ்வளவு ?

(ஆ) அவற்றுள் இதுவரை எத்தனைக்கு வழங்கப்பட்டது ?

(இ) நிலுவையில் உள்ள மனுக்கள் எவ்வளவு ? மாவட்டவாரியாக ?

மாண்புமிகு திரு. எ. இராமச்சந்திரன் : (அ) 79,110 மனுக்கள்.

(ஆ) & (இ) 1979-80 ஆம் ஆண்டில் மொத்தமாக மின்வாரியம் 46,670 பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு வழங்கியது. ஆனால், இதில் 1979-80 ஆம் ஆண்டில் வந்த விண்ணப்பங்களில் எவ்வளவு விண்ணப்பங்களுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டது என்ற விவரம் இல்லை. 1—4—1980-ல் நிலுவையிலுள்ள மொத்த மனுக்கள் 2,36,240.

திரு. ப. நெடுமாறன் : பேரவைத் தலைவர் அவர்களே, ஏழை விவசாயிகள் பம்பு செட்டுகளுக்கு மின்சார இணைப்பு கோருவது நீண்டகாலமாக நிலுவையாக இருக்கின்றன. அமைச்சர் அவர்கள் ஒவ்வொரு மாவட்டத்திலும்

இத்தகைய மின்சார இணைப்பு கேட்பவர்களை அழைத்து விசாரித்து உடனுக்குடன் பைசல் செய்கின்ற முறையை அமுல்செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதுபோல் 14 ஆண்டுகளுக்கு மேலாகக்கூட இந்த மின்சார இணைப்பு கொடுக்கப்படாமல் தேங்கிக் கிடந்தன. யார் சாமர்த்தியசாலிகளாக இருந்தார்களோ, அவர்கள் மின்சாரத்தைப் பெற்று வந்தார்கள். ஆனால், இதையெல்லாம் முறைப்படுத்த வேண்டுமென்ற அடிப்படையில் 1—7—1978 முதல் இந்த அரசு ஒரு உத்தரவு பிறப்பித்திருக்கிறது. அதன் அடிப்படையில் மனு போட்ட தேதியை முன்னுரிமையாக வைத்து, அதன்படி மின்சார இணைப்பு கொடுத்து வருகிறார்கள். சுமார் ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட மனுக்கள் அதன்மூலம் பைசலாகி இருக்கின்றன. இன்னும் இரண்டு லட்சத்திற்கு மேற்பட்ட மனுக்கள் கையில் இருக்கின்றன.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி :** சார், மின்சார வாரியத்தினால் 1—7—1978 முதல் கைக்கொள்ளப்படுகின்ற இந்தத் திட்டத்தின் பிரகாரம் விவசாயிகளுக்கு மின் இணைப்பு கொடுப்பதற்கு தயாராக இருக்கிறது என்று சொல்லியும், கடந்த இரண்டு ஆண்டு காலத்திற்கு மேல் தென் ஆற்காடு மாவட்டத்தில் மட்டும் சுமார் 7,500 மின்சார பம்பு செட்டுகளுக்கு இனகா தயாராக இருக்கின்றீர்களா என்று கேட்டு அவர்கள் பம்பு செட்டுகள் வாங்கி வைதது, இன்னும் மின்சாரம் கொடுக்கப்படாமல் இருப்பது இந்த அரசாங்கத்திற்குத் தெரியுமா ? அதைத் துரிதப்படுத்தி, மின்சாரம் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா ?

(முற்பகல் 9-20)

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மின் இணைப்பு வழங்குவதில் காலதாமதம் இருக்கிறது என்று கூறினார்கள். 1979-80 ஆம் ஆண்டில் மற்ற எல்லா ஆண்டுகளையும்விட கூடுதலாக 46,670 பம்ப் செட்டுகளுக்கு மின்சாரம் வழங்கப்பட்டிருக்கிறது. தென்னாற்காடு மாவட்டத்தில் 41,074 மனுக்கள் வந்திருக்கின்றன. அதிலே 9,409 பேர் பம்ப் செட்டுகளோடு ரெடியாக இருக்கிறார்கள். அதிலே 2,000 மனுக்கள் பைசல் வேண்டுமென்று டார்கெட் பிக்ஸ் பண்ணப்பட்டது. 1,300 ஐடா ஸ்கீமில் எனர்ஜைஸ் பண்ண வேண்டுமென்று பிக்ஸ் பண்ணப்பட்டு 3,300 பம்ப் செட்டுகளுக்கு வழங்கப்பட்டிருக்கிறது.





**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி :** நான் கேட்ட கேள்வி என்னவென்றால் 7,500 பம்ப் செட்டுகளுக்கு மேல் மின்சார வாரியத்தால் நோட்டீஸ் கொடுக்கப்பட்டு மூவாயிரம் பம்ப் செட்டுகளை விவசாயிகள் பணம் செலவு செய்து வாங்கி வைத்திருக்கிறார்கள். அவர்களுக்கு கனெக்‌ஷன் கொடுக்கப்படவில்லை. ஒரு மாதம், இரண்டு மாதம் என்றால் பரவாயில்லை, ஒரு வருஷம் ஆகிறது. அதைத் துரிதப்படுத்துவார்களா என்று கேட்டதற்கு அமைச்சர் பதில் கூறவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஒன்பதாயிரம் பம்ப் செட்டுகளுக்கு மேல் வாங்கி வைத்துக் கொண்டு காத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று அமைச்சர் அவர்களே பதில் சொல்லியிருக்கிறார்கள். கேள்வி நேரத்தில் கேள்விக்குப் பதில் கூறிய பிறகு மீண்டும் மீண்டும் விளக்கம் கேட்டுக் கொண்டிருப்பது முறையல்ல.

THIRU V. KRISHNAMOORTHI : Sir, I want protection from the Chair. The answer should be . . . . .

HON. SPEAKER : Don't disturb the procedure. I am sorry, this is not the Parliamentary procedure. You should not adopt this.

**திரு. கே. குப்புசாமி :** மின் கம்பங்களிலிருந்து 100 அடிக்குள் உள்ள கிணறுகளுக்கு மின் இணைப்பு இதுவரை உடனுக்குடன் கொடுக்கப்பட்டு வந்தன. ஆனால் சில இடங்களில் இடையில் 31—6—80-க்கு முன்னால் வந்த மனுக்களின் பேரில் மட்டுமே மின்சார கனெக்‌ஷன் கொடுக்கப்படும், அதற்குப் பின்னால் கொடுக்கப்பட மாட்டாது என்ற நிலை இருக்கிறது. 'மியர் சேர்விஸ் கனெக்‌ஷன்' பொறுத்தவரை கால வரம்பு எதுவும் விதிக்கப்பட்டிருக்கிறதா ? அப்படி விதிக்கப்பட்டிருந்தால் விவசாயிகள் நன்மையைக் கருதி அது தளர்த்தப்படுமா ?

**மாண்புமிகு திரு. ச. இராமசந்திரன் :** மியர் சேர்விஸ் கனெக்‌ஷனைப் பொறுத்தவரை கால வரம்பு விதிக்கப்பட்டிருப்பதாக எனக்குத் தெரியவில்லை. அப்படி விதிக்கப்பட்டிருந்தால் ரத்து செய்யப்படும்.

**திரு. தி. கா. நல்லப்பன் :** பேரவைத் தலைவர் அவர்களே, ஏனைய மாவட்டங்களை விட பெரியார், ஈரோடு மாவட்டங்களில் ஆழமான கிணறுகள் இருக்கும் காரணத்தால் அந்த மாவட்டங்களுக்கு முதலில் மின் இணைப்பு கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

[1980 ஜூலை 26

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** ஒவ்வொரு மாவட்டத்திலேயும் இருக்கின்ற மனுக்களின் அடிப்படையில் ஆண்டுதோறும் பம்புசெட்டுகளுக்கு மின் இணைப்பு வழங்கப்படுகிறது. பெரியார் மாவட்டத்தைப் பொறுத்த வரையில் 14,036 மனுக்கள் இருக்கின்றன. இந்த ஆண்டு 900 பேர்களுக்கு வழங்கப்படும்.

**திரு. சி. பழனிமுத்து :** தலைவர் அவர்களே, மின் இணைப்புக் கொடுப்பது வரிசைக் கிரமமாக நடைபெறுவதாகச் சொல்கிறார்கள், சேலம் மாவட்டத்திலே மிகவும் குறைந்த அளவுக்குக் கொடுத்திருக்கிறார்கள். கோட்டப் பொறியாளர் பகுதியிலே 25 மோட்டார் பம்புசெட்டுகளுக்கு மின்சாரம் கொடுக்கப்படவில்லை, துரிதமாகக் கொடுக்க ஆவன செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, நான் ஒன்றைத் தெளிவாக்க விரும்புகிறேன். நாம் ஆண்டு ஒன்றுக்குக் கொடுப்பது 30 ஆயிரத்திலிருந்து 40 ஆயிரம் வரையிலும். ஆகவே நம்மிடத்திலே தேங்கிக் கிடக்கிற மனுக்கள் 2½ லட்சம் இருக்கின்றன. இருக்கிற மனுக்களுக்குக் கொடுப்பதற்கு எட்டு வருடங்கள் ஆகும். சேலம் மாவட்டத்தில் 32 ஆயிரம் மனுக்கள் வந்திருக்கின்றன. இந்த ஆண்டு 3,600 பேர்களுக்குத் தருகிறோம்.

**திரு. ஏ. சி. சண்முகம் :** தலைவர் அவர்களே, அரிசன மற்றும் ஏழை மக்கள் வாழ்கின்ற குடிசைகளுக்கு மின் இணைப்பு இதுவரையிலே எத்தனை குடிசைகளுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது ?. ஆளுநர் ஆட்சிக் காலத்திலே அது நிறுத்திவைக்கப்பட்டிருப்பதாகத் தகவல் வந்திருக்கிறது. அது எந்த அளவுக்கு உண்மை ? அவர்களுக்கு மின் இணைப்புக் கொடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, 1.93 லட்சம் குடிசைகளுக்கு மின் இணைப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது. 4.3 லட்சம் விண்ணப்பங்கள் வந்துள்ளன. ஆளுநர் ஆட்சியே நிறுத்தப்பட்டுவிட்ட பிறகு அதிலே அது நிறுத்திவைக்கப்பட்டதா என்ற தகவல் இல்லை.

**திரு. அ. செல்வராசன் :** தலைவர் அவர்களே, செங்கற்பட்டு மாவட்டத்திலே 1975 ஆம் ஆண்டிலே நாங்கள் மனு செய்தோம். இதுவரையில் மின் இணைப்புத் தரப்படவில்லை. நான் சென்று கேட்டால் 6 மாதம் ஆகும் என்று சொல்கிறார்கள். திருக்கழுக்குன்றம் பகுதியிலே அகஸ்தீஸ்வரம் என்ற ஊரிலே 5, 6 விவசாயிகள் மனு தந்திருக்கிறார்கள், அவர்களுக்கு உடனடியாகக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



1980 ஜூலை 26]

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, செங்கற்பட்டு மாவட்டத்திலே அதே நிலைதான். 13,800 மனுக்கள் இருக்கின்றன. நாம் ஆண்டிற்கு 1,200 பம்பு செட்டுகளுக்குக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே அந்த நிலைமைகள் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் சொன்னதுபோன்று உண்மையிலேயே ஏழை மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் பம்புசெட்டு அமைக்க முன்வருவார்களானால் அவர்களுக்கு விசேஷமாக 20 சதவிதம் டிஸ்கிரஷனரி என்ற அடிப்படையிலே தரலாமா என்ற யோசனை அரசாங்கத்தின் பரிசீலனையில் இருந்துகொண்டிருக்கிறது.

**திரு. ஜே. எஸ். இராசு :** தலைவர் அவர்களே, விவசாயிகளுக்கு மின் இணைப்புத் தருவதற்கு தாமதம் ஏற்பட்டாலும், தருவதாக இலாகாவால் ஒப்புக்கொள்ளப்பட்ட விவசாயிகளுக்கு மின் இணைப்பு அளிக்கிறபோது இலாகாவால் வாங்கித்தரப்படவேண்டிய பல கருவிகளை விவசாயிகளே வாங்கித்தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு அவர்களே வாங்கித் தருகிறார்கள் என்ற ஒரு நிலை அநேகமாக தமிழகம் முழுவதும் இருப்பதாக நிச்சயமாக எங்களுக்குத் தெரிகிறது. ஆனால் அப்படி விவசாயிகள் வாங்கித் தருகிற பொருள்களுக்குப் பணம் அவர்களுக்குத் தரப்படுவது இல்லை என்பது நிதர்சனமான உண்மை. ஆகவே அப்படிப்பட்ட சூழ்நிலைகள் ஏற்படுவதைத் தவிர்க்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, அப்படிப் பட்ட புகார்களைத் தவிர்க்கும் வகையில் விவசாயிகள், அவர்களுடைய சர்வீஸுக்கு வேண்டிய சாமான்களை கொடுக்க வேண்டுமென்று மின் வாரியம் உத்திரவிட்டால் சரியாக இருக்குமா என்பதைப்பற்றி அரசு யோசித்துக்கொண்டிருக்கிறது.

**திரு. ஆர். தியாகராசன் :** தலைவர் அவர்களே, விவசாயிகளுடைய போர் வெல்லில் தண்ணீர் வற்றிய பிறகு அந்த சர்வீஸை அவர்கள் வேறு இடத்திற்கு மாற்றவேண்டுமென்றால் விவசாயிகள்தான் அந்தச் செலவை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்ற முறை இருக்கிறது, விவசாயிகள் கொடுக்காமல் அந்தச் செலவுகளை அரசே ஏற்றுக்கொள்ளுமா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** அரசு ஏற்றுக்கொள்ளாது.

**திரு. இ. அன்பழகன் :** தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்தில் எத்தனை மனுக்கள் நிலுவையிலே இருக்கின்றன ? நீர்ப்பாசன வசதி அற்ற அந்தப் பகுதியிலே உள்ள விவசாய மக்கள் பயன்படுத்திக்கொள்கிற வகையிலே அதிகமாக மின் இணைப்புத் தருவதற்கு அரசு முன்வருமா ?

[1980 ஜூலை 26

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மற்ற மாவட்டங்களைக் கருதுகிற போது வட ஆற்காடு மாவட்டத்திலே குறைவுதான், நான் வேலூர் ஜில்லாவைப் பற்றிச் சொல்கிறேன். திருவண்ணாமலை வேறு இருக்கிறது.

(முற்பகல் 9-30)

அதையும் சேர்த்தால் 40,100 மனுக்கள் வந்திருக்கின்றன. அவற்றில் நாம் இப்பொழுது ஆண்டு ஒன்றுக்கு 5,400 பம்பு செட்டுகள் தருகிறோம்.

**திரு. எஸ். சிவராமன் :** தலைவரவர்களே, விவசாயிகளால் மனுக்கள் கொடுக்கப்பட்டு, நடவடிக்கை எடுத்து அக்ரிமெண்ட் செய்கிறார்கள். அப்படி ஒப்பந்தம் செய்த பிறகு மின் வாரியத்தில் சில மாற்றங்கள் ஏற்பட்டு அந்த ஒப்பந்தம் நிராகரிக்கப்படுகிறது. அந்த மனுக்களைத் தள்ளுபடி செய்கிறார்கள். எனவே அவற்றை முறைப்படுத்தி, மீண்டும் அவற்றிற்கு முன்னுரிமை போன்றவைகளைக் கொடுத்து கனெக்‌ஷன் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, அத்தகைய குறைகள் எங்கு நடந்திருக்கின்றன என்று எழுதித் தந்தால் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கலாம்.

**திரு. பி. எஸ். துரைசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டம் பின்தங்கிய மாவட்டமாக இருக்கிறது. அங்கேயுள்ள விவசாயிகளுக்குப் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. அங்கே எவ்வளவு மனுக்களுக்குத் தரப்பட்டிருக்கின்றன?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, தர்மபுரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் 14,180 மனுக்கள் வந்திருக்கின்றன. 1,800 இந்த ஆண்டு தரப்பட்டுள்ளது.

**திரு. என். பழனிவேல் :** பேரவைத் தலைவரவர்களே, மின்னிணைப்பு கேட்டு, 2,36,000-க்கும் மேற்பட்ட மனுக்கள் இருப்பதாகவும், இதைப் பூர்த்தி செய்வதற்கு 8 ஆண்டுகள் ஆகும் என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஏற்கனவே ஒரே குடும்பத்தில் பல மின்னிணைப்புகள் பெற்றவர்களும் இருக்கிறார்கள். ஆகவே, அப்படிப்பட்டவர்களுக்கெல்லாம் மின்னிணைப்பு கொடுப்பதை நிறுத்திவிட்டு, புதிதாக விண்ணப்பிக்கும் சிறு விவசாயிகளுக்காவது குறிப்பிட்ட காலத்திற்குள்—அதாவது ஒரு வருஷம், ஒன்றரை வருஷத்திற்குள்ளாக—அவர்களுக்கு மின்னிணைப்பு கொடுப்பதற்கு ஏற்பாடு செய்வார்களா? மேலும் இப்பொழுது மின்சாரப் பற்றாக்குறை இல்லை என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே இந்தக் காலத்தில் சிறு விவசாயிகளுக்குத் தாராளமாக கொடுக்க என்ன நடவடிக்கை எடுக்கப்படும்?



1980 ஜூலை 26]

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, இது நல்ல கேள்வி. ஆனால் பெரிய விவசாயிகள்கூடச் சிறு விவசாயிகளாகி விடுகிறார்கள். அதுதான் இப்பொழுது இருக்கும் பிரச்சினை. இதைப்பற்றி அரசு பரிசீலிக்கும்.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** தலைவரவர்களே, நம்முடைய அமைச்சரவர்கள் பதில் சொல்லும்பொழுது இதைப்பற்றி அரசு பரிசீலிக்கும் என்று சொன்னார்கள். இவ்வளவு டிலே ஆவதற்கு என்ன காரணம்? மின்சாரம் பற்றவில்லையா? அல்லது உபகரணங்கள் பற்றவில்லையா? இதை அமைச்சரவர்கள் விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சில டிரான்ஸ்பார்மர்கள் இருக்கும் இடத்தில் அதிகப்படியான அளவிற்கு மின்சார இணைப்பு கொடுக்கப்படுவதால் அடிக்கடி பழுதுபட்டு, எரிந்து விடுகின்றன. அதற்கும் அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, தமிழ்நாட்டில் கிட்டத்தட்ட 12 இலட்சம் கிணறுகள் இருக்கின்றன. நாம் 9 இலட்சம் கிணறுகளுக்கு இதுவரையில் மின்சாரம் வழங்கியிருக்கிறோம். கிணறுகள் அதிகமாகிக் கொண்டிருக்கின்றன. ஆகவே, இரண்டரை இலட்சம் மனுக்கள் தேங்கிக் கிடக்கின்றன. எல்லாவற்றிற்கும் ஒரே நேரத்தில் கொடுக்க நிதி வசதி இல்லை; லையன் போன்றவற்றிற்கு இணைப்புகள் கொடுக்க போதிய பொருள் உற்பத்தியும் கிடையாது.

**திரு. எஸ். என். இராமசாமி :** பேரவைத் தலைவரவர்களே, நெல்லை மாவட்டத்தைப் பொறுத்தவரையிலும் விவசாயிகள்தான் அதிகமாக இருக்கிறார்கள். ஆகவே, அங்கு ஒவ்வொரு விவசாயியும் அவர்களுக்குத் தகுந்த அளவிற்கு நிலங்களை வைத்து விவசாயம் செய்கிறார்கள். மோட்டார்கள், 5 ஹார்ஸ் பவர், 3 ஹார்ஸ் பவர் மோட்டார்களை ஃபிட்டிங் செய்தும், மூன்று நான்கு ஆண்டுகளாக கனெக்‌ஷன் கொடுக்கப்படவில்லை. இதுபற்றி அங்குள்ள ஆபீஸ்களில் கேட்டால் சீனியாரிட்டி அடிப்படையில்தான் மின்னிணைப்பு கொடுக்கப்படும் என்று சொல்கிறார்கள். ஆகவே, இந்த அரசு அதுபற்றி நடவடிக்கை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன். அடுத்து, வீடுகளுக்கு சப்ளை செய்வதில்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஒரு துணைக் கேள்வியோடு நிற்க வேண்டும்; துணைக் கேள்விகள் அதிகமாகக் கொண்டே போகிறதே.

**திரு. எஸ். என். இராமசாமி :** சர்வீஸ் என்ற முறையில், மின் இணைப்பு கொடுப்பதற்கு 120 ரூபாய் வாங்குகிறார்கள். அதற்கு வேண்டிய பம்பு, பைப் ஒயர் போன்ற பொருட்களும் கிடைக்கவில்லை. அவர்கள் வாங்கிக் கொடுத்தாலும் சப்ளை கொடுக்க லேட் ஆகிறது. இதை நிவர்த்தி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. கே. தனுக்கோடித் தேவர் :** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, மழையை நம்பி வாழ்கின்ற முகவை மாவட்டத்தில், குறிப்பாக, என்னுடைய தொகுதியாகிய முதுகுளத்தூரில் விவசாயிகள் மோட்டார்களை வாங்கி வைத்துக் கொண்டு மின் இணைப்பு கொடுக்க வில்லையென்று ரொம்பவும் கஷ்டப் படுகிறார்கள். குறிப்பாக, மழையை நம்பி வாழ்கின்ற அந்த விவசாயிகளுக்கு முதுகுளத்தூர் தொகுதிக்கு தனிக் கவனம் செலுத்தி—விதவைப் பெண்கள் அதிகமாக இருக்கிற அந்தத் தொகுதியில்—விவசாயத்தில் இப் பொழுது முன்னுக்கு வந்து கொண்டிருக்கிற இந்த நேரத்தில், அரசு தனிக் கவனம் செலுத்தி, அந்தத் தொகுதியில் வாழ்கின்ற விவசாயிகளுக்கு, மோட்டார்களை வாங்கி வைத்திருக்கின்றவர்களுக்கு உடனடியாக மின் இணைப்புக் கொடுக்க அரசு முன்வருமா என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, மற்ற மாவட்டங்களைக் கருதுகிறபொழுது முகவை மாவட்டத்தில் வந்த மனுக்கள் குறைவுதான். 4,729 மனுக்கள்தான் இருக்கின்றன. அவற்றில் 1,080 மனுக் களுக்கு மின்சாரம் வழங்கப்பட்டிருக்கிறது.

**திரு. பெ. சு. திருவேங்கடம் :** பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே நம்முடைய அமைச்சரவர்களுடைய பதிலிலிருந்து, தமிழ்நாட்டிலே எல்லா மாவட்டங்களிலும் பரவலாக இந்தப் புதிய திட்டம் என்று சொன்னார்களே, அதிலே பல்லாயிரக்கணக்கான விவசாயிகள் மோட்டார்கள் வாங்கி வைத்திருக் கிறார்கள். குறிப்பாக, திருவண்ணாமலை மின் திட்டத்திலே அப்படியிருக் கிறது. நம்முடைய அமைச்சரவர்கள் ஏதாவது பிரத்தியேகமான ஒரு திட்டத்தையாவது கொண்டுவந்து, இந்தத் திட்டத்தின்கீழ் மோட்டார் வாங்கி வைத்திருக்கின்ற விவசாயிகளுக்கு உடனடியாக இணைப்பு கிடைப்பதற்கு ஏதாவது தீவிர ஏற்பாடு எடுப்பார்களா? அந்த விவசாயிகளைக் காப்பாற்று வார்களா? ஏனென்றால், நீங்கள் சொல்லி அவர்கள் வாங்கி இருக்கிறார்களே, அதற்கு ஏதாவது பிரத்தியேக நடவடிக்கை உண்டா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, அரசாங்க உத்தரவைத் தவறாகப் புரிந்துகொண்டு திருவண்ணாமலை மின்திட்டத்திலே யும், தென்னார்க்காடு மாவட்டத்தில் கள்ளக்குறிச்சி பகுதியிலேயும் நிறைய



பம்ப் செட்களை வாங்கி வைக்க உத்தரவு போட்டு விட்டார்கள். அத னுடைய விளைவாக, அந்த இரண்டு பகுதியிலேயும் நிறைய பம்ப் செட்களை வாங்கி வைத்திருக்கிறார்கள். அதற்குத் தனியாக டிவிஷனல் இன்ஜினியர் பதவி ஒன்றை நாம் சாங்க்ஷன் செய்து, அங்கு கொஞ்சம் விசேஷமான அக் கறை செலுத்திவருகிறோம்.

**திரு. சு. பழனிசாமி :** பேரவைத் தலைவரவர்களே, அரிசனப் பகுதியிலே இருக்கிற குடிசைகளுக்கு இலட்சக்கணக்கில் மின் இணைப்பு கொடுத்திருப்ப தாகச் சொன்னார்கள். ஆனால், அந்தப் பகுதியிலே ஓரிரு வில்லை விடு களுக்கும் மின் இணைப்புக் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் குடிசைகளுக்கு மின் இணைப்பு கொடுக்கின்ற திட்டம், அரிசனங் களுக்கு, மட்டுமல்ல. அதிலே, சாதாரண மற்றவர்களும் கூட குடிசைகளிலே இருந்தால் அந்தத் திட்டத்தின்மூலம் பலன் பெறலாம்.

### திருச்சிராப்பள்ளி வட்டாரப் பொறியியல் கல்லூரி.

* **வினா எண் 50—திரு. ரா. உமாநாத் :** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளியிலுள்ள வட்டாரப் பொறியியல் கல்லூரியின் (Regional Engineering College) முதல்வருக்கு எதிராக புகார் மனுக்கள் எவையேனும் 1977 மற்றும் 1978 ஆம் ஆண்டுகளில் அரசுக்கு வந்துள்ளனவா?

(ஆ) ஆம் எனில், அவற்றின் மீது எடுத்த நடவடிக்கை யாது?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :**

(அ) ஆம்.

(ஆ) அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. ரா. உமாநாத் :** தலைவரவர்களே, வந்திருக்கக்கூடிய அந்த கம்ப் ளெயின்டுகளில் 1977 ஆம் ஆண்டு சீரியஸ் சார்ஜஸ் உட்கொண்ட ஒரு மகஜரை முதலமைச்சரிடம் நான் நேரிலே, அந்த பிரின்சிபாலுக்கு எதிராக, விளக்கி சமர்ப்பித்தேன். அந்த மகஜர் அமைச்சரவர்களுக்குக் கிடைத்திருக்கிறதா? அதன்பேரிலே என்ன நடவடிக்கை இருக்கிறது? இன்வெஸ்டிகேஷன் எந்த ஸ்டேஜிலே இருக்கிறது?

[1980 ஜூலை 26

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, என்னிடம் வரப்பெற்ற ஒரு புகாரின் மீதுதான் 1978 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் நடந்த திருச்சி மண்டலப் பொறியியல் கல்லூரி ஆட்சி மன்றக் குழுக் கூட்டத்தில் இது குறித்து பேசப்பட்டு இப்புகாரை விசாரிப்பதற்கு நான்கு உறுப்பினர்கள் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டது. மேற்சொன்ன குழுவின் கூட்டம் 25—1—1978 அன்று சென்னையில் நடந்தபொழுது புகார் கொடுத்துள்ள நபரான திரு. கந்தசாமியும் மற்றும் அவர் சார்பில்லாத மூத்த ஆசிரியர்களை விசாரிக்க வேண்டும் என முடிவெடுக்கப்பட்டது. அவ்வாறு 9—3—1978 அன்று குழுவின் கூட்டம் நடைபெற்றது.

இதன்பிறகு குழுவின் அடுத்த கூட்டம் திருச்சிராப்பள்ளியில் கூட்ட இருந்த தருவாயில், குழுவின் ஓர் உறுப்பினர் சென்னையில் இருந்து வெளிக்கு மாற்றப்பட்டுவிட்டபடியாலும், மற்றொருவர் வேறு பதவி ஏற்க, திருச்சி மண்டலப் பொறியியல் கல்லூரி ஆட்சி மன்றக் குழுவிலிருந்து விலகிவிட்டபடியாலும், விசாரணை முடிவு பெறவில்லை. எனினும் திருச்சி மண்டலப் பொறியியல் கல்லூரி முதல்வர்மீது கொடுக்கப்பட்டுள்ள புகார்களின் மீது அரசு தொடர்ந்து நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது.

(முற்பகல் 9-40)

**திரு. ரா. உமாநாத் :** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொன்னதிலிருந்து என்னுடைய புகார் அவர்களுக்கு வந்து சேரவில்லையோ என்ற சீரியஸ் கொஸ்டின் அரைஸ் ஆகிறது. நான் முதலமைச்சரிடம் ஒரு சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில், சகல பொறுப்புகளோடு, சீரியசான சார்ஜ் ஷீட்டை நேரடியாக கொடுத்தது, அமைச்சர் கைக்கு வந்து சேரவில்லை. 1979 ஆம் ஆண்டு நான் முதலமைச்சரைப் பார்த்து இந்த புகார் எந்தக் கட்டத்தில் இருக்கிறது என்று கேட்டபோது அதற்கு அவர் அந்த மெமோரண்டம் இருந்தால் இன்னொரு காப்பி கொடுங்கள் என்று கேட்டு, அதற்கு மேலும் ஒரு காப்பி சமர்ப்பிக்கப்பட்டது.

எனவே இரண்டு ஆண்டுகளில், இரண்டு காப்பிகள் முதலமைச்சரிடம் நேரடியாக சமர்ப்பிக்கப்பட்டிருந்தும், அவைகள் வந்து சேரவில்லை என்றால், எனக்கு சீரியசான ஒரு அச்சம் ஏற்பட்டது. அந்த சார்ஜ் சீப் மினிஸ்டர் ஆபீசிலிருந்து எஜுகேஷன் மினிஸ்டர் அலுவலகத்திற்கு வருகிறபோது வழியிலே யாராவது சப்ரஸ் பண்ணினார்களா அல்லது டிப்பார்ட்மென்டிலே சப்ரஸ் பண்ணினார்களா என்ற அச்சம் ஏற்பட்டிருக்கிறது. அதைப் பற்றி விசாரிக்க ஒரு என்குயரி நடத்தி அந்த மெமோரண்டம் என்ன ஆனது? யார் சப்ரஸ் பண்ணினார்கள் என்பதை கண்டுபிடிக்க அமைச்சர் நடவடிக்கை எடுப்பாரா?



1980 ஜூலை 26]

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அனுப்பியதாக கூறப்படுகிற புகார் மனு வந்து சேர்ந்தது பற்றி இதிலே வரவில்லை என்று நான் கூற வில்லை. இந்தப் பதிலிலே அந்தப் புகார் பற்றி இல்லை. அது வந்து சேரவில்லை என்ற கருத்தை நான் சொல்லவில்லை. நான் அதுகுறித்து விசாரித்துப் பார்க்கிறேன்.

**திரு. ரா. உமாநாத் :** தலைவர் அவர்களே, நான் உங்களுடைய புரட்டக் ஷனை கேட்கிறேன். இங்கே கொஸ்டின் ஸ்டிரெய்ட் ஆக இருக்கிறது. திருச்சி இன்ஜினிரிங் கல்லூரி பிரின்சிபால் மீது புகார் வந்திருக்கிறதா? அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று. அதற்கு அவர் வந்த புகார் ஒன்றுதான் என்று சொன்னார். என்னுடைய புகார் வரவில்லை என்றுதான் அர்த்தம். ஆகவே . . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** புகார் வந்திருக்கிறதா என்று கேட்டதற்கு அவர் 'ஆம்' என்று பதில் சொல்லி இருக்கிறார்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, நான் சொன்ன பதிலும் தெளிவாகத்தான் இருக்கிறது. இங்கே தரப்பட்டிருக்கின்ற விவரத்தின் படி, ஆசிரியர்களும் புகார் கொடுத்திருக்கிறார்கள். ஆசிரியர்கள் அல்லாதவர் களும் புகார் கொடுத்திருக்கிறார்கள். அவர்களை விசாரிக்க வேண்டும். நீங்களும் புகார் தந்திருக்கிறீர்கள் என்று சொல்லுகிறீர்கள். நான் அது வரவில்லை என்று சொல்லவில்லை. அதைப்பற்றி விசாரிக்கிறேன் என்று கூறியிருக்கிறேன்.

**திரு. ரா. உமாநாத் :** தலைவர் அவர்களே, புகார் வந்திருக்கிறது, எனக்கு வந்த தகவலின்படி என்று சொல்லுகிறார்கள். அப்படியானால் டிப்பார்ட் மென்ட்டுக்கு வருகிற அத்தனை புகார்களையும் அமைச்சருக்கு அனுப்பி வைக்கவேண்டும். அப்படி அனுப்பினால் இந்த அவையில் வைத்ததாக அர்த்தம்.

We are entitled. It is responsibility of the Department to place all the complaints received before the Minister so that these can be brought to the notice of the House.

அதை வைக்கவில்லை என்று கூறுகிறபோது

It is contempt of the House committed by the Department

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வைக்கவில்லை என்று அவர் சொல்ல வில்லை. 'ஆமாம்' என்று சொல்லி இருக்கிறார்கள்.

[1980 ஜூலை 26

**திரு. ரா. உமாநாத் :** தலைவர் அவர்களே, அவர் ஒன்றுதான் வந்திருக்கிறது, அதைப்பற்றித்தான் சொல்லியிருக்கிறாரே தவிர, நான் கொடுத்த புகார் வரவில்லை என்பது அவர் பதிலிலேயே தெளிவாக இருக்கிறது.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தரவில்லை என்று நான் சொல்லவில்லை. அதைப்போல பலர் தந்திருக்கலாம். ஆசிரியர்கள் தந்திருக்கிறார்கள். ஆசிரியர் அல்லாதவர்களும் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே அந்த விசாரணைக்குழு அவர்களை விசாரிக்க வேண்டும் என்பதைத்தான் இங்கே குறிப்பிடுகிறேன். இந்தப் புகார்கள் பல பேர்கள் தந்திருக்கிறார்கள். யார் யார் தந்திருக்கிறார்கள் என்ற விவரம் இல்லை. மேலும் அந்தப் புகார்களைப்பற்றி விசாரிப்பதற்காக அந்தப் புகார் கொடுத்த கந்தசாமி என்ற ஆசிரியரையும் ஆசிரியர் அல்லாதவர்களையும், இந்தக் குழு உண்மையைக் கண்டறிய விசாரிக்கிறது என்ற கருத்தைச் சொன்னேன்.

**திரு. இரா. கருப்பையா :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி ரீஜினல் (இன்ஜினீரிங்) பொறியியல் கல்லூரி முதல்வர் சம்பந்தமாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், தற்போதைய ராஜ்ய சபை உறுப்பினருமான திரு. எம். கல்யாணசுந்தரம் அவர்களிடமிருந்து ஏதேனும் புகார் வந்து இருக்கிறதா? அது சம்பந்தமாக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்ன ? அந்தப் புகாரில் பணம் சம்பந்தப்பட்ட குற்றச்சாட்டு ஏதேனும் உண்டா ? அதன் விவரம் என்ன என்பதை அறிவிக்க இயலுமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, யார் யாரிடமிருந்து புகார்கள் வந்து இருக்கின்றன என்ற புள்ளி விவரம் என்னிடத்தில் இல்லை. கேள்வி கேட்கப்பட்டு இருப்பது, அவர் மீது புகார் வந்ததா? ஏதாவது விசாரணை நடைபெறுகிறதா? என்கிற வகையில்தான் திரு. உமாநாத் அவர்கள் கேட்டு இருக்கிறார்கள். பல பேர் புகார் தந்து இருக்கிறார்கள். மாண்புமிகு ராஜ்ய சபா உறுப்பினர் திரு. எம். கல்யாணசுந்தரம் அவர்களும் புகார்கள் தந்து இருக்கலாம். ஆசிரியர்களும் தந்து இருக்கிறார்கள். இப்போது இந்த மன்ற உறுப்பினர்களுக்கு நான் தெரிவிக்க விரும்புவது, புகார்கள் மீது விசாரணைக்கு ஏற்பாடு செய்து இருக்கிறோம். அந்தப் புகாரில் பதில் சொல்லக் கூடியவர்கள், அந்த விசாரணைக்கு உதவிகரமாக இருக்கக்கூடியவர்கள் ஆசிரியர்கள், ஆசிரியர் அல்லாதார்கள். அவர்களை விசாரிக்க வேண்டும் என்பதற்காகத்தான் அந்த விசாரணை ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறது.



1980 ஜூலை 26]

**திரு. ஜே. எஸ். இராசு : சட்டப்** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் முதலமைச்சர் அவர்களிடத்தில் தந்த மிக முக்கியமான குற்றச்சாட்டு, நிச்சயமாக சம்பந்தப்பட்ட இலாகாவிற்குத்தான் முதலமைச்சர் அவர்களால் அனுப்பப்பட்டு இருக்கும். அப்படியிருக்கும்போது, 4 ஆண்டுக் காலமாக இத்தகைய ஒரு முக்கியமான குற்றச்சாட்டு கொண்ட 'மெமோராண்டம்' மீது நடவடிக்கை எடுக்கப்படாமல் அது எங்கே தேங்கிக் கிடக்கிறது ? அதற்குக் காரணம் என்ன என்பதை அமைச்சர் அவர்கள் ஆராய்ந்து தக்க நடவடிக்கை எடுப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** பேரவைத் தலைவர் அவர்களே, அந்த முதல்வர் மீது 17 ஆண்டுக்காலமாக புகார்கள் வந்தவண்ணம் இருக்கின்றன. அந்தப் புகார்கள் பல்லாண்டுகாலமாக வந்துகொண்டு இருந்த போதிலும், நாங்கள் வந்தபின்பு தான் இந்தக் காரியத்தையாவது செய்து கொண்டு இருக்கிறோம். முன்னாலே மாண்புமிகு உமாநாத் அவர்கள் கேள்விக்கு ஒரு விளக்கம். திரு. அனந்தன் நம்பியார் என்ற பெயரில் ஒரு புகார் வந்து இருக்கிறது. அது அவர்கள் மூலமாக வந்து இருக்கலாம்.

**திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் :** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிற நேரத்தில் 17 ஆண்டுகாலமாக பல புகார்கள் வந்து இருக்கின்றன என்று சொன்னார்கள். இப்படி பல புகார்கள் வந்ததன் அடிப்படையில்தான் பேறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருக்கும்போது அந்த போர்ட்டுக்கு வெளியே இருக்கும் ஒருவரைச் சேர்மனாகப் போடவேண்டும் என்று போட்டார்கள். ஆசிரியருக்கும்—மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும்—ஆசிரியர்களுக்கும் இடையே கலவரம் செய்து கொண்டு இருக்கிறார், அந்த வேலைக்கு அவர் தகுதி இல்லை என்ற முறையில் அந்த போர்ட் சேர்மன் முதல்வர் மீது ஒரு அறிக்கையை தயாரித்து, அதைக் கல்வித் துறை அமைச்சருக்கும், மத்திய கல்வித் துறையின் அமைச்சர் அவர்களுக்கும் சமர்ப்பித்து இருக்கிறார். அந்த அறிக்கை மீது என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டு இருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்: அவர் தொடர்ந்து இத்தகைய ஊழல்கள் செய்துகொண்டு இருப்பதால், உடனடியாக அவரைச் சஸ்பெண்ட் செய்துவிட்டு, விசாரணை நடத்துவதற்கு அரசாங்கம் முன்வருமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, நான் அந்தக் கல்லூரிக் குழு ஆட்சி மன்றக் குழுத் தலைவராக இருக்கிறேன். இது முழுக்க முழுக்க மாநில அரசால் நடத்தப்படுகின்ற கல்லூரி அல்ல.

[1980 ஜூலை 26

மத்திய அரசின் பணம் பாதி இருக்கிறது. அந்த மேனேஜ்மென்ட்டிலே இருக்கிற நாங்களெல்லாம் பேசிக்கொண்டு இருக்கிறோம். நானும் அங்கே போகிறபோது என்னிடத்தில் சந்தித்துச் சொன்னார்கள். புகார்கள் வந்து கொண்டு இருக்கின்றன. அவ்வப்போது புகார்கள் வருகிறபோது அதன்மீது நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறோம். மாண்புமிகு திரு. உமாநாத் அவர்கள் கூறியதுபோல், அவர் புகார் தந்ததாகச் சொல்வது போல் உள்ள வற்றை விசாரிக்க வேண்டும் என்பதற்காகத்தான் அந்தக் குழு அமைக்கப் பட்டு இருக்கிறது. அந்தக் குழு நிச்சயமாக இதைப் பரிசிலிக்கும். அவர்கள் தருகிற அறிக்கையை வைத்து நாங்கள் நடவடிக்கை எடுப்போம். நாங்கள் இந்தப் பிரச்சினையில் நல்ல ஆர்வம் காட்டிக்கொண்டு இருக்கிறோம். இந்தப் பிரச்சினையில் அதிக அக்கறை எடுத்துக்கொண்டு இருக்கிறோம். அந்தக் குழு தருகிற அறிக்கை மீது நடவடிக்கை எடுப்பதில் இருந்து எங்களை யாரும் தடுத்து நிறுத்திவிட முடியாது. எங்களை யாரும் தடையாக இருந்து நடவடிக்கை எடுப்பதில் இருந்து தடுக்க முடியாது என்பதை மிகத் தெளிவாக, உறுதியாக இந்த மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 9-50)

**திரு. மு. அம்பிகாபதி :** தலைவரவர்களே, இந்தப் புகார்கள் சம்பந்தமாக —தோழர் கல்யாணசுந்தரம் அவர்கள்கூட புகார் அனுப்பி இருக்கிறார்கள்— அமைச்சரவர்கள் சொல்லும்போது பல்லாண்டு, பல்லாண்டு, பல்லாயிரக்கணக் கான ஆண்டுகளாகப் புகார் வந்துகொண்டிருப்பதாகச் சொன்னார்கள். உறுப் பினர் திரு. சோமனம் அவர்கள் கேட்பதைப்போல அவரை சஸ்பென்ட் செய்து விட்டு, அவர்மீது மேலும் விசாரணை தொடர அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவரவர்களே, கல்வித் துறை யிலே இதைப்போன்ற பொறுப்பில் ஆயிரக்கணக்கானவர்கள் இருக்கிறார்கள். இப்படிப்பட்ட நேரங்களில் நாம் பொதுவான முறையிலேதான், பொதுவான அடிப்படையிலேதான் பிரச்சினைகளை அணுகுகிறோம். ஆகவே, அவர் களுக்கு புகார்கள் பற்றி விளக்கங்கள் சொல்வதற்கு உரிய வாய்ப்பு வந்து, அதன் பிறகு உரிய நடவடிக்கை எடுக்கிறோம். எடுத்தவுடனேயே சஸ்பென்ட், டிஸ்மிஸ் போன்ற நடவடிக்கைகளை எடுத்தால் அது வேறு விதமான பிரச்சினைகளை ஏற்படுத்திவிடும்.



1980 ஜூலை 26]

## விவசாயத் தொழிலாளர்களுக்கான குறைந்தபட்சக் கூலி.

*வினா எண் 51—**திரு. எல். இளையபெருமாள் :** மாண்புமிகு தொழி லாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) விவசாயத் தொழிலாளர் குறைந்தபட்சக் கூலி சட்டம் எந்தெந்த மாவட்டங்களில் அமுலாக்கப்பட்டிருக்கிறது?

(ஆ) 1979-80-ல் குறைந்தபட்சக் கூலி கொடுக்கப்படாத நிலச்சுவான் தார்கள் மீது எடுத்த மொத்த நடவடிக்கை எண்ணிக்கை யாது?

(இ) இச்சட்டத்தை அமுல் நடத்த தனி இலாகா அமைக்கப்பட் டுள்ளதா ?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** (அ) சென்னை மாவட்டம், தஞ்சாவூர் மாவட்டத்தின் கிழக்குப் பகுதியைத் தவிர மற்ற எல்லா மாவட்டங் களிலும் குறைந்தபட்ச ஊதியச் சட்டம் அமுலாக்கப்பட்டிருக்கிறது. கிழக்கு தஞ்சாவூர் பகுதியில் நியாய ஊதியச் சட்டம் அமுலில் உள்ளது.

(ஆ) 1979-80-ல் குறைந்தபட்சக் கூலி கொடுக்கப்படாததற்காகவோ அல்லது குறைத்துக் கொடுத்ததற்காகவோ நிலச்சுவான்தாரர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(இ) இல்லை.

**திரு. எல். இளையபெருமாள் :** தலைவரவர்களே, 1977 ஆம் ஆண்டு செங்கற்பட்டு மாவட்டத்தில் சிக்கனாங்குப்பம், தென்னாற்காடு மாவட்டத்தில் ஆலம்பாக்கம், பூவாணிகுப்பம், சின்னராஜபாளையம் போன்ற கிராமங்களில் நிலச்சுவாந்தார்கள் குறைந்தபட்ச கூலி கொடுக்கவில்லை என்று முதலமைச்ச ரிடம் நேரிலே புகார் மனு கொடுக்கப்பட்டிருந்தும் இன்றுவரையில் ஒருவர்மீது கூட நடவடிக்கை எடுக்காததற்கு என்ன காரணம் ?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** தலைவரவர்களே, 1948 ஆம் ஆண்டு குறைந்தபட்ச ஊதிய சட்டத்தின்படி விவசாயக் கூலி விகிதம் அமுல் படுத்தப்படுகிறது. இந்தச் சட்டத்தைச் செயல்படுத்தும் பொறுப்பு 1976 ஆம் ஆண்டு முதல் வருவாய்த் துறையினருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் உட்பட மாவட்ட வருவாய்த் துறை அதிகாரிகள், கோட்ட ஆட்சித் தலைவர்கள், துணைக் கோட்டாட்சித் தலைவர்கள், பிர்கா அளவில் வருவாய்த்துறை ஆய்வாளர்கள் இருக்கிறார்கள். எங்களிடம் மனு வந்திருந்தால் இந்த அதிகாரிகளுக்கு அனுப்பியிருப்போம்.

**திரு. எல். இளையபெருமாள் :** தலைவரவர்களே, தென்னாற்காடு மாவட்டத்தில் ஆலம்பாக்கம், பூவாணிகுப்பம் போன்ற கிராமங்களிலிருந்து அமைச்சர் சொன்ன ரெவின்யூ அதிகாரிகளிடமும், ஜில்லா கலெக்டரிடமும் புகார் மனு கொடுக்கப்பட்டது. 1976 ஆம் ஆண்டில் முதலமைச்சராக இருந்த இன்றைய முதலமைச்சரிடம் நேரில் கொடுக்கப்பட்டது மட்டுமல்ல; ஜில்லா கலெக்டராக இருந்த திரு. சுப்பிரமணியம் அவர்களிடமும் நேரடியாகக் கொடுக்கப்பட்டது. இந்த ஆண்டும் செங்கற்பட்டு மாவட்ட கலெக்டரிடம் மனு கொடுக்கப்பட்டிருக்கிறது . . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இந்த டீட்டேயில்ஸ் முழுவதையும் கேள்வி நேரத்தில் சொல்ல வேண்டியதில்லை. இந்த இந்த மாவட்டம், இன்ன இன்ன ஊரில் கொடுத்த மனு என்னவாயிற்று என்று கேட்டால் அதற்கு அமைச்சரிடம் பதில் இருக்காது. கேள்வியை பொதுவாகவும், மூலக்கேள்வியை ஒட்டியும் கேட்க வேண்டும்.

**திரு. எல். இளையபெருமாள் :** செங்கற்பட்டு மாவட்டத்தில் குறைந்த பட்ச கூலி கொடுக்கவில்லை என்று புகார் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் இந்தச் சட்டம் அங்கே அமுல்படுத்தப்படாததற்கு காரணம் என்ன? குறிப்பிட்ட முதலாளிகள்மேல் ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** தலைவரவர்களே, மனு எங்களிடம் வந்திருந்தால் நாங்கள் மேலே சொன்ன அதிகாரிளுக்கு உரிய நடவடிக்கைக்காக அனுப்பியிருப்போம். அவர்கள் 20 (1)-வது பிரிவின்படி நடவடிக்கை எடுப்பார்கள். தாலுக்கா தாசில்தார் நடவடிக்கை எடுக்கலாம். தாலுக்கா தாசில்தாருக்கு லேபர் கோர்ட் மாதிரி ஜூடிசியல் பவர் இருக்கிறது. அவர்களிடம் சாதாரணமாக யாரும் புகார் கொடுக்க முன்வருவதில்லை. ஏனென்றால் சாட்சிகள் வருவது கிடையாது. எனவே சமரச முயற்சியில் எல்லாவற்றையும் தீர்த்துவிடுகிறார்கள்.

THIRU L. ELAYAPERUMAL : My question was not answered properly, Sir.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இரண்டு கேள்வி கேட்டீர்கள், அதற்குப் பதில் சொல்லியாகிவிட்டது.

THIRU L. ELAYAPERUMAL : A petition has been presented against landlord. No action has been taken so far by Government. Why no action has been taken was my question. That has not been answered properly.



**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பொதுப்படையான கேள்வி கேட்டால் தான் பதில் கிடைக்கும். குறிப்பிட்டு ஒவ்வொரு இடமாகக் கேட்டால் அதற்கான விவரங்கள் இருக்காது: ஆகவே பதிலும் கிடைக்காது.

THIRU L. ELAYAPERUMAL : What I say is, in the whole of Tiruvellore taluk in Chingleput district, the Minimum Wages Act has not been implemented. The reply of the Hon. Minister is not convincing.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்விக்குப் பதிலளிக்கின்றபோது தாசில்தார்கள் சமரச முயற்சியில் ஈடுபடுகிறார்கள் என்று அமைச்சரவர்கள் சொல்லி இருக்கிறார்கள். ஆகவே தாங்கள் பதிலைக் கவனித்திருந்தால் தெரிந்திருக்கும்.

THIRU L. ELAYAPERUMAL : I am sorry, Sir. I am keenly wathcing. My contention is that the Minimum Wages Act is not in force at all in Chingleput district. There is no office to implement the Act. That is my point.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லிவிட்டார்கள். அந்தப் பதிலிலே திருப்தி இல்லை என்றால் மீண்டும் வாய்ப்பு வருகின்றபோது அடுத்த கேள்வியைக் கேட்கலாம்.

**திரு. பொ. உத்திராபதி :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, விவசாயத் தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்சக் கூலி கொடுக்க வேண்டும் என்ற சட்டம் தமிழகத்திலே பெரும்பான்மையான பகுதிகளிலே அமல்படுத்தப் படுவதாகத் தெரியவில்லை. கிழத்தஞ்சையிலே 14 நிலப்பிரபுக்கள் இந்தச் சட்டத்தை எதிர்த்து தடை வாங்கி இருப்பதை அமைச்சரவர்கள் அறிவார்களா ? அவ்வாறு தடை வாங்கப்பட்டதன் மூலமாக அந்த கூலிச் சட்டம் அங்கே அமல்படுத்தப்படவில்லை. அதனால் பல சிக்கல்கள் ஏற்பட்டிருக்கின்றன. எனவே அமைச்சரவர்கள் உடனடியாக அந்த ஸ்டே-யை ரத்து செய்வதற்கு முன்வருவார்களா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன். அதே போல் மேலதஞ்சையிலேயும் எல்லா கிராமங்களிலும் குறைந்தபட்சக் கூலிச் சட்டத்தை அமல்படுத்தவேண்டும் என்று சென்ற 20 ஆம் தேதி 10 ஆயிரம் விவசாயத் தொழிலாளர்கள் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் ஒவ்வொரு ஊராகக் கேள்வி கேட்டுக்கொண்டிருந்தால் அமைச்சரவர்கள் அந்த அந்த ஊர்கள் பற்றிய பதில்களை எல்லாம் சொல்ல இயலாது. ஏனென்றால் அதற்கான விவரங்கள் இருக்காது. பொதுப்படையாகக் கேள்வி கேளுங்கள்.

[1980 ஜூலை 26

**திரு. பொ. உத்திராபதி :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இவ்வாறு ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. கூலி கொடுக்கப்படாத நிலையும் இருக்கின்றது. ஆகவே அமைச்சரவர்கள் அதிகாரிகள் சொல்வதை மட்டும் நம்பாமல் ஆங்காங்கே இருக்கக்கூடிய பொது நல ஊழியர் குழு அமைத்து விவரங்கள் கேட்டு அதன்படி குறைந்தபட்ச கூலி விவசாயிகளுக்குக் கிடைக் கின்ற வகையிலே ஏற்பாடு செய்யப்படுமா? அதோடு அரசாங்கப் பண்ணை யிலே வேலை செய்யக்கூடியவர்களுக்கும் குறைந்தபட்சக் கூலி கொடுக்கப் படுமா?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** பேரவைத் தலைவரவர்களே, கேள்வி குறைந்தபட்சக் கூலி கொடுப்பது பற்றித்தான். ஆனால் ஒவ்வொரு இடங்களிலும் இதைச் செயல்படுத்தக் கூடியவர்கள் போர்ட் ஆஃப் ரெவின்யூ அதிகாரிகள். ஆகவே எங்கெங்கே குறைந்தபட்சக் கூலி கொடுக்கவில்லை என்று சொன்னால் நான் முன்பு சொன்னதுபோல் தாசில்தார் அவர்களிடம் முறையீடு செய்யவேண்டும். அவர் அது குறித்து சமன் கொடுப்பதற்கும், அதற்குப் பிறகு தீர்ப்புக் கொடுப்பதற்கும் வேண்டிய அதிகாரங்கள் அவருக்கு இருக்கின்றது. ஆனால் அது நடைமுறையில் சாத்தியமில்லை என்பதால் யாரும் அவர்களிடம் போவதில்லை. ஆகவே வேறுவிதமான முறையிலே இந்தக் குறைந்தபட்சக் கூலியை எஃபக்டிவாக நடைமுறைப்படுத்துவதற்கு அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.

**திரு. இரெ. இராசமாணிக்கம் :** பேரவைத் தலைவரவர்களே, விவசாயத் தொழிலாளர் குறைந்தபட்சக் கூலி சட்டம் கீழத்தஞ்சையில் அமலில் இருக் கின்றது. இப்போது கீழத்தஞ்சையிலே நெல்லினுடைய விலை அதாவது 57 கிலோ கொண்ட மூட்டை விலை 85 ரூபாய் விற்றுக்கொண்டிருக்கின்றது. விவசாயத் தொழிலாளர்களுக்குச் சட்டப்படி 7 ரூபாய் 20 காசு அல்லது ஏழு லிட்டர் நெல்லும் 2 ரூபாய் 80 காசும் கொடுக்கப்பட வேண்டும். தற்போது நெல்லின் விலை உயர்ந்திருப்பதால் 7 ரூபாய் 20 காசு ரொக்கத்தை மட்டும் கொடுக்கிறார்கள். அவ்வாறு ரொக்கமாகக் கொடுப்பதால் விவசாயத் தொழி லாளர்களால் அரிசி வாங்க முடியவில்லை, ஏனென்றால் அரிசியினுடைய விலையும் உயர்ந்திருக்கின்றது . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கேள்வி குறைந்தபட்சக் கூலி கொடுக் கிறார்களா இல்லையா என்பதுபற்றி. ஆகவே அது சம்பந்தமாகத்தான் கேள்வி கேட்க வேண்டுமே தவிர வேறு விவரங்களைக் கேட்கக்கூடாது.



1980 ஜூலை 26]

**திரு. இரெ. இராசமாணிக்கம் :** தலைவரவர்களே, அந்த விவசாயத் தொழிலாளிகளுக்கு 7 லிட்டர் நெல்லும், 2.80 காசும் ரொக்கமாகவும் கொடுப்ப தற்கு அரசாங்கத்திலேயிருந்து உத்தரவு பிறப்பிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-00)

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** பேரவைத் தலைவர் அவர் களே, இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் விவசாயக் கூலி பற்றி கேள்விகளை எழுப்பிக்கொண்டு இருக்கிறார்கள். நான் பதில் சொல்கிற நேரத்தில் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். அறுவடையின் போதும், நடவு வேலைகளின் போதும் போராட்டங்கள் இல்லாத வருடமே கிடையாது என்பதை, அதுவும் கிழக்கு தஞ்சையில் இல்லை என்பதை மாண்புமிகு உறுப் பினர்கள் அனைவரும் அறிவார்கள். ஆனால் இந்த அரசு வந்த பிறகு கூலிக் காக போராட்டமே இல்லை என்பதையும் அனைத்து உறுப்பினர்களும் அறி வார்கள்.

போராட்டமே இல்லை என்றால் தொழிலாளர்களின் கூலிப் பிரச்னையில் இந்த அரசு வெகுவாக பாதுகாத்து வருகிறது என்பதுதான் பொருள். இந்த அரசு முதலாளிகள் பக்கம் இல்லை என்பதும் உங்களுக்கு நன்றாக தெரியும். அதனால் எந்தெந்த இடங்களில் அப்படி நிர்ணயிக்கப்பெற்றபடி கூலி கொடுக்கவில்லை என்று குறிப்பிட்டுச் சொன்னால், சட்டம் இருக்கிறது . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்விக்கான பதிலை அமைச்சர் அவர்கள் சுருக்கமாக அமைத்துக்கொள்ள வேண்டும்.

பேரவையின் அனுமதியோடு கேள்வி நேரம் நீட்டிக்கப் பெறுகிறது.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** பேரவைத் தலைவர் அவர் களே, சட்டம் சரியாக அமுல் நடத்தப்படவில்லை என்று சொன்னால், அதிலும் எந்தெந்த இடங்கள் என்று குறிப்பிட்டுச் சொல்வீர்களேயானால், அவர்கள் சரியான கூலியைப் பெறும் வகையில் நடவடிக்கை எடுக்க அரசு தயாராக இருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. என். வரதராஜன் :** தலைவர் அவர்களே, இந்த மன்றத்தில் பிறி தொருநாள் இதேபோன்ற கேள்விக்கு பதில் அளிக்கையில் தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள், விவசாயத் தொழிலாளர்களிடையே அமைப்புகள் திறக்கப் படாமல் இருப்பதினால் அவர்களால் இந்தக் கூலியை பெற முடியவில்லை என்று சொன்னார்கள். கிழக்கு தஞ்சையைப் பொறுத்தவரையில் அங்கே

[1980 ஜூலை 26

அமைப்புகள் இருக்கின்றன. அதன் விஷயம் வேறு. ஆகவே இன்றைக்கு அப்படி அமைப்புகள் இல்லாமல் கூலி பெறாமல் இருக்கக்கூடிய இடங்களில் தக்க நடவடிக்கை எடுக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** பேரவைத் தலைவர் அவர்களே, அமைப்புகள் இல்லாமல் இல்லை. இப்போது எல்லா இடங்களிலுமே ஓரளவிற்கு அமைப்புகள் இருக்கின்றன. அதுவும் கிழக்குத் தஞ்சையில் நல்ல உறுதியான அமைப்பு இருக்கிறது. ஆகவேதான் அவர்களுக்கு நியாயம் கிடைக்காத காலங்களில் போராடிப் பெற்றார்கள். இப்போது போராடாமலேயே அவைகளைப் பெற்றுக் கொண்டு வருகிறார்கள். அதனால் குறிப்பிட்ட இடங்களில் அவர்கள் நிர்ணயித்தபடி கூலி பெறவில்லை என்று சொன்னால், உறுப்பினர்கள் அவர்கள் அதைக் குறிப்பிட்டுத் தெரிவிப்பார்களேயானால் அதற்கான தக்க வழி வழிகளை அரசு செய்யும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

### தேனி, சின்னமனூர் நகராட்சிகளுக்கு குடிநீர் வழங்கும் திட்டங்கள்.

*வினா எண் 52—திரு. வே. இரா. ஜெயராமன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தேனி, சின்னமனூர் நகராட்சிகளுக்கு குடிநீர் வடிகால் வாரியத்தின் வாயிலாக தற்சமயம் ஆய்விலுள்ள, குடிநீர் அபிவிருத்தித் திட்டங்கள் (Improvement proposals) எப்போது எடுத்துக்கொள்ளப்படும்?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :—**

தேனி—நடைபெற்று வரும் ஆய்வுப் பணிகள் முடிக்கப்பட்டபின் உத்தேச மதிப்பீடு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் தயாரிக்கப்பட்டு அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்படும். அரசு ஒப்புதல் பெற்ற பின்னர் திட்டம் நிறைவேற்றத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

**சின்னமனூர் :**—ஆய்வுப் பணிகள் முடிந்து, உத்தேச மதிப்பீடு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் தயாரிக்கப்படுகிறது. அது அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டு அரசின் ஒப்புதல் பெற்ற பின் நிறைவேற்றத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

**திரு. வே. இரா. ஜெயராமன் :** தலைவர் அவர்களே, அந்தப் பணிகள் விரைவாக நடப்பு ஆண்டிலேயே அமைப்பதற்கான முயற்சிகளை அரசு எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்?



1980 ஜூலை 26]

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** பேரவைத் தலைவர் அவர்களே, எவ்வளவு விரைவில் பணிகள் மேற்கொள்ளப்படுமோ, அவ்வளவு விரைவில் மேற்கொள்ள முயற்சிகள் செய்யப்படும்.

### மூவாநல்லூர் கிராமத்தில் இறைவைப் பாசனத் திட்டம்.

*வினா எண் 53—திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மன்னார்குடி தாலுக்கா மூவாநல்லூர் கிராமத்தில் இறைவைப் பாசனத் திட்டம் எப்பொழுது முதல் செயல்படும்?

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது:** மன்னார்குடி தாலுக்கா மூவாநல்லூர் கிராமத்தில் இறைவைப் பாசனத் திட்டம் விரைவில் செயல்படத் துவங்கும்.

**திரு. மு. அம்பிகாபதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே நான் கேட்டிருப்பது எப்பொழுது முதல் செயல்படும் என்று, ஆனால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது, திரைப்பட விளம்பரம் மாதிரி விரைவில் செயல்படத் துவங்கும் என்று சொல்லி விட்டார். எப்போது என்பதை சரியாகச் சொல்ல இயலுமா என்று அறிய விரும்புகிறேன்.

(விடை இல்லை)

### வீரசோழனாற்றில் திருகு மதகு கட்டும் திட்டம்.

*வினா எண். 54—திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாயூரம் வட்டம் எடக்குடி எல்லையில் வீரசோழனாற்றில் 79/12 மைல் திருகு மதகு கட்டும் திட்டம் இரண்டு ஆண்டு காலத்திற்கு முன்னம் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வேலை துவங்கப்படாமல் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், வேலை எப்போது துவங்கப்படும்?

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :** (அ) வீரசோழனாற்றில் 79/1 மைலில் ரெகுலேட்டர் கட்டுவதற்கான திட்டம் ரூ. 3 லட்சத்திற்கு தயாரிக்கப்பட்டுள்ளது. இவ்வேலையை காவிரி டெல்டா பகுதியை நவீனமாக்கும் திட்டத்தில் ஒரு பகுதியாக, 1980-81-ம் நிதி ஆண்டில் எடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ள திட்டங்களில் ஒன்றாக சேர்க்கப்பட்டுள்ளது.

[1980 ஜூலை 26

(ஆ) இவ்வேலை நடப்பு பாசன அடைப்பு காலத்தில் எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. இரெ. இராசமாணிக்கம்: இந்த வீரசோழனாற்றில் 79/12 என்ற இடத்தில் ரெகுலேட்டர் கட்டுவதால் எவ்வளவு கிராமங்களுக்குப் பாசன வசதி கிடைக்கும்? அதனால் பயன் அடையக் கூடிய விவசாயிகள் எவ்வளவு பேர்கள்? அதனால் எவ்வளவு ஏக்கர் நிலங்களுக்குப் பாசன வசதி கிடைக்கும்?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: ஏற்கனவே இரண்டாண்டுக் காலத்திற்கு முன்பு தயாரிக்கப்பட்ட வேலை துவங்கப்படாமல் உள்ளதா என்ற கேள்விக்குப் பதில் சொல்லியிருக்கிறேன். மற்ற விளக்கங்களுக்கு தனிக் கேள்வி போடவேண்டும்.

திரு. இரெ. இராசமாணிக்கம்: வீரசோழனாற்றில் இன்னும் பக்கத்தில் ஏதாவது ரெகுலேட்டர் கட்ட திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: ஆய்வில் இல்லை.

## கெலவரப்பள்ளி அணைத் திட்டம்.

*வினா எண் 55—திரு. மு. ப. முனுசாமி: மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கெலவரப்பள்ளி அணைத் திட்டத்தை நிறைவேற்றி முடிக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

(ஆ) காலதாமதத்திற்கு காரணம் என்ன?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: (அ) கெலவரப்பள்ளி நீர்த் தேக்கத் திட்டத்தில் 99 சதவீதம் மண் அணை அமைக்கும் வேலைகளும் 73 சதவீதம் கல் கட்டிட அணை அமைக்கும் வேலைகளும் முடிக்கப் பட்டுள்ளன. குறுக்கு கல் கட்டிடம் கட்டும் பணி 27 சதவீதம் முடிக்கப் பட்டு விட்டதுடன் 14 கி.மீ. இடப்புற கால்வாய் மற்றும் 9.5 கி.மீ. வலப்புற கால்வாய் தோண்டும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

(ஆ) இதற்கிடையில் இத்திட்டத்திற்காக நிலம் கையகப்படுத்தும் சட்டத்தின் கீழ் அரசு வெளியிட்ட அறிக்கையினை எதிர்த்து சில நிலச் சுவான்தார்கள் உயர்நீதி மன்றத்தில் ஒரு ரிட் மனு தாக்கல் செய்துள்ளனர். அம்மனுவின் பேரில் உயர்நீதி மன்றம் இத்திட்டத்தின் பணிகளுக்கு தடுப்பு உத்திரவு பிறப்பித்துள்ளது. இதன் காரணமாக இத்திட்டத்திற்கான பணிகள் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.



1980 ஜூலை 26]

திரு. மு. ப. முனுசாமி: ஒரு திட்டத்தை ஆரம்பிக்கும்போது அந்தத் திட்டத்தின் கீழ் வரக்கூடிய நிலச்சுவாந்தார்களை அவர்கள் யார் யார் என்று நிர்ணயித்து அவர்கள் ஒப்புதலைப் பெற்றுத்தான் திட்டத்தை ஆரம்பிக்கிறோம். அத்திட்டத்தை காலதாமதப்படுத்த சில நிலச்சுவாந் தார்கள் பெரும்பான்மை மக்கள் முன்னேற்றம் அடையக் கூடிய திட்டத்தை நிறுத்தி வைக்க உயர்நீதிமன்றத்திற்குச் சென்றிருக்கிறார்கள். நிலச் சொந்தக்காரர்கள் தங்கள் நிலத்திற்கு நஷ்டயீட்டுத் தொகை சரியாக நிர்ணயிக்கப்படவில்லை என்ற காரணத்தைக் காட்டி உயர்நீதி மன்றம் சென்றிருக்கிறார்கள். இதனால் பொது மக்கள் பயன் அடைவதை அவர்கள் நிறுத்தி வைக்கிறார்கள். ஆகவே பொது மக்களின் கஷ்டத்தை நிவர்த்தி செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: பொது மக்களுக்கு இருக்கிற கஷ்டங்களை நிவர்த்தி செய்வதற்காகத்தான் இந்த அரசு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## தன்னிறைவுத் திட்டம்.

*கு.கா.வி. எண் 44—திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) தற்போது 'தன்னிறைவு' திட்டத்தில் எத்தனை ஒன்றியங்கள் எடுக்கப்படுகின்றன?

(ஆ) எந்த தகுதியின் அடிப்படையில் தேர்வு செய்யப்படுகிறது?

(இ) மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ள திருச்சிராப்பள்ளி மாவட் டத்தில் உள்ள ஸ்ரீரங்கம் தொகுதியைச் சார்ந்த மணிகண்டம் ஒன்றியம் சேர்க்கப்படுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) 1979-80 ஆம் ஆண்டில் 69 ஊராட்சி ஒன்றியங்களும், 1980-81-ல் 100 ஊராட்சி ஒன்றியங்களும் தன்னிறைவு திட்டத்தின் கீழ் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளன.

(ஆ) பொதுவாக ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டம், சிறு விவசாயிகள் மேம்பாடுத் திட்டம் மற்றும் வறட்சி நிவாரணத் திட்டம் செயல் படுகின்ற வட்டாரங்கள் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளன. பின்தங்கிய நிலையில் உள்ள வட்டாரங்களும் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளன.

(இ) மணிகண்டம் ஒன்றியம் இந்நிதியாண்டில் சேர்க்கப்படவில்லை.

[1980 ஜூலை 26

* கு.கா.வி. எண். 45—திரு. எம். எஸ். மாணிக்கம். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்திலுள்ள வேதாரண்யம் ஒன்றியம் 1980-81-ம் ஆண்டு தன்னிறைவுத் திட்டத்தில் சேர்க்கப்பட உள்ளதா ?

(ஆ) ஆம் என்றால் அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** (அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழுப்புவதற்கு இடமில்லை.

**திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் :** இந்தத் தன்னிறைவுத் திட்டம் நான்காண்டு காலத்தில் முடியும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. இதற்கு மொத்தம் செலவிடப்படும் தொகை எவ்வளவு? அவை எந்தெந்த வகையில் அந்த ஒன்றியங்களுக்குப் பயன்படும் ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** வருகிற நான்காண்டுகளுக்குள்ளாக 374 ஒன்றியங்களிலும் தன்னிறைவுத் திட்டத்தை விரிவுபடுத்தி அதன்மூலம் அடிப்படை வசதிகளான குடிநீர் வசதி, தெரு மின் விளக்கு வசதி, சுகாதாரம், கல்வி, சாலை வசதி இவைகளையெல்லாம் சீர் செய்து செம்மைப்படுத்தி ஒவ்வொரு ஒன்றியங்களுக்கும் கொடுக்க வேண்டுமென்ற அடிப்படையில் இந்த தன்னிறைவுத் திட்டம் செயல்படும். இதற்கு செலவிடக்கூடிய தொகை ரூபாய் 151 கோடி 10 இலட்சம் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது.

(முற்பகல் 10.10)

**திரு. எம். எஸ். மாணிக்கம் :** பேரவைத் தலைவர் அவர்களே, தன்னிறைவுத் திட்டத்திலே பல திட்டங்களை நிறைவேற்றுகின்ற ஒன்றியங்களை எடுப்பதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இதிலே வளர்ச்சித் திட்டங்களே வராத, பின்தங்கி இருக்கின்ற ஒன்றியங்களும் எடுத்துக் கொள்ளப்படுமா ? அதிலே வேதாரண்யம் ஒன்றியத்தை எடுத்துக்கொள்வதற்கு அமைச்சர் அவர்கள் கவனம் செலுத்துவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** தலைவர் அவர்களே, ஏற்கனவே ஐ.ஆர்.டி.பி. அதாவது ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டம், சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம் மற்றும் வறட்சி நிவாரணத் திட்டம் செயல்படுகின்ற ஒன்றியங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இந்தத் திட்டங்கள் எந்தெந்தப் பகுதிகளிலே அதிகமாக செயல்படுத்தப்படு



1980 ஜூலை 26] [திரு. ப. குழந்தைவேலு]

கின்றதோ, அந்த ஒன்றியங்களை முதலில் எடுத்துக் கொண்டிருக்கிறோம். அப்படிப்பட்ட ஒன்றியங்களை எடுத்துக் கொள்வதன் மூலம் செலவு செய்யும் தொகை குறையும். அந்த அடிப்படையிலே முடிவெடுக்கப்பட்டிருக்கிறது. இன்னும் எடுக்கப்பட இருக்கிறது. ஆகவே, இந்தத் திட்டங்கள் இல்லாத ஒன்றியங்களை இப்போது எடுக்கவில்லை. அடுத்த ஆண்டு இன்னும் அதிகமான ஒன்றியங்கள் எடுக்கப்படும். ஆகவே, 374 ஒன்றியங்களும் இந்த அடிப்படையிலே வசதி செய்து கொடுக்கப்படும்.

**திரு. இரெ. இராசமாணிக்கம் :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த தன்னிறைவுத் திட்டம் துவக்கப்பட்டு, எத்தனை ஆண்டுகளுக்குள், திட்டம் முடிக்கப்பட வேண்டும். ஆண்டுக்கு எத்தனை ஒன்றியங்கள் வீதம் நிறைவேற்றப்பட உள்ளது ? அப்படி நிறைவேற்றுகின்றபோது, ஒவ்வொரு ஆண்டுக்கும் இந்த ஒன்றியங்களுக்கு செலவழிக்கக்கூடிய தொகை எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன் ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே 4 ஆண்டுகளுக்குள் இத்திட்டம் நிறைவேற்றப்படும் என்று சொன்னேன். அதை மாண்புமிகு உறுப்பினர் கவனிக்கவில்லை என்று கருதுகிறேன். இந்தத் திட்டத்தை படிப்படியாக, உடனே 69 ஒன்றியங்கள், இந்த ஆண்டு 100, அடுத்த ஆண்டு 100, அதற்கு அடுத்த ஆண்டு 105 என்று இப்படி 374 ஒன்றியங்களையும் எடுத்துக்கொள்ளப்படும்.

**திரு. இரா. கருப்பையா :** பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டத்தில் எந்தெந்த ஒன்றியங்கள் எடுக்கப்பட்டிருக்கிறது ? என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** தலைவர் அவர்களே, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் 7 அல்லது 8 ஒன்றியங்கள் எடுக்கப்பட இருக்கிறது. இதற்கு நான் பதில் சொன்னால், மாண்புமிகு உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு மாவட்டத்தைப் பற்றியும் அறிந்துகொள்ள வேண்டுமென்றால், 169 ஒன்றியங்களின் பெயர்களைச் சொல்லவேண்டிய நிலை ஏற்படும். அவைத் தலைவர் அவர்கள் எனக்கு அனுமதி கொடுத்தால், சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இப்போது நேரம் கிடையாது. வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடம்பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. அறிவிப்புகள்.

### (அ) மதிப்பீட்டுக் குழு—தேர்தல்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவைக்கு சில அறிவிப்புகள்.

1980-81 ஆம் ஆண்டுக்கான மதிப்பீட்டுக் குழுவிற்கு (Estimates Committee) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பதினாறு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கும் பொருட்டு கீழ்க்கண்ட பதினைந்து உறுப்பினர்கள் முறைப்படி நியமனம் செய்யப்பட்டுள்ளனர் என்பதை நான் பேரவைக்கு அறிவிக்கிறேன்.

1. திரு. த. வேணுகோபால்.
2. திரு. என். கிட்டப்பா.
3. திரு. என். வரதராஜன்.
4. திரு. பொ. உத்திராபதி.
5. திரு. எம். கண்ணன்.
6. திரு. க. பாலசுப்பிரமணியன்.
7. திரு. இரா. முத்தையா.
8. திரு. செ. செம்மலை.
9. திரு. சா. ஜெகத்ரட்சகன்.
10. திரு. ஏ. சி. சண்முகம்.
11. திரு. பி. கந்தசாமி.
12. திரு. வி. பாலகிருஷ்ணன்.
13. டாக்டர் கே. சமரசம்.
14. திரு. டி. ஆர். இராஜாராம் நாயுடு.
15. திரு. வெ. வால்மீகி.

1980-81 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழுவிற்கு இவர்கள் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பெற்றதாக நான் அறிகிறேன். ஒரு வெற்றிடத்தை நிரப்புவதற்கு பின்னர் அறிவிப்பு செய்யப்பெறும்.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களும், பொதுக் கணக்குக் குழு தலைவர் மற்றும் பொது நிறுவனங்கள் குழு தலைவர் ஆகியோர் தங்கள் அலுவல் காரணமாக இக் குழுவின் உறுப்பினர்களாவர்.

இப்பேரவையின் 211-வது விதியின்கீழ் டாக்டர் கே. சமரசம் அவர்களை இக்குழுவின் தலைவராக நான் நியமனம் செய்கிறேன்.





### (ஆ) பொது கணக்குக் குழு—தேர்தல்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** 1980-81 ஆம் ஆண்டுக்கான பொதுக் கணக்குக் குழுவிற்கு கீழ்க்கண்ட பதினாறு உறுப்பினர்கள் முறைப்படி நியமனம் செய்யப்பட்டுள்ளனர் என்பதை நான் பேரவைக்கு அறிவிக்கிறேன்.

1. திரு. ஆர். உமாநாத்.
2. திரு. எம். ஆறுமுகம்.
3. திரு. து. புருடோத்தமன்.
4. திரு. வி. கிருஷ்ணமூர்த்தி.
5. திரு. க. பாரமலை.
6. திரு. மா. குருசாமி என்கிற அண்ணாதாசன்.
7. திரு. வ. சத்தியமூர்த்தி.
8. திரு. ஆர். கே. பெருமாள்.
9. திரு. ந. குலசேகரபாண்டியன்.
10. திரு. எம். எஸ். மாணிக்கம்.
11. திரு. ஜே. சி. டி. பிரபாகரன்.
12. திரு. மா. சின்னராஜ்.
13. திரு. ஜி. கே. சுப்பிரமணியன்.
14. டாக்டர் கே. பி. இராமலிங்கம்.
15. திரு. என். எஸ். வி. சித்தன்.
16. திருமதி டி. யசோதா.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவர்களின் எண்ணிக்கைக்குச் சமமாக இருப்பதால், 1980-81 ஆம் ஆண்டு பொதுக் கணக்குக் குழுவிற்கு இவர்கள் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டதாக நான் அறிவிக்கிறேன்.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களும், மதிப்பீட்டுக் குழுவின் தலைவர் மற்றும் பொது நிறுவனங்கள் குழு தலைவர் ஆகியோர் தங்கள் அலுவல் காரணமாக இக்குழுவில் உறுப்பினர்களாவர்.

பேரவையின் 223-வது விதியின் கீழ் திரு. என். எஸ். வி. சித்தன் அவர்களை இக்குழுவின் தலைவராக நான் நியமனம் செய்கிறேன்.

[1980 ஜூலை 26

### (இ) பொது நிறுவனங்கள் குழு—தேர்தல்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** 1980-81 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவிற்கு கீழ்க்கண்ட பதினாறு உறுப்பினர்கள் முறைப்படி நியமனம் செய்யப்பட்டுள்ளனர் என்பதை நான் பேரவைக்கு அறிவிக்கிறேன் :—

1. திரு. பெ. சு. திருவேங்கடம்.
2. திரு. சு. பாலன்.
3. திரு. கே. ரமணி.
4. திரு. பொ. விஜயராகவன்.
5. திரு. நா. பெருமாள்.
6. திரு. இரா. தாமரைக்கனி.
7. திரு. எஸ். டி. உகம்சந்த்.
8. திரு. அ. தங்கராசு.
9. திரு. பி. தனபால்.
10. திரு. தி. அன்பழகன்.
11. திரு. கே. ஆர். சின்னராசு.
12. திரு. கே. உச்சி
13. திரு. நன்னிலம் அ. கலையரசன்.
14. திரு. எஸ். ஆண்டித்தேவர்.
15. திரு. பி. தங்கவேல்
16. திரு. எம் சுந்தரம்.

நியமனம் செய்யப்பெற்றுள்ள வேட்பாளர்களின் எண்ணிக்கை தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவர்களின் எண்ணிக்கைக்குச் சமமாக இருப்பதால், 1980-81 ஆம் ஆண்டு பொது நிறுவனங்கள் குழுவிற்கு இவர்கள் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டதாக நான் அறிவிக்கிறேன்.

மதிப்பீட்டுக் குழுவின் தலைவர் தனது அலுவல் காரணமாக இக்குழுவின் உறுப்பினராவார்.

இப்பேரவை விதி 236-ன் கீழ் திரு. தி. அன்பழகன் அவர்களை இக்குழுவின் **தலைவராக நான் நியமனம் செய்கிறேன்.**



1980 ஜூலை 26]

## 3. கவன ஈர்ப்புகள்.

### (அ) சென்னை அரசினர் ஸ்டான்லி மருத்துவ மனை கடைநிலை ஊழியர்கள் பிரச்சனை.

**திரு. ப. பொன்னுரங்கம் :** பேரவைத் தலைவர் அவர்களே, "சென்னை அரசினர் ஸ்டான்லி மருத்துவ மனையில் பணி புரியும் எம்.என்.ஓ., எப். என். ஓ., போன்ற கடைநிலை ஊழியர்களுக்கு ஆண்டு ஊதிய உயர்வு அளிக்கப்படாதது" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** பேரவைத் தலைவர் அவர்களே,

சென்னை அரசினர் ஸ்டான்லி மருத்துவ மனையில் 117 ஆண் செவிலிய உதவியாளர்களும், 71 பெண் செவிலிய உதவியாளர்களும் ஆக 188 பேர் பணி புரிகிறார்கள். அவர்களில் 157 பேருக்கு ஆண்டு ஊதிய உயர்வு அளிக்கப் பட்டுள்ளது. எஞ்சியுள்ள 31 பேருக்கு மட்டும் சில ஆண்டுகளாக ஊதிய உயர்வு அளிக்கப்படவில்லை. மேற்படி மருத்துவமனையில் லஸ்கர், துப்புரவு பணியாளர் போன்ற பல்வேறு பதவிகளில் உள்ள அடித்தள ஊழியர்களின் மொத்த எண்ணிக்கை 331 ஆகும். அவர்களுள் இதுவரை 249 பேருக்கு ஆண்டு ஊதிய உயர்வு அளிக்கப்பட்டுள்ளது. எஞ்சிய 82 பேருக்கு மட்டுமே இன்னும் ஊதிய உயர்வு அளிக்கப்பட வேண்டியுள்ளது.

2. அடித்தள ஊழியர்கள் அடிக்கடி பணிக்கு வராமல் நின்றுவிடும் வழக்கத்தையுடையவர்களாக இருப்பதால் அவர்களுக்கு ஊதிய உயர்வு அளிக்கப்பட வேண்டிய நாளைக் கணிப்பதில் மிகுந்த சிரமமும், கால தாமதமும் ஏற்படுகின்றன.

3. அண்மையில் மருத்துவ கல்வித் துறையில் அதிகப்படி பணியாளர்களை நியமித்த அரசு வழங்கிய ஆணையின் பிரகாரம் ஸ்டான்லி மருத்துவ மனையில் சில அமைச்சு பணியாளர் கூடுதலாக நியமிக்கப்பட்டு, அந்த பணியாளர்களின் உதவியைக் கொண்டு மேலே கூறப்பட்ட எஞ்சியுள்ள செவிலிய உதவியாளர்களுக்கும், அடித்தள ஊழியர்களுக்கும் ஆண்டு ஊதிய உயர்வை உடனடியாக அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

**திரு. ப. பொன்னுரங்கம் :** அமைச்சர் அவர்கள் தந்த அறிக்கையிலே ஸடான்லி மருத்துவமனையில் பணியாற்றுகிற நூற்றுக்கணக்கானவர்களில் 82 பேருக்கு ஆறு ஏழு ஆண்டுகளாக இன்கிரிமென்ட் தரப்படவில்லை என்று கூறியிருக்கிறார்கள். எம்.என்.ஓ., எஃப்.என்.ஓ. என்ற டெசிக்னேஷன் எம்.எ.எ., எஃப்.என்.எ. என்று மாற்றப்பட்டிருக்கிறது. ஆர்டர்லிஸ் அசிஸ்டென்ட் ஆகியிருக்கிறார்கள். இன்கிரிமென்ட் போட தேவையான ஸ்டாஃப் இல்லையென்று சொல்லியிருக்கிறார்கள். இன்னொரு காரணம் அந்தப் பணியாளர்களின் இர்ரெகுலர் அட்டென்டன்ஸ் என்று சொல்லியிருக்கிறார்கள். எனக்குத் தெரிந்தவரை 'இர்ரெகுலர் இன் அட்டென்டன்ஸ்' இல்லை. சப்ஸ்டிடியூட்ஸ் போடுகிறார்கள், அவர்களுக்குப் பாதிச் சம்பளம் போடுகிறார்கள். அதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். எஃப்.என்.எ., எம்.என்.எ. ஆகியவர்களை ரெக்கார்டு கிளார்க்காகப் ப்ரொமோட் பண்ணலாம். இப்படி கடைநிலை ஊழியர்களாக இருக்கக்கூடிய அவர்களுக்கு 300, 400 ரூபாய் சம்பளம் வாங்குகிறவர்களுக்கு ஆறு, ஏழு ஆண்டுகளுக்கு இன்கிரிமென்ட் தராது இருந்தால் அதற்குத் தகுந்தபடி டி.எ., சி.சி.எ. எல்லாவற்றிலும் அதிகமாக வரக்கூடிய தொகை குறைகிறது. ஆனால்

(முற்பகல் 10-20)

அப்படிப்பட்ட நிலைமையில்லாமல் ரொம்ப சங்கடமான நிலையில் நூற்றுக் கணக்கான கடைநிலை ஊழியர்கள் இருக்கிறார்கள். அடிஷனல் ஸ்டாப் போட்டு அதோடு கூட அவர்களுக்கு எல்லாம் இன்கிரிமென்ட் உடன்டியாகப் போட்டுக் கொடுப்பதற்கு அரசு ஏற்பாடுகளைச் செய்யுமா ?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** தலைவர் அவர்களே, அவர்களிலே ஆண்கள் 117 பேர்கள்—நர்ஸிங் அஸிஸ்டென்ட்ஸ்—இருக்கிறார்கள், அவர்களிலே 100 பேர்களுக்கு இன்க்ரிமென்ட் கொடுக்கப் பட்டிருக்கிறது. பெண்கள் 71 பேர்களில் 57 பேர்களுக்கு இன்க்ரிமென்ட் கொடுக்கப்பட்டு இருக்கிறது. எஞ்சியுள்ளவர்களுக்கு இன்க்ரிமென்ட் கொடுப்பதற்காக உடனடியாக உத்திரவு போடப்பட்டிருக்கிறது. மினிஸ்ட்ரியல் ஸ்டாப் இல்லை, அதற்காக அடிஷனல் ஸ்டாப் வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அதற்காக The Government have sanctioned additional staff in G.O. No. 841, Health, dated 19th May 1980 என்ற முறையிலே ஒரு உத்தரவின் மூலம் அவர்களுக்கு அடிஷனல் ஸ்டாப் கொடுக்கவேண்டுமென்று போட்டு அதற்காக நிதி இலாகாவைக் கேட்டுக் கொண்டு அது பரிவோடு கவனிக்கப்படும் என்ற தகவல் எங்களுக்கு வந்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்வியின்





அடிப்படையில் உடனடியாக எஞ்சியுள்ளவர்களுக்கும் இன்க்ரிமென்ட் கொடுப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்வோம் என்ற வாக்குறுதியை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ப. பொன்னுரங்கம் :** இரண்டு இடங்களிலேயும் எக்ஸ்பைர்டு எம்ப்ளாயீஸ் உடைய சன்ஸ்க்கு எம்ப்ளாய்மென்ட் கொடுக்கவில்லை. அவர்கள் அப்ளிகேஷன் போட்டு அப்படியே இருக்கின்றன. அதிகாரிகள் அப்படியே போட்டுவிடுகிறார்கள். அங்கே இருக்கிற டீன் செல்வாக்கு உள்ள ஆளாம், பெரிய ஆளாம் யார் என்று எனக்குத் தெரியாது. குறிப்பாக ஸ்வீப்பர்கள், லஸ்கர்ஸ் போன்ற வேலைகளில் எக்ஸ்பைர்டு எம்ப்ளாயிஸ்களுடைய சன்களுக்குக் கொடுக்க அரசு ஏற்பாடுகளைச் செய்ய முன்வருமா ?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** அதிலே என்ன சங்கடம் வருகிறது என்றால் ஒருவர் இறந்துபோனால் அவருடைய மகனுக்கு வேலை கொடுக்க வேண்டுமென்பது ஒரு கன்வென்ஷன் . . .

**திரு. ப. பொன்னுரங்கம் :** கலைஞர் ஆட்சியிலே அதற்காக ஜீ.ஓ. வந்திருக்கிறது.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** அந்த ஜீ. ஓ. உறுதிப்படுத்தப் பட்டிருக்கிறது. அதிலே சங்கடம் என்னவென்றால், ஒருவருக்குக் கொடுத்த உடனே இன்னொருவருக்கும் கொடுக்கவேண்டுமென்று கேட்கிறார்கள். இப்படி நான்கு இடங்களிலே கேட்கிறார்கள் என்று எனக்குத் தகவல் இருக்கிறது. ஒருவர் இறந்துபோனால் அவருடைய மகனுக்கு வேலை கொடுக்கவேண்டுமென்று சொன்ன பிறகு இன்னொருவருக்கும் கொடுக்கவேண்டுமென்று கேட்பதால் அதனால் மற்றவர்கள் வேலை வாய்ப்புப் பெறுவது பாதிக்கப் படுகிறது. அங்கே இருக்கிற டீன் செல்வாக்கு உள்ளவரா என்று எனக்குத் தெரியாது. அரசாங்கம் நியாயத்தின் அடிப்படையில் உத்திரவு போடுகிறது. யாருடைய செல்வாக்கின் அச்சம் காரணமாக நாம் போடவேண்டிய உத்திரவைப் போடாமல் இருப்பதில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### (ஆ) சிற்றார் அணை நீர் குறிப்பிட்ட நேரத்தில் திறந்து விடுதல்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து திருவாளர்கள் டி. மணி, ஜே. ஹேமச்சந்திரன் ஆகியோர் ஒரு அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள் திரு. மணி.

[1980 ஜூலை 26

**திரு. டி. மணி :** பேரவைத் தலைவர் அவர்களே, "சிற்றார் அணையிலிருந்து குறிப்பிட்ட நேரத்தில் தண்ணீர் திறந்துவிடாததால் கிள்ளியூர், நட்டாலம், மிடாலம், குன்னத்தூர், பைங்குளம் போன்ற பகுதிகளில் உள்ள நெற்பயிர்கள் காய்ந்து அதனால் அப்பகுதி விவசாயிகள் அவதியுறுவது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :** தலைவர் அவர்களே. கிள்ளியூர், நட்டாலம், மிடாலம், குன்னத்தூர், கீழ்மிடாலம், பைங்குளம், நல்லூர் ஆகிய பகுதிகள், சிற்றார் பட்டணங்கால் திட்டத்தின்கீழ் உள்ள பட்டணங்கால் கால்வாயின் மூலம் பாசனம் பெறும் பகுதிகளாகும்.

2. பேச்சிப்பாறை, பெருஞ்சாணி, சிற்றார் அணை I, சிற்றார் அணை II ஆகிய நீர்த்தேக்கங்களிலிருந்து, கோதையாறு திட்டம் (64,000 ஏக்கர்), பட்டணங்கால் கால்வாய் (15,000 ஏக்கர்) மற்றும் ராதாபுரம் கால்வாய் (17,000 ஏக்கர்) ஆகியவற்றிற்கு நீர் வழங்கப்படுகிறது. கோதையாறுத் திட்டம் மற்றும் பட்டணங்கால் கால்வாய் ஆகியவையின் மூலம், ஜூன் 1-ம் தேதியிலிருந்து 28 பிப்ரவரி வரை பயிர் செய்யப்படும். கோதையாறு திட்டம், மிகவும் பழைய பாசனத் திட்டமாதலால் நீர் பெறுவதில் முதலிடம் பெறுகிறது. பாசன விதிகளின்படி, கோதையாற்றுப் பாசனத் திட்டத்திலிருந்து ஜூன் மாதம் 1-ம் தேதி நீர் விடுவதற்கு, மேலே சொன்ன நான்கு நீர்த்தேக்கங்களையும் சேர்த்து குறைந்தது 1,500 மில்லியன் கன அடி நீர் இருப்பு தேவை. இதே போல், பட்டணங்கால் கால்வாயிலிருந்து நீர்விட மேற்படி நான்கு நீர்த்தேக்கங்களையும் சேர்த்து குறைந்தது 2,000 மில்லியன் கன அடி நீர் இருப்பு தேவை.

3. இந்த ஆண்டு, நீர்த்தேக்கங்களில் நீர் இருப்பை கருத்தில் கொண்டு கோதையாற்றுப் பாசனத் திட்டத்திற்கு மட்டும் நீர் திறந்துவிட முடிந்தது. பட்டணங்கால் கால்வாயிலிருந்து நிலங்களுக்கு நீர்விடுவது ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. இப்பகுதியில், தென்மேற்கு பருவ மழை இதுவரை பெய்யாததால், தற்போதுள்ள நீர் இருப்பை கொண்டு பட்டணங்கால் கால்வாயை பாசனத்திற்கு திறந்துவிட இயலாது. நிலைமை கண்காணிக்கப்பட்டு வருகிறது. தக்க சமயத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்.



1980 ஜூலை 26]

**திரு. டி. மணி :** தலைவரவர்களே, குன்னத்தூர் பைங்குளம், கிள்ளியூர், நட்டாலம், மிடாலம் அதுபோன்ற கொல்லங்கோடு, மெதுகுமல் போன்ற பகுதிகளிலே, நெய்யாற்றிலிருந்து வருகின்ற இடது கால்வாய் தண்ணீரை முறையாகப் பெற்றுக்கொண்டால் அங்கே உள்ள நிலங்களுக்கு தண்ணீர் வழங்கப்பட முடியும். அந்தத் தண்ணீர் நெய்யாறு அணையைக் கட்டும் நேரத்தில், தமிழகமும் கேரள மாநிலமும் சேர்ந்து ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது. அந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் நெய்யார் இடதுகரை கால்வாய்க்கு கிடைக்க வேண்டிய அடிப்படையில் முழு நீரையும் பெற்றால் அந்தப் பகுதிகளுக்குத் தண்ணீர் தட்டுப்பாடு இல்லாமல் தண்ணீர் கிடைக்கும், நிலமும் காயாது. எனவே, நமக்கு கிடைக்க வேண்டிய தண்ணீரை பெற்றுத் தந்து அந்தப் பணியைச் செய்து முடிக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :** தலைவரவர்களே, முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன் :** தலைவரவர்களே, தற்சமயம் இப்பகுதிகளில் இருக்கும் விவசாயிகள் இன்று அவதிப்படுகிறார்கள் என்பதால், பேச்சிப்பாறை டேமிலிருந்து விவசாயத்திற்குத் தண்ணீர் விடுவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா ?

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் தனிப்பட்ட முறையிலே என்னிடத்திலே இந்தப் பிரச்னையைக் கொண்டு வந்தார்கள். தகவலுக்காக நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். 1979 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 24 ஆம் தேதி பேச்சிப்பாறையில் 24.75 அடி அளவிற்குத் தண்ணீர் இருந்தது. ஆனால் இந்த ஆண்டு அதே தேதியில் 8.30 அடி அளவிற்குத்தான் தண்ணீர் இருக்கிறது. இங்கே இருக்கின்ற நிலைமைகளை வைத்துத்தான் கொடுக்க முடியும் என்ற நிலைமை இருக்கிறது. தென்மேற்குப் பருவ மழையும் உதவிகரமாக இல்லை. ஆகவே, எல்லாவற்றையும் கவனித்து அதற்குரிய உதவிகளைச் செய்கின்ற சூழ்நிலை வந்தால் நிச்சயமாக அரசு தகுந்த நடவடிக்கை எடுக்கும்.

[1980 ஜூலை 26

## 4. ஒழுங்குப் பிரச்சினை.

### அலுவல் ஆய்வுக் குழு மதிக்கப்பெறவில்லை என்பது.

*டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, ஒரு ஒழுங்குப் பிரச்னையை உங்கள் அனுமதியோடு இங்கே எழுப்ப விரும்புகிறேன். நம்முடைய தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளில் 200-வது விதியில், பேரவைத் தலைவர் அலுவல் ஆய்வுக் குழுவைக் கலந்தாலோசித்து மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றையும் விவாதிப்பதற்கான நேரத்தை ஒதுக்கி, அக்கோரிக்கைகள் எடுத்துக்கொள்ளப்பெற வேண்டிய வரிசை முறையையும் முடிவு செய்ய வேண்டுமென்று இருக்கிறது. இது ஆங்கிலத்தில்,

"The Speaker shall, in consultation with the Business Advisory Committee, fix the time to be allotted for the discussion of each demand and also determine the order in which the demands are to be taken up".

என்று இருக்கிறது. அதன்படி, அலுவல் ஆய்வுக் குழுவில் இந்த நிதிநிலை அறிக்கையை ஒட்டிய மானியக் கோரிக்கைகள், எந்தெந்த நாளில் எடுத்துக் கொள்ளப்படலாம் என்று தங்களுடைய முன்னிலையில் அனைத்துக் கட்சித் தலைவர்களும், அலுவல் ஆய்வுக் குழுவிலே உள்ளவர்களும் கலந்து பேசி, அதை நிர்ணயித்தோம். 22 ஆம் தேதியன்று காவல்துறை, மாவட்ட நிர்வாகம் ஆகியவை குறித்த மானியக் கோரிக்கைகள் விவாதிக்கப்படும் என்று முதலிலே முடிவெடுத்தோம். பிறகு அதற்கெனத் தாங்கள் ஒரு அலுவல் ஆய்வுக் குழு கூட்டத்தை மீண்டும் கூட்டியபொழுது, 22 ஆம் தேதியன்று பதில் சொல்வதற்கு முதலமைச்சருக்கு வசதிப்படாது. எனவே அன்றைக்கு விவாதம் முடிவுறாத சூழ்நிலை ஏற்பட்டு விடும். எனவே, அதை மாற்றி 25 ஆம் தேதி போலீஸ் துறை, மாவட்ட நிர்வாகம் ஆகிய கோரிக்கைகளின் மீது விவாதம் போலீஸ் துறை, மாவட்ட நிர்வாகம் ஆகிய கோரிக்கைகளின்மீது விவாதம் நடைபெற்று முதலமைச்சருடைய பதிலுரையும் முடிவுற்று, வாக்கெடுப்பும் வைத்துக்கொள்ளலாம் என்ற அளவிற்கு அன்று அலுவல் ஆய்வுக் குழுவிலே முடிவெடுக்கப்பட்டது. ஆனால், அலுவல் ஆய்வுக் குழு எடுத்த முடிவுக் கிணங்க கேள்வி நேரத்தைக் கூட நேற்று ஒத்தி வைத்துவிட்டு, 9 மணிக்கே விவாதம் தொடங்கியது. ஆனால் திடீரென்று ஒன்றரை மணி அளவில் தாங்கள் இத்துடன் அவை முடிக்கப்படுகிறது, நாளையதினம் கூடும் அலுவல் ஆய்வுக் குழுவிலே கலந்து, இந்த மானியக் கோரிக்கைகள் எப்பொழுது எடுத்துக் கொள்ளப்படும் என்று சொல்வதாக அறிவித்திருக்கிறீர்கள். பத்திரிகைச் செய்தியைப் பார்க்கின்றபொழுது Indian Express பத்திரிகையில்,



1980 ஜூலை 26] [டாக்டர் மு. கருணாநிதி]

"The Speaker announced that as more Members wanted to participate in the Debate he would consult the Business Advisory Committee and fix a new date for resumption of the debate".

என்ற செய்தி வெளியிடப்பட்டிருக்கிறது.

கட்சித் தலைவர்களை மீறி எந்த உறுப்பினர்கள் தங்களிடத்திலே தங்களுக்கு அதிக நேரம் ஒதுக்க வேண்டுமென்றோ, தாங்களும் பேச வேண்டும் என்றோ வற்புறுத்தினார்கள் என்று எனக்குத் தெரியாது. ஆனால், திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையிலும் நேற்றையதினம் இரண்டு உறுப்பினர்களுக்குப் பேச வாய்ப்பளிக்கப்பட்டது. அதைப்போலவே

(முற்பகல் 10-30)

காங்கிரஸ் கட்சியைப் பொறுத்தவரையிலே இரண்டு உறுப்பினர்களுக்குப் பேச வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. நண்பர் திரு. நெடுமாறன் அவர்கள் வருத்தப்பட்டுக் கொள்ளக் கூடாது. 36 பேர் கொண்ட ஒரு கட்சிக்கும் 30 பேர் கொண்ட ஒரு கட்சிக்கும் இரண்டு, இரண்டு பேர் இங்கே பேசுவதற்கு வாய்ப்பு அளிக்கப்பட்டு, திரு. நெடுமாறன் அவர்களுடைய கட்சி, அதாவது காமராஜ் காங்கிரஸ் கட்சிக்கு, இரண்டு பேருக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டது.

நேற்றையதினம் நடைபெற்ற நிகழ்ச்சிகளைப் பார்த்த நேரத்தில், ஏதோ, திட்டமிட்டோ அல்லது வேண்டுமென்றோ பலருக்கு நீண்டநேரம் வாய்ப்புகளை அளிப்பதன் மூலம் நேரத்தைக் கடத்தியிருக்கின்ற நிலையை உருவாக்கியதாக நான் சந்தேகப்படுகிறேன். என்னுடைய சந்தேகம் ஓரளவுக்குத் தவறானதாகக் கூட இருக்கலாம். என்னுடைய கட்சியிலே உள்ள சில உறுப்பினர்களைக் கூட அழைத்து, அவைத் தலைவர் அவர்கள், நீங்களும் கூடப் பேசலாம், ஒரு 10 நிமிடம் தருகிறேன் என்று சொல்கின்ற அளவுக்குத் தாராளமாக, அவ்வளவு மலிவாக நேற்றையதினம் நேரம் ஒதுக்கப்பட்டதற்கு எனக்குக் காரணம் புரியவில்லை. என்ன இருந்தாலும் அவசரமாக, இங்கே உள்ள அலுவல் ஆய்வுக் குழுவை நேற்றே கூட்டி, போலீஸ் துறை மானியமும், மாவட்ட நிர்வாகமும் என்றைக்கு வைத்துக் கொள்ளலாம், அல்லது இன்றைக்குத் தொடரலாமா என்பதைப் பற்றி, இன்றைக்கு சமூகநலம், கால்நடை இந்த மானியங்களை வைத்துக் கொள்ளலாமா என்பதைப் பற்றி, நேற்றைக்கே இங்கே உள்ள தலைவர்களை அழைத்துப் பேசி இருக்கலாம். அதையும் செய்யாமல், திடீரென்று 1½ மணிக்கு அறிவித்தது ஆர்டர் தானா? முறை தானா? அது அலுவல் ஆய்வுக் குழுவை அவமானப்படுத்துகிற ஒரு காரியமாக இல்லையா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

[1980 ஜூலை 26

* **திரு. நா. சுந்தரராஜ் :** தலைவரவர்களே, நேற்றையதினம் எங்களுடைய கட்சியின் சார்பிலே மாண்புமிகு உறுப்பினர் திரு. இராஜசேகரனும் நானும் பேசுவதாக, எங்களுடைய கட்சிக் கொறடா உங்களிடம் அதற்கான அறிக்கையைக் கொடுத்தார். ஆனால், எப்படியோ தெரியவில்லை, எந்த முறையில் என்று தெரியவில்லை, எங்களுடைய பார்வைக்கு வராமல், எங்களுடைய கட்சியின் உறுப்பினர் திருமதி யசோதா அவர்கள் இங்கே பேச அழைக்கப்பட்டிருக்கிறார். இந்த அவையினுடைய மரபு, கொறடா யார், யார் பெயர்களை எழுதிக் கொடுக்கிறார்களோ அவர்கள்தான் கட்சியின் சார்பிலே பேச அனுமதிக்கப்படுகிறார்கள், இதுநாள்வரை. நேற்றையதினம் அந்த முறை எப்படி மாற்றப்பட்டது? என்ன காரணத்திற்காக மாற்றப்பட்டது? ஏன் மாற்றப்பட்டது என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். இதுமாதிரி அவையிலே இருக்கக் கூடியவர்கள் யாரை வேண்டுமானாலும் அழைக்கலாம் என்ற நிலைமை ஏற்படுமேயானால் அவையிலே ஒழுக்கம் இருக்காது, கட்டுப்பாடு இல்லாமல் போய்விடும். எங்களுடைய கட்சிக்குள்ளே குழப்பங்களை விளைவிப்பதற்கான முயற்சியை இந்த அவையினுடைய தலைவர் எடுத்திருப்பதாக நான் குற்றம் சாட்ட மாட்டேன். ஆனால், அதற்கான வழியை நீங்கள் தோற்றுவிக்கக் கூடாது. இதுதான் முறையா என்று நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

* **திரு. ப. நெடுமாறன் :** தலைவரவர்களே, நம்முடைய மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள், குற்றமாகச் சொல்லாவிட்டாலுங்கூட அவர்கள், என் கட்சியின் சார்பாக இரண்டு பேர் பேச அனுமதிக்கப்பெற்ற ஒரு நிலையை இங்கே குறிப்பிட்டார்கள். அதைப்பற்றிய ஒரு விளக்கத்தை உங்கள் மூலமாக அவருக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். எங்களுடைய கட்சியின் சார்பில் நான் ஒருவன் மட்டும்தான் பேசுவதற்கு இடம் அளிக்கப்பட்டிருந்தது. ஆனால், பெண்கள் பேச வேண்டுமென்ற ஒரு நிலை ஏற்பட்டு, அரிசன சமுதாயத்தைச் சேர்ந்த இரண்டு சகோதரிகள், இந்திரா காங்கிரசிலே இருந்து, திருமதி யசோதா அவர்களும், எங்களுடைய கட்சியிலிருந்து சகோதரி திருமதி பொன்னம்மாள் அவர்களும் பேச வேண்டுமென்று விரும்பி, அனுமதி பெற்றார்கள், பேசினார்கள். பெண்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பெற வேண்டுமென்பதிலே, எதிர்க்கட்சித் தலைவருக்கு ஆட்சேபணை இருக்க முடியாது என்று நான் எண்ணுகிறேன்.

**டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, பெண்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கக்கூடாது என்பது அல்ல. நாள்தோறும், இங்குள்ள 4, 5 பெண்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து தாங்கள் பேச அனுமதிப்பீர்களானால்,



1980 ஜூலை 26] [டாக்டர் மு. கருணாநிதி]

என்னுடைய அருமை நண்பர் நெடுமாறன் அவர்கள் அடைகின்ற மகிழ்ச்சியை விட அதிக மகிழ்ச்சியை நான் அடைவேன் என்பதை அவருக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன். அவர் கட்சியில் இரண்டு பேருக்கு நேரம் கொடுக்கப்பட்டதைக் குற்றமாகச் சொல்லவில்லை. நேற்று மாத்திரம் அந்தத் தாராளம் ஏன் காட்டப்பட்டது? ஏன் வலிந்து, வலிந்து அழைத்து மற்றவர்களுக்கு நேற்று மாத்திரம் வாய்ப்பு அளிக்கப்பட்டது? இங்கிருக்கின்ற கட்சித் தலைவர்களை, அவை முன்னவரோ, அல்லது தாங்களோ கலந்து கொள்ளாமல் 1½ மணிக்குத் திடீரென்று பேரவையை எப்படி ஒத்தி வைத்தீர்கள்? ஒவ்வொரு நாளும் 3 மணி வரையிலே இங்கே நேரம் நீடிக்கப்பட்டு, அந்தந்த மானியத்திற்குத் தொடர்புடைய அமைச்சர்கள் பதில் சொல்லி, வாக்கெடுப்பு நடைபெற்றிருக்கிறது. அதுபோல நேற்றும் நடந்திருக்கலாம் அல்லது இன்றைக்கு மீண்டும் போலீஸ் துறை மானிய விவாதம் தொடர்ந்து இருக்கலாம். நேற்று செயலாளர் அனுப்பியுள்ள அறிக்கையிலே கூட, 'இன்னும் தொடர்கிறது' என்றுதான் போலீஸ் துறை மானியத்தைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே, அந்த மானியம் இப்பொழுது தொடர வேண்டும், தாங்கள் அதற்குரிய நிலையிலேதான் பேச்சாளர்களை இன்று அழைக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நேற்றையதினம் நான் ஒன்றும் யாரையும் வலிந்து பேச அழைக்கவில்லை. நேற்று 30 உறுப்பினர்களுக்குமேல் எல்லாக் கட்சிகளில் இருந்தும் பேசுவதற்குப் பெயர்களைக் கொடுத்து இருக்கிறார்கள். முஸ்லீம் லீக் கட்சியில் இருந்து திரு. சாகுல் ஹமீது அவர்களும், ஜனதா கட்சியில் இருந்து திரு. இஸ்மாயில் அவர்களும் பேச வேண்டும் என்று விரும்பினார்கள்.

நேற்று காலை 9 மணிக்கே காவல் துறை மானிய விவாதம் தொடங்கியாகி விட்டது. 1½ மணி வரை பலரும் பேசி இருக்கிறார்கள். மாண்புமிகு துணைச் சபாநாயகர் அவர்கள் இந்த இடத்தில் அமர்ந்து அவை நடவடிக்கைகளை நடத்திக்கொண்டு இருந்தார். திருமதி பொன்னம்மாள் அவர்கள் "போலீஸ் ஸ்டேஷனில் பெண்களுக்குப் பெரும் இன்னல்கள் இழைக்கப்படுவதால் போலீஸ் துறை மானியத்தில் எல்லா பெண் உறுப்பினர்களும் பேசுவதற்கு வாய்ப்பு அளிக்கப்பெறவேண்டும்" என்று துணைத் தலைவரிடம் கேட்டுக்கொண்டதன் விளைவாக அவர்களுக்கும், மற்ற பெண் உறுப்பினர்கள் அனைவருக்கும் நேரம் தருவதாக அவர் சொல்லி, (குறுக்கீடு)—சபை நடத்துகிறவர்களுக்கு சில உரிமைகள் உண்டு. சபாநாயகருக்கு உள்ள உரிமைகள் அனைத்தும் சபைக்குத் தலைமை வகித்துக்கொண்டு இருப்பவர்களுக்கும் உண்டு—அந்த உரிமையின்படிதான் அவர்கள் காரியமாற்றினார்களே தவிர வேறு ஒன்றும்

அல்ல. அந்த வகையிலே பெண்கள் நான்கு பேர்களுமே பேசலாம் என்று சபையிலே அறிவிக்கப்பட்டு, அது சபைக்குறிப்பிலேயும் இருக்கிறது. அந்த வகையில் நடந்தது தானே தவிர வேறு ஒன்றும் இல்லை.

நேற்று திரு. ரகுமான்கான் தமக்கு $3/4$ மணி நேரம் வேண்டும் என்று கேட்டார்கள். திரு. சுந்தரராஜ் அவர்களையும் கேட்டேன். அவர்கள் தனக்கு அரை மணி நேரம் வேண்டும் என்று கேட்டார்கள். நேற்று மாலை 4 மணிக்கு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாடு இருந்தது. அதில் முதலமைச்சர் அவர்களும் கலந்துகொள்ள இருந்தார்கள். தொடர்ந்து பேரவையை நடத்தி செல்வது என்றாலும், மாலை 4 மணிக்குள் விவாதமும், வாக்கெடுப்பும் முடியாதுபோல் தோன்றியதால், வேறொரு நாளில் தொடரலாம் என்பதாக 1½ மணிக்கு பேரவையை ஒத்தி வைத்தேன். மாலை 4 மணிக்கு அமைச்சர் பெருமக்கள் அத்தனை பேர்களும் மாவட்ட ஆட்சித் தலைவர் மாநாட்டில் கலந்துகொள்ள வசதியாக இருக்கும் என்ற எண்ணத்தோடு பேரவையை ஒத்திவைத்தேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் கூறுகிற அளவிற்கு எந்தக் காரியமும், முறை தவறாக நடைபெறவில்லை என்பதை நான் தெளிவாகவும், விளக்கமாகவும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, ஒத்தி வைத்ததற்கான காரணங்களை விவரித்து அடுக்கடுக்காகச் சொன்னீர்கள். எனக்குள்ள கவலை எல்லாம் இங்கே உள்ள அலுவல் ஆய்வுக் குழு உறுப்பினர்களை நேற்றே அழைத்து அந்தக் காரணங்களைச் சொல்லி, அந்த அலுவல் ஆய்வுக்குழு எடுத்த முடிவின்படிதான் இப்போது ஒத்தி வைக்கப்படுகிறது என்று கூறி இருந்தால், அலுவல் ஆய்வுக் குழுவைக் கௌரவப்படுத்தியதாக இருந்து இருக்கும். அலுவல் ஆய்வுக் குழு அலட்சியப்படுத்தப்பட்டிருக்கிறது என்பது தான் என்னுடைய குற்றச்சாட்டு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அலுவல் ஆய்வுக்குழு அலட்சியம் செய்யப்படவில்லை. நேற்று அலுவல் ஆய்வுக் குழுவைக்கூட்ட நேரம் இல்லை. அது முடியாமற் போனதால் அலுவல் ஆய்வுக் குழு இன்று கூடி அதுபற்றி முடிவுசெய்யும் என்றுதான் அறிவித்தேன். நான் வெளிப்படையாகவே சொல்கிறேன். நேற்றைய தினம் எதிர்க்கட்சித் தலைவர் பேரவையில் இருந்திருந்தால், இதுபற்றி நான் நிச்சயம் அவரிடம் கேட்டிருப்பேன்.

**டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, எதிர்க் கட்சித் தலைவர் பேரவையில் இல்லை என்றால் இங்கேயே இல்லை என்று பொருள் அல்ல





**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையில் எதிர்க் கட்சித் தலைவரும் இல்லை, துணைத் தலைவரும் இல்லை.

**டாக்டர் மு. கருணாநிதி :** இங்கே துணைத் தோழர் இருந்தார். அவர் மூலமாக அழைத்திருந்தால் நான் வந்திருப்பேன். அல்லது இங்கே இருந்து அவசரமாக அலுவல் ஆய்வுக் குழு கூடும் என்ற ஒரு அறிவிப்பைத் தந்திருக்கலாம். உங்களுக்கு நேற்று முதலமைச்சர் பேசப் போவதில்லை என்ற விவரம் முன்பே தெரிந்திருக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இல்லை, இல்லை. தயவுசெய்து நீங்கள் கற்பனையிலே மட்டும் போகக்கூடாது. நீங்கள் எங்கே போகிறீர்கள் என்று எனக்குத் தெரியும்.

**டாக்டர் மு. கருணாநிதி :** நான் எங்கேயும் போகமாட்டேன், இங்கே தான் இருப்பேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் இங்கேயே இருக்க வேண்டும் என்பதுதான் என் ஆசை. அது வேறுவிவகாரம்.

**திரு. பி. எச். பாண்டியன் :** பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு தன்னிலை விளக்கம். நேற்று பேரவையில் விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கையில் பேரவைத் துணைத் தலைவர் என்ற முறையில் நான் தலைமை வகித்தேன். பல உறுப்பினர்கள் என்னிடம் வந்து ‘ இன்று காவல் துறை மானியம். இதிலே பேச எங்களுக்கு அதிக நேரம் ஒதுக்க வேண்டும் ’, என்று கேட்டார்கள். போன செஷனிலே கூட காவல் துறை மானியம் வந்தபோது காலையிலே இருந்து சாயங்காலம் வரையில் போனதனாலே நான் அனுமதித்தேன். அப்பொழுது திரு. ரகுமான்கான் அவர்களிடம் எவ்வளவு நேரம் வேண்டும் என்று கேட்டேன். முப்பது நிமிடங்கள் வேண்டும் என்று சொன்னார். சரி என்று சொன்னேன். திரு. சுந்தரராஜ் அவர்களிடம் எவ்வளவு நேரம் வேண்டும் என்று கேட்டபோது, அவர் 30 நிமிடம் வேண்டும் என்றார். சரி என்று சொன்னேன். இது தாராளம் என்றால், இனிமேல் வேண்டுமானால் குறைத்துக் கொள்கிறேன்.

**டாக்டர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, இதைக்காட்டி நம்முடைய பேரவைத் துணைத் தலைவர் இனிமேல் குறைத்துக் கொள்கிறேன் என்று உறுப்பினர்களை அச்சுறுத்துவது நல்லதல்ல. நான் கேட்டுக்கொள்ள விரும்புவது எல்லாம், நேற்றையதினம் வற்புறுத்திக் கொடுத்ததைப் போல, ஒவ்வொரு நாளும் கேட்டால் அந்த உறுப்பினர்களுக்கு எல்லாம் வாய்ப்புக் கிடைக்குமா என்பது ஒன்று.

[டாக்டர் மு. கருணாநிதி] [1980 ஜுலை 26

மற்றொன்று, அலுவல் ஆய்வுக் குழுவில் நானும் மற்றக் கட்சித் தலைவர்களும், மாவட்ட நிர்வாகம், காவல் துறை இவைகள் எல்லாம் ஒரே நேரத்திலே—ஏறத்தாழ 7-க்கும் மேல்—இணைத்து எடுத்துக் கொள்வதால், யார், யார் எதைப் பேசுவது என்பது தெரியாமல் போய்விடும் என்று சொல்லி, இதற்கு இரண்டு நாட்கள் ஒதுக்க வேண்டும் என்று அன்றைக்குச் சொன்னபோது, அதைக் கேட்க மறுத்து, 25-ந் தேதி 9 மணிக்கு கேள்வி நேரத்தைத் தள்ளி வைத்து விட்டு, 1½ மணிக்குள் வாக்கெடுப்பை முடித்துவிடுவது என்று அன்று நிர்மானித்து இருக்கவேண்டியது இல்லை. இதே உறுப்பினர்களுக்காக அன்றைக்கு நாங்கள் போராடினோம், வாதாடினோம். ஆனால் அப்போது அவை முன்னவரும் கேட்கவில்லை, சபாநாயகரும் கேட்கவில்லை. 25-ந் தேதி 1½ மணிக்கு முடித்து வாக்கெடுப்பு நடக்கும் என்று அன்றைக்குச் சொன்னார்கள். அதற்கு மாறாக நடந்திருக்கிறது என்பதைத்தான் சுட்டிக் காட்டினேன். இது ஒன்றும் புதியதல்ல, வாடிக்கையாக நடப்பதுதான், முதலமைச்சர் அவர்களின் மானியத்திலே.

(முற்பகல் 10-40)

**திரு. அ. ரகுமான்கான் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய கட்சித் தலைவர் ஏற்கனவே இங்கே கருத்து சொல்லியிருக்கிறார்கள். நான் ஒரு லீகல் பாயின்டை இந்தச் சட்டமன்றத்தில் எடுத்து வைக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன். காவல் துறை மானியத்தின் மீதான விவாதம் இன்னும் முடிவுறவில்லை. காவல் துறை மானியம் முடிவுறாதபோது, வேறு ஒரு மானியத்தின் மீதான விவாதத்திற்குப் போக முடியாது. பிசினஸ் அட்வைசரி கமிட்டி முடிவுக்குப் பிறகுதான் அப்படிச் செய்யமுடியும். ஒரு மானியக் கோரிக்கை மீதான விவாதம் பென்டிங்காக இருக்கிறபோது, அடுத்த டிமான்ட்க்குப் போக முடியுமா ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நான் நேற்றைக்கே இது குறித்து விளக்கமாக எடுத்துச் சொல்லியிருக்கிறேன். அதை இங்கே படித்துக் காட்ட விரும்புகிறேன்.

'இந்த மானியக் கோரிக்கைகள் மீது இன்னும் நிறைய பேர்கள் பேச வேண்டியிருக்கிறது. இன்று மாலையில் அவை நடைபெறுவதாக இருந்தது. ஆனால் மாலையில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாடு நடைபெறுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதிலே கலந்து கொள்கிறார்கள். எனவே, இன்று மாலையில் அவைக்கூட்டம் நடைபெறாது. நாளை அலுவல் ஆய்வுக் குழு கூடும். இந்த மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்தை மீண்டும் என்று நடத்தலாம் என்பது பற்றி அப்போது முடிவு செய்யப்படும்'.



1980 ஜுலை 26] [பேரவைத் தலைவர்]

இப்படிச் சொல்லிவிட்டுத்தான் அவையை நேற்று ஒத்தி வைத்து இருக்கிறேன். ஆகவே, உங்களுடைய லீகல் பாயிண்ட்டை இங்கே அதிகம் வலியுறுத்துவதற்கு இல்லை.

**டாக்டர் மு. கருணாநிதி :** விதி 200 மீறப்பட்டு இருக்கிறதா, இல்லையா என்பது தான் என்னுடைய கேள்வி. நீங்கள் அறிவித்து இருக்கலாம். ஆனால், அலுவல் ஆய்வுக் குழுவைக் கலந்து போலீஸ் மானியத்தை என்றைக்கு எடுத்துக்கொள்வது என்பதைப்பற்றி பிறகு நிர்மானிக்கப்படும் என்பதைச் சொல்வதற்குக் கூட நீங்கள் பிசினஸ் அட்வைசரி கமிட்டியைக் கலந்து இருக்க வேண்டும். அதைத்தான் விதி 200 சொல்கிறது.

"பேரவைத் தலைவர், அலுவல் ஆய்வுக் குழுவை கலந்தாலோசித்து, மானியக் கோரிக்கை ஒவ்வொன்றையும் விவாதிப்பதற்கு நேரம் ஒதுக்கி, அக்கோரிக்கைகள் எடுத்துக்கொள்ளப் பெறவேண்டிய வரிசை முறையையும் முடிவு செய்யவேண்டும்."

பிசினஸ் அட்வைசரி கமிட்டி முடிவு செய்த வரிசை மாறுகிறது. அந்த வரிசை முறையை மாற்றுவதற்கு முன்பும், பிசினஸ் அட்வைசரி கமிட்டியைக் கலந்து தான் அறிவித்து இருக்கவேண்டும்.

* **திரு. தா. சுந்தரராஜ் :** தலைவர் அவர்களே, நீங்கள் இங்கே சொல்லும் போது, உறுப்பினர்களை நான் வலிய அழைக்கவில்லை என்று சொன்னீர்கள். எங்களுடைய கட்சியைப் பொறுத்த வரையில், எங்களுடைய கட்சி உறுப்பினருக்கு நேரம் கொடுத்ததில் எங்களுக்கு மகிழ்ச்சி தான். ஆனால், எங்களுடைய கட்சி பெண் உறுப்பினர்கள் இரண்டு பேரும் தாங்களாகவே வலிய வந்து தங்களிடத்தில் நேரம் கேட்கவில்லை. பேசவேண்டும் என்றும் சொல்லவில்லை, அதற்கு மாறாக, இன்னொரு கட்சி உறுப்பினர் உங்களுடைய உட்காரும் இருக்கைக்கு வந்து நேரம் கேட்டு, அதற்கு ஏற்ப அவர்களுக்கு நேரம் கொடுத்து, அதிலே ஒரு பெண் உறுப்பினர் நான் இன்றைக்குப் பேசவில்லை, இன்னொரு நாள் பேசிக்கொள்கிறேன் எனக்கு நேரம் வேண்டாம் என்று சொல்லி, அதற்குப் பிறகு நீங்கள் வேறு ஒரு உறுப்பினரை அழைத்துப் பேசச்சொல்வது என்பது இந்த அவையின் நடைமுறைக்கு ஒத்ததா ? மரபா ? அல்லது அதைத்தான் நீங்கள் இனிமேல் கடைபிடிக்கப்போகிறீர்களா என்பதைக் கேட்க விரும்புகிறேன். இதன் மூலம் என்ன நடைபெறும் என்று சொன்னால் ஏதோ கட்சித் தலைவர்கள் அவர்களுக்குப் பேச வாய்ப்பு அளிக்க மறுப்பது போலவும், நீங்கள் அதற்கு அனுமதி அளிப்பது போலவும், இதனால் கட்சியிலே ஒரு குழப்பம் ஏற்பட வாய்ப்பாக அமைந்து விடும் என்பதால், இதை முன் உதாரணமாக எடுத்துக்கொள்ளப்போகிறீர்களா, தொடர்ந்து செய்யப் போகிறீர்களா என்பதை தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

[1980 ஜூலை 26

**திரு. அ. ரகுமான்கான் :** தலைவர் அவர்களே, நேற்று மாலை கலெக்டர் கான்பரன்சுக்கு சீப் மினிஸ்டர் போகப் போவதாகச் சொல்லியிருக்கிறீர்கள். அவர் அங்கே போனாரா என்கிற விளக்கத்தை அளிக்க வேண்டுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அது இப்பொழுது தேவையில்லை.

* **திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** சார், பாயின்ட் ஆப் ஆர்டர், தலைவர் அவர்களே, நான் நேற்றையதினம் பேசுவதாக இல்லை. எங்கள் கட்சித் தலைவரிடம் என்னை பொறுத்தவரையில் பேச வேண்டாம் என்று சொல்லியிருந்தேன். இங்கே 5 பெண் உறுப்பினர்கள்தான் இருக்கிறோம். ஒருவர் அமைச்சராக இருக்கிறார். மீதி நான்கு பேர்கள் இருக்கிறோம். இந்த நான்கு பேர்களில் மூன்று பேர் அரிசன வகுப்பைச் சேர்ந்தவர்கள். எங்களுக்கு பல இன்னல்கள், கொடுமைகள் போலீஸ் ஸ்டேஷனில் இழைக்கப்படுகின்றன. அதை எடுத்துச் சொல்வதற்காக துணைச் சபாநாயகரிடம் ஐந்து நிமிடம் பேசுவதற்கு அனுமதி அளிக்கும்படி கேட்டேன்; அவர்களும் அனுமதித்தார்கள். பெண் என்ற முறையிலே, மற்றவர்களோடு போட்டிபோட வராவிட்டாலும், நான் கேட்டதற்காக அனுமதி அளித்தார்கள். அதை ஒரு பெரிய பிரச்சனையாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் எழுப்பியிருக்க வேண்டியதில்லை. 1957-லிருந்து நானும் உறுப்பினராக இருந்திருக்கிறேன்; எதிர்க் கட்சித் தலைவரும் உறுப்பினராக இருந்திருக்கிறார். பழைய மெம்பர், சீனியர் மெம்பர் என்ற முறையில் அனுமதி கொடுத்ததற்காக ஒரு பிரச்சினையை எழுப்பி, இந்தச் சபையின் நடவடிக்கைகளை இதற்காக தடுத்துக் கொண்டிருப்பது சரியல்ல . . . (கூச்சல் குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** எல்லோரும் ஒரே சமயத்தில் எழுந்திருந்து ஏன் பேசுகிறீர்கள்? என் அனுமதியின்றி பேசப்படுபவை பேரவை நடவடிக்கைக் குறிப்பில் ஏறாது. நான் திருமதி பொன்னம்மாளுக்குச் சொல்கிறேன். சபை நடவடிக்கையை யாரும் தடுக்கவில்லை. தாங்கள் எழுப்பியிருப்பது பாயின்ட் ஆஃப் ஆர்டர் அல்ல; உட்காருங்கள்.

* **திரு. என். எஸ். வி. சித்தன் :** சார், பாயின்ட் ஆஃப் ஆர்டர், திருமதி பொன்னம்மாள் அவர்கள் பேசும்போது ஏதோ அரிசனங்களுக்காகவும் பெண்களுக்காகவும் அவர்கள் ஒருவர்தான் பிரதிநிதி என்ற முறையில் பேசினார்கள். இந்தச் சபையிலே இந்தப் பக்கம் இருப்பவர்களானாலும் சரி, அந்தப் பக்கம் இருப்பவர்களானாலும் சரி, அரிசனங்கள் மீது எல்லோருக்கும் அக்கறை இருக்கிறது. ஆகவே, அவர்கள் சொல்வது சரியல்ல.



1980 ஜூலை 26] [திரு. என். எஸ். வி. சித்தன்]

இன்னொன்று, மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்கள் குறிப்பிட்ட மாதிரி 30 பேர்கள் இருக்கிற கட்சியிலும் இரண்டு பேர்களுக்குத்தான் அனுமதி, 36 பேர்கள் இருக்கிற கட்சியிலும் இரண்டு பேர்களுக்குத்தான் அனுமதி என்று சொன்னார்கள், நேரம் கருதி. மாண்புமிகு உறுப்பினர் நெடுமாறன் அவர்கள் சார்ந்திருக்கிற கட்சியில் இருந்தும் இரண்டு பேர்கள் அனுமதிக்கப் பட்டிருக்கிறார்கள்—திரு. நெடுமாறன் அவர்கள் கோபித்துக் கொள்ளக் கூடாது—அவர்களுக்கு நேரம் கொடுக்கக்கூடாது என்பதல்ல என்னுடைய வாதம். நேற்று மட்டுமல்ல; அதற்கு முன்னாலும் இப்படித்தான் நடை பெற்றிருக்கிறது. முப்பது உறுப்பினர்களைக் கொண்ட கட்சியில் ஐந்து நிமிடம், 7 நிமிடம் பேசுவதற்கு இரண்டு பேர்களைத்தான் அனுமதிக்க முடியும் என்கிறபோது அந்தக் கட்சியில் இருந்து இரண்டு பேர்களை அனுமதிப்பது நியாயம்தானா? அதைக் குறைக்க வேண்டுமென்று சொல்ல வில்லை. இது முறைதானா என்று கேட்க விரும்புகிறேன்.

**திரு. எல். இளையபெருமாள் :** தலைவரவர்களே, இந்தச் சபையில் இருக்கிற எல்லா உறுப்பினர்களும் அரிசனங்கள்மீது அக்கறை கொண்டு பேசுகிறார்கள் என்றாலும் ஹரிஜன மாளியத்தின் மீது நடைபெற்ற விவாதத்தில் அரிசனங்கள் கொடுமைப்படுத்தப்படுவதைப் பற்றி திரு. சித்தன் அவர்களோ அல்லது பல்வேறு அரசியல் கட்சியைச் சார்ந்த கட்சித் தலைவர்களோ யாரும் எடுத்துப் பேசவில்லை. ஆகவே மாண்புமிகு உறுப்பினர், சகோதரர் திரு. சித்தன் அவர்கள் சொன்னது சரியல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே திருமதி பொன்னம்மாள் அரிசனங்களின் உரிமையை பாதுகாக்கக் கோரி பேசியது நியாயமானது, சரியானது இதனை பெரிய பிரச்சனை ஆக்க வேண்டாம்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** தலைவரவர்களே, ஒரு விளக்கம், மாண்புமிகு உறுப்பினர் திரு. இளையபெருமாள் அவர்கள் மூத்த உறுப்பினர். சற்று உணர்ச்சி வசப்பட்டு பேசிவிட்டார் என்று கருதுகிறேன். இன்று மாலை பத்திரிகைகளில் 'காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களுக்குள் மோதல்', 'கருத்து வேறுபாடு' என்று கொட்டை எழுத்துக்களில் போட்டுவிடுவார்கள் (குறுக் கீடுகள்). எங்களுக்குள் கருத்து வேறுபாடு எதுவும் இல்லை (குறுக்கீடுகள்). உறுப்பினர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் பொறுப்பு தங்களுக்கு இருக்கிறது; எங்களைக் காப்பாற்றும் பொறுப்பும் தங்களுக்கு இருக்கிறது (குறுக்கீடுகள்).

(முற்பகல் 10-50)

டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, நான் எழுப்பிய பிரச்சினை யாருக்கு அதிக நேரம் கொடுப்பது, யாருக்கு அதிக நேரம் கொடுக்கக் கூடாது என்பதல்ல. இந்த வகையிலே இந்த விஷயம் திசை திரும்பிவிடக்கூடாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : யாரும் திசை திருப்பவில்லை.

டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, நான் திசை திருப்பியதாகச் சொல்லவில்லை. ஆனால் நான் எடுத்துச் சொன்ன பிரச்சினை என்னவென்றால் பேரவை விதி 200 மீறப்பட்டிருக்கிறதா இல்லையா ? அதற்கான விளக்கத்தைத்தான் தாங்கள் அளிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

THIRU K. J. HAJA SHERIFF : The mattr is very simple. I do not know why hon. Members should agitate over it. Now the whole question is that when discussions on a Demand is not over, whether discussions on that Demand should continue or whether it can be taken on some other date? This has to be decided according to Rules and Regulations.

DR. K. SOURIRAJAN : Mr. Speaker, Sir, The Business Advisory Committee has fixed 25th for the discussion of 'Demand for Police' and 26th for the discussion of 'Demand for Social Welfare'. Accordingly Police Demand was taken on 25th. But it could not be completed on the same day. The Business Advisory Committee alone must meet once again and decide the future date for discussion of the 'Police' Demand. As was decided earlier by the Business Advisory Committee, the Demand for 'Social Welfare' has to be taken up on 26th. So, it is taken up to-day. Where is the question of procedural irregularity?

டாக்டர் மு. கருணாநிதி: பேரவைத் தலைவரவர்களே, அலுவல் ஆய்வுக் குழு மதிக்கப்படவில்லை என்ற பிரச்சினையை நான் எழுப்பி இருக்கிறேன். மாண்புமிகு நாவலர் அவர்களும் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியிலே இருந்தபோது அவை முன்னவராக இருந்திருக்கிறார். இப்போதும் அவை முன்னவராக இருக்கின்றார். நேற்றைய தினமே கட்சித் தலைவர்களை அழைத்துப் பேசி காவல் துறை மானியத்தை என்றைக்கு எடுத்துக் கொள்வது





என முடிவு செய்திருக்கலாம். அலுவல் ஆய்வுக் குழு கூட்டத்தை நடத்தி அதன் முடிவை அறிவித்திருக்கலாம். மாறாக இன்று 12-00 மணிக்கு அலுவல் ஆய்வுக்குழு கூடி முடிவு செய்யும் என அறிவித்துவிட்டு, இன்றைய தினம் சமூகநலத்துறையை எடுத்துக் கொண்டது முறையா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அலுவல் ஆய்வுக்குழு தான், 25 ஆம் தேதி காவல்துறை மானியத்தை எடுத்துக்கொண்டு அன்றைக்கே அதை நிறைவேற்றிவிடுவது என்றும், 26 ஆம் தேதி சமூக நலத்துறை மானியத்தை எடுததுக்கொள்வது என்றும் முடிவு செய்துள்ளது. நேற்று அலுவல் ஆய்வுக் குழுவை கூட்ட நேரம் இல்லை. அதனால் தான், இன்று அலுவல் ஆய்வுக் குழு 12-00 மணிக்கு கூடி என்றைக்கு காவல்துறை மானியத்தை தொடர்ந்து எடுத்துக்கொள்வது என்று முடிவு செய்யும் என நேற்று அறிவித்தேன். இது போன்றதொரு நெருக்கடியான நேரத்தில், தம் உசிதப்படி முடிவு எடுக்கும் பொறுப்பு பேரவைத் தலைவருக்கு இருக்கின்றது.

டாக்டர் மு. கருணாநிதி : அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவை மீறுகின்ற அதிகாரம், உரிமை தங்களுக்கு இருக்கின்றது என்று சொல்கிறீர்கள் . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அலுவல் ஆய்வுக்குழுவைக் கூட்ட முடியாத நேரத்திலே தம் உசிதப்படி முடிவு எடுக்கும் பொறுப்பு பேரவைத் தலைவருக்கு இருக்கின்றது என்றுதான் சொன்னேன்.

டாக்டர் மு. கருணாநிதி : அப்படியானால் இன்று காவல் துறை மானியம் தொடரும் என்று ஏன் முடிவு எடுத்திருக்கக் கூடாது ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்றைய தினம் சமூக நலத் துறை மானியம் எடுத்துக்கொள்ளப்பெற வேண்டுமென்று ஏற்கனவே அலுவல் ஆய்வுக் குழுதான் முடிவு செய்திருந்தது. அதனால் தான் நேற்று முடிக்க முடியாமல் போன காவல் துறை மானியத்தை என்றைக்கு எடுத்துக்கொள்வது என்பதை அலுவல் ஆய்வுக்குழு இன்று 12 மணிக்கு கூடி முடிவு செய்யும் என்று அறிவித்தேன்.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டப் பேரவையினுடைய விதி 200 தெளிவாக இருக்கிறது. ஒரு டிமாண்டில் விவாதம் நடைபெற்று அது தொடர்கிறபோது, வேறு ஒரு டிமாண்ட் எடுக்கிற நிலையில் பிசினஸ் அட்வைசரி கமிட்டியை கூட்டி முடிவு எடுத்ததற்கு பிறகுதான் இன்னொரு டிமாண்ட் எடுக்க வேண்டும் என்கிற நிலை விதி 200-ல் இருக்கிறது . . . .

[மாண்பு]மிகு பேரவைத் தலைவர் : விதிகளைப் படியுங்கள்.

[TH]IRU V. KRISHNAMOORTHI : Mr. Speaker, Sir, with your [per]mission, I read Rule 200 (1).

"The Speaker shall, in consultation with the Business [Adv]isory Committee, fix the time to be allotted for the discussion [of e]ach Demand and also determine the order in which the [Dem]ands are to be taken up."

[மாண்பு]மிகு பேரவைத் தலைவர் : விதி 312-ஐப் படியுங்கள்.

திரு வி. கிருஷ்ணமூர்த்தி : [illegible] அல்லது இவ்விதிகளிலோ [illegible] விதி 312-ன் [illegible] தலைவர் [illegible] . . . . .

[மாண்பு]மிகு பேரவைத் தலைவர் : [illegible] படியுங்கள். இவ்விதிகளின் [illegible] எழும் எல்லாப் பிரச்னைகளும் [illegible] பேரவைத் தலைவர் [illegible] முறையில் முறைப்படுத்தப் [illegible].

டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இந்த 312-வது விதியை [illegible] அதில் என்ன சொல்லியிருக்கிறது என்று [illegible] அல்லது இவ்விதிகளிலோ [illegible] பற்றியும் அல்லது இவ்விதிகளின் [illegible] எழும் எல்லாப் பிரச்னைகளும் அவ் [illegible] முறையில் முறைப்படுத்தப்பெறும் [illegible] இந்த விதியில் குறிப்பிடப்பெறவில்லை [illegible] மானியக் கோரிக்கைகள் சம்பந்த [illegible] அது ஏன் மீறப்பட்டிருக்கிறது? [illegible] ஆய்வுக் குழுவில் [illegible] ஏன் நடைபெறவில்லை? (கூச்சல், [illegible])

[மாண்பு]மிகு பேரவைத் தலைவர் : விதி எதுவும் மீறப்படவில்லை. அலுவல் [illegible] குழுவின் [illegible] பேரவை நடைபெற்று வருகிறது; நேற்று [illegible] உறுப்பினர்கள் பேசியிருக்கிறார்கள். 1-30 [illegible] மாலையில் [illegible] ஆட்சித் தலை [illegible] எதிர்க்கட்சித் தலைவரும், அனைத் [illegible] அலுவல் ஆய்வுக் குழுவையும் உடனடியாக



கூட்டுவதற்கு நேரம் இல்லை. எனவேதான் இன்று அலுவல் ஆய்வுக் குழு 12-00 மணிக்குக் கூடி காவல் துறை மானியத்தை தொடர்ந்து என்றைக்கு எடுத்துக் கொள்ளலாம் என்று முடிவு செய்யும் என அறிவிப்பு செய்துவிட்டு பேரவையை 1.30 மணிக்கு ஒத்தி வைத்தேன். இதில் அலுவல் ஆய்வுக் குழு அலட்சியம் செய்யப்பெற்றுள்ளது என்ற பிரச்னையே எழவில்லை.

டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, அதிகமான அளவில் உறுப்பினர்கள் பேச நேரம் கேட்கிறபோது, ஏன் அவசரமாக அலுவல் ஆய்வுக் குழுவை கூட்டி, நேற்றைய தினமே காவல் துறை மானியத்தை தொடர்ந்து நடத்துவதா அல்லது இன்று சமூக நல மானியங்களை வைத்துக் கொண்டு மறுநாள் அதை எடுத்துக் கொள்வதா என முடிவு எடுத்து அறிவித்திருக்கக் கூடாது?

(முற்பகல் 11-00)

(கூச்சல்-குழப்பம்)

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், இங்கே ஒரு பிரச்சினையை எழுப்பியிருக்கிறார்கள். தாங்களும் அது சம்பந்தமாக தங்களுடைய தீர்ப்பை வழங்கியிருக்கிறீர்கள். 200 (1)-ல் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எடுத்துச் சொன்னதுபோல், பேரவைத் தலைவர் அலுவல் ஆய்வுக் குழுவை கலந்து ஆலோசித்து மானியக் கோரிக்கை ஒவ்வொன்றையும் விவாதிப்பதற்கு ஒவ்வொரு நாளாக வரிசைப்படி நியமிக்கிறார்கள். அதன்படி இப்போது நடந்து வருகிறது. இன்றைய நிகழ்ச்சி ஏற்கனவே ஆய்வுக் குழுவில் கலந்தாலோசித்ததையொட்டி நடைபெற்று வருகிறது. Contingency என்று சொல்வார்களே அதே போல் ஒரு எதிர்பாராத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. நேற்றைய தினம், அலுவல் ஆய்வுக் குழுவில் கலந்தாலோசித்த தன்படி காவல் துறை மானியம் நேற்று அவையில் எடுத்து விவாதிக்கப்பட்டது. காவல் துறை மானியம் நேற்றைய தினம் கொண்டு வரப்பட்டது, முடிவு பெறவில்லை. ஆகவே காவல் துறை மானியக் கோரிக்கையைத் தொடர்ந்து இன்று வைத்துக் கொள்வதா அல்லது வேறு ஒரு நாளில் வைத்துக் கொள்வதா என்ற பிரச்சினை பேரவைத் தலைவர் அவர்களுக்கு எழுகிறது. பேரவைத் தலைவர் அவர்களுக்கு இதிலே தரப்பட்டிருக்கிற அதிகாரம், அலுவல் ஆய்வுக் குழுவை கலந்தாலோசிக்க வேண்டும் என்ற அதிகாரம் அதாவது in consultation not in consent அலுவல் ஆய்வுக் குழுவின் சம்மதத்தைப் பெற்றுத்தான் செய்ய வேண்டும்

[illegible]. அலுவல் ஆய்வுக் குழுவை கலந்து செய்ய வேண்டும் என்பது முறை. அப்படியிருக்க நேற்று அலுவல் ஆய்வுக் குழுவை கூட்டுவதற்கு போதிய அவகாசம் தங்களுக்கு இல்லாமல் இருந்திருக்கலாம். அப்படிப்பட்ட சூழ்நிலை இருந்தபோது அலுவல் ஆய்வுக் குழுவைக் கலக்காமல் காவல் துறை மானியக் கோரிக்கையை இன்றைய தினம் எடுத்துக் கொள்ளவேண்டும் என்று நீங்கள் அறிவித்திருப்பீர்களானால் அதுதான் இந்த விதிகளுக்கு முரணானதாகும். அப்படிச் செய்யாமல் அலுவல் ஆய்வுக் குழுவை கலக்க வேண்டும் என்ற அடிப்படையில் நேற்றைய தினம் நீங்கள் அலுவல் ஆய்வுக் குழுவைக் கலந்து ஆலோசித்து அதற்குப் பின் இம்மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தை எடுத்துக்கொள்வோம் என்று சொல்லியிருப்பதுதான் விதிகளுக்கு முற்றிலும் பொருத்தமானது என்பதைத்தான் தங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி:** May I make a submission, Sir. பிசினஸ் அட்வைசரி கமிட்டியில், இன்னின்ன டிமாண்ட்ஸ் எடுத்துக்கொள்ளப் படும் என்று முடிவு செய்யப்படுகிறது. அது ஒன்று. இரண்டாவதாக, இன்னின்ன மானியக் கோரிக்கைகள் என்று முக்கியத்துவம் கொடுத்து அந்த ஆர்டரில் டிமாண்ட்ஸை வைப்பது என்பதாகும். போலீஸுக்கும் முக்கியத்துவம் கொடுத்து அதற்கு அடுத்ததாக கால்நடை சமூக நலன் வரலாம் என்றுதான் இருக்கிறது. காவல் துறை மானியக் கோரிக்கை முடிந்த பிறகுதான் இது வரவேண்டும். விதி 200-இல் க்ளியராகக் கொடுத்திருக்கிறார்கள். ... and also determine the order in which the Demands are to be taken up அந்த ஆர்டர்படி போலீஸ், அடுத்ததாக கால்நடை. ஆகவே போலீஸ் துறை முடியாமல் இருக்கும்போது கால்நடை, சமூக நலனுக்கு எப்படிப் போகலாம்? So there is lapse on the part of administration.

Mr. SPEAKER: There is no lapse.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஒரு விஷயத்தைக் கிளப்பினார்கள். அதையொட்டி மற்ற உறுப்பினர்கள் பலரும் தங்கள் தங்கள் கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். தாங்களும் தங்கள் கருத்தையும் தீர்ப்பையும் இங்கே குறிப்பிட்டார்கள். விதி 200 (1)-ல் பேரவைத் தலைவர் அலுவல் ஆய்வுக் குழுவை கலந்தாலோசித்து, மானியக் கோரிக்கை ஒவ்வொன்றையும் விவாதிப்பதற்கு நேரம் ஒதுக்கி, அக்கோரிக்கைகள் எடுத்துக்கொள்ளப் பெறவேண்டிய வரிசை முறையையும் முடிவு செய்யவேண்டும் என்றிருக்கிறது.



அந்த முறைப்படி எந்தெந்த நாட்களில் எந்தெந்த மானியக் கோரிக்கைகளை எடுத்துக்கொள்வது என்பதையும் முடிவு செய்திருக்கிறோம். அந்த முறைப்படி நேற்று காவல் துறை, மாவட்ட ஆட்சித் தலைவர் பற்றிய மானியக் கோரிக்கைகள் எடுத்துக்கொள்ளப்பட்டன. நேற்று காலையிலேயே இன்று என்ன நடைபெறும் என்பதற்கான அஜன்ட்டா நிகழ்ச்சி நிரல் நேற்றே கொடுக்கப்பட்டிருக்கிறது. அலுவல் ஆய்வுக்குழுவில் எடுத்த முடிவிற்கிணங்க நேற்று எடுத்துக் கொள்ளப்பட வேண்டியது நேற்றே எடுத்துக்கொள்ளப்பட்டது. இன்று என்ன எடுத்துக்கொள்ளவேண்டும் என்று அலுவல் ஆய்வுக் குழு முடிவு செய்திருந்ததோ அதன்படியே நிகழ்ச்சி நிரல் தயாரிக்கப்பெற்று நேற்றே உறுப்பினர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. நேற்றே இந்த அவை முடிவதற்கு முன்னால், இன்று 12 மணிக்கு அலுவல் ஆய்வுக்குழு கூடும் என்ற செய்தியும், தங்களால் பேரவைக்குத் தரப்பட்டிருக்கிறது. மேலும் விதி 200 இல் அலுவல் ஆய்வுக் குழுவை கலந்தாலோசித்து, மானியக் கோரிக்கை ஒவ்வொன்றையும் விவாதிப்பதற்கு நேரம் ஒதுக்கி, அக்கோரிக்கைகள் எடுத்துக் கொள்ளப் பெறவேண்டிய வரிசை முறையையும் முடிவு செய்ய வேண்டும்' என்று இருக்கிறதே தவிர, எந்தக் கோரிக்கையை எந்த நேரத்திலே முடிக்க வேண்டுமென்று குறிப்பிடப்படவில்லை. எடுத்துக்கொள்ள வேண்டிய பிரச்னைதான் இருக்கிறதே தவிர, முடித்துத் தரவேண்டிய பொறுப்பு தலைவருடையதாகத்தான் இருக்கிறது. ஆகவே, தங்களுக்கு இருக்கின்ற விஷே அதிகாரத்தை ஒட்டி, இந்த நெருக்கடி நிலையிலே, இப்படிப்பட்ட சூழ்நிலையிலே இதற்கு முடிவு செய்கின்ற முழு உரிமையும் தங்களுக்கு இருக்கின்ற காரணத்தினால், தாங்கள் இதற்கு ஒரு தீர்ப்பளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (கூச்சல், குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இந்தப் பிரச்சினையைப் பற்றித் தங்களுடைய கருத்தைச் சொல்லி இருக்கிறார்கள். அதற்கு நான் விளக்கம் சொல்கிறேன். விளக்கம் சொல்வதைக்கூட கேட்காமல், கூச்சல் போட்டுக்கொண்டு, ஒருவருக்கு ஒருவர் பேச வேண்டிய அவசியம் இல்லை. (கூச்சல், குழப்பம்).

**டாக்டர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, இப்படித்தான் இந்த அவை நடைபெற வேண்டுமா? ஆளு கட்சி உறுப்பினர்கள் இப்படித்தான் நடந்து கொள்வார்கள் என்றால், எதிர்க்கட்சியிலே இருக்கின்ற உறுப்பினர்களும் அவ்வாறு நடந்து கொள்வதற்கு அனுமதிக்க வேண்டும்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** இரண்டு பக்கங்களிலும் இருந்துதான் வருகின்றது என்று சொல்கிறேன். ஒரு பக்கத்திலே இருக்கின்றவர்கள் என்று நான் சொல்லவில்லை. உட்காருங்கள், உட்காருங்கள் என்று இரண்டு பக்கங்களிலும் இருந்து வருகிறது.

**டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, அவை முன்னவர் பேசுகின்றபோது எவ்வளவு அமைதியாக எதிர்க் கட்சியிலே உள்ளவர்கள் கேட்டார்கள் என்பதையும், நான் எழுந்து நின்று பேசும்போது எப்படி ஆரவாரம் வருகிறது என்பதையும் உங்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு வருவதோடு, அவை முன்னவர் அவர்களின் கவனத்திற்கும் கொண்டுவர விரும்புகிறேன்.

அவை முன்னவர் ஒன்றைச் சொன்னார்கள். எப்போது இதை முடித்து வைக்கவேண்டும் என்பது விதி 200 லே இல்லை என்றார்கள். ஆனால் விதி 200 லே, உள் விதி (3) பிரிவிலே 'மானியக் கோரிக்கை ஒவ்வொன்றிற்கும் உள் விதி (1) இன் கிழ் விவாதிப்பதற்காக ஒதுக்கப்பெற்ற கால முடிவில், அந்தக் கோரிக்கையை முடிவுறச் செய்ய அவசியமான பிரச்சனை ஒவ்வொன்றையும் பேரவைத் தலைவர் வாக்கெடுப்பிற்கு விடவேண்டும்' என்று தெளிவாக அந்த விதியிலே இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அந்த விதி கடைசி நாளுக்குத் தான் பொருந்தும். ஏற்கனவே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சட்ட மன்றத்திலே இருந்திருக்கிறார்கள்.

**டாக்டர் மு. கருணாநிதி :** ஆளுங் கட்சியினர் நடந்து கொள்கின்ற முறையை கண்டித்து, நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.

(தி.மு.க உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்).

(முற்பகல் 11-10)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், அவரது கட்சியினரும் வெளிநடப்புச் செய்திருக்கிறார்கள். அந்தப் பிரச்சினைக்குள்ளே நான் போக விரும்பவில்லை.





இங்கே மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஒரு பிரச்சினையை எழுப்பினார்கள். காவல் துறை மானியத்தை நேற்றே விவாதித்து நிறைவேற்றி இருக்கவேண்டும். அது முடியாதபோது அலுவல் ஆய்வுக் குழுவை நேற்றே கூட்டி, காவல் துறை மானிய விவாதத்தை என்றைக்குத் தொடர்ந்து எடுத்துக் கொள்வது என முடிவு செய்திருக்கவேண்டும். அப்படிச் செய்யவில்லை. அலுவல் ஆய்வுக் குழு அலட்சியம் செய்யப்பெற்றுள்ளது என்பது அவர்களுடைய வாதம்.

நான் முன்பே சொன்னேன். அதுபோன்ற உள்நோக்கமோ, வெளி நோக்கமோ எனக்கு இல்லை.

நேற்று காவல்துறை மானியத்திலே பல பேர் பேச வேண்டும் என்று வற்புறுத்தினார்கள். பேச அழைக்கப்பெற்ற உறுப்பினர்களும் தங்களுக்கு அதிக நேரம் ஒதுக்கப்பெற வேண்டும் என்றார்கள். இதன் காரணமாக காலை 9 மணி முதல் விவாதம் தொடர்ந்து $4\frac{1}{2}$ மணி நேரம் நடைபெற்றும் முடிவடையவில்லை.

மாலை 4 மணிக்கு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மகாநாடு இருந்தது. அமைச்சர் பெருமக்களும் அங்கே கலந்து கொள்ளவேண்டி இருந்தது.

விவாதத்தைத் தொடர்ந்து நடத்தி இருந்தாலும் மாலை 4 மணிக்குள் முடிக்க முடியாது என்கிற நிலை ஏற்பட்டது.

எதிர்க்கட்சித் தலைவரோ, துணைத் தலைவரோ அவையில் இருந்திருந்தால் அப்போதே அவர்களிடம் கலந்து பேசி இருப்பேன். அவர்களும் பேரவையில் இல்லை.

இது போன்ற நெருக்கடியான ஒரு நேரத்தில் தம் உசிதப்படி ஒரு முடிவை எடுக்க பேரவைத் தலைவருக்கு உரிமை இருக்கிறது. பேரவைத் தலைவர் தம்முடைய அந்த உரிமையைப் பயன்படுத்தாமல் பேரவையை நடத்திச் செல்ல முடியாது. அலுவல் ஆய்வுக் குழுவைக் கலந்து கொண்டு பேரவைத் தலைவர் செயல்பட முடியுமே தவிர, அலுவல் ஆய்வுக் குழு முடிவின்படிதான் எப்போதும் நடக்க வேண்டும் என்று வற்புறுத்த முடியாது.

என்றாலும், "இன்று காலை 12-00 மணிக்கு அலுவல் ஆய்வுக் குழு கூடி காவல் துறை மானியத்தை என்றைக்குத் தொடர்ந்து நடத்துவது என முடிவு செய்யும்" என்று நான் நேற்றே அறிவித்து பேரவையை ஒத்தி வைத்திருப்பதன் மூலம் அலுவல் ஆய்வுக் குழுவை அலட்சியம் செய்யவில்லை என்பதை

உறுப்பினர்கள் உணரலாம். அலுவல் ஆய்வுக் குழுவுக்குத் தரப்பெற வேண்டிய மரியாதை எந்த விதத்திலும் குறைக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அலுவல் ஆய்வுக் குழுவுக்கு அளிக்கப்பெற்றுள்ள உரிமையை நான் பறிக்கவில்லை. ஆகவேதான் 'இன்று ஆய்வுக் குழு 12 மணிக்குக் கூடி காவல் துறை மானிய விவாதத்தைத் தொடர்ந்து என்றைக்கு எடுத்துக் கொள்வது என முடிவு செய்யும்' என்பதாக அறிவித்துவிட்டு பேரவையை ஒத்தி வைத்திருக்கிறேன். இதில் எந்தவிதமான நடைமுறைத் தவறும், விதிகளை மீறிய பிரச்சினையும் எழவில்லை எனத் தீர்ப்பளிக்கிறேன்.

THIRU HAJA SHERIF : Mr. Speaker, Sir, I am very sorry that when the Hon. Leader of the Opposition was talking there was interruption, particularly from the members of the Ruling Party. It is against the established principles and the etiquette of parliamentary procedure. To say that we are also in conformity with the principle that parliamentary procedure should be followed, we are staging a walk-out.

[இந்திய தேசிய காங்கிரஸ் (இ) கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.]

5. வரவு-செலவுத் திட்டம், 1980-81—வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

(அ) கோரிக்கை எண் 22—கால்நடை வளர்ப்பு.

(ஆ) கோரிக்கை எண் 30—சமூக நலன்.

கோரிக்கை எண் 22—கால்நடை வளர்ப்பு.

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநரின் பரிந்துரை மேல், நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்—

"மானியக் கோரிக்கை எண் 22—கால்நடை வளர்ப்பு என்ற தலைப்பின் கீழ் ரூ. 15,18,19,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."





**திரு. என். வரதராஜன் :** பேரவைத் தலைவர் அவர்களே, பஞ்சாயத்து யூனியன் கால்நடை விரிவாக்க அலுவர் பதவி சம்பந்தமாக கால்நடை ஆய்வாளர்களுக்கும், மருத்துவர்களுக்கும் ஏற்பட்டுள்ள சச்சரவுகளை சமரசமாகத் தீர்த்து வைக்க வேண்டுமென்பதைப் பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்—

"மானியக் கோரிக்கை எண் 22—கால்நடை வளர்ப்பு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெ9கின்ற ரூ. 15.18,19,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**திரு. மு. அப்பாதுரை :** பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை வளர்ப்புத் திட்டத்தின்கீழ் செம்மறி ஆடுகள் மட்டுமே கொடுக்கப்பட்டிருப்பதால் வெள்ளாடுகளும் வழங்கப்பட வேண்டுமென்று விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டு தீர்மானத்தை மொழிகிறேன்—

"மானியக் கோரிக்கை எண். 22—கால்நடை வளர்ப்பு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 15,18,19,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

கோரிக்கை எண். 30—சமூக நலன்.

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநரின் பரிந்துரைமேல், நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்—

"மானியக் கோரிக்கை எண் 30—சமூக நலன் என்ற தலைப்பின்கீழ் ரூ. 10,22,30,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

**திரு. என். வரதராஜன் :** பேரவைத் தலைவர் அவர்களே, 60 வயதும் அதற்கு மேற்பட்ட விவசாயத் தொழிலாளிகளுக்கு மாதம் ஒன்றுக்கு ரூபாய் 50 ஓய்வூதியம் கொடுத்து சமூக நலன்களைப் பாதுகாக்க வேண்டும் என்பதை விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்—

"மானியக் கோரிக்கை எண் 30—சமூக நலன் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 10.22,30,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**திரு. எம். ஆறுமுகம் :** பேரவைத் தலைவர் அவர்களே, சிலோன், பர்மா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் இருந்து வெளியேற்றப்பட்டு தமிழகத்தில் குடியேறியவர்களுக்கு பாதுகாப்பு (வாழ்வளிப்பது) வழங்குவதுபற்றி விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்—

"மானியக் கோரிக்கை எண் 30—சமூக நலன் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 10.22,30,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

[1980 ஜூலை 26

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்படுகின்றன. மாண்புமிகு அமைச்சரவர்கள் ஏதாவது கூறுவதாக இருந்தால் கூறலாம்.

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசின் சார்பிலே மொழியப்பட்ட மானியக் கோரிக்கைகளும் இந்த அரசின் கொள்கைகளும் திட்டங்களும்* புத்தக வடிவிலே தரப்பட்டு இருக்கின்றன. அவற்றை இந்த அவையிலே நான் ஆற்றிய உரையாக எண்ணிக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துகளை அவையிலே கூறவேண்டும் என்று கேட்டு, இறுதியிலே என் பதில் உரையை அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஜே. சி. டி. பிரபாகரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையில் கோடிட்டுக் காட்டப்பெற்று, நிதிநிலை அறிக்கையிலே வடிவம்கொடுக்கப்பெற்று இன்றைக்கு முழு வடிவோடு மானியக் கோரிக்கையாக மலர்ந்திருக்கின்ற கால்நடை வளர்ப்பு மற்றும் சமூக நலன் துறைக்கென்று அரசு கோரியிருக்கிற மானியங்களை வழங்கவேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொண்டு, இந்தத் துறையைச் சார்ந்த ஒரு சில கருத்துக்களை இந்த மாமன்றத்தின் முன்பாக வைப்பது எனது கடமை என்று கருதுகிறேன்.

கால்நடை மருத்துவர்களைப்பற்றி நான் இந்த மாமன்றத்திலே சில வார்த்தைகள் சொல்லியாக வேண்டும். புதிய அரசு பதவியேற்றுக் கொண்டதற்குப் பிறகு கால்நடை மருத்துவர்கள், எம்.பி.பி.எஸ். படித்து இருக்கின்ற மருத்துவர்களுக்கு அளிக்கப்படுவதைப் போன்ற சம்பளம், சலுகைகள் தங்களுக்கும் அளிக்கப்பட வேண்டுமென்று கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் அவர்களும், எங்கள் இதய தெய்வமாம் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களும் தாய் உள்ளத்தோடு இந்தப் பிரச்சினையை அணுகுவார்கள் என்ற நம்பிக்கையோடு கால்நடை மருத்துவர்கள் தங்களுடைய போராட்டத்தை நிறுத்தி வைத்து, தங்களுடைய பிரச்சினைகளுக்கு சுமுகமான தீர்வு காண வேண்டுமென்ற முறையிலே அரசுக்கு வேண்டுகோளை வைத்திருக்கிறார்கள். இந்த அரசு அவர்களுடைய கோரிக்கைகளை எல்லாம் மிகவும் பரிவோடு கவனித்து ஆவன செய்ய வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். எழுந்து உன் படுக்கையை எடுத்துக்கொண்டு நட என்று சொன்ன, திறவாதிருந்த கண்களை திறந்திட்ட ஏசுபெருமான் இன்றைக்கு இல்லை. மானிட

* 129, C-ஆம் பக்கங்களில் இணைப்பு I, II ஆக அச்சிடப் பெற்றுள்ளது.





வாழ்விலே மறுமலர்ச்சி காட்டவந்த கீதை கூறுகின்ற கண்ணனும் இன்றைக்கு இல்லை. அருளுரையாலே துயர் துடைக்கவந்த புத்த பெருமானும் இன்றைக்கு இல்லை. காந்தியடிகளும் இன்றைக்கு இல்லை. ஆனால், இந்த யுகத்திலே பார்வையற்றோர், ஊனமுற்றோர், அனாதைக் குழந்தைகள், ஆதரவற்ற குழந்தைகள், விதவைப் பெண்டிர், மன வளர்ச்சி குன்றியவர்கள் அத்தனை பேருக்கும் அள்ளி அள்ளிக் கொடுக்கிற அட்சயபாத்திரமாக, ஆதரவளிக்கிற அவதார புருஷராக புரட்சித் தலைவர் அவர்கள் இருக்கின்ற காரணத்தினாலே தான் இன்றைக்கு முதியோர் ஓய்வூதியத் திட்டம் என்றும், மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டம் என்றும் அனாதைக் குழந்தைகள், ஆதரவற்ற குழந்தைகள், பிச்சைக்காரர் மறுவாழ்வுத் திட்டங்கள் என மறுமலர்ச்சித் திட்டங்களை இன்றைக்கு சமூக நலத் துறை நிறைவேற்றிக்கொண்டிருக்கிறது. வண்ண வண்ண போஸ்டர்கள் இல்லை, பகட்டு இல்லை, படாடோபம் இல்லை, எளிமையாக இந்தத் துறையில் நல்ல முற்போக்கான திட்டங்களை போட்டிருப்பது வரவேற்கக்கூடியது என்றாலும் முதியோர் ஓய்வு ஊதியத் திட்டம், விதவைகள் நலத் திட்டம் இவற்றின் கீழே உதவிபெற விண்ணப்பம் போட்டால் அவைகளை உடனடியாக பரிசீலனை செய்து அவர்களுக்கு அதைப் பெறுவதற்கு தகுதியிருக்கிறதா இல்லையா என்பதை விண்ணப்பதாரர்களுக்கு உடனடியாக அறிவிப்பது இல்லை. அந்த விண்ணப்பங்களை உரியவர்களிடம் சேர்ப்பித்தும் உங்களுக்கு உதவித் தொகையைப் பெறக்கூடிய தகுதி இருக்கிறதா இல்லையா என்பதையும் உங்களுக்கு உதவித் தொகை இருக்கிறதா இல்லையா என்பதையும் உடனடியாக அவர்களுக்கு அறிவிக்கவேண்டும். தகுதிபடைத்தவர்களுக்கு உடனடியாக ஆவன செய்து உதவித் தொகைகளைக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னும் ஒன்றை நான் சொல்வேன். ஊனமுற்றோர்கள் தங்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்க வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் தங்களைப் பதிவு செய்துகொண்டிருந்தாலும் அவர்களுக்கு வேலை கிடைப்பதில்லை. அரசாங்கமே அதற்காக ஒரு ஸ்டாச்சுட்டரி ஆர்டரைப் போட்டு தனியார் நிறுவனங்களாக இருந்தாலும்சரி, அரசு நிறுவனங்களாக இருந்தாலும்சரி ஊனமுற்றோர்களுக்கு இத்தனை விழுக்காடு பதவிகள் தரவேண்டுமென்று ஒதுக்கி உத்தரவிட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அவர்களுடைய பிரச்சினையைப் பரிவோடு கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-20)

அம்பத்தூர் நகரத்தில் உள்ள தாய்மார்களின் நலனைக் காப்பதற்காக ஒரு தையல் பள்ளிக்கூடம் நடத்தப்படுகிறது. அங்கே விதவைத் தாய்மார்கள்

பயில்கிறார்கள். அந்தப் பள்ளிக்கு அரசு மானியத்தை அளிப்பதோடு, இப்படிப்பட்ட பள்ளிகள் தமிழகம் எங்கும் இருப்பவைகளுக்கு அங்கீகாரம் அளிக்க வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொன்றையும் நான் சொல்லியாக வேண்டும். அம்பத்தூர் நகரத்தில் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோருக்கு ஒரு சிலை வைக்க வேண்டுமென்று அங்கே உள்ளவர்கள் ஒரு கோரிக்கையைச் சொல்லி. அதற்கென தனியாக ஒரு தொகையை வைத்து, பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு சிலை வைக்க வேண்டுமென்று என்னிடத்திலே வந்தவர்களைப் பார்த்து நான் ஒன்றைச் சொன்னேன். ஏற்கனவே இந்த நகரத்தில் பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு சிலைகள் இருந்து கொண்டிருக்கின்றன. அண்ணா அவர்களின் பெயராலே ஏறக்குறைய பத்தாயிரம், பதினைந்தாயிரம் ரூபாய் போட்டு இன்னொரு சிலையை, ஏற்கனவே இருக்கின்ற சிலைக்கு அருகில் ஏற்படுத்துவதைக் காட்டிலும், அண்ணா அவர்களின் பெயரால் ஒரு தொழிற்கூடத்தை ஏற்படுத்தினால், 50-க்கும் மேற்பட்ட பார்வையற்றவர்கள் இருக்கின்ற இந்தப் பகுதியில், வேலையில்லாமல் இருக்கின்ற அவர்களுக்குப் பயன்படும். பேரறிஞர் அண்ணா அவர்களின் பெயரால் ஒரு தொழிற்கூடத்தைத் துவங்குவதற்கு அந்தத் தொகையைத் தந்தால் வேலையில்லாது இருக்கின்ற அந்தப் பார்வையற்றவர்களுக்குப் பலன் அளிக்கும் எனவே, அந்தத் தொகையை அதற்குத் தந்து அப்படிப்பட்ட தொழிற்கூடத்தை உருவாக்க முடியாதா என்று கேட்டபொழுது அவர்களும் அதை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். இப்படித் தனியார்கள் பேரறிஞர் அண்ணா அவர்களின் பெயரிலும், தந்தை பெரியார் அவர்களின் பெயரிலும் சிலைகளுக்குப் பணத்தைத் திரட்டும்பொழுது, அந்தப் பணத்தைக் கொண்டு இம்மாதிரி தொழிற் கூடங்களை ஏற்படுத்தினால், அரசு ஏற்றிருக்கும் மாபெரும் பொறுப்பிலே பங்குகொள்ளுகின்ற அத்தகைய தனியாருக்கு அரசு மானியத்தை வழங்கிட வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.



இந்தச் சமூக நலத்துறையைப் பொறுத்தவரையில்,

" அனமிலார்க்கு அனமாய் வாழ
அகமிலார்க்கு அகமாய்த் துன்ப
மனமுளார்க்கு உவப்பாய் நோயில்
வருந்துவோர்க்கு அருமருந்தாய்த்
தனமிலார்க்கு அரும்பொன்னாய் நல்
தாய்தந்தையிலார்க்கு அன்னாராய்
இனமிலார்க்கு இனமாய் யார்க்கும்
யாவுமாய் இசைதல் அன்பே "

எனும் நீதிநூல் காட்டும் பாடல் வரிகளுக்கு இலக்கணமாய், பசித்தோருக்குச் சோறு; அலைவோருக்குத் தங்க வீடு; வருந்துவோர்க்கு மகிழ இனமாய்; வாதனைப்படுவோருக்கு மருந்து; வறிஞர்க்கு கைப்பொருளாய், அனாதைகளுக்கு அருந்துணையாய், உறவற்றோருக்குப் பெரு நிழலாய் புதிய அரசியல் நெறி படைக்கின்ற புரட்சித் தலைவர் ஆட்சியிலேதான் சமூக நலத்துறையில் மாற்றம் பிறந்து மறுமலர்ச்சி ஏற்பட்டுக் கொண்டிருக்கிற நிலையிலே இந்த அரசு கோரியிருக்கின்ற மானியக் கோரிக்கைகளை வரவேற்று, குறிப்பிட்டுச் சொன்ன குறைகளைப் போக்க அரசு ஆவன செய்ய வேண்டுமென்று சொல்லி முடிக்கிறேன், நன்றி, வணக்கம்.

* **திரு. சி. கணேசன் :** பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் இந்த மாமன்றத்தின் முன்னால் வைத்திருக்கின்ற இந்த மானியக் கோரிக்கைகளை நான் மனதார வரவேற்று, போற்றி, அதுபற்றி சில வார்த்தைகள் பேச நான் விழைகிறேன். இன்றைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்ற இந்த மானியங்கள் முழுக்க முழுக்க ஏழை எளிய மக்களுக்கும், அனாதைகளுக்கும், ஆதரவு அற்றவர்களுக்குமாக மன நிறைவு தருகின்ற வகையிலே அமைந்திருக்கின்றன. ஆனால், புரட்சித் தலைவர் ஆட்சி என்றாலே, எந்த நிலையை எடுத்துக்கொண்டாலும், எந்தத் திட்டத்தை எடுத்துக்கொண்டாலும், அது ஏழைகளைப் பற்றியதாக இருக்கிறது: அது அனாதைகளைப் பற்றியதாகவே இருக்கிறது; அது குருடர்களைப் பற்றியதாகவே இருக்கிறது. அது அங்கஹீனம் உற்றவர்களைப் பற்றியதாகவே இருக்கிறது என்பதைப் பார்க்கும் பொழுது பலபேருக்கு வயிற்றெச்சலாக வருகிறது. அது நம்மைப் பற்றியதாக இருக்கவில்லையே என்று அங்கலாய்த்து ஆர்ப்பரிக்கிறார்கள். என்றைக்கிருந்தாலும் ஏழை எளிய மக்களையும் புரட்சித் தலைவரையும் இரண்டாகப் பிரித்து விட முடியாது என்பதைத்தான் இந்த அறிக்கை நமக்கு காட்டிக்கொண்டிருக்கிறது. எனவே, புரட்சித் தலை

[திரு. சி. கணேசன்] [1980 ஜூலை 26

வரவர்கள் எங்கே இருக்கிறார்களோ அங்கேதான் ஏழை மக்கள் இருக்கிறார்கள். எங்கே, ஏழை எளிய மக்கள் குருடர்கள், அங்கஹீனம் உற்றவர்கள் இருக்கிறார்களோ அங்கேதான் புரட்சித் தலைவர் இருப்பார். எத்தனை பேர்கள் எப்படியெப்படி ஏமாற்றினாலும், எத்தனையோ வேலைகளைச் செய்தாலும் அது நடக்காது என்பதற்கு அடையாளமாக இந்த அறிக்கை தெள்ளத் தெளிவாக இருக்கிறது என்பதை நான் கூறிக்கொள்ள விழைகிறேன். மதிப்பிற்குரிய இந்த மாமன்றம் நன்கு அறியும். ஏழை எளிய மக்கள், பின் தங்கிய மக்கள் ஆகியோர் இந்த ஆடு, மாடுகள் வாங்க இந்த அரசு இனாம் கொடுக்கிறது. அப்படிக் கொடுக்கின்ற அந்த இனாம் தொகையை வாங்குவதற்காக அதிகாரிகளிடத்தில் அணுகுவதற்கு ஏழை எளிய மக்களுக்குத் தைரியம் இல்லை; அதிகாரிகளைப் போய்ப் பார்ப்பதற்கு அச்சப்படுகிறார்கள். ஆகவே, ஏழை எளிய மக்கள், அரசாங்கம் அளிக்கின்ற அந்தத் தொகையை வாங்கி அனுபவிக்க முடியாமல் இருக்கிறார்கள். ஆனால் இடையிலே வருகின்ற தரகர்கள் இனிமையோடு பேசி, ஏழை, எளிய மக்களிடம் கையெழுத்து வாங்கி, அவர்களுடைய பேப்பர்களை வாங்கி, அதிகாரிகளிடத்திலே கொடுத்திருக்றார்கள். யாருக்கு அந்தப் பணம் சேர வேண்டுமோ, அந்த ஏழை, எளிய மக்கள், யாரிடம் பணம் பெற வேண்டுமோ, அந்த அதிகாரியினுடைய முகத்தைக்கூட பார்க்கமுடியாத நிலை பலகாலமாக இருக்கிறது. இடையிலே இருக்கிற தரகர்கள் நான் உங்கள் ஊருக்கு ரொம்ப வேண்டியவன், ரொம்ப நல்லவன், ரொம்ப யோக்கியமானவன், உங்களையெல்லாம் சீர்திருத்தம் செய்கிறேன், நீங்கள் எல்லாம் சட்டை போடாமல் இருக்கிறீர்கள். நான் சட்டை போட்டிருக்கிறேன், உங்களையெல்லாம் நகரவாசிகளைப் போல ஆக்குகிறேன் என்று இனிமையோடு பேசுவதோடு, அதிகாரிகளிடமும், நான் அவர்களைச் சீர்திருத்த வந்திருக்கிறேன் என்று இனிமையாகப் பேசி, அந்த அதிகாரிகளிடம் ஏழைகளைக் காட்டாமல், மனுக்களைக் காட்டி பணத்தைப் பெற்றுக் கொள்கிறார்கள். அந்தப் பணம் ஏழைகளைப் போய்ச் சேருவதில்லை. இந்தத் தரகர்கள் எல்லா வகையிலேயும் இருக்கிறார்கள், இந்தத் தரகர்களை ஏழைகள் நம்பிக் கொண்டிருக்கிறார்கள், அதனால் ஏமாறுகிறார்கள். அவர்கள் ஏமாந்தபிறகு அந்தக் கருங்காலிகளை, கருநாகங்களைப் பற்றிச் சொல்கிறார்கள். குறிப்பாக, நான் கடம்பாடி கிராமத்தைச் சொல்கிறேன், பல இலட்சக்கணக்கான பணம் பாழடிக்கப்பட்டிருக்கிறது. அங்கேயிருக்கிற கருங்காலி, கருநாகம் மாதிரி படம் எடுத்துக் கொண்டிருக்கிறான். ஏழை, எளிய மக்களுக்கு நாம் பல்வேறு காரியங்களைச் செய்கிறோம், நல்ல எண்ணத்தோடும் சொல்கிறோம். புரட்சித் தலைவருடைய ஆட்சியிலே செலவு செய்கிற ஒவ்வொரு பைசாவும் ஏழைகளுடைய மடியிலே போய் விழவேண்டுமென்று நாம் ஆசைப்படுகிறோம்.



1980 ஜூலை 26] [திரு. சி. கணேசன்]

ஆனால், அந்தக் கருங்காலிகள், கருநாகங்கள் ஏழைகளை ஏமாற்றுகிறார்கள். கடைசியிலே அந்த ஏழைகள் என்ன சொல்கிறார்கள்? என்ன இனிமையாகப் பேசினான், அவன் பல குடும்பங்களிலே தாலியைப் பறித்திருக்கிறான். அரிசனப் பெருமக்கள்; பெரிய மனிதன் என்று சொல்கிறார்கள். அவன் பேசுகிற பேச்சைப் பாருங்கள், அவனுடைய நாணயத்தைப் பாருங்கள், அவனுக்கு மற்ற எல்லா பலமும் இருக்கிறது. ஆனால், அவனிடம்தான் அந்த மனுக்களைக் கொடுக்கிறார்கள் என்று இப்படியெல்லாம் சொல்கிறார்கள். இப்படி வாழ்விழந்த பல குடும்பங்கள் இருக்கின்றன. அந்தத் தரகர்களுடைய வேலையை முறியடிக்கவேண்டும்.

விவசாயத்திற்கே முதுகெலும்பாக இருப்பது மாடுகள்தான். அந்த மாடுகளை வாங்க ஏழை, எளிய விவசாயிகள் இடையில் குறுக்கே நிற்கும் தரகர்களைக் கண்ணுங்கருத்துமாகக் கண்காணிக்கவேண்டும்.

அடுத்து, கால்நடைகளுக்கு மருந்துகள் கொடுக்கிறோம். கால்நடைகளுக்கு வெக்கை நோய் வருகிறது. வெக்கை நோய் வருவதற்கு முன்னாலே, நாம் தடுப்பு ஊசிகள் போட வேண்டும். ஒரு கிராமத்தில் வெக்கை நோய் என்றால், பக்கத்து கிராமத்திற்கு வருவதற்கு முன்பே, அங்கே உள்ள கால்நடைகளுக்குத் தடுப்பு ஊசிகள் போடவேண்டும். ஏனென்றால், சாதாரண விவசாயி, கோழி கூவுகின்ற நேரத்தில், வயலுக்குப் போய், கோட்டான் கூவுகின்ற நேரத்திலே வீடு திரும்புகிறான். அவனுக்கு ஒரு ஜதை மாடை வைத்துக் காப்பாற்ற வக்கில்லை. ஆகவே, மாடு நோய் வாய்ப்பட்டால் அவர்கள் மருத்துவ அதிகாரிகளை அணுகுகிறார்கள். மருத்துவர்கள் மருந்து எழுதிக் கொடுக்கிறார்கள். அங்கேயுள்ள கடையிலே கேட்டால் அந்த மருந்து இல்லையென்று சொல்கிறார்கள். அவன் 30, 40 மைல் வண்டியில் சென்று மருந்து வாங்குவதற்குள்ளே மாடுகள் இறந்து விடுகின்றன. ஆகவே, இதில் நாம் அதிக அக்கறை செலுத்தி எல்லா மருந்துகளும் அந்த மருத்துவ மனைகளிலே இருக்கக்கூடிய வகையிலே ஏற்பாடு செய்ய வேண்டும்.

செயற்கை இன விருத்தியை நாம் அதிகமாகப் பயன் படுத்தி, சாதாரண கிராமங்களிலேயெல்லாம் கூட காளை மாடுகள், உயர்ந்த ரகங்கள் பெருக வேண்டுமென்று பேராசைப்படுகிறோம். அதற்கான வழிமுறைகள் இந்த அறிக்கையிலே நிறைய இருக்கின்றன. அதிலே, ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். பொலி காளையினுடைய விந்துக்களைச் சேகரிப்பதிலே, உறை விந்து முறையிலே தயாரிப்பதற்கு நாட்கள் அதிகம் ஆகின்ற காரணத்தாலே, பல வருஷங்கள் ஆகின்ற காரணத்தாலே, அதிலே குறைபாடுகள் இருப்பதாக

நாங்கள் அறிகிறோம். அதனாலே தான் அந்த வகையிலே பிறக்கின்ற கன்றுகள் எல்லாம் அங்கஹீனமாகவும், பார்வையிழந்தும், பல கன்றுகள் அப்படியே இறந்துவிடுகின்றன. ஆகவே, செயற்கை முறையிலே பிறக்கின்ற அந்தக் கன்றுகளை, அங்கேயே வைத்திருந்து, குழந்தைகளைப் பாதுகாக்கின்ற மாதிரி, பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்று நான் தாழ்மையோடு எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

கால்நடைக் காட்சியை ஒன்றியங்கள்தோறும் வைத்தால் தான் ஏழை, எளியவர்களுக்கு, கிராமத்து ஜனங்களுக்குப் போட்டி மனப்பான்மை வரும். எங்கோ ஒரு கிராமத்திலே, எங்கோ ஒரு நகரத்திலே, இதை நடத்துவதனால், ஏழை, எளிய மக்கள், அதைக் காண்பதற்குக்கூட வாய்ப்பில்லாமல் போய் விடுகிறது. ஒன்றியங்கள்தோறும் அங்கே இருக்கிற கால்நடைகளை வைத்து, போட்டிகள் வைத்தால், பரிசுகள் கொடுத்தால், பாராட்டுகள் கொடுத்தால், அவர்களுக்குள்ளே போட்டி மனப்பான்மை வரும், கால்நடைகள் வேகமாக வளரும்.

அடுத்து, கோழிகளை, 4, 5 ஆண்டுகளுக்கு முன்னாலே இனாமாகவும், கடனாகவும் கொடுத்திருக்கிறார்கள். 4, 5 ஆண்டுகளுக்கு முன்னாலே, வாங்கியதற்கு இன்றைக்கு ஏழை, எளியவர்கள் கோர்ட்டுகளிலே நிற்கிறார்கள்.

(முற்பகல் 11-30)

காரணம் அந்தப் பணத்தைக் கட்ட முடியாமல், அவர்கள்மீது பணம் கொடுத்த சொசைட்டிகள் வழக்குகள் போட்டிருக்கிறார்கள். 4, 5 ஆண்டுகளுக்கு மேல் அவர்கள் பணம் கட்டவில்லை. அந்த வழக்குகள் இன்னும் தொடர்ந்து கொண்டு இருக்கிறது. அதைத் தவிர்க்கவேண்டும் என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன். அதிலேதான் கணிசமான அளவிக்கு ஏழைகளுக்கு நிவாரணம் தரவேண்டும் என்று தாழ்மையோடு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து கோழி வளர்க்கும் திட்டம். இதிலே முட்டைகள் இருக்கின்றன. அந்த முட்டைகளை ஏழை எளிய மக்களாலே சேமித்து வைக்கமுடியவில்லை. மறுநாளைக்கு தேவையான உப்பு, கட்டை வாங்குவதற்கும் பயன்படுத்துகிறார்கள். விற்று விடுவார்கள். எப்படிப் பாலை கறந்த உடனே. அரசாங்கம் ஏற்பாடுகளைச் செய்து அந்தப் பாலை சேகரித்து வாகனங்கள் மூலம் கொண்டு போய் சேர்த்து பணமாக்குவதைப்போல, இந்தக் கோழி முட்டைகளை எல்லாம் தினம் தினம் சேகரிப்பதற்கு ஆட்களை தயார் செய்தால் ஏழை எளிய மக்களுக்கு அந்த அளவுக்கு நஷ்டம் வராது என்பதனை நான் தாழ்மையோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன.





அதே மாதிரி பன்றிகள். இந்த வெள்ளை யார்க்ஷையர் பன்றிகளை சாதாரணமான கிராமங்களுக்குத் தருவதில்லை. அப்படி தருவது என்றால் கூட, நான் முன்பே சொன்னமாதிரி ஏமாற்று மொழி பேசி ஏமாற்றுகின்ற தரகர்களிடம் தான் அவர்கள் ஏமாந்து விடுவார்கள். செங்கல்பட்டு நகரத்தில் கட்டுக்கடங்காத பன்றிகள் இருக்கின்றன. அந்தப் பன்றிகள் யாருக்கு சொந்தம் என்றே தெரியவில்லை. போகின்ற வருகின்ற வாகனங்களுக்கு எல்லாம் பெரிய தொல்லையாக இருக்கின்றது. செங்கல்பட்டு என்றாலே வாகனங்கள் ஓட்டுகிறவர்களுக்கு எல்லாம் பன்றிகள்தான் காட்சி அளிக்கிறது. பன்றிகளை வளர்க்கவேண்டும் என்று சொல்லுகிறோம், கால்நடைகளை விருத்தி செய்யவேண்டும் என்று சொல்லுகிறோம். இங்கே இருப்பவர்கள் எந்த விதமான பாதுகாப்பும் அற்றவர்களாக இருக்கிறார்கள். அங்கே ஒவ்வொரு நாளும் ஒரு பன்றி இறந்து கிடக்கும். ஒரு பன்றியின் மேல் வண்டியை ஏற்றிவிட்டால் அந்த வண்டியை மீண்டும் ஓட்ட முடியாது. செங்கல்பட்டு நகரத்திலே தெருவுக்குத் தெரு மேய்ப்பார் இல்லாமல் கேட்பார் இல்லாமல் திரிந்து கொண்டிருக்கின்ற பன்றிகள் இருக்கின்றன. அதே நேரத்தில் எங்கு பன்றிகள் வளர்க்க வேண்டுமோ அங்கே எல்லாம் தீவிரமாக கவனம் செலுத்தி அதற்கு வேண்டிய ஊக்கத்தை எடுத்துக் கொண்டிருக்கிற முயற்சிகளை நான் பாராட்டுகிறேன்.

(மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் தலைமை)

அடுத்து உடல் ஊனமுற்றோர் நலத்தைப் பொறுத்தவரையில் உடல் ஊனமுற்ற குழந்தைகளுக்கு முதல் முதலாக ஊன்றுகோல் கொடுத்த பெருமை புரட்சித் தலைவர் அவர்களைத்தான் சாரும். சென்ற ஆண்டிலே இருந்து, குழந்தைகளுக்குக் கூட அனாதை குழந்தைகளுக்குக் கூட, நடப்பதற்கு முடியாமல் இருக்கிற அந்த நிலையிலே போய் வருகிறேன் நான் உதவிக்கு என்று அவர்களுக்கு ஊன்றுகோல் கொடுத்து அதை மீண்டும் தொடர்ந்து செய்வதை பாராட்டாமல் இருக்க முடியாது. ஊனம் உற்றவர்கள், விதவைகள் கேட்பார் இல்லாமல், சமுதாயத்தில் தாழ்ந்தவர்களாக இருக்கிறார்கள். இரண்டு கால்களும், இரண்டு கைகளும் இருந்தால்தான் சமுதாயத்தில் பெரியமனிதனாக காட்சி அளிக்கிறார்கள். இவை இல்லாமல் இருப்பவர்கள் மிகவும் கேவலமாக கருதப்படுகிறார்கள்.

[திரு. சி. கணேசன்] [1980 ஜூலை 26

அதைப்போலதான், சொசைட்டிகளிலே, கிராமப் புறங்களிலே கீழ் ஜாதி, மேல் ஜாதி என்று குறிப்பிடுகிறார்கள். பெரிய மீனையும், பெரிய நண்டையும் வாங்குவதற்குச் சக்தி படைத்தவன் பெரிய ஜாதிக்காரன் என்று சொல்லு கிறார்கள். சின்ன மீனையும் சின்ன நண்டையும், வாங்க முடியாமல் வாங்கிச் சாப்பிடுகிறவன் கீழ் ஜாதிக்காரன் என்று கேவலமாக கருதுகிறார்கள். இரண்டு ஜாதிக்காரர்களும் இரண்டையும் சாப்பிடுகிறார்கள். காரணம் அவன் குறைந்த வருமானம் உடையவன். அப்படித்தான் அந்த சமுதாயத்தை மிகவும் கேவலப் படுத்திகிறார்கள்.

அடுத்து, பெண்கள் வீட்டிலே இருந்து கொண்டு, சம்பாதிக்கலாம், வீட்டிலே இருந்து தொழிலைச் செய்யலாம்; வீட்டிலே இருந்து வருமானத்தை பெருக்க லாம். இப்படி அவர்கள் மனம் மகிழக்கூடிய அளவுக்குப் பல திட்டங்களை இந்த அறிக்கையிலே வைத்திருக்கிறார்கள். அதை எண்ணிப் பார்க்கும்போது தமிழ் நாட்டில் உள்ள பட்டிதொட்டிகளில் உள்ள அத்தனை தாய்மார்களுக்கும் இது ஒரு வரப்பிரசாதமாக இருக்கிறது என்பதை நான் முழுமனதோடு வரவேற்கிறேன். அதிலே நம்முடைய எண்ணங்கள் எல்லாம் குறைந்தபட்சமாக இல்லாமல் நிறைந்த அளவிலே நாம் அவர்களுக்குத் தர வேண்டும்.

இன்னொன்றையும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். கிராமங்களில் முக்கிய சேவிகா என்னும் ஒரு நிலையை நாம் ஏற்படுத்தி இருக்கிறோம். பல கிராமங்களுக்கு முக்கிய சேவிகா என்றால் என்ன என்றே தெரியாமல் இருக் கிறார்கள். அவர்களுடைய சேவை என்ன என்பதையும், அவர்கள் மூலமாக வருகின்ற நன்மைகள் என்ன என்பதையும் தெரியாமல் இருக்கிறார்கள்.

ஆகவே முக்கிய சேவிகாக்கள் கிராமங்களுக்குச் செல்லும்போது கிராமத் தின்பால் அக்கறை உள்ள ஒரு பெரியவரிடத்திலே கையெழுத்து வாங்கி, அந்தக் கிராமத்திலே இத்தனை இடங்களுக்குப் போனேன், அந்தக் கிராமத்திலே இந்தக் குடும்பங்களிலே உள்ளே நுழைந்தேன் என்னுடைய சேவையைச் செய் தேன். சமையல் கலையைக் கற்றுக் கொடுத்தேன், தையல் கற்றுக் கொடுத் தேன், குழந்தைகளைக் குளிப்பாட்டினேன், தெருக் கூட்டினேன் இப்படி எல்லாம் அவர்கள் செய்ததை அங்கே உள்ள பெரியவர்களிடம் கையெழுத்து வாங்கி வரும் நிலை இருந்தால் அவர்கள் சேவை வீண்போகாது, ஏமாற்று வதற்கு இடம் இருக்காது. அவர்களுக்கு அளிக்கின்ற பணம் வீணாகாது என்பதை இந்த நேரத்தில் தாழ்மையோடு தெரிவித்துக் கொள்கிறேன்.



1980 ஜூலை 26] [திரு. சி. கணேசன்]

அதே நேரத்தில், சேவை இல்லங்கள் அமைத்து இருக்கிறார்கள். அந்தச் சேவை இல்லங்கள்—சேவைமனப்பான்மையோடு மனத்தைப் பக்குவப்படுத்திக் கொண்டு இருக்கின்ற இல்லங்களாக அமைத்திருக்கின்ற பெருமை இந்த அரசுக்கு இருக்கிறது என்பதை நான் பெருமையோடு சொல்லிக்கொள்கிறேன்.

மூன்று ஆண்டுகளில் கல்வி தருகிறார்கள். அதிலே ஓராண்டு தொழிற் பயிற்சி தருகிறார்கள். கல்வி மட்டும் போதாது. தொழிலும் தெரிந்து கொள்ளவேண்டும் என்ற பெரிய மனப்பான்மையோடு அவர்கள் செய்து கொண்டு இருக்கிறார்கள். இரண்டு ஆண்டு காலத்திலே பள்ளியினுடைய இறுதி ஆண்டு படிப்புத் தேர்விலே உட்கார்ந்து எழுதக்கூடிய வாய்ப்பு வசதியை அந்தச் சேவை இல்லங்கள் தருகின்றன என்று சொன்னால் தமிழ் நாட்டில் உள்ள அத்தனைப் பெண்களும் இது ஒரு தெய்வத்தின் குரலாகவே—புரட்சித் தலைவரின் அறிக்கை இருக்கிறது என்று சொல்வது போல் உள்ளது என் பதைத் தாழ்மையோடு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதிலே தங்குகின்றவர்களுக்கு உதவித் தொகையாக 50 ரூபாய் கொடுக்கி றார்கள். வருஷத்திற்கு ஆடைகள் வாங்குவதற்காக 60 ரூபாய் கொடுக்கிறார் கள். குழந்தைகளுக்கும் கொடுக்கிறார்கள். இங்கே தங்கி 5-வது வகுப்பு வரை அந்தக் குழந்தைகள் படிப்பதற்கும் வாய்ப்பு இருக்கிறது. அந்த அடிப் படையில் இந்த சேவை இல்லங்கள் இருக்கின்றன என்பதை நான் தாழ்மை யோடு சொல்லிக்கொள்கிறேன். இந்தச் சேவை இல்லங்களிலே, அனாதை ஆசிரமங்களிலே நியமிக்கப்படுகின்ற அதிகாரிகள், பொறுப்பு ஏற்கக்கூடிய அதிகாரிகள், பெருத்த, மெத்தனப் போக்கான, ஆடம்பர வாழ்வில் திளைத்த வர்களாக இல்லாமல், அந்த ஏழைகளின் நிலைகளை அறிந்தவர்களாக, அவர் கள் பண்புகளைத் தெரிந்தவர்களாக, பசியின் கஷ்டத்தை உணர்ந்தவர்களாக இருக்கவேண்டும். அப்படிப்பட்ட பணியாளர்கள் நியமிக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அப்போதுதான் அரசாங்கத்தின் திட்டத்தின் முழுப்பலனும் கிடைக்கும். அங்கே கிண்டலுக்கும், கேலிக்கும் அப்போது இடம் இருக்காது என்பதையும் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

குறிப்பாக, கடலோரப் பகுதிகளில் வாழும் பெண்கள் ஆயிரக்கணக்கில் வேலை இல்லாமல் இருக்கிறார்கள். புருஷன் கடலுக்குப் போனால், அவன் திரும்பி வருவது மாலையாகவும் இருக்கும், மறு நாள் காலையாகவும் இருக் கும். அந்தப் பெண்கள் அதுவரையில் எந்தவிதமான வேலையும் இல்லாமல் இருக்கிறார்கள். அந்த மீனவப் பெண்களுக்கும்—அனாதை ஆதரவு அற்றவர் களுக்கு உதவிடும் இந்தச் சர்க்கார்—வருமானம் பெறத்தக்க அளவிற்கு சமு

[திரு. சி. கணேசன்] [1980 ஜூலை 26

தாய நலத் திட்டத்தின் மூலம் அங்கேயும் போய் அவர்களைத் தொடுகிற அளவிற்கு திட்டங்களைப் போட்டுத் தரவேண்டும் என்று தாழ்மையோடு சொல்லிக்கொண்டு, இந்த மானியத்தை வரவேற்றுப் பேசுவதற்கு வாய்ப்பு அளித்ததற்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. கே. ஆர். சுந்தரம்.** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தின் முன் வைக்கப்பட்டுள்ள மானிய கோரிக்கைகள் மீது என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். முதன் முதலில் சமூக நல போர்டு என்பது சமுதாயத்திலே உள்ள வசதி படைத்தவர்களைக் கொண்ட ஒரு கமிட்டியாக இல்லாமல், ஏற்கெனவே பேசிய உறுப்பினர் கூறியதைப்போல், எந்த மக்களுக்கு வாழ்வளிப்பதற்காக அந்தக் கமிட்டி அமைக்கப்பட்டு இருக்கிறதோ அத்தகையவர்களுக்கு அந்தக் கமிட்டியில் இடம் கொடுத்து—அது மாநிலக் குழுவாக இருந்தாலும் சரி, மாவட்டக் குழுவாக இருந்தாலும் சரி—அந்த மக்கள் மீது அக்கறை கொண்ட ஒரு குழுவாக அது இயங்க வேண்டும் என்று நான் சொல்லிக் கொள்கிறேன்.

முதியோர்களுக்கான பென்ஷன் கொடுப்பதற்கு, ஏற்கனவே கொடுத்ததைக் கூட்டினாலும், இந்த ஆண்டிலே 3,000 பேருக்கு அதிகம் ஆக்கப்பட்டு இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த 3,000 என்பது 234 தொகுதிகளில் ஒரு தொகுதிக்கு எவ்வளவு என்று கணக்குப் பார்த்தால் 13 பேருக்குத்தான் அந்த முதியோர் தொகை அளிக்க முடியும். இது மிகமிக குறைவானது. ஆகவே, அந்த 3,000 என்பதை அதிகப்படுத்துவதன் மூலம் பல்லாயிரக்கணக்கான பேர்களுக்கு உதவி செய்யும் நிலைமையை ஏற்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இதேபோன்று, விவசாயத் தொழிலாளர்களுக்கு 60 வயது பூர்த்தியானவுடன் உதவித் தொகை கொடுப்பதாகச் சொன்னார்கள். குறிப்பாக, கேரளத்திலும், மேற்கு வங்கத்திலும் உழைக்கிற விவசாயிகள் ஆனாலும் சரி, ஏழை எளிய மக்களானாலும் சரி, அவர்களுக்குக் கொடுக்கப்படுகிறது. தமிழகத்திலும் அந்த முறை புகுத்தப்பட்டு இருப்பது வரவேற்கத்தக்கது. அந்தத் தொகையை 60 வயது பூர்த்தியானவுடன் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, விதவைகள்—வயதைப் பார்க்காமல் அவர்களுடைய வசதிக்கேற்றவகையில் மறுமணம் செய்து கொள்ளவில்லை என்றால் அத்தகைய பெண்களுக்கும் உடனடியாக அந்த உதவித் தொகை அளிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



1980 ஜூலை 26] [திரு. கே. ஆர். சுந்தரம்]

(முற்பகல் 11-40)

அதைப்போன்று குழந்தைகள் காப்பகங்கள் இருக்கின்றன. இன்றைக்கு இருக்கின்ற சூழ்நிலையில் இந்த குழந்தைகள் காப்பகங்களை நம்முடைய நாட்டில் அதிகமாக ஏற்படுத்தவேண்டும். எல்லாக் கிராமங்களிலும் இந்த காப்பகங்களை அமைக்க வேண்டும். கிராமங்களிலே இருக்கிற தாய்மார்கள் அன்றாடம் வேலை செய்தால்தான் பிழைக்க முடியும். அவர்கள் 3 வயது, 4 வயது, 5 வயது குழந்தைகளை வீட்டிலே விட்டுவிட்டு, வேலைக்குப் போகிறார்கள். அந்தக் குழந்தைகளுக்கு சத்துணவு கொடுப்பதற்கு, அந்த குழந்தைகள் படிப்பதற்கு அந்த தாய்மார்கள் கவனம் செலுத்த முடியவில்லை; வசதியும் இல்லை. ஆகவே, இதை ஒரு சமுதாயக் கடமையாக ஏற்று, அனைத்துக் கிராமங்களிலும் குழந்தைகள் காப்பகங்களை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது இந்த குழந்தைகள் காப்பகத்திலே பணியாற்றுகின்றவர்களுக்கு மாதம் 100 ரூபாய் சம்பளம் கொடுக்கிறார்கள். எஸ்.எஸ்.எல்.சி. படித்துவிட்டு வருகிற அவர்களுக்கு 100 ரூபாய் சம்பளம் போதவில்லை. அதனால் பல குறைபாடுகள் ஏற்படுவதாகச் சொல்லப்படுகிறது. ஆகவே, அவர்களுடைய ஊதியத்தை உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கிராமங்களில் பெண்களுக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்துவது பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. இந்த வேலை வாய்ப்பை அனைத்துக் கிராமங்களிலும் ஏற்படுத்த வேண்டும். குறிப்பாக என்னுடைய குடியாத்தம் தொகுதி மிகவும் பின்தங்கிய பகுதி, அங்கே அரிசன மக்களும் பிற்பட்ட மக்களும் அதிகம் இருக்கிறார்கள். வருடத்தில் அவர்களுக்கு 5, 6 மாதம் கூட விவசாய வேலை கிடைப்பதில்லை. மற்ற நாட்களில் விறகு பொறுக்கி, மற்ற கடினமான வேலைகளை செய்து வாழ்க்கை நடத்துகிறார்கள். அவர்களுக்கு எல்லாம் இத்தகைய வேலைவாய்ப்பு பெறுவதில் பயிற்சி அளிக்கவேண்டும். அது மட்டுமல்ல, வேலைவாய்ப்புக்கு உறுதியளிக்க வேண்டும். அந்தக் கிராமங்களில் இருக்கிற கூட்டுறவு சங்கங்களில், அவர்கள் உற்பத்தி செய்கிற பொருட்களை விற்பனை செய்வதற்கு அரசு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்றையும் நான் அறிகிறேன். தமிழ்நாட்டில் இத்தகைய பெண்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதற்காக வருடாவருடம் அங்காங்கே நடுகின்ற

மரங்களுக்கு தண்ணீர் ஊற்றுகின்ற வேலையை பெண்களுக்குக் கொடுப்பதாக சொல்கிறார்கள். ஆனால் அது சரியாக நடக்கவில்லை. அதை சரிவர நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போன்று நகரங்களில் பணி புரியும் பெண்களுக்கு பாதுகாப்பு இல்லங்கள் இருக்கின்றன. சென்னை மாநகரில் இத்தகைய பெண்கள் விடுதியில் 25 பேர்கள் தங்க மட்டும் இருப்பதாக சொல்லியிருக்கிறார்கள். இது போதுமானதல்ல. இலட்சக் கணக்கான மக்கள் வாழும் சென்னையில் இந்த 25 விடுதிகள் போதுமானதல்ல. அதுமட்டுமல்ல. இந்தத் துறையிலே நல்ல எண்ணம் படைத்தவர்கள், தனியார்கள் விடுதி நடத்துவதாகவும் சொல்லியிருக்கிறார்கள். தனியார் நடத்தும் விடுதிகள் 17 இருக்கின்றன. அவைகளை கட்டுவதற்கு ஆகும் செலவில் 75 சதவீதத்தை மத்திய சர்க்கார் மானியமாக கொடுக்கிறது; 15 சதவீதத்தை மாநில சர்க்கார் மானியமாகக் கொடுக்கிறது. ஆக, 90 சதவீதம் மானியமாகக் கொடுக்கப்படுகிறது. அப்படியானால் அதை ஏன் அரசாங்கமே நடத்தக்கூடாது? தனியார் நடத்துவதினால் அந்த பெண்களுக்கு போதுமான வசதிகளும் அவர்கள் செய்து கொடுப்பது கிடையாது; சரியான பாதுகாப்பும் இல்லை; போலீஸ் கண்காணிப்பது மாதிரி அவர்களுக்கு கடிதங்கள் வந்தால் பிரித்து பார்ப்பது, டெலிபோன் வந்தால் ஒட்டுக் கேட்பது போன்ற வேலைகள் எல்லாம் அங்கே நடக்கின்றன. இந்த முறை அகற்றப்பட வேண்டும். ஒவ்வொரு மாவட்டத்தின் தலைநகரிலும் இதைப்போன்ற பெண்கள் தங்கும் விடுதி கட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போன்று மகளிர் மன்றங்கள் ஏற்படுத்துவது பற்றிச் சொல்லி இருக்கிறார்கள். பெண்கள் சத்துணவு கொடுப்பது எப்படி, வேலைவாய்ப்பை பெருக்குவது எப்படி என்று சொல்லிக்கொடுக்க மகளிர் மன்றம் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அது வரவேற்கத்தக்கது. 1978-ல் 12,356 மகளிர் மன்றங்கள் இருந்ததாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இந்த ஆண்டு 1980-ல் 11,230 தான் இருக்கிறது. 1,000 மகளிர் மன்றங்கள் இல்லை. ஏன் 1,000 மன்றங்கள் இயங்கவில்லை? இந்த மகளிர் மன்றங்களுக்கு 1977-78-லிருந்து இன்று வரையில் 4,000 ரூபாய்தான் மானியம் கொடுக்கிறார்கள். 1978-ல் 4.000 ரூபாய். இப்போதும் 4,000 ரூபாய் என்றால் இத்தகைய மன்றங்களை நடத்த ஊக்குவிக்கும் வகையில் ஒதுக்கப்படுகின்ற பணம் போதுமானதாக இல்லை. அதனால் செயல்படுத்துவதில் ஆர்வம் காட்டவில்லை. அந்த மன்றங்களை செயல்படுத்த வேண்டும். எல்லாப் பகுதி மக்களும் பலனடையும் வகையில் விஸ்தரிக்க வேண்டும்; அதற்கு ஏற்ற வகையில் மானியத்தை அதிகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

அடுத்தபடியாக, இந்த கால்நடை பராமரிப்புத் துறையிலே முக்கியமாக புதிய திட்டங்களைத் தொடங்கி இருக்கிறார்கள்; கேந்திர கிராம திட்டத்தைத் தொடங்கியிருக்கிறார்கள். கேந்திர கிராமத் திட்டம் என்று சொல்லுகிறபோது அங்கே அதிகாரிகள்தான் இருக்கிறார்கள். ஜிப் இருக்கிறது. ஆனால் அவர்களுக்கு கீழே பணியாற்றுகின்ற ஊழியர்கள் இல்லை. குறிப்பாக மதுரை மாவட்டத்தில் தேனி, சிவகங்கை கிராமங்களில் கேந்திர கிராமத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு இரண்டாண்டுகள் ஆன பிறகும் ஊழியர்கள் இல்லை.

ஆகவே அங்கெல்லாம் அதிகாரிகள்தான் இருக்கின்றார்களே தவிர போதிய ஊழியர்கள் இல்லை. ஆகையால் திட்டங்களைச் சரியாக அமல்படுத்த முடியவில்லை. ஆகவே அங்கே நல்ல முறையில் திட்டங்களை அமல்படுத்துவதற்குரிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் கால்நடைச் செல்வம், மிக முக்கியமானதொரு செல்வமாகும். அந்தச் செல்வம் பல பகுதிகளிலே பாதுகாக்கப்படாமல் இருக்கின்றது. அதைப் பாதுகாப்பதற்கு எல்லா கிராமங்களிலும் குறிப்பாக ஒவ்வொரு பஞ்சாயத்திலும் கால்நடை ஆஸ்பத்திரிகளின் பல்வேறு கிளைகள் இருக்கின்றன. குறிப்பாக கன்னியாகுமரி மாவட்டத்தில் விளவங்கோடு தாலுகாவில் மேக்காடு என்னும் இடத்தில் சப் சென்டர் வேண்டும் என்று கேட்கிறார்கள். அதுமட்டுமல்ல மெதுமல்லி மேய்காடு என்ற இடத்தில் கிராம மக்கள் இடம் வாங்கிக் கொடுத்துள்ளார்கள். ஆகவே, அங்கு ஒரு சென்டர் ஆரம்பிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து வாசுதேவநல்லூர் சென்டர் சிந்தாமணியில் உள்ளது. வாசுதேவநல்லூரிலிருந்து சிந்தாமணி 8 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கின்றது. ஆகவே மீண்டும் அங்கேயே சென்டர் ஏற்படுத்துவது நல்லதல்ல. ஆகவே வாசுதேவநல்லூரிலேயே ஒரு சென்டர் ஏற்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். மேலும் அங்கே போதிய கட்டிட வசதிகள் இல்லை, ஆகவே கட்டிட வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சிந்தாமணியில் சென்டர் இருப்பதால் விவசாயிகளும் மாடுகளும் 8 மைல் தூரம் 10 மைல் தூரம் என்று செல்ல வேண்டி இருக்கின்றது. இது மிகவும் சிரமமாக இருக்கின்றது.

அடுத்து விக்கிரமசிங்கபுரம் மிகப்பெரிய நகரம். ஆகவே அங்கே ஒரு கால்நடை ஆஸ்பத்திரி திறக்கவேண்டும். சங்கரன்கோவில் ஒன்றியத்தில் ரெட்டியாபட்டி என்ற இடத்திலே ஒரு மருந்தகம் ஆரம்பிக்க வேண்டும்.

அடுத்து கிராமப்புறங்களில் ஏற்கெனவே இருந்து வந்த 450 சென்டர்கள் பல ஆண்டுகளாக மூடப்பட்டிருக்கின்றன. தமிழகம் முழுவதும் உள்ள 450 சென்டர்கள் போதிய ஊழியர்கள் இல்லாத காரணத்தாலே மூடப்பட்டிருக்கின்றன. அவற்றை மீண்டும் திறப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். அப்போதுதான் கிராமப்புறங்களிலே இருக்கின்ற கால்நடை செல்வத்தைப் பாதுகாக்க முடியும். ஆகவே அரசு உடனடியாக இதற்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து கால்நடை வளர்ப்பு முறை பற்றி அறிக்கையிலே சொல்லி இருக்கிறார்கள். விவசாயிகள் பழைய முறையிலே கால்நடைகளை வளர்ப்பதில் அக்கறை கொள்கிறார்களே தவிர புதிய முறையிலே புதிய இனங்களை உற்பத்தி செய்யவேண்டும் என்பதிலே அவர்கள் ஆர்வம் காட்டவில்லை என்று சொல்லப்பட்டிருக்கின்றது. புதிய முறையிலே பல புதிய இனங்களை உற்பத்தி செய்கின்ற வகையிலே விவசாயிகளுக்கு ஆர்வம் ஊட்டுகின்ற முறையிலே அவர்களுக்கு எடுத்துச் சொல்வதற்கு பரந்த அடிப்படையிலே ஒரு பிரச்சாரம் செய்தால் கூட நலமாக இருக்கும். அப்படிச் செய்தால் தான் புதிய இனவிருத்தியைச் செய்ய முடியும். ஆகவே அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து நம்முடைய கால்நடை மருத்துவமனைகளில் போதிய மருந்துகள் இல்லை. ஆகவே ஆஸ்பத்திரிக்கு மாடுகளை அழைத்துச் செல்கின்றபோது எங்களிடம் மருந்து இல்லை, ஆகவே வெளியே வாங்கிக்கொள்ளுங்கள் என்று எழுதிக் கொடுக்கிறார்கள். வெளியே போய்க் கேட்டாலும் அந்த மருந்துகள் கிடைப்பதில்லை. கடைகளிலும் அவை கிடைப்பதில்லை. அப்படியே கடைகளிலே கிடைத்தாலும் 15 ரூபாய், 20 ரூபாய், 30 ரூபாய் என்று கொடுத்து வாங்குகின்ற நிலைமையிலே அவர்கள் இல்லை. ஆகவே எல்லா மருந்தகங்களிலும் கால்நடைகளுக்கு வேண்டிய மருந்துகள் கிடைக்கின்ற அளவிலே அரசாங்கம் ஏற்பாடு செய்யவேண்டும்.

அடுத்து மருந்து உற்பத்தியைப் பற்றிச் சொல்லி இருக்கிறார்கள். ராணிப்பேட்டையிலே மருந்து உற்பத்தி ஆகின்றது, அது போதுமான அளவுக்கு இருக்கின்றது என்று அண்டை மாநிலங்களுக்குக் கூட கொடுப்பதாகவும் சொல்லப்பட்டிருக்கின்றது அறிக்கையிலே. அது சரியானதல்ல. இங்கே நம்முடைய தமிழகத்திற்கே வேண்டிய மருந்துகள் கிடைக்காததால் வெக்கை நோய் கண்டு மாடுகள் இறந்திருக்கின்றன. அவற்றிற்கே போதிய சிகிச்சை அளிக்க முடியாத நிலைமை இருக்கின்றது இப்படிப்பட்ட நிலைமை பல பகுதி



களிலே இருக்கின்றன. நம்முடைய உதவிச் சபாநாயகர் அவர்களுடைய தொகுதியிலே கூட இந்த நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. ஆகவே பல மாடுகள் இறந்து விடுகின்ற சூழ்நிலை இருக்கின்றது. எப்படி இரண்டு பஞ்சாயத்துக்களுக்கு ஒன்று என்ற நிலையிலேயாவது மொபைல் வேன் ஏற்படுத்தி மருத்துவத்துறையிலே மருந்துகள் வழங்கப்படுகின்றதோ அதேபோன்று மொபைல் கால் நடை மருந்தகங்களையும் ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அவ்வாறு ஏற்படுத்தி அவை கிராமங்களுக்கு நேரடியாகச் சென்று மருந்துகளை அளிக்கின்ற முறையினை ஏற்படுத்த வேண்டும்.

(முற்பகல் 11-50)

அடுத்து தமிழகம் முழுவதும் உள்ள கால்நடை செல்வத்தை இன்ஷ்யூர் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏற்கெனவே பணம் கடன் வழங்குகிற மாடுகளுக்கு இன்ஷ்யூர் செய்கிற வழக்கம் இருக்கிறது. அது போலவே தமிழகத்தில் இருக்கிற எல்லா கால்நடைகளுக்கும் இன்ஷ்யூர் செய்கிற வழக்கத்தை அரசாங்கம் ஏற்படுத்த வேண்டும். அதனால் ஆயிரம், இரண்டாயிரம் ரூபாய் கொடுத்து வாங்குகிற மாடுகள் நோய் கண்டு இறந்து விட்டால் ஏழை எளிய மக்கள் வாழ வழி இல்லாமல் திண்டாடுகிற நிலை மாற்றப்பட வேண்டும் என்று சொல்லி, அதற்காக இன்ஷ்யூர் செய்கிற திட்டத்தை எல்லா கால்நடைகளுக்கும் அமுல் படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து கால்நடை கண்காட்சிகளை நடத்துகிறீர்கள். விவசாயிகளுக்கு உற்சாகம் அளிக்கும் வகையில் நடத்துகிற இந்தக் கண்காட்சியில் ஏழை எளிய விவசாயிகளும் பரிசு பெறும் வண்ணம் ஏற்பாடு செய்ய வேண்டும். எப்போதும் பெரிய பண்ணையார்களும், மிராசுதாரர்களுமே பரிசு பெறுகிறார்கள். எப்போதும் திண்டுக்கல் அங்குவிலாஸகாரர்கள்தாம் இந்தப் பரிசை பெறுகிறார்கள். அதற்காக அவர்களை குறை கூறவில்லை. சாதாரண ஏழை எளிய விவசாயிகளுக்கு உற்சாகம் ஊட்ட, அவர்களுக்கும் பரிசளிக்க வேண்டிய முறைகளை ஏற்படுத்த வேண்டும். அதேமாதிரி ஏதோ ஒன்றிரண்டு இடங்களில் மட்டும் இத்தகைய கண்காட்சியை ஏற்படுத்தாமல், ஒரு பொங்கல் விழா, பண்டிகை கொண்டாட்டக் காலங்களில் எல்லா மாவட்டங்களிலும் இத்தகைய கண்காட்சிகளை அமைத்து, ஆங்காங்குள்ள சிறப்பான மாடுகளுக்கு பரிசு வழங்கும்படி ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கால்நடைகளுக்கு செயற்கை முறையில் கருத்தரிப்பதற்கான மருந்து தருவதில் ஊசிக்கு ஒரு ரூபாய் என்று வைத்திருக்கிறார்கள். அது தவறு. அதை இலவசமாகவே வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும். அதுவு

(திரு. கே. ஆர். சுந்தரம்) [1980 ஜூலை 26

மல்லாமல், கால்நடை செயற்கை இனவிருத்தி நிலையங்களில் 10, 12 ஆண்டுகளாக ஒரே காளையிடம் திரும்பத் திரும்ப வித்துவை எடுப்பதால் அதன் தரம் குறைந்து சரியாக சினை ஆவதில்லை. ஆகையினால் ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை காளைகளை மாற்ற வேண்டிய முறையை அதிகாரிகள் கடைபிடிக்க வேண்டும். அந்த முறை கடைபிடிக்காத காரணத்தினால், செயற்கை முறை விருத்தியில் மக்கள் நம்பிக்கை குறைந்து திட்டமே பாழ் ஆகிவிடும். எனவே புதிய காளைகளை இதற்காக கொண்டு வர ஏற்பாடு செய்ய வேண்டும்.

வித்தின் தரம் சரியாக இல்லாததினால், இரண்டு மூன்று தடவைகள் ஊசி ஏற்ற வேண்டியிருக்கிறது. அந்த நிலையை மாற்றுவதற்கு, வித்துவை உறை வித்தாக்கி பத்து ஆண்டுகள்கூட வைத்திருக்கலாம் என கண்டுபிடித்திருக்கிறார்கள். அந்த முறையை கடைபிடித்து நாடு முழுவதும் அமுலாக்கினால், காளைகளை வைத்து பராமரிக்கும் செலவும் குறையும். அதிகமான அளவில் கால்நடை செல்வங்களை உற்பத்தி செய்ய முடியும். இந்த முறை இப்போது வட ஆற்காடு, ஆரணி போன்ற இடங்களில் இருப்பதாகத் தெரிகிறது. அதை எல்லா இடங்களுக்கும் அமுல் படுத்த ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் சமூக நலத் துறையினை எடுத்துக்கொண்டால், விதவைகளுக்கு மறுவாழ்வு அளிக்கும் வகையில் அவர்களுக்கு கொடுக்கப்பெறும் உதவித் தொகையினை விரைந்து அளித்திட ஏற்பாடு செய்ய வேண்டும். குழந்தைகள் காப்பகங்களை அதிகப்படுத்தி எல்லா இடங்களிலும் விரிவு படுத்த ஏற்பாடு செய்ய வேண்டும். கிராமத் தொழிலை வளர்ப்பதற்கு கிராமங்களில் தொழில் பயிற்சிப் பள்ளிகளை அதிகரிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். எனக்கு வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி அமர்கிறேன். வணக்கம்.

**திரு. சி. சிவப்பிரகாசம்** : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, 1980-81 ஆம் ஆண்டுக்கான கால்நடை சமூக நலன் ஆகிய மானிய கோரிக்கை எண் 22, 30 ஆகியவைகளில் பேச வாய்ப்பளித்த பேரவைத் தலைவருக்கு நன்றியினைக் கூறி என்னுடைய கருத்துக்களைக் கூறுகிறேன்.

தமிழகத்தில் புரட்சித் தலைவரின் அரசால் வெண்மை புரட்சியினை ஏற்படுத்துவதன் மூலம் இன்று தமிழகத்தில் பால் பற்றாக்குறை இல்லாமலும், கோழிமுட்டை பற்றாக்குறை இல்லாமலும், வெளி மார்க்கெட்டிற்கு அனுப்பும் வகையில் கால்நடைத் துறையின் மூலம் முன்னேற்றமடைந்துள்ளது. நாமக்கல் பகுதியில் கோழிப் பண்ணைகள் வளர்ந்துள்ளதால்



1980 ஜூலை 26] [திரு. சி. சிவப்பிரகாசம்]

வேலையில்லாத் திண்டாட்டம் நீங்கி உள்ளது. இன்றைய நிலையில் மிகவும் விரைவாக முட்டையை வெளிநாட்டுக்கு அனுப்பினால்தான் வளர்ந்து வரும் கோழிமுட்டை உற்பத்தியாளர்களுக்கு நன்மை செய்ய முடியக்கூடிய நிலை உள்ளது. ஆகவே அவர்களுக்கு தீவனத்தின் விலையை குறைத்தும், கோழி முட்டையின் விலையை அதிகரிப்பதன் மூலமும், சிறு விவசாயிகள் முன்னேற வழி வகை செய்ய இயலும். இல்லையெனில் மிகுந்த நஷ்டமடைய வாய்ப்பு உள்ளது. ஆகவே அரசு அதுபற்றி உடனடியாக பரிசீலனை செய்து ஆவன செய்ய வேண்டுகிறேன்.

குறைந்த பட்ச மனைக் கட்டணச் சலுகை கோழி வளர்ப்புப் பண்ணைகளுக்கு தொடர்ந்து நீட்டிக்கப்படுவது வரவேற்கத் தக்கது. கால்நடை பராமரிப்புத் திட்டத்தின் கீழ் காப்புறுதி திட்டம், கோழி வளர்ப்பு பண்ணைகளுக்கும் அளிக்கப்படுகின்றன. அதையும் வரவேற்கிறேன்.

கால்நடைத் துறையின் மூலம் சிறப்பான முறையில் பண்ணை அமைத்து அந்த பண்ணையில் வேலையற்ற ஏழைகளுக்கு வேலை கொடுக்க அரசு ஆவன செய்ய வேண்டும். புதிய ரக தீவனம் உற்பத்தி செய்து கால்நடை வளர்ப்புக்கு உதவி செய்ய வேண்டும்.

கோழி தீவனத்தின் விலை உயர்ந்தும், கோழி முட்டையின் விலை தாழ்ந்தும் வருவதினால் கோழிப் பண்ணையார்களிடம் மிகுந்த அதிருப்தி உருவாகி வருகிறது. அதை நீக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன். வேலையற்ற பட்டதாரிகளுக்கு கால்நடை பண்ணை உருவாக்கி கொடுத்து பால் வளத்தை பெருக்க அரசு உதவி செய்ய வேண்டுகிறேன்.

வெள்ளை பன்றி இன விருத்தியை மேலும் மேலும் பெருக்கவும் பெருக்கத்தை செய்பவர்களை ஊக்குவிக்கவும் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோல் செம்மறி ஆடு வளர்ப்பு பெருக்கத்திற்கு அரசு நிதி உதவி செய்ய முன் வரவேண்டும்.

அரிஜன ஆதிவாசி மக்களுக்கு கால்நடை வளர்ப்புக்கும், கோழி வளர்ப்புக்கும், பன்றி வளர்ப்புக்கும், ஆடு வளர்ப்புக்கும் சிறப்பான திட்டத்தை அரசு செயல்படுத்தி அவர்களின் பொருளாதார நிலையை உயர்த்த ஆவன செய்ய வேண்டும். நாமக்கல் பகுதியில் கோழி முட்டை, பால்பவுடர் தொழிற்சாலையை ஏற்படுத்த அரசு ஆவன செய்ய முன் வரவேண்டும்.

என்னுடைய தொகுதியில் போகுறிச்சி, மூன்றுக் குறிச்சி, மங்களபுரம் ஆகிய பகுதியில் கால்நடை மருத்துவ மனையை ஏற்படுத்த அரசு ஆவன செய்ய வேண்டுகிறேன்.

உயர்ந்த ரக வெளிநாட்டு காளைகளான பிரீஇன், சிந்தி, ரெட்டேன், ப்ரவுன் ஸ்வுஸ், ஜெர்சி போன்ற காளைகளை வெளிநாட்டிலிருந்து வாங்கி அதன் மூலம் நம் நாட்டில் பால் உற்பத்தி பெருக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். கால்நடை மருந்தகங்களில் உடனுக்குடன் பொது மக்களின் குறைகளை நீர்க்கவும் ஆவன செய்ய வேண்டும் என்று வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

கால்நடை மருத்துவர்களுக்கு வேலைவாய்ப்பளிக்க உயர்ந்த ரக கால் நடை வளர்ப்பு நிலையங்களை பல இடங்களில் நிறுவி பால் வளத்தைப் பெருக்கவும், ஊராட்சி ஒன்றியங்களில் ஈ.ஓ.எச். ஆக பட்டதாரி கால்நடை மருத்துவர்களை நியமிக்க அரசு ஆவன செய்ய வேண்டுகிறேன். கிளை நிலையங்கள் அமைத்து கால்நடை வளத்தைப் பெருக்க நடவடிக்கை எடுக்க ஆவன செய்ய வேண்டுகிறேன்.

இன்று தமிழ்நாட்டில் சமூக நலத் துறையில் பல்வேறு புதிய திட்டங்கள் அறிமுகப்படுத்தியும், செயல்படுத்தியும் வருவதை வரவேற்கிறேன்.

சமூக நலத் துறையின் மூலம் இன்று நாட்டில் பல்வேறு முறையில் புதிய வழிமுறைகளில் செயல்திட்டத்தை புதிய செயல் வேகத்தில் உருவாக்கினால் தான் வளர்ந்து வரும் சமுதாய நாட்டில் நல்ல முன்னேற்றத்தைக் காண முடியும். சமூக நலத்துறை மூலம் நாட்டில் பல்வேறு நல்லதிட்டங்களை உருவாக்கிக் கொண்டுவருகிற வேலையில் நாமும் சமுதாய நிலையையும் பொருளாதார நிலையையும் மனதில் கொண்டு நல்ல சமுதாயத்தை உருவாக்கப் பாடுபட வேண்டும்.

மகளிர் மன்றத்தின் மூலம் நாட்டிலுள்ள விதவைப் பெண்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்த முயற்சிக்கவும் ஏழைக் குழந்தைகள் நலனில் அரசு அக்கறை கொண்டு விரிவான புதிய திட்டத்தை உருவாக்க வேண்டும் என்றும் கலப்புமண தம்பதிகளுக்கு பரிசு அளிப்பதுடன் வேலைவாய்ப்பு அளிப்பதில் முன்னுரிமை வழங்க ஒரு குறிப்பிட்ட சதவீதத்தை ஒதுக்க அரசு ஆவன செய்ய வேண்டும். சமுதாயத்தில் அவர்களுக்கு தகுந்த பாதுகாப்பு நடவடிக்கையினை ஏற்படுத்தியும் கொடுக்க வேண்டும்.

ஏழைப் பெண்களுக்கு பிரசவ கால ஊதியம் வழங்கவும் ஊட்ட சத்துணவு வழங்கவும் ஆவன செய்வதை வரவேற்கிறேன்.





பிச்சைக்காரர் மறு வாழ்வு இல்லங்கள் அமைப்பதன் மூலம் அவர்களுக்கு அங்கு கைத்தொழில் வேலையைப் பழக்கி முன்னேற்றம் அடையச் செய்ய வேண்டும்.

வாழ்க்கையில் ஒதுக்கப்பட்ட பெண்களுக்கு மறுவாழ்வு அளிக்கவும் அவர்களின் வாழ்வு முன்னேற்றம் அடையவும் நல்ல திட்டத்தை வகுக்கவேண்டும்.

ஹரிஜன ஆதிவாசி பெண்கள் வாழ்க்கைத்தரம் உயர சுகாதார முறைகளையும் நவீன நாகரீகத்தையும் கற்றுக்கொடுக்க படித்த பெண்களைக் கொண்டும் சமூக நலமன்றத்தின் மூலம் ஆவன செய்யவேண்டும் என்றும் குழந்தைகள் காப்பகத்தின்மூலம் குழந்தைகளை சிறந்தமுறையில் வளர்க்க ஆவன செய்ய வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

முதியோர் உதவித் தொகை வழங்கும் திட்டத்தின் மூலம் விண்ணப்பித்துள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட முதியோர் அனைவருக்கும் உடனடியாக உதவித் தொகை வழங்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

ஊனமுற்றவர்களுக்கு பெட்டிக்கடை வைத்துக்கொள்ள ரூ. 1000 வழங்குவதை வரவேற்பதுடன் ஓரளவு முடிந்த உடல் ஊனமுற்றோருக்கு வேலை வாய்ப்பில் குறிப்பிட்ட சதவிகிதத்தை ஒதுக்கவேண்டும்.

மலைவாழ் மக்களின் குழந்தைகள் நலம் சிறப்பாக இருக்க சிறந்த சேவை புரிகின்றவர்களை குழந்தைகள் காப்பாளராக நியமிக்க வேண்டியும் அவர்கள் சிறந்த சேவை புரிய அரசு புதிய திட்டத்தை உருவாக்கவேண்டும் என்றும், பாலர் பள்ளிகளில் குழந்தைகளுக்கு உணவு வழங்குவதே இல்லை என்றிருப்பதை கண்டறிந்து தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் வறுமையில் வாடும் ஏழை தாய்மார்களுக்கும் பெண்களுக்கும் நல்வாழ்வு அளிக்க புதிய திட்டத்தை உருவாக்க வேண்டும் என்றும் அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

(நண்பகல் 12-00)

மகளிர் நல பணியாளராக உள்ளவர்கள் சிறந்த சேவை புரிய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும், தாய் தந்தையர்களை இழந்த இளம் பெண்களுக்கு மறு வாழ்வளிக்க அரசு புதிய திட்டத்தை உருவாக்க வேண்டுமென்றும், பொருளாதார நிலையில் நலிந்த பெண்களுக்குத் தனியாக கூட்டுறவு சங்கங்களின் மூலம், கடனுதவியும், தொழிற் பயிற்சியும் கொடுத்து கூட்டுறவு முறையில் நல்ல கைத்தொழிலை வளர்க்கவும் நடவடிக்கை எடுக்க ஆவன செய்ய வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

பர்மா, ஸ்ரீலங்காவிலிருந்து தாயகம் திரும்பும் அகதிகளுக்கு சிறப்பான வாழ்வளிக்க அரசு தீவிரமான திட்டமொன்றை உருவாக்கி ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியிலுள்ள புதுசத்திரம், சேந்தமங்கலம், நாமகிரிப்பேட்டை, கொல்லிமலை ஒன்றியங்களில் வறுமையால் வாடும் பெண்களுக்கு நல்லதொரு திட்டத்தை உருவாக்க அரசு ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, சமூக நலத்துறை மானியத்தின் மீது பேசுவதற்கு வாய்ப்பு தந்தமைக்கு நன்றி கூறி அமர்கிறேன். நன்றி.

திரு. ஜி. மூர்த்தி : மாண்புமிகு பேரவைத் மாற்றுத் தலைவர் அவர்களே, சமுதாயத்திலே மிகவும் முக்கியமாகக் கருதப்படுகின்ற சமூக நல மானியத்தின் மீது பேசுகின்ற வாய்ப்பு தந்தமைக்கு நான் முதற்கண் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். எல்லா அரசியல் கட்சிகளும், சமுதாய மாற்றத்தையும் சமுதாய முன்னேற்றத்திலும் அக்கறை காட்டிக் கொண்டிருக்கின்றன. அதைத் தங்களுடைய கொள்கையாக எல்லா அரசியல் கட்சிகளும் ஏற்றுக்கொண்டிருக் கின்றன. அப்பேர்ப்பட்ட சமுதாய மாற்றத்தையும், அதன் முக்கியத்தையும் ஏற்றுக்கொண்டிருக்கின்ற இந்த மானிய கோரிக்கையிலே அக்கறை கொண் டுள்ள பல கட்சிகள் இங்கே இல்லாமல் இருப்பது நாம் வருந்தக்கூடிய ஒன் றாகும். அவர்கள் இந்த சமுதாய மாற்றத்திலே கொண்டிருக்கின்ற அக் கறையை இது எடுத்துக்காட்டிக் கொண்டிருக்கிறது. சமுதாய மாற்றத்தையும், முன்னேற்றத்தையும் ஏற்றுக் கொண்டிருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகமும், காங்கிரஸ் கட்சியும் நாட்டு மக்களுக்குச் சொல்கிறபோது, இதைப் பற்றிப் பேசுகின்றபோது, இதை ஒரு பிரசாரமாக எடுத்துக் கொள்கிறார்கள். ஆனால், இந்த மானியத்திலே, அதைப்பற்றி பேசுகின்ற காலகட்டத்திலே அவர்கள் இந்த சமுதாய மக்கள்மீது வைத்திருக்கின்ற அக்கறையை, இன் றைக்கு வெளிநடப்பு செய்ததன்மூலம், இந்த சமுதாய மக்கள்மீது அவர்கள் எவ்வளவு பற்றும், பாசமும் வைத்திருக்கிறார்கள் என்பதை இன்றைக்கு இந்த நாடு உணரும் என்பதை நான் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு இந்த சமுதாய மாற்றம் மூலம் இந்த நாடு முன்னேறியாக வேண்டும் என்று சொல்லப்படுகிறது. ஆனால், சாதாரண 10 வயது மாணவன் பள்ளிக்குச் செல்ல முடியவில்லை. காரணம், வீட்டில் அவனுடன் பிறந்த 3, 4 குழந்தைகளை அவன் காப்பாற்ற வேண்டியிருக்கிறது. அதற்காக அவன் பீடி சுற்றும் தொழிலுக்குச் செல்கிறான்; அல்லது தோல் பதனிடும் தொழிலுக்குச் செல்கிறான் அல்லது கூலி வேலைக்குச் செல்கிறான். எனவே, கல்வி கற்கும் வாய்ப்பு இல்லாமல் போய்விடுகின்றது. அதற்காக வேண்டி



இன்றைக்கு பரவலாக தாய் சேய் நல விடுதிகள் இருக்கின்றன. இதை குறிப்பாக பஞ்சாயத்து அளவில் விரிவுபடுத்தி, இதுபோன்ற ஏழைஎளிய மக்கள், வேலைக்குச் செல்லுகின்றவர்கள் தங்களுடைய பிள்ளைகள் பள்ளிக் குச் செல்வதற்கு வாய்ப்பளிக்க வேண்டும். ஆகவே, இத்திட்டத்தை ஒவ் வொரு பஞ்சாயத்து அளவிலும் ஏற்படுத்தியாக வேண்டும்.

அது மாத்திரமல்ல. இன்றைக்கு அவர்கள் கல்வியிலே மிகவும் பின்தங்கி இருக்கிறார்கள். அவர்களுக்கு சத்துணவு கிடையாது. அதாவது அவர் களுக்கு மதிய உணவு இருந்தால், தெளிவாக கல்வியைக் கற்க முடியும். அத னால், இந்த சத்துணவுத் திட்டத்தை மிகவும் சிறப்பான முறையிலே அளிக்க வேண்டும். காரணம், அதனால் அவர்கள் பள்ளிக்குச் செல்ல முடியாமல் இருக்கிறது. அதனால், இந்தச் சிறுவர்கள் அடிமைகளாக, கொத்தடிமைக ளாக சென்று விடுகிறார்கள். இதனால், வருங்காலத்திலே ஒரு குற்ற பரம் பரையை நாம் உருவாக்குகின்ற மிகப் பெரிய குற்றத்திற்கு ஆளாகிறோம். அதனால், அதைத் தடுத்து நிறுத்த கிராமங்களிலே, பஞ்சாயத்து ஒன்றியங் களிலே இத்தகைய தாய் சேய் நல விடுதிகளை விரிவுபடுத்தி அவர்களுக்கு வசதி செய்தாக வேண்டும்.

அது மாத்திரமல்ல. கைம்பெண்களாக பலர் ஆகிவிடுகிறார்கள். விபத் தினாலே சிலர் கைம்பெண்களாகி விடுகிறார்கள்; இன்னும் சிலர் இயற்கை யினால் கைம்பெண்களாகி விடுகிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலை இருக் கின்றபோது, அந்தக் கைம்பெண்களைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பை அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டும். அப்படி இல்லாமற்போனால் சமு தாயத்திலே ஒழுக்கச் சீர்கேடுகள் உருவாவதற்கு வழி ஏற்படும். கைம் பெண்களாவது அவர்கள் குற்றமில்லை. இயற்கையிலே சிலர் கைம் பெண்களாகி விடுகிறார்கள். அவர்களுக்கு நாம் உடனடியாக நிவாரணம் அளிக்கவேண்டும். இந்த நிவாரணத் தொகை அதிகமாக இருக்கவேண்டும். அப்படி அளித்து, அவர்கள் ஒரு செம்மையான வாழ்க்கை வாழ்வதற்கு அர சாங்கம் வழிவகை செய்யவேண்டும்.

தாய்சேய் நல விடுதிகளிலே அனாதைகள் நிறைய பேர்கள் இருக்கிறார்கள். இன்றைக்கு அனாதைப் பிள்ளைகளைப் பராமரிக்காத எந்த அரசாங்கமும் குற்றப் பரம்பரையைத்தான் அதிகமாக உற்பத்தி செய்யும். கேட்பாறற்றுக் கிடக்கும் அந்தக் குழந்தைகளைக் கவனித்து அவர்களுக்கு கல்வி, தொழில் கொடுக்காவிட்டால் அவர்கள் கடைசியில் திருட்டுத் தொழிலைச் செய்யவும், கொலைக் குற்றம் வரை போகிற அளவுக்குக் கூட அந்த மக்கள் சென்றுவிடக்

கூடிய நிலைமை ஏற்படும். அனாதைக் குழந்தைகள் யாராக இருந்தாலும் அந்தக் குழந்தைகளுக்கு வேலை செய்யக்கூடிய சக்தி வரும் வரை அரசாங்கமே அவர்களை வளர்க்கும் பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

கிராமப் புறங்களிலே தாழ்த்தப்பட்ட மக்கள் வாழ்கிற பகுதிகளிலே இது போன்ற சேவா சங்கங்கள் இருக்கின்றனவா என்பதையே தெரிந்து கொள்ள முடியாத அளவுக்கு மக்கள் தெளிவு பெறாத நிலைதான் இருந்து கொண்டிருக்கிறது. கிராம சேவகிகள் என்று அழகாகப் பெயர் வைத்திருக்கிறார்கள். எத்தனை முறை அவர்கள் கிராமங்களுக்கு வருகிறார்கள் என்று தெரியவில்லை. அவர்கள் சேவை செய்கிற இடமெல்லாம் பஞ்சாயத்து போர்டு தலைவர் வீட்டிலே இருக்கிறது. கிராமத்தில் இருக்கும் எல்லா மக்களும் பல வகைகளிலும் பயன்பெறக்கூடிய வகையில் சிறப்பான பயிற்சி பெற்ற கிராம சேவகிகளை கிராமத்தில் போடவேண்டும். அவர்கள் அரசின் திட்டங்களைப் பற்றி எடுத்துச் சொல்ல வேண்டும், இரண்டு நாள் தையல் மெஷினில் தைத்தல், இரண்டு நாள் கூடை பின்னுதல், இரண்டு நாள் சிறு தொழில் என்று பிரித்து கிராமப் பகுதியில் உள்ளவர்களுக்குப் பயிற்சி தரவேண்டும்.

வயலிலே நாற்று நடச் செல்லுகிற தாய்மார்களும், கூலி வேலை செய்யச் செல்லுகிற தாய்மார்களுக்கு தங்கள் பிள்ளைகளைத் தெருவிலே விட்டுச் செல்லுகிறார்கள். அந்தக் குழந்தைகள் எல்லாம் நல்ல முறையில் வளர்க்கப்படவும், கல்வி பெறவும், தொழில் கற்றுக் கொள்ளவும் கிராம சேவகிகள், அதிகாரிகள் சேவை செய்யவேண்டுமென்ற நோக்கத்துடன் நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளவேண்டும். கிராம சேவகிகள் இவர்களை எல்லாம் சரியாகக் கவனிக்காததைப் பார்க்கும்போது இவர்களுக்குக் கூட சாதி வித்தியாசம் இருக்குமோ என்ற ஐயம் ஏற்படுகிறது.

இந்தத் துறை இந்தத் தாழ்த்தப்பட்ட சமுதாயத்திற்கு மிகவும் தேவையான துறை. கைம்பெண்களைக் காப்பாற்றியாக வேண்டும். உடல் ஊனமுற்றவர்களுக்கு உதவ வேண்டும். காது கேட்காதவர்களுக்கு அதற்கான கருவி வாங்கிக் கொடுக்க வேண்டும். ஊனம் உற்றவர்களுக்கு மூன்று சக்கர வண்டி வாங்கித் தருகிறார்கள். அந்த எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டும். ஒவ்வொரு துறையிலும் சமுதாயத்தில் பின்னடைந்த கூட்டம் தாழ்த்தப்பட்ட கூட்டம். அவர்களுக்கு பல சலுகைகளையும் தந்து ஊக்குவிக்க வேண்டும்.



இன்றைக்கு அம்பேத்கார் பெயரால், ராவ் பகதூர் சிவராஜ் பெயரால், அறிஞர் அண்ணா பெயரால் சமூக சீர்திருத்த மன்றங்கள் இருக்கின்றன. அந்த மன்றங்களை ஊக்குவிக்கவேண்டும். என்னுடைய பகுதியில் அம்பேத்கார் மன்றம் போன்ற பல மன்றங்கள் இருக்கின்றன. அவர்கள் சாலை போடுகிறார்கள், முதியோர் கல்வி கற்றுத் தருகிறார்கள், கிணறு தோண்டுகிறார்கள், கால்வாயில் இருக்கும் சேற்றை வாருகிறார்கள், பிள்ளைகளை பள்ளிக்கூடத்திற்கு ஒழுங்காக அழைத்துச் செல்லுகிறார்கள். இத்தகைய நல்ல பணிகளைச் செய்து வரும் சமூக மன்றங்களுக்கு அரசாங்கம் உதவி செய்ய வேண்டும்.

எங்களை எல்லாம் வளர்த்து ஆளாக்கிய ராமதாஸ் பெயரில் ஆஸ்டல் இருக்கிறது. சிறப்பான முறையில் மகளிர் விடுதி நடந்து கொண்டிருக்கிறது. சமுதாய மேம்பாட்டுக்காக அமைக்கப்பட்ட விடுதிகள் விரிவுபடுத்தப்பட வேண்டும். மேலும் சிறப்பான கட்டிடங்கள் கட்டிக் கொடுக்கவும் அரசாங்கம் நிறைய பணம் கொடுத்து ஊக்குவிக்க வேண்டும். இப்படியெல்லாம் அரசு நடவடிக்கை எடுத்துக் கொள்வதன் மூலந்தான் சமுதாயத்தில் தாழ்த்தப்பட்ட நிலையில் உள்ள மக்களை முன்னேற்ற முடியும். அப்போதுதான் சமுதாயத்தில் மாற்றம் ஏற்பட முடியும். சமுதாய மாற்றத்தை விரும்பியவர்கள் டாக்டர் அம்பேத்கார் அவர்கள். சமுதாய மாற்றத்திற்காக தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர்கள்.

(பிற்பகல் 12-10)

இந்த மானியத்தைப் பொறுத்தவரை சமூக நலத்திற்கு என்னென்ன குணங்கள் தேவையோ அத்தனை குணங்களையும் கொண்ட ஒரு குணவதியாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தத் துறையின் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். பொறுமையாக இந்த மக்களுக்கு நல்லதே செய்ய வேண்டுமென்ற மனப்பான்மையோடு அந்த மக்களுக்கு சிறப்பான பல காரியங்களை ஆற்றிக்கொண்டு இருக்கிறார்கள். அவர்கள் இந்தக் குறைகளை மனத்திலேகொண்டு அந்த மக்களுக்கு வாழ்வு அளிக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டு இந்த மானியத்திலே பேசுகின்ற வாய்ப்பை அளித்ததற்காக நன்றியைச் சொல்லி முடிக்கிறேன். வணக்கம்.

**திரு. ஏ. டி. கருப்பையா :** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, என்னுடைய கட்சியாகிய இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நான் பேச முன்வந்திருக்கிறேன் என்பதை முதலிலே தெரிவித்துக் கொண்டு இந்த மானியத்தின் மீது சில கருத்துக்களைச் சொல்வதற்கு

விரும்புகிறேன். மாடு வளர்ப்பது சம்பந்தமாக இந்த மானியத்திலே 24.14 மிலியன் கால்நடைகள் உள்ளன என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அது எந்த இடத்திலே இந்த இடத்திலா அல்லது வேறு எந்த இடத்திலே என்று கேட்க ஆசைப்படுகிறேன். அது இங்கே குறிப்பிடப்படவில்லை.

மாடு என்பது இந்த நாட்டினுடைய விவசாயிகளுக்கு முக்கியமான பொருத்தமான கருவி என்பதிலே சந்தேகம் கிடையாது. மாடுகள் இல்லையென்றால், ஆடுகள் இல்லையென்றால், கால்நடைகள் இல்லையென்றால் விவசாயிகள் தங்கள் நிலத்தை உழுது பண்படுத்துவதற்கு முடியாத நிலை நாட்டில் ஏற்படும் என்பதில் சந்தேகம் இல்லை. மாடுகள் வளர்ப்பதற்கு விவசாயிகள் எந்த அளவுக்கு முன்னுக்கு வருகிறார்களோ அந்த அளவுக்கு அவர்களுக்கு எல்லா உதவியும் செய்வதற்கு இந்த அரசாங்கம் முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன.

கிராமப்புறங்களிலே இருக்கின்ற சாதாரண ஏழை எளிய விவசாயிகள் அதை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். தனக்கு இரண்டு மாடுகள் இருக்கின்றன என்றால் இன்னும் 2 மாடுகள் அவருக்குத் தேவைப்படுகின்றன அதற்காக சர்க்காரிலிருந்து கடன் தேவைப்படுகிறது. அந்த லோனை வாங்குவதிலே அவர்களுக்கு என்ன என்ன சிக்கல்கள் இருக்கின்றன, என்ன என்ன இடையூறுகள் இருக்கின்றன, யார் யார் இடைத்தரகர்களாக இருக்கிறார்கள் என்பதையெல்லாம் ஆராய்ந்து பார்த்தால் விவசாயிகள் கடன் பெறுவதிலேயும் அதைத் திருப்பிக் கட்டுவதிலேயும் எவ்வளவு துன்பங்களுக்கு ஆளாகிறார்கள் என்பது புரியும். அவற்றையெல்லாம் அரசாங்கம் கவனமாக ஆராய்ந்து அதை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாடுகள் சம்பந்தப்பட்ட வரையில், அதன் இறைச்சியைப் பயன்படுத்து வதில் சிலர் அதை உணவாகப் பயன்படுத்தவும் முன்வருகிறார்கள். நாடு வளர வளர இறைச்சியும் அதிகமாகத் தேவைப்படுகிறது, கால்நடைகளின் எண்ணிக்கை அதனால் குறைந்துகொண்டே வருவதால் இறைச்சியின் விலை ஏறுகிறது என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அது மட்டுமல்ல, மாடுகள் பால் கறக்கின்றன, இந்த நாட்டிலே ஊட்டச் சத்து பால் மூலமாக மக்களுக்குக் கிடைக்கிறது என்பதை நான் சொல்ல வேண்டிய அவசியமே இல்லை. எல்லோருமே பால் குடிக்க விரும்புகிறார்கள். ஆனால் பால் பற்றாக்குறையாக இருக்கிறது. ஆகவே மாடுகளுக்கு உணவு நல்ல முறையிலே கிடைக்கச் செய்வதிலே சர்க்கார் தீவிர கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



பால் சொஸைடிகளைப் பொறுத்தவரையிலே ஏதோ சில ஜில்லாக்களிலே தான் இருக்கின்றனவே தவிர கிராமங்களிலே இல்லை. ஆகவே கிராமங்களி லேயும் பால் சொஸைடிகளை ஏற்படுத்த வேண்டும், அதன் மூலமாக கிராமங்களிலே உள்ள ஏழை எளிய சாதாரண மக்களுக்கு பால் விநியோகம் செய்யப்பட வேண்டும். சாதாரண ஏழை எளிய மக்களுக்கு குழந்தை களுக்குத் தாராளமாக பால் கிடைப்பதற்கு எல்லா உதவிகளையும் செய்ய வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

மாடு வளர்ப்பது சம்பந்தமாக என்னுடைய தொகுதியாகிய வால்பாறை யிலே தோட்டக் காடுகளிலே இருக்கின்ற ஆயிரக்கணக்கான தோட்டத் தொழிலாளர்கள் மாடு வளர்ப்பதற்குத் தடையாக, அந்தப் பகுதியிலே தோட்ட முதலாளிகள் இருக்கிறார்கள். தடை விதித்திருக்கிறார்கள். ஒரு குடும்பத்திலே ஒரு மாடுதான் வைத்துக் கொள்ள வேண்டும், இரண்டாவது மாடு வைத்துக் கொள்ளக் கூடாது என்று தடை விதித்து இருக்கிறார்கள். ஒரு மாடு கன்று போட்டால், அதற்கு ஆறு மாதம் அல்லது ஒரு வருஷம் ஆகிவிட்டால் அந்தக் கன்றை விற்று விட வேண்டுமென்று உத்தரவு பிறப்பித்துக் கொண்டிருக்கிறார்கள். அதைத் தடுக்க சர்க்கார் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள் கிறேன்.

அடுத்தபடியாக, மாட்டிறைச்சி சம்பந்தமாகப் பேசுகின்றபொழுது, நம்முடைய நாட்டிலே இருக்கின்ற இந்த இறைச்சி டின்களிலே தயார் செய்யப் பட்டு வெளிநாடுகளுக்கு அனுப்பப்படுகிறது. வெளிநாடுகளிலேயிருந்து மறுபடியும் நம்முடைய நாட்டிற்கு வருகிறது. அதை இங்கே விலை கொடுத்து வாங்கிச் சாப்பிட வேண்டிய நிலை இருக்கிறது. ஆகவே, இம்மாதிரி மாட்டிறைச்சியைப் பக்குவப்படுத்தி உணவாக அளிக்கக்கூடிய ஒரு தொழிற்சாலையை ஆரம்பித்து, அதன் மூலமாக டின்களிலே தயார் செய்து இந்தப் பகுதியிலே விநியோகம் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

பால் சம்பந்தமாக எடுத்துக்கொண்டால், வெளிநாடுகளிலிருந்து பால் பவுடரை இறக்குமதி செய்ய வேண்டுமென்ற சூழ்நிலை, அவலநிலை நம் நாட்டில் இருக்கிறது. பாலை அதிகமாக உற்பத்தி செய்து, பால் பவுடரைத் தயார் செய்து இந்த நாட்டிலேயே விநியோகம் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஆடு மாடுகள் சம்பந்தப்பட்ட வரையில் பல ஜில்லாக்களில் நூற்றுக்கணக்கான ஆடுகளை வளர்த்துக்கொண்டு இருக்கிறார்கள். அவர்களுக்கு எந்தவிதமான பாதுகாப்பும் கிடையாது. ஆடுகளைப் பொறுத்தவரையில் மழைக்காலத்தில் பலவிதமான நோய்கள் வருகின்றன. ஏராளமான ஆடுகள் ஒரே நேரத்திலே இறந்து விடுகின்றன. கால்நடை வளர்ப்பு இல்லங்கள் இல்லாத காரணத்தால், அந்த ஆடு மாடுகளைப் பாதுகாக்க, உடனடியாகப் பாதுகாக்க, வேகமாகப் பாதுகாக்க, விரைவாகப் பாதுகாக்க, கிராமங்களில் ஆடு மாடுகள் வைத்திருப்பவர்களுக்கு முடியாத சூழ்நிலைகள் இருப்பதால், கிராமங்களிலிருந்து டாக்டரைக் கையோடு அழைத்து வருவதற்காக ஓடி வருகிறபொழுது, பாதுகாப்பு நிலையங்கள் இல்லை; அப்படியே ஒரு இடத்தில் இருந்தாலும் டாக்டர் இல்லை; டாக்டர் இருந்தாலும் மருந்து கிடையாது என்ற சூழ்நிலைகள் இருப்பதால் அதையெல்லாம் சர்க்கார் கவனத்திற் கொண்டு, அப்படிப்பட்ட ஒரு சிக்கலான சூழ்நிலைகளைத் தடுத்து, கிராமங்களில் இருக்கின்ற ஆடுகளை வளர்க்கின்ற, மாடுகளை வளர்க்கின்ற சாதாரண ஏழை எளிய விவசாயிகளுக்கு உதவி செய்ய வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை நான் இத்துடன் முடித்துக்கொள்கிறேன், நன்றி, வணக்கம்.

**செல்வி வி. விசயலட்சுமி :** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவரவர்களே, இன்று மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சரவர்கள் கொண்டு வந்திருக்கின்ற மானியக் கோரிக்கையின் மீது நான் அதை வரவேற்றுப் பேசுவதற்குப் பெருமை அடைகிறேன்.

1978-83 என்ற ஐந்தாண்டுத் திட்டக் காலத்திற்கு ரூபாய் 96-97 இலட்சம் ஒதுக்கி, இத்தொகையினைக் கொண்டு 16 திட்டங்களை உருவாக்கி மாதர்களுக்காகவும், மாணவ, மாணவிகளுக்காகவும் பயன்பெறும் வகையில் கொண்டு வந்திருப்பது நமது புரட்சித் தலைவர் ஆட்சியில்தான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதற்காக நமது சமூக நலத்துறை அமைச்சர் அவர்களையும் பாராட்டுகிறேன்.

மேலும், சேலம், கோவை போன்ற இடங்களில் உள்ள குறுகிய கால பெண்கள் மீட்பு மனையினை நீண்ட கால காப்பகங்களாக மாற்றுவதற்கு ரூபாய் 2 இலட்சத்து 62 ஆயிரம் ஒதுக்கியிருப்பதற்கு நமது சமூக நலத்துறை அமைச்சருக்கு என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பொதுவாக இந்த மானியக் கோரிக்கையினை வரவேற்றுக் கூறும்போது, சமுதாயத்தினரால் ஒதுக்கப்படுபவர்களுக்கும், இளம் குற்றவாளிகளுக்கும் அவர்கள் வாழ்வில் ஒளியை ஏற்றி, கல்வி புகட்டி, ஒளி மயமான ஒரு எதிர்





காலத்தை உருவாக்குவதில் இந்த அரசு கொண்டு வந்துள்ள மானியக் கோரிக்கை ஒரு விடி வெள்ளியாகப் பிரகாசிக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12-20)

அடுத்து, மாதர் நலத்திலும் குழந்தைகள் நலக் கோரிக்கைககளின் பேரில் சில கருத்துக்கள் சொல்ல விரும்புகிறேன். தற்போது மாதர்நல மான்யத்தின் கீழ் திறக்கப்பட்டுள்ள அநேக பால்வாடிகளுக்குச் சொந்தக் கட்டிடம் இல்லை. ஒவ்வொரு பால் வாடிக்கும் சொந்தக் கட்டிடம் கட்ட வழி வகை செய்யப்பட வேண்டும்.

பால்வாடிகளில் பணிபுரியும் பாலசேவிகாக்களுக்கு தற்போது அதிகபட்சம் ரூ. 90 மட்டுமே ஊதியம் கொடுக்கப்பட்டு வருகிறது. அதேபோல் ஆயாவுக்கு ரூ. 30 ஊதியம் வழங்கப்படுகிறது. இந்த ஊதியமானது குறைவாக உள்ளதால் படித்த இளம் பெண்களுக்கு ஊக்கம் தருவதாக இல்லை. எனவே, அவர்களின் ஊதியத்தையும் உயர்த்தி அவர்கள் பணியினையும் திருத்தி நிரந்தரமானதாக ஆக்க வேண்டும். பாலசேவிகாவுக்குக் குறைந்தது ரூ. 150 ஆகவும் ஆயாவுக்கு ரூ. 100 ஆகவுமாவது ஆக்க வேண்டும்.

பால்வாடிகள் தற்போது சமூக நலத்துறை. உள்ளாட்சித் துறை, அரிசன நலத்துறை, ஆகிய பல துறைகளின் கீழ் இயங்கி வருகின்றன. இவைகள் அனைத்தையும் ஒரே விதியின்கீழ் கொண்டு வந்து சீரான ஊதியமும் பணி விதிகளும் நிர்ணயித்தால் ஆய்வு செய்யும் அதிகாரிகளுக்கும், தணிக்கை செய்யும் அதிகாரிகளுக்கும் குழப்பம் இன்றி நிர்வாகம் சீர்படும்.

ஏறத்தாழ அனைத்து மகளிர் மன்றங்களுக்கும் தையல் இயந்திரம் வழங்கப்பட்டுள்ளது. ஆனால் மேற்படி தையல் இயந்திரங்களைக் கொண்டு தையற்கலையைச் சொல்லிக் கொடுக்க ஆசிரியைகள் நியமிக்கப்படாததால் அனைத்து இயந்திரங்களும் முடங்கிக் கிடக்கின்றன. இதனால் வாழவழியற்ற பெண்கள், கணவனை இழந்த கைம்பெண்கள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், மணமாகாத ஏழைப் பெண்கள் ஆகியோர் தையற்கலையைக் கற்றுக்கொள்ள இயலாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, குறைந்தது ஆறு மகளிர் மன்றங்களுக்கு ஓர் தையல் ஆசிரியை என்ற விகிதத்தில் ஸ்தானங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும். மேற்படி ஆசிரியைகளின் ஊதியத்தையும் தாராளமானதாக நிர்ணயிக்க வேண்டும்.

அநேக மகளிர் மன்றங்கள் அமைப்பாளர்களின் இல்லங்களிலேயே நடத்தப்படுகின்றன. மகளிர் மன்றங்களுக்குச் சொந்தக் கட்டடம் கட்ட மான்யம் கொடுக்கப்பட வேண்டும் அல்லது வாடகைக் கட்டடம் வைத்துக் கொள்ள வாடகையாவது மான்யமாக வழங்கப்பட வேண்டும்.

மகளிர் மன்றங்களை இயக்கும் அமைப்பாளர்களுக்குத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்தே அதாவது 1960 முதலே மாதம் ரூ. 5 மட்டுமே மதிப்பூதியமாக வழங்கப்படுகிறது. அமைப்பாளர்கள் எவ்வளவுதான் பொது நல் சமூக சேவை நோக்கம் உள்ளவர்களாயினும் அவர்கள் தம் பணியைச் செய்யும்போது ஏற்படும் சில்லறைச் செலவினங்களை ஏற்குமளவுக்காவது அவர்களது மதிப்பூதியம் இருக்கவேண்டும். எனவே, தற்போதைய வாழ்க்கை நிலையை அனுசரித்து மாதம் ரூ. 30 என்று மதிப்பூதியம் நிர்ணயிக்கப்பட வேண்டும்.

மகளிர் மன்றங்களில் முதலுதவி பெட்டிகள் விநியோகம் செய்யப்பட்டனவே அன்றி மருந்துகள் விநியோகிக்கப்படுவதில்லை. **எனவே ஆண்டுதோறும் மருந்துகள் வழங்க வேண்டும்.**

மகளிர் மன்றம் மூலம் மகளிர் கல்வி சுற்றுலா ஆண்டுக்கொருமுறை நடத்தப்படுகிறது. இதற்குத் தருகின்ற மான்யம் ரூ. 440 மட்டுமேயாகும். இந்தத் தொகை உந்து வண்டிக்கு ஒரு நாளைய வாடகைக்குக் கூட போதவில்லை. சுற்றுலாவும் பயனளிக்கும் வண்ணம் இருக்கவில்லை. எனவே, இந்த மான்யத்தைக் குறைந்தது ஆண்டுக்கு ரூபாய் 1,000 என உயர்த்த வேண்டும்.

மகளிர் மன்றங்களில் உறுப்பினராக உள்ள பெண்கள் சிறு தொழில் செய்து பிழைக்கும் வண்ணம் அந்தந்த இடத்திற்கு ஏற்ற சிறு தொழில் நடத்த நிதி உதவியும், மூலப்பொருளும், பயிற்சியும் கொடுக்கலாம்.

மகளிர் மன்ற உறுப்பினர்களுக்கு மாத இதழ், வார இதழ், நாளிதழ் ஆகியவைகளை வாங்கிக் கொடுத்து அவர்கள் உலக நடப்பை அறிந்து கொள்ள உதவுவதோடு பொது அறிவினையும் விருத்தி செய்து கொள்ள வழி வகை செய்ய வேண்டும். மேற்படி சஞ்சிகைகள் மான்யத் திட்டத்தின்கீழ் வழங்கப்பட வேண்டும்.

மாதர்நலம், குழந்தைகள் நலன் ஆகிய செலவினங்களும், கடனும் ஒன்றிய ஆணையாளர் மூலமே செலவிட வழிவகை செய்யப்பட வேண்டும். உதாரணம், தற்போது மகளிர் மன்றங்களுக்கு கறவை மாடுகள் கடன்மூலம் வாங்கிக் கொடுக்கப்பட்டு, ஆணையாளரால் திட்டம் செயல்படுத்தப்படாததால், திட்டம் வெற்றிகரமாக இயங்கவில்லை என்பதைத் தெரிவித்துக் கொண்டு ஒவ்வொரு ஊராட்சிதோறும் பால்வாடி பள்ளிகள் திறக்க வேண்டும். ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் தற்சமயம் 30 பெண் குழந்தைகள் இருந்தால்தான் ஆயாக்கள் நியமிக்கப்படுகிறது. அதனைத் தவிர்த்து பள்ளிகள்தோறும் ஆயாக்கள் நியமித்தால் நிறைய பெண்களுக்கு ஆயா வேலை கிடைக்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். எனது தொகுதியில் குரமங்கலத்தில் ஒரு மகளிர் காப்பகமும் வீரபாண்டியில் கூட்டுறவு முறையில் கால்நடைத் தீவனம் உற்பத்தி செய்ய ஒரு சங்கமும் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த மானியக் கோரிக்கைகளை வரவேற்று எனது உரையினை முடித்துக்கொள்கிறேன், வணக்கம்.





**திரு. சு. முத்துகிருஷ்ணன் :** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, சமூக நலத்துறை அமைச்சர் அவர்களால் கால்நடைத் துறைக்கான மானியம் இந்த அவையிலே கொண்டு வரப்பட்டுள்ளது. தமிழகத்திலே கால்நடைகளின் எண்ணிக்கை 2,41,00.000 உள்ளதாகக் கணக்கிடப்பட்டு அதற்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகை 15,18,00,000 ரூபாயாக இருக்கிறது. ஒரு கால்நடையை வளர்ப்பதற்கு இந்த அரசு செய்கின்ற செலவு ஆறு ரூபாய்க்கு மேல் ஆகிறது. ஆனால் அந்தப் பலன் முழுவதும் கிராமங்களில் உள்ள ஏழை எளிய மக்கள் வைத்திருக்கின்ற கால்நடைகளுக்குப் போய்ச் சேருகிறதா என்பதை அரசு கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கிராமங்களிலே இன்று நூற்றுக்கணக்கான கால்நடை நிலையங்கள் மூடப்பட்டிருக்கின்றன. அதற்கு என்ன காரணம் சொல்லப்படுகிறது என்றால், அதைக் கவனிக்க லைவ்ஸ்டாக் இன்ஸ்பெக்டர்கள் இல்லை. அவர்களுக்காக உள்ள லைவ்ஸ்டாக் இன்ஸ்பெக்டர் கோர்ஸ், கவர்னர் ஆட்சியிலே நிறுத்தப்பட்டு விட்டது. அத்தகைய டிரெயினிங் தமிழ்நாட்டிலே ஓசூர், ஒரத்தநாடு, புதுக்கோட்டை, செட்டிநாடு, அபிஷேகப்பட்டி, அலமாதி போன்ற 6 இடங்களில் உள்ள அந்தப் பள்ளிகள் மூடப்பட்டு காட்சிப் பொருளாக வைக்கப்பட்டிருக்கிறது. அதனால் 516 சப் சென்டர்களில் கால்நடை ஆய்வாளர்கள் இல்லாமல் இருக்கின்றது. அதனால் பொது மக்கள் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள். இந்த நிலையை நீக்க இந்த ஆண்டு முதல் லைவ்ஸ்டாக் இன்ஸ்பெக்டர்கள் பயிற்சியை துவக்குவதற்கு இந்த அரசு முன்வரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

[திரு. சு. முத்துகிருஷ்ணன்] [1980 ஜூலை 26

அடுத்து 24—5—1980 முதல் 20—6—1980 வரையில் கால்நடைத் துறையைச் சேர்ந்த சர்ஜன்கள் ஸ்டிரைக் செய்தார்கள். ஸ்டிரைக் நடத்தப் பட்ட காலத்தை நாம் பார்க்கவேண்டும். தேர்தல் நடப்பதற்கு முன்பாக பட்ட காலத்தை நாம் பார்க்கவேண்டும். தேர்தல் நடப்பதற்கு முன்பாக இந்த ஸ்டிரைக் நடத்தப்பட்டது. எந்தக் கண்ணோட்டத்திலே ஆரம்பிக்கப் பட்டது என்பதை அரசு கவனித்துப் பார்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன். தமிழ்நாட்டிலே உள்ள கால்நடை நிலையங்கள் எல்லாம் அந்த நேரத்தில் செயல்படாமல் இருந்த நேரத்தில், பொது மக்கள் எல்லாம் பாதிக்கப்பட்டிருந்த அந்த நேரத்தில் அவர்களுக்குத் துணையாக இருந்த வர்கள் இந்த லைவ்ஸ்டாக் இன்ஸ்பெக்டர்கள் என்பதை அறிந்து, அவர்களை மனதாரப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர்களுக்கான எல்லா உதவிகளையும் இந்த அரசு செய்ய முயற்சி எடுக்கவேண்டும்.

ஆனால் அதை எதிர்த்தவர்கள் அந்தத் துறையைச் சேர்ந்த டாக்டர்கள் தான். ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் உள்ள இ.ஓ.எச். வேலையை நாங்களே செய்கிறோம், எனறு இப்போது சொல்லுகிறார்கள். ஆனால் ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும் இரண்டு அதிகாரிகள் தேவைதானா என்பதை அரசு சிந்திக்க வேண்டும். ஏற்கனவே இருக்கிற லைவ்ஸ்டாக் இன்ஸ்பெக்டர்கள் செய்கின்ற அந்த வேலையை பி.வி.எஸ்சி. படித்த டாக்டர்கள் செய்ய வேண்டுமா என்பதை கவனிக்க வேண்டும்.

ஆய்வாளர்களைப் பொறுத்தமட்டில் அவர்கள் பஞ்சாயத்து யூனியன்களிலே கடந்த 23 ஆண்டுகளாகப் பணிபுரிந்து வருகிறார்கள். அந்த இடங்களில் இப்போது கால்நடை டாக்டர்களைப் போடுவதைப்பற்றி சிந்திக்க வேண்டும். கால்நடை மருத்துவர்களுக்கும் நாம் வேலைவாய்ப்புகளை கொடுக்க வேண்டும். தற்போது 110 பதவிகள் காலியாக இருக்கின்றன என்பதை அறிகிறேன். அவர்களை அனிமல் ஹஸ்பன்டரி டிப்பார்ட்மென்டு, வெட்டினரி டிஸ்பென்சரி, வெட்டினரி ஆஸ்பிட்டல், கி வில்லேஜ் சென்டர், ஐ.சி.டி.சி. சென்டர்கள், இது போன்ற துறைகளில் 110 பதவிகள் காலியாக இருக்கிறது என்பதை நான் சொல்லி, இந்த 110 பதவிகள் ஏன் இதுவரையில் நிரப்பப்படாமல் இருக் கின்றன என்பதை கேள்வியாக வைக்கிறேன். இந்த 100 பதவிகளை முன்பே நிரப்பியிருந்தால் இந்த கால்நடை துறையைச் சேர்ந்த டாக்டர்கள் போராட வேண்டிய சூழ்நிலை இருந்திருக்காது. டாக்டர்கள் இப்போது எழுப்பியிருக் கின்ற கேள்விகளுக்கு அதிகாரிகள்தான் காரணம், டாக்டர்கள் அல்ல என்பதை நான் நிச்சயமாக உணருகிறேன்.



1980 ஜூலை 26] [திரு. சு. முத்துகிருஷ்ணன்]

(பிற்பகல் 12-30)

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இதிலே வேடிக்கையான நிலைமை என்னவென்றால், 3,300 கால்நடை ஆய்வாளர்கள் தமிழகத்திலே இன்றைக்கு இருக்கிறார்கள் என்று சொன்னால், அவர்களை மேற்பார்வை செய்வதற்கு 1,400 டாக்டர்கள் பணியாற்றிக்கொண்டு இருக்கிறார்கள். 3,300 கால்நடை ஆய்வாளர்களைக் கண்காணிக்க 1,400 அதிகாரிகள் என்பது உண்மையிலேயே மிகக் கூடுதலான எண்ணிக்கைதான். ஆனால் அவர்களுக்குக் கொடுக்கவேண்டாம் என்று சொல்லவில்லை. ஏற்கனவே இருக்கும் பதவிகளில் அவர்களை நிரப்பலாம். என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

கால்நடை இலாகாவிலே மருந்துகள் வாங்கும்போது, சென்டிரலைசுடு பர்சேஸ் என்ற முறையில் தனியார் கம்பெனிகளிடமிருந்து கோடிக்கணக்கான ரூபாய்களுக்கு மருந்துகள் வாங்குவதால், அதிலே பல்வேறு முறைகேடுகள் இருக்கின்றன என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த இலாகா அதிகாரிகளை அரசாங்கம் கண்காணிக்கவேண்டும். சில அதிகாரிகள் தவறு செய்யும் அளவிற்கு இடம் இருக்கிறது. ஆகவே, அந்த முறையை மாற்றி, கால்நடை இலாகாவே அரசுக்குச் சொந்தமான மருந்து கிடங்குகளில் இருந்து மருந்துகளைப் பெற ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக என்னுடைய கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்த வரையில், கால்நடைப் பண்ணை ஒன்று புதிதாக ஆரம்பிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதற்கு உதவியாக தீவனப் பண்ணை ஒன்றை ஏற்படுத்த வேண்டும். அங்கே ஏற்கனவே கால்நடைகள் வளர்க்க போதுமான இடம் இல்லை. மிகவும் கஷ்டமாக இருக்கிறது. ஆகவே, கால்நடைகள் வளர்க்க ஏதுவான நிலையை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன்.

அடுத்து, கால்நடைக் கண்காட்சிகளை நடத்தி, கவர்ச்சிகரமான பரிசுகளை கால்நடை வளர்ப்பவர்களுக்கு வழங்கி, கால்நடை வளர்ப்பை ஊக்குவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கால்நடை கிராம கேந்திர சப்சென்டர்களைப் பொறுத்தவரையில், எனது தொகுதியில் கடுக்கரை, அருமநல்லூர், தோவாளை, வெள்ளமடம், சுசீந்திரம், மருங்கூர், அஞ்சுகிராமம், அழகப்பபுரம், மயிலாடி ஆகிய ஊர்களில் வைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சமூக நலத் துறையில், குழந்தைகள் காப்பகம் ஒன்று குமரி மாவட்டத்தில் ஏற்படுத்திக் கொடுத்து, குழந்தைகளைக் காப்பாற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இந்த மானியக் கோரிக்கைகளை வரவேற்று என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் கே. பி. இராமலிங்கம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முதலாவதாக மாண்புமிகு உறுப்பினர் நண்பர் முத்துகிருஷ்ணன் அவர்கள் கூறியதற்கு பதில் சொல்லிவிட்டு, நான் என் பேச்சைத் துவக்க விரும்புகிறேன். கால்நடை ஆய்வாளர்கள் 3,300 பேர்களை கண்காணிக்க 1,400 கால்நடை உதவி மருத்துவர்கள் இல்லை. நாட்டிலே கிராமப்புறங்களிலே வாழ்கின்ற ஏழை எளியவர்களுக்கு, வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்ந்து கொண்டு இருக்கின்ற அத்தகைய மக்களுக்குப் பணியாற்றும் கடமையைச் செய்வதற்காக உருவாக்கப்பட்டவர்கள்—கால்நடை உதவி மருத்துவர்கள் என்பதைக்கூறி, 1980-81-ம் ஆண்டுக்கான கால்நடை வளர்ப்புத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதம் நடக்கும் இந்த நல்ல தருணத்தில் ஒரு சில கருத்துக்களை இந்த அவை முன் எடுத்துவைப்பது என் கடமையெனக் கருதுகின்றேன்.

இதுவரையிலும், எந்த ஆட்சியும் செய்ய முடியாத, செய்ய மனம் இல்லாத ஒரு செயலை தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவர் செய்துள்ளார். அதை நான் வரவேற்கிறேன். ரூபாய் 15 கோடி கால்நடை பராமரிப்புத் துறைக்காக ஒதுக்கப்பட்டு இருக்கிறது இதுதான் முதல் முறையாகும். அதை நான் வரவேற்கக் கடமைப்பட்டு இருக்கிறேன். எந்தத் துறை வளர வேண்டுமானாலும், அந்தத் துறையின் தலைமை இடம் மையமான இடத்தில் அமைக்கப்பட வேண்டும் என்ற என்னுடைய கருத்துக்கு ஒவ்வாக கால்நடைப் பராமரிப்பு இயக்குநர் அலுவலகத்தை தமிழகத்தின் மையப் பகுதியாக இருக்கும் திருச்சி மாவட்டத்திற்கு மாற்றப்பட வேண்டும் என்றும், அதைப் போல, கோழி வளர்ப்பு முனைப்பாக இருக்கும் நாமக்கல், சேலம் மாவட்டத்திற்கு கோழி வளர்ப்பு அலுவலகம் மாற்றப்பட வேண்டும் என்றும் வேண்டிக் கொள்கிறேன்.

அதைப்போல பால்வள நிறுவனத் தலைமை அலுவலகத்தை தந்தை பெரியார் பெயரால் அமைந்திருக்கிற பெரியார் மாவட்டம் ஈரோட்டில் அமைத்தால் அது சிறப்பாகச் செயல்படும். எனவே, பால்வள நிறுவன மைய அலுவலகத்தை நிச்சயமாக ஈரோட்டில் மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.





அதைப்போல தற்போது ஒருசில மாவட்டங்களில் மட்டுமே கால்நடை பண்ணைகள் உள்ளன. இந்த நிலையை மாற்றி, எல்லா மாவட்டங்களிலும் மாதிரிக் கால்நடைப் பண்ணைகளை அமைத்தால் அந்தப் பகுதி மக்கள் அதைப் பின்பற்றி கால்நடைச் செல்வங்களைப் பேணிட ஏதுவாகும். அதற்கு அரசு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நடைமுறையில் இருக்கும் திட்டங்களின்கீழ் வாங்கி, வழங்கப்படும் கால்நடைகளுக்கு மட்டுமே தேவையான தடுப்பூசி போட்டு, ஆயுட்காப்பும் செய்யப்படுகிறது. ஆனால் இத்திட்டத்தை சிறிது பெரிதாக்கி, எல்லா விவசாயக் குடிமக்களின் கால்நடைகளையும் ஆயுட்காப்பு செய்ய ஆவன செய்ய வேண்டும். இதை ஒரு கட்டாய அறிவிப்பாக அரசு செய்தால்கூட நன்றாக இருக்கும் என்று கருதுகிறேன். காரணம், சாதாரணமாக விவசாயிகள் தெரிந்தோ தெரியாமலோ தடுப்பு ஊசி போட்டு, ஆயுட்காப்பு செய்துகொள்ள முன்வருவதில்லை. ஆகவே, அனைத்துக் கால்நடைகளுக்கும் ஆயுட்காப்பு செய்ய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கொள்கை விளக்கக் குறிப்பில் 8-வது பக்கத்தில் 10-ம் பிரிவில் இறைச்சி நிறுவனம் குறித்து கூறப்பட்டுள்ளது. ஆனால் இதற்குரிய நிதி ஒதுக்கீடு குறித்து தெளிவாக எதுவும் கூறப்படவில்லை. இந்த இறைச்சி நிறுவனத்தின் பணிகளை விரிவுபடுத்தி, எல்லா நகரங்களிலும் சுகாதார முறையில் இறைச்சி அறுவைக் கூடங்களை நிறுவி, இவைகளுக்கு எல்லாம் முத்தாய்ப்பு வைத்தாற்போல் சென்னை மாநகரிலே பம்பாய் 'டியோனார்' இறைச்சி அறுவைக் கூடம் போல் நவீன இறைச்சி அறுவைக் கூடம் ஒன்று ஏற்படுத்தி அத்தோடு அதில் கிடைக்கும் உபபொருட்களான தோல், எலும்பு, இரத்தம், சுரப்பிநீர் முதலியவற்றைக்கொண்டு உப தொழில்களை ஏற்படுத்தவும் அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் மிகப்பெரிய இறைச்சி அறுவைக்கூடம் அமைக்கப்படுவதாக 1979 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் சொல்லப்பட்டது. ஆனால் அது இன்னும் நடைபெறவில்லை. இந்த முறையாவது இந்தக் குறிப்பில் கூறப்பட்டதிலிருந்து ஆறு மாதத்திற்குள்ளாக அதை நிறைவேற்றி நடைமுறைக்கு கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல 'ட்ரெயினேஜ் சிஸ்டம்'—கழிவுநீர் திட்டம் உள்ள எல்லா நகரங்களிலும், பேரூராட்சிகளிலும் கழிவுநீர்த் தண்ணீரைப் பயன்படுத்தி தீவனப் புல் பண்ணைகள் அமைத்து, வெண்மைப் புரட்சிக்கு உறுதுணை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த கழிவு நீரைப் பயன்படுத்தி வளர்க்கப்படும் என்.பி. 21 போன்ற புல் தழைகள் சினை மாடுகளுக்கு கருச் சிதைவு ஏற்படுத்துகிறது. இத்திட்டத்தை அமுல்படுத்தும் அதிகாரிகள் இதை மனதிற்கொண்டு, மாற்று ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கொள்கை விளக்கக் குறிப்பில் புதுக்கோட்டையில் வெள்ளாட்டுப் பண்ணைகள் அமைக்கப்படுவதுபற்றி கூறப்பட்டுள்ளது. ஆனால் மலைப் பாங்கான பகுதிகள்தான் வெள்ளாடு வளர்ப்புக்கு நல்ல பலன் தருவதாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். ஆகவே, புதுக்கோட்டை மாவட்டத்தில் செம்மறி ஆடு பண்ணைகள் அமைக்கும் திட்டத்தையும், மலைப்பாங்கான பகுதிகளில், குறிப்பாக அருமை நண்பர் சிவப்பிரகாசம் அவர்களுடைய தொகுதி சார்ந்திருக்கிற கொல்லிமலைப் பகுதியில் வெள்ளாடு பண்ணைகளை அமைக்கும் திட்டத்தையும் செயல்படுத்தினால் நல்ல பலன் கிடைக்கும் என்ற கருத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழகத்தில் கால்நடைப் பெருமனைகள், மருத்துவ மனைகள் என்று இருந்தாலும் உண்மையிலேயே சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் மருத்துவமனைதான் 'எக்ஸ்ரே', 'யு.வி.ரே ட்ரீட்மென்ட்' மற்றும் பல்வேறு வசதிகளோடு உள்ளது. அதுவும் கால்நடை பராமரிப்புத் துறையைச் சேர்ந்தது அல்ல. எனவே இந்த நிலையை மாற்றி மாவட்டந்தோறும் பல்நோக்கு மருத்துவமனைகள் (போலி கிளினிக்ஸ்) ஆரம்பித்து, அதில் பல்வேறு வைத்திய முறை வல்லுநர்களை நியமிப்பதோடு அது மேலும் சிறப்புற நடமாடும் அறுவை மற்றும் சிறப்பு சிகிச்சை நிலையத்தையும் அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இத்தோடு தற்போது மைக்ரோஸ்கோப்பை மட்டுமே வைத்துக்கொண்டு, சோதனைக் கூடங்களை அமைத்திருக்கிறார்கள். அதை மாற்றியமைத்து, எல்லாவிதமான நோய்க் குறியீடுகளையும் ஆயுந்தன்மைகொண்ட சிறப்பான ஆய்வுக்கூடங்களை ஆரம்பிக்க வேண்டும்.

தற்போது ஏதாவது ஒரு மாவட்டத்தில் கால்நடை நோய் ஒன்று புதிதாக வருவதாக இருந்தால், அந்த மாவட்ட மையத்தில் அந்நோய் ஏற்பட்ட கால் நடையிலிருந்து 'நோய்க் குறியீடு' ஒன்றை எடுத்து இராணிப்பேட்டைக்கு அனுப்பி, அவர்கள் ஆய்வு செய்து பார்த்து முடிவு சொல்லும் நிலைதான் தற்போது இருக்கிறது. அந்த முடிவு தெரிவதற்கு சில நாட்கள் ஆகும். அதற்குள் அந்த நோய் ஊர் பூராவும் பரவி, அதற்கு வேறு எந்த தடுப்பு நடவடிக்கையும் எடுக்க முடியாத நிலையில், கால்நடைகள் அழிந்துபோகும்





சூழ்நிலை ஏற்படும். ஆகவே, தற்போது இராணிப்பேட்டையில் இருக்கிற அந்த வசதியை ஒவ்வொரு மாவட்ட கால்நடை மருத்துவமனையிலும் ஏற்படுத்தி, நல்ல மருத்துவ வல்லுநர்களையும் நியமித்து, இந்தக் குறையைப் போக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-40)

தனியார் துறையிலும் அரசுத் துறையிலும் கால்நடைப் பராமரிப்பு சிறப்புற நடைபெறும் இத்தருணத்தில் மாவட்டந்தோறும் கால்நடைத் தீவன ஆய்வு நிலையங்கள் ஏற்படுத்த வேண்டும்.

இந்தத் திட்டங்கள் சிறப்புற நடைபெற இராணிப்பேட்டை கால்நடை நோய்த் தடுப்பு நிலையத்தில் விரிவான நோய்த் தடுப்பு முறை ஆராய்ச்சிகள் நடத்திட ஏதுவாக அதை ஒரு ஆராய்ச்சி நிலையமாக மேம்படுத்த வேண்டும்.

கால்நடை பராமரிப்பு ஆராய்ச்சித் துறையின் சிறப்பு நடவடிக்கைகளை பொதுமக்கள் பின்பற்றிட ஏதுவாக இவைகளை மக்கள் முன்னால் எடுத்து வைத்து, இந்த அரிய விஞ்ஞானக் கருத்துக்களைப் பரப்பிட வேளாண்மை மற்றும் சில துறைகளில் உள்ளதுபோல் தனியாக ஒரு கால்நடை பராமரிப்பு விரிவாக்க இயக்குநரகம் ஏற்படுத்த வேண்டும். மேலும் பல்வேறு கால்நடை பராமரிப்புத் திட்டங்களைச் செயல்படுத்திடவும், கால்நடை நோய்த் தடுப்பு முறைகளைச் சிறப்புறச் செய்யவும் இந்தத் துறையில் 3-வது சம்பளக் கமிஷன் சிபாரிசின் அடிப்படையில் வேக்ஸினேட்டர்ஸ், இன்செமினேட்டர்ஸ், லேபரேட்டரி டெக்னிஷியன்ஸ் போன்றவர்களை வேலைக்கமர்த்த வேண்டும்.

இன்று கால்நடை உதவி மருத்துவர்களும் கால்நடை ஆய்வாளர்களும் சமரசம் செய்ய வேண்டுமென்றும், கால்நடை ஆய்வாளர்கள் மருந்துகளை நேரடியாகப் பெற ஆவன செய்ய வேண்டும். மாண்புமிகு உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறார்கள். ஒரு துறையினுடைய உயர் அதிகாரிகளுக்குக் கீழ் பணிய மாட்டோம், அவர்களைவிட நாங்கள்தான் துறையை நடத்தி வருகிறோம் என்று கீழ்நிலைச் சிப்பந்திகள் தன்னடக்கமில்லாமல் நடக்கிறார்கள். நிச்சயமாக இந்த நிலையைக் கண்டித்தாக வேண்டும். கால்நடை மருத்துவர்களின் போராட்டத்திற்குப்பின் தேனி, போடி, சைதாப்பேட்டை, திருச்சி, சங்கரன்கோவில், தக்கலை இன்னும் பல்வேறு ஊர்களில் நடந்துள்ள நிகழ்ச்சிகளே இதற்கு சான்றாகும் என்று அரசுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன். இதிலே சமரசம் செய்வதற்கு ஒன்று

மில்லை. இது குறித்து அரசு நேரடியான நடவடிக்கைகளில் ஈடுபட்டாக வேண்டும். ஒரு துறையின் கீழ் நிலை ஊழியர்கள் அத்துறை அதிகாரிகளுக்கு அரசின் உத்தரவுகளுக்குக் கட்டுப்பட்டு நடந்தால்தான் திட்டங்களின் நன்மை மக்களை அடையும். ஆகவே அதிகாரிகளுக்கு கீழ்நிலை ஊழியர்கள் பணியாமல் இருக்கின்ற இந்த நிலையைக் கண்டித்தாக வேண்டும்.

அடுத்து கால்நடை ஆய்வாளர்கள் பத்தாவது படித்தபின் பத்து மாதம் மட்டுமே பயிற்சி பெற்றவர்கள். அவர்கள் நோய்க் குறியீடுகளைக் கண்டறிந்து மருத்துவம் செய்ய தகுதியையும் மருத்துவ அறிவையும் பெறாதவர்கள். அப்படித் தகுதியில்லாதவர்களை ஒவ்வொரு இடத்திலும் வைத்திருப்பது சரியல்ல. ஒரு இடத்திலே ஒரு மாட்டுக்கு வியாதி வந்திருக்கின்றது என்று பி.டி.ஓ. அவர்கள் சென்று சொன்னால் அங்கே இருக்கின்ற கால்நடை ஆய்வாளர்களை போய்ப் பார்த்து வாருங்கள் என்று சொல்கிறார்கள். அப்படிப் போய்ப் பார்க்கின்றபோது அந்த மாட்டுக்கு இருப்பது என்ன வியாதி என்றே அவர்களால் கண்டுபிடிக்க முடியவில்லை. அந்த நிலையிலே அவர்களால் எப்படி, இந்த நோய் வந்திருக்கின்றது ஆகவே இந்த மருந்தைக் கொடுங்கள் என்று சொல்ல முடியும்? அவர்களுக்கு அந்த உரிமைகள் எப்படி வரும் என்று கேட்க விரும்புகிறேன். ஆகவேதான் கால்நடை மருத்துவர்கள் இந்த அரசிடம் கேட்டிருக்கிறார்கள் ஒவ்வொரு ஒன்றியத்திலும் கால்நடை மருத்துவர்களை நியமிக்க வேண்டும் என்று. இந்தக் கால்நடை ஆய்வாளர்களுக்கு மருந்துகள் பெறுவதற்குரிய தகுதிகள் இல்லை. அதோடு மத்திய அரசின் டிரக்ஸ் மற்றும் காஸ்மெட்டிக்ஸ் ஆக்ட் என்ற சட்டத்தின் விதிகளிலே இந்தக் கால்நடை ஆய்வாளர்கள் மருந்துகளைப் பெறத் தகுதியற்றவர்கள் என்று வரையறுத்துக் கூறப்பட்டுள்ளது. அந்த முறையிலே . . .

**திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்:** பாயின்ட் ஆஃப் ஆர்டர். தலைவரவர்களே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது கால்நடை ஆய்வாளர்கள் ஊசி போடுவதற்குத் தகுதியற்றவர்கள் என்று சொல்கிறார்கள். அரசாங்க ஆணையிலேயே ஊசி போடலாம் என்று இருக்கின்றது, அதை உறுப்பினர் அவர்கள் அறிவார்களா ?

**டாக்டர் கே. பி. இராமலிங்கம்:** தலைவரவர்களே, நான் ஊசி போடுவதற்கு கால்நடை ஆய்வாளர்களுக்குத் தகுதி இல்லை என்று சொல்லவில்லை. மருந்துகள் எழுதித் தரத் தகுதியற்றவர்கள் அவர்கள் என்றுதான் குறிப்பிட்டேன்.



**திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்:** தலைவரவர்களே, ஊசி போடுவதற்கு மட்டுமல்லாமல் இன்னின்ன நோய் இருக்கின்றது என்று சான்றிதழ் வழங்குவதற்கும் ஆய்வாளர்களுக்கு உரிமை உண்டு என்று அரசாங்க ஆணை பிறப்பிக்கப்பட்டிருப்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியுமா ?

**டாக்டர் கே. பி. இராமலிங்கம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த ஆணை ஆளுநர் ஆட்சியிலே தவறுதலாகப் பிறப்பிக்கப்பட்டது என்கிற முறையிலேதான் நான் சொல்லிக்கொண்டிருக்கிறேன் . . .

**திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்:** துணைத் தலைவர் அவர்களே, அந்த ஆணை அரசாங்கத்தின் சார்பிலே அன்றைய செயலாளர் ஹரி பாஸ்கர் அவர்களால் பிறப்பிக்கப்பட்டது. ஆளுநர் ஆட்சியிலே என்று சொல்வது சபைக்கு தவறான செய்தியை தருவது போலாகும் . . .

**டாக்டர் கே. பி. இராமலிங்கம்:** துணைத் தலைவர் அவர்களே, ஆணை பிறப்பித்த சமயத்திலே மதிப்பிற்குரிய ஹரி பாஸ்கர் அவர்கள் செயலாளராக இருக்கலாம். ஆனால் அந்த ஆணை பிறப்பிக்கப்பட்டது ஆளுநர் அவர்களின் ஆட்சிக் காலத்திலேதான். 21—5—1980 அன்று பிறப்பிக்கப்பட்டது என்று எனக்குத் தகவல் இருக்கிறது. உறுப்பினர் அவர்கள் வேண்டுமானால் சரியாகப் புரிந்து கொள்ளாமல் சொல்லியிருக்கலாம்.

மற்றொன்று, தமிழகத்திலே புரட்சித் தலைவர் அவர்களின் ஆட்சியிலே 1979 ஆம் ஆண்டு மே மாதம் 11 ஆம் நாள் அரசு ஆணை எண். 961 வாயிலாக பட்டப்படிப்பு படித்த கால்நடை மருத்துவர்கள் அதிகம் உருவாகி வருவதால் மீண்டும் 1974 ஆம் ஆண்டோடு நிறுத்தப்பட்ட கால்நடை உதவியாளர்கள் சான்றிதழ் பயிற்சியை துவக்க வேண்டிய அவசியம் இல்லை என்று பிறப்பித்த ஆணையை ஆளுநர் அரசு 21—5—1980 அன்று அந்த தேவையில்லாத பயிற்சியை துவக்க மீண்டும் முயற்சித்திருக்கிறார்கள் என்பதை இங்கே விளக்க விரும்புகின்றேன். மேலும் பட்டப்படிப்பு படித்த கால்நடை மருத்துவர்கள் இப்பொழுதே 300-க்கும் மேற்பட்டவர்கள் வேலையில்லாமல் இருக்கும்பொழுது மீண்டும் சான்றிதழ் பயிற்சியை துவக்கத் தேவையில்லை. அரசு இதில் கவனமாக இருக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்க கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும் ஒதுக்கப்பெற்ற தொகை மிகவும் குறைவு, இந்த சமூக நலத்திற்கு என்று கருதுகிறேன். எனவே அடுத்த முறையாவது மற்ற துறைகளைப் போல் அதிக நிதி ஒதுக்கீடு அளித்தும் தனியான செயலாளர் ஒருவரை நியமித்தும், நல்ல பணிகளை நாட்டுக்கு ஆற்றிட அண்ணாவின் அரசு முயல வேண்டுமென்று கேட்டு, விடை பெறுகிறேன். வணக்கம்.

[1980 ஜூலை 26

**திரு. குமரி அனந்தன் :** வணக்கத்திற்குரிய துணை நாயகர் அவர்களே, அனைத்து அமைச்சகங்களுமே சேர்ந்து செய்கிற பணி எல்லாம் சமூக நலத்தினை நோக்கியே சென்று கொண்டிருக்கிறது. அதன் காரணத்தினால் சமூக நலத் துறை மிக மிக முக்கியம் வாய்ந்த ஒரு துறையாகவும், அமைச்சகமாகவும் இருக்கிறது. எனவே இந்த மானியக் கோரிக்கைகள் மீது பேசுகிற வாய்ப்பினை அளித்ததற்கு மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களுக்கு முதலிலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மானியக் கோரிக்கைகளை வைக்கிறபோது, அந்த கோரிக்கைகளுக்கான திட்டங்களை எங்களுக்கு சொல்கிறபோது, இதற்கு முன்னால் போட்ட திட்டங்கள் எந்த அளவில் நிறைவேற்றப் பெற்றன, அப்படி நிறைவேறவில்லை என்றால், நிறைவேற்றாமைக்கு காரணம் என்ன? திட்டங்களிலே முன்னேற்றம் ஏற்பட்டதா? ஏற்படாமைக்கு காரணம் என்ன என்றெல்லாம் தகவல் தர முயன்றால், அது உறுப்பினர்களுக்கும், அதன்மூலம் பொது மக்களுக்கும் தெரியும் என்பதோடு, அமைச்சர்களும் அதிகாரிகளும், முன்னும் பின்னும் பார்த்து எடுக்க வேண்டிய நடவடிக்கைகளுக்கு ஆழ்ந்த கவனம் செலுத்துகிற வாய்ப்பு ஏற்படும்.

உதாரணமாக 1980-81 ஆம் ஆண்டு சமூக நலம் கொள்கை விளக்கக் குறிப்பினை எடுத்தால் பக்கம் 18-19-ல் என்னென்ன விவரங்கள் எழுதப்பட்டிருக்கின்றதோ அதே விவரங்கள் 11 மாதங்களுக்கு முன் கொடுக்கப்பட்ட கொள்கை விளக்கக் குறிப்பேட்டிலும் பக்கம் 900-901-ல் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதே விவரங்கள் அப்படியே கொடுக்கப்பட்டிருப்பது மட்டும் அல்ல, அதே வாசகங்கள் அப்படியே கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதே வாசகங்கள் மட்டுமல்ல, வார்த்தைகள் எல்லாம்கூட அப்படியே ஒன்றையும் மாற்றாமல், ஏதோ, 'அதில் இருப்பதைப் பார்த்து அச்சடித்து விடுங்கள்' என்று சொல்லியதைப்போல கொடுக்கப்பட்டிருக்கின்றன.

எனவே 11 மாதங்களுக்கு முன் என்ன முன்னேற்றம் இருந்ததோ அதே முன்னேற்றம் தானா? அப்படி முன்னேறவில்லை என்றால் அதற்கான காரணம் என்ன என்பது தொடர்புடைய அதிகாரிகளுக்கு போயிருக்க வேண்டாமா? போயிருக்குமேயானால் அதைப்பற்றி குறிப்பேட்டில் குறிப்பிட்டிருக்க வேண்டாமா? ஆகையினால் கொள்கை விளக்கக் குறிப்பை தயாரிப்பதிலே அதிக கவனம் வேண்டும் என்பதை என்னுடைய பணிவான வேண்டுகோளாக இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.



123065

1980 ஜூலை 26] [திரு. குமரி அனந்தன்]

(பிற்பகல் 12-50)

அடுத்து 1972-ம் ஆண்டு பொருளாதார மேதை டாக்டர் வி. நடராஜன் அவர்கள், 'டாஸ்க்போர்ஸ்' என்ற குழுவின் தலைவராக இருந்தபோது இந்த கால்நடைத் துறையை எப்படி செம்மைப்படுத்த வேண்டும் என்று சொல்கிற ஒரு ரிப்போர்ட்டை கொடுத்திருக்கிறார்கள். அதற்கு அவர்கள் இட்டிருக்கிற தலைப்பு Towards a white revolution ஆக, 'வொயிட் ரெவல்யூஷன்' என்று சொல்கிறபோது அந்த வெண்மைப் புரட்சிக்கு அவர்கள் கொடுத்திருக்கிற முன்னுரையில் முதலிலேயே சொல்கிறார்கள். 1972 ஆம் ஆண்டு சொல்கிறபோது சொல்கிறார்கள், எனக்கு 1966-ம் ஆண்டு புள்ளிவிவரம்தான் கையில் இருக்கிறது என்று. 1966-ம் ஆண்டு புள்ளிவிவரத்திலேயே அவர்கள் நம் தமிழ்நாட்டிலிருக்கிற கால்நடைபற்றிய கணக்குகளை கொடுத்திருக்கிறார்கள். 24.57 மில்லியன் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இப்போது கொடுக்கப்பட்டிருக்கிற கொள்கை விளக்க ஏட்டிலே, 14 ஆண்டுகளுக்குப் பிறகு கொடுக்கப்பட்டிருக்கிற இந்த கொள்கை விளக்க ஏட்டிலே இப்போதிருக்கிற கால்நடைகள் கணக்கு 24.14 மில்லியன் என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. அப்படி 24.14 மில்லியன் என்று கொடுக்கப்பட்டிருக்கிறதென்றால், கால்நடை 0.43 மில்லியன் 14 ஆண்டுகளில் குறைந்திருப்பதாகத்தான் கணக்கு இருக்கிறது. அதற்குரிய காரணங்கள் என்ன என்ற கவனம் தொடர்புடையவர்களுக்கு செல்லவேண்டும் என்பதற்காகத்தான் இதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்த செய்தியாக கால்நடை பராமரிப்புத் துறையை செவ்வனே நடத்த வேண்டும் என்று சொல்கிற நோக்கம் அவர்கள் உள்ளம் நன்றாக இருக்கிறது என்பதை எழுதியிருக்கிற எழுத்துக்களே சொல்கிறது. கால்நடைப் பராமரிப்பிற்காக வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று விரும்புகிறவர்கள் ஆராய்ச்சியில் மிகவும் பின்தங்கியிருக்கிறார்கள் என்பதை நினைவிற்குக் கொண்டு வருதல் வேண்டும்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

உதாரணமாக சகடம் என்று சொல்லும்போது வண்டியில் பாரம் வைத்துப் போவது அந்தக் காலத்திலிருந்து ஏற்பாடு செய்யப்பட்ட ஒன்று. ஆனால் அந்த வண்டியே பாரம் மிகுந்ததாக, கனம் மிகுந்ததாக இருக்கிறது. அதைக் குறைக்கிற ஆராய்ச்சி எப்போதாவது பேப்பரில் செய்திகளாக வந்துகொண்டிருக்கிறதே தவிர செயல்முறையில் அந்த மாடு இழுக்கிற வண்டியின் பாரத்தை குறைக்கிற அந்த ஆராய்ச்சி செயல் வடிவம் பெற்று வெற்றிபெறவில்லை என்பதைக் கவனித்து இத்துறை தக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

கால்நடை என்று பெயர் பெற்றிருக்கிற இந்த மாடுகள் மனிதன் காலாறப் போனபோது துணையோடு வந்த கால்நடை. பொதி மாடுகளாக நம் கூடவே வந்தவை. அந்தக் கால்நடை காலாற நடந்தது மேய பழங்காலத்தில் ஒவ்வொரு கிராமத்திலும் மேய்ச்சல் நிலங்கள் உண்டு. மேய்ச்சல் நிலங்களுக்கு மத்தியில் குண்டு குழி, ஊற்றில் தண்ணீர் தேங்கியிருப்பதுண்டு. அந்த மாடுகள் புல் தின்றுவிட்டு தண்ணீர் குடித்து மாலை நேரத்தில் கோகுலன் குழலோசை கேட்க கழுத்து மணியோசை கேட்க விட்டுக்கு வருகிற காட்சி ஒரு அற்புதக் காட்சியாகவே இருக்கும். அவைகள் எல்லாம் இப்போது கற்பனைக் காட்சியாக மனத்திலே இருக்கிறதே தவிர, அற்புத காட்சியாக கண் எதிரிலே பார்க்க முடியாத நிலையிருக்கிறது. ஆகவே ஒவ்வொரு கிராமத்திலும் அல்லது பஞ்சாயத்திலும் மேய்ச்சல் நிலங்கள் இருக்கிற வகையில் பார்த்துக்கொள்ளுதல் வேண்டும்.

கால்நடைக்கு ஆஸ்பத்திரிகள் ஏற்படுத்துவது என்பது இப்போது அரசு ஒவ்வொரு பஞ்சாயத்திலிருந்தும் இரண்டு ஏக்கர் நிலம், ரூபாய் 50,000 கேட்கிறார்கள். சிலயிடங்களில் தேவை இருக்கும், ஆனால் பணம் இருக்காது. பணம் இல்லை என்பதற்காக இதை தள்ளிப்போட்டுக்கொண்டே போனால் அந்த கால்நடைச் செல்வங்கள் வளரவேண்டிய விதத்தில் வளரமுடியாமல் போகும். ஆதலால் உடனடியாக வாடகை இடத்திலாவது அதை ஆரம்பிக்கும் முயற்சியில் ஈடுபட வேண்டும். அப்படி ஈடுபடுகிறபோது குறைந்த வாடகையில் கிராமங்களில் இடங்கள் கிடைக்கும் என்பதை நான் உங்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன்.

எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் அவர்களும், அதற்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் ஓரிருவரும் கால்நடை ஆய்வாளர்களைப்பற்றியும், தமிழ்நாடு கால்நடை மருத்துவர்கள்பற்றியும், தடுப்பு ஊசி போடுவதுபற்றியும், அதிலே ஈடுபட்டிருக்கிறவர்கள்பற்றியும் பேசுகிற நேரத்தில் ஒருவருக்கொருவர் கருத்துக்களைச் சொல்வதில் வேறுபட்டவர்களாக இருந்தார்கள். இங்கே உறுப்பினர்களுக்கிடையே அந்தக் கருத்து வேறுபாடு இருக்கிறது என்று சொன்னால்—அந்த மூன்று சங்கங்களை வைத்திருப்பவர்கள் கருத்து வேறுபாடுடையவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் ஆற்றுகிற பணி, அதில் இருக்கிற மரியாதை, இவைகளால் அவர்களுக்குள்ளே கருத்து மோதல்கள் என்று சொல்லலாம், இருக்கின்றன. ஒவ்வொருவரும் சொல்வதில் சிலவை நியாயமாக இருக்கலாம், சிலவை பரிசீலிக்கத்தக்கதாக இருக்கிற காரணத்தால் நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த மூன்று சங்கங்களில் பிரதிநிதிகளை



அழைத்து அவர்களுடைய கோரிக்கைகளை நீங்கள் பரிசீலித்து எல்லைகளை வகுத்துக் கொடுத்துவிட்டால்தான் தொல்லைகள் தீரும் என்று நான் கருதுகிறேன். தொல்லைகள் இழுத்துக்கொண்டே போனால், மாடுகள் பலவகை நோய்களினாலே இழுத்துக்கொண்டே போய்விடும் என்ற காரணத்திற்காக, இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமென்று உங்களுக்கு வேண்டுகோள் விடுக்கின்றேன்.

அது மட்டுமல்ல. இந்த நோய்களுக்காக கொடுக்கப்படுகின்ற மருந்துகளைப்பற்றிச் சொல்லப்படுகின்றபோதுகூட, தரமான மருந்துகள் கொடுக்கப்பட வேண்டுமென்று சொல்வது ஒருபக்கம், மருந்துகளே இல்லாத ஆஸ்பத்திரிகளும் இருக்கின்றன என்பதையும் நாம் மனதிலே கொண்டுவர வேண்டும். அதோடு பலவற்றிற்கு இனாமாக செய்து கொண்டிருக்கின்ற நாம், மாடுகளைப் பெரிதும் பிடிக்கின்ற வாய் நோய், கால் நோய் போன்றவைகளுக்கு மருத்துவம் அளிக்க 3 ரூபாய் 55 பைசா ஒவ்வொரு மாட்டிற்கும் வாங்கவேண்டியது தேவைதானா? அதை வாங்காமல் இலவசமாக செய்ய முடியாதா என்பதை பரிசீலித்தால், அந்த விவசாயிகளுக்கு அது நன்மை பயக்கும் என்பதனை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

கால்நடைகள் நல்லமுறையிலே திராணியோடும், தெம்போடும் அவைகள் வளர வேண்டுமென்று சொன்னால், மாடுகளுக்குத் தேவைப்படுகின்ற அந்த மாட்டுத் தீவனப் பொருள்கள் அனைத்திற்கும் வரிவிலக்கு அளித்து விடுவது நல்லது. அண்மையிலே அரசு உத்தரவின் காரணமாக, மாடுகள் மட்டுமே சாப்பிடும் பருத்தி, பொட்டு, பருத்தி பொட்டுத் தூள், புளியங்கொட்டை மாவு போன்றவைகள் வரி விதிப்பிற்கு உள்பட்டிருக்கின்ற காரணத்தினால், அரசாங்கம் இதனை மறுபரிசிலனை செய்தால் நலமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். காரணம், மாடுகள் செம்மையாக வளர வேண்டுமென்றால், மாட்டுச் செல்வம் என்று வள்ளுவப் பெருந்தகை சொல்லியிருப்பது போல், அவைகள்தான் நமக்கு உணவைத் தருகின்றன. அந்த உணவுப் பற்றாக்குறையினாலே நாட்டிலே சமூக நலப் பணிகளுக்குத் தேவையான சத்துணவு இல்லாத ஒரு சூழ்நிலை உருவாகக் கூடாது. உணவு உற்பத்தி பெருகினால்தான் சமூக நலத் துறை ஏற்படுத்துகின்ற சத்துணவுப் பணிக்கு ஏற்படுகின்ற செலவு வெகுவாகக் குறைந்துவிடும்.

உணவைப்பற்றிச் சொல்ல வேண்டுமானால், வளர்ந்து வரும் மேலை நாடுகளில் சராசரி ஒரு மனிதனுக்கு கிடைக்கின்ற தானியம் 2,000 ராத்தல். ஆனால், நமது நாட்டிலே ஒரு மனிதனுக்கு சராசரி கிடைக்கக்கூடிய தானியம் 400 ராத்தல்தான். ஆக 1,600 ராத்தல் இடைவெளிக்குள்ளாகவேதான்

வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இந்த 2,000 ராத்தல் தானியம் என்பது பவுண்ட். அந்த வகையிலே மேலை நாட்டு மனிதனுக்கு கிடைக்கின்ற இந்த 2,000 ராத்தலையும் அப்படியே அவன் சாப்பிட்டு விடுவதில்லை. அவன் பயன் படுத்துவது 150 ராத்தல்தான். மீதியிருக்கும் 1,800 ராத்தல் தானியத்தை கோழிக்கு, மாட்டிற்கு, ஆட்டிற்கு போடுகின்ற காரணத்தினால், சத்தற்ற அந்த உணவைக் கொடுத்து விட்டு, சத்துள்ள இறைச்சி, சத்துள்ள பால், சத்துள்ள முட்டை ஆகியவைகளை அவன் திருப்பிப் பெற்றுக்கொள்கிறான். நமக்கு கிடைக்கின்ற 400 ராத்தல் தானியத்தை, அந்த சத்தற்ற நிலையிலே அப்படியே நாம் சாப்பிட்டுக்கொண்டிருக்கிறோம்.

அதேபோன்று, ஒரு மனிதனுக்கு சராசரி தேவைப்படுகின்ற பால் 300 கிராம். ஆனால், நமக்கு கிடைக்கின்ற பால் 63 கிராம். அதேபோல் ஒரு மனிதனுக்கு சராசரி தேவைப்படுகின்ற முட்டை 8.4 கிராம். ஆனால், ஒரு இந்தியனுக்கு, தமிழனுக்கு, இந்தியாவில் இருக்கின்ற ஒரு மனிதனுக்கு சரா சரியாக கிடைக்கின்ற முட்டை 1 கிராம். மேலை நாட்டிலே சொன்ன கணக்கு ஒருபுறம் இருக்க, மனிதனுக்கு தேவைப்படுகின்ற முட்டை 8.4 கிராமில், ஒரே ஒரு கிராம் முட்டைதான் நமக்கு கிடைக்கின்றது என்பதை நினைவிலே கொள்ள வேண்டியதாக இருக்கிறோம்.

அதேபோல், மீன் இறைச்சியை எடுத்துக்கொண்டால், ஒரு மனிதனுக்குத் தேவைப்படுவது 40 கிராம். இங்கே கிடைப்பது 26 கிராம். இவைகளை யெல்லாம் சொல்வதற்குக் காரணம், இவைகள் எல்லாம் கிடைக்காத காரணத் தினால், மனிதன் நலிவு அடைந்துவிட்டானே என்று அவனுக்கு சத்துணவைக் கொடுக்க முயற்சி செய்கிறோம். ஆஸ்பத்திரி கட்டுவதற்கு முயற்சி செய் கிறோம். அப்படி செய்து கொடுக்க வேண்டிய நேரத்திலே, அவைகளை அவனுக்கு செய்து கொடுத்துவிட்டால், அவன் தெம்போடு வாழ்வதற்கு வகை கிடைத்து விடும். அதற்கு மூலதனமாக இருப்பது, தொடர்புள்ளதாக இருப்பது கால்நடைச் செல்வமாகும்.

உதாரணமாக, ஊனமுற்றவர்களைப்பற்றி நாம் பேசிக் கொண்டிருக்கிறோம். இங்கே அதற்கு உரிய மானியம் வந்து கொண்டிருக்கிறது. இந்த போலியோ நோயை அதாவது இளம் பிள்ளை வாத நோய்க்கு சில சொட்டு மருந்துகள் கொடுப்பதற்குக்கூட போதுமான வாக்சின் இல்லை என்று சொல்கிறார்கள், இதற்குத் தொடர்புடையவர்களை விசாரித்துப் பார்த்ததில் தெரிகிறது. ஆகவே, முதலிலேயே நம்மை நாமே நோயைப் பெருக்கி, அவைகளைத் தீர்ப்ப தற்குப் பதிலாக, நோயே வராமல் இருக்கின்ற சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்பதற்காக இவைகளையெல்லாம் நான் சொல்லிக்கொள்ள விரும்பு கிறேன்.



இப்போது நாம் பார்க்கிறோம். மனிதனுக்கு இரண்டு கைகள், ஒரு வாய் இருக்கிறது. இந்த இரண்டு கைகளுக்கும் வேலை கொடுக்கும் திட்டத்தின்கீழ் வேலை கொடுத்து விடுவோம் என்று சொன்னால், அவனுக்கு ஒரு வாய் உணவு கிடைத்து விடும். பார்த்தீனியம் செடி பல இடங்களிலே பரவலாகக் கிடைக் கின்றது என்ற செய்தியைப்பற்றி இங்கே பேசினோம். அதைப் பிடுங்கி எறிவ தற்கு வேலையற்ற மனிதனின் இரண்டு கைகளும் துடித்துக் கொண்டிருக் கின்றன. ஆனால், திட்டம் இல்லாத காரணத்தினாலே, கை வெறுமனே இருக்கின்ற காரணத்தினாலே படித்த ஒரு டாக்டர், அதனால் ஏற்படுகின்ற ஒன்றினாலே சாகிறான். இங்கே வாழ வழி இல்லாமல், ஒருவனுக்கு வேலை கொடுக்க முடியாத காரணத்தினாலே, விஷச் செடிகள் வளர்ந்து, இன்னொரு பக்கத்திலே வாழ்வையே முடிக்கின்றது என்பதையும் பார்க்கின்றோம்.

(பிற்பகல் 1-00)

இந்த ஊனமுற்றவர்களுக்கு பல நன்மைகளைச் செய்கிறோம் என்று சொல்லுகிறவர்கள் தயவுசெய்து சில மனுக்கள் வருகிறபோது உடனடியாகக் கவனத்தைச் செலுத்த வேண்டும். இதிலே உங்களுக்கு ஒரு தகவல் இருக்கிறது, அதனை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

12—8—1978-ல் தமிழ்நாடு அரசு பஸ் எம்.டி.கே. 2564 கே. 321 என்று சொல்லப்படுகிற பஸ் ஒரு இளைஞன் மீது ஏறி அவனுடைய முழங்காலுக்குக் கீழே அத்தனை பகுதியும் போய்விட்டது. பதினேழு மாதங்களாக மனுப் போட்டுக் கொண்டிருக்கிறான். பதினேழு மாதங்கள் மனுப் போட்ட பின்னாலும் அவனுடைய மனு, தாழ்மையான மனு, வெறும் தாள் மை ஆன மனுவாகப் போகுமானால் அவனுடைய உள்ளம் எப்படி இருக்கும் என்பதைத் தயவுசெய்து சிந்தித்துப் பார்க்க வேண்டும். எனவே, ஊனம் உற்றவர்களுக்கு மறுவாழ்வு கொடுக்கும் சிந்தனை இருப்பது நமக்கு நல்லது. சிந்தனையோடு இருந்தால் மட்டும் போதாது, செயல் வடிவம் கொடுப்பதற்கு துடிதுடித்துக் கொண்டிருக்க வேண்டும் அதிகாரிகளும், அமைச்சகத்தில் இருப்பவர்களும் என்பதனை இங்கே உங்களுக்குக் குறிப்பிட விரும்புகிறேன்.

ஊனமுற்ற குழந்தைகளுக்குத் தெம்பை ஊட்ட வேண்டியவர்களாக இருக்கிறோம். அந்தத் தெம்பு அவர்களுக்கு எப்போது கிடைக்கும்? இந்தச் சமுதாயம் நமக்காக இருக்கிறது என்று சொல்லுகிற எண்ணம் இருக்க வேண்டும். ஒரு கால் ஊனம் உடையவன் வந்து தேடித் தேடி அவனுக்கு கிடைக்காமல் போகிற நேரத்தில் அவனுக்கு மறுகாலும் ஊனமாகிவிடுமோ என்று சொல்லுகிறபோது—மறுகால் ஊனமாகப் போனால் கூட அவனுக்கு ஏதாவது செய்து விடலாம், வாங்கிக் கொடுத்து விடலாம், உள்ளம் ஊனமாகிப்

போய்விடக்கூடாது, இந்தச் சமுதாயம் நம்மைப் புறக்கணித்துவிட்டது என்று சொல்லுகிற எண்ணம் வந்து விடக்கூடாது. இந்த அரசு நம்மை உதாசீனப் படுத்திவிட்டது என்று சொல்லுகிற எண்ணம் வந்துவிடக் கூடாது. நொண்டி என்பதற்குப் பாரதி விளக்கம் சொல்வான்—உடலில் ஊனம் உள்ள குழந்தை நொண்டி அல்ல; தேம்பி அழும் குழந்தை நொண்டி என்று சொல்வான். ஆக, தேம்பியழும் நிலையை நாம் ஏற்படுத்தி விடுவோம் என்று சொன்னால் இந்தச் சமுதாயமும் நொண்டியாகப் போய்விடும். சமுதாயமே தலை நிமிர்ந்து நடக்க முடியாமல் போய்விடும் என்பதனைச் சொல்ல விரும்புகிறேன். ஆக, பசித்த குழந்தை தேம்பி அழக்கூடிய நிலைமை வந்தாலும் ஒரு சமுதாயத்திலே நொண்டித் தன்மை வந்து விடுகிறது. ஏனென்றால் நொண்டித் தன்மை என்பது உள்ளத்தில் வராமல் பார்த்துக் கொள்ளவேண்டும், உடலிலும் வராமல் பார்த்துக் கொள்ளவேண்டும்.

இதிலே, சத்துணவு, சத்துணவு என்று எந்தெந்த ஆங்கிலப் பெயர்களையோ சொல்லி மக்களுக்குக் கொடுக்கும்போது தமது வீட்டுக்குப் பக்கத்தில் கிடைக்கும் சத்துணவுகளை மக்கள் எந்த அளவுக்குப் பயன்படுத்துவது என்பதற்கு பெரிய பிரசாரம் தேவை. சென்னையில் பெரிய பெரிய பங்களாக்களைப் பார்க்கிறோம். அந்த பங்களாக்களிலே ஏக்கர் கணக்கில் காம்பவுண்ட் சுவர் இருப்பதைப் பார்க்கிறோம். நடுவில் ஒரே ஒரு கத்தாழையை வளர்த்து இது அழகுக்காக இருக்கிறது என்று சொல்கிறார்கள். இந்த நாட்டில், மனிதனுக்குத் தேவையான உணவு இல்லாதிருக்கும் இந்த நாட்டில் நிச்சயமாக வெற்றிடமாகப் போட யாருக்கும் உரிமை இல்லை. அது பட்டணத்தில் இருப்பவர்களாயினும் சரி, அவர்கள் எந்த இடத்தில் இருப்பவர் களாயினும் சரி, அந்த இடத்திலே பயனுள்ள காய்கறிகளைப் பயிரிடும் திட்டம் மட்டுமல்ல, சட்டமே வந்தால் கூட நான் வரவேற்பேன்.

பங்களாக்களிலே கற்றாழைகளை வைத்துக் கொண்டு நன்றாக இருக்கிறது என்று சொல்லுகிற அவர்களுடைய அழகுணர்ச்சிக்கு ஏதோ இரண்டு அடி இடத்தை வைத்துக் கொள்ளட்டும், வேண்டாம் என்று சொல்லவில்லை. பங்களா காம்பவுண்டுகள் அவற்றின் வெறுமையின் மூலம் ஏற்பட்டிருக்கிற வறுமையைச் சுட்டிக் காட்டுகிறது என்பதை உணர்ந்து அந்த இடத்தைப் பார்த்துக் கொள்ள வேண்டும்.

பெரிய பெரிய விளம்பரங்கள் போடுகிறவர்களை நான் கேட்கிறேன்—பக்கம் பக்கமாக விளம்பரங்களைக் கொடுக்கிறவர்களைக் கேட்கிறேன். இந்த அரசாங்கமும் வேண்டுகோள் மூலமாகச் சொல்லலாம். எப்படிச் சொல்லலாம்? ஒரு பெரிய விளம்பரத்தை ஒரு பக்கம் போடுகிறார்கள் என்று சொன்னால்





கீழே ஒரு அரை அங்குலத்தை சமுதாய நலனுக்காகப் பயன்படுத்தட்டும். 'கீரை உடலுக்கு நல்லது' இல்லையா? அது உடலுக்கு நல்லது என்று சொல்லுகிறபோது 'சீரான வாழ்வு பெற கீரையை உணவில் சேருங்கள்'— ஒரு வரியைப் போடுங்கள். அதிலே நமக்கு எந்தவிதமான சிரமங்களும் இல்லை. அதைப் போல் 'சர்க்கரை வியாதி வாராமல் தடுக்க சத்தான பாவைக்காயை உணவில் சேருங்கள்' என்று ஒரு பக்கம் விளம்பரம் போடுகிற பெருமக்கள், பெரிய பெரிய மனிதர்கள், பெரிய பெரிய கம்பெனிகள், இன்னும் சொல்லப் போனால் சினிமா கம்பெனிகள்—அவர்கள் எல்லாம் ஒரு அரை அங்குலத்தை ஒதுக்கி நாட்டு மக்களுக்குத் தேவையான செய்திகளை ஊட்டிக் கொண்டிருக்க வேண்டும். உணவு ஊட்டுவது மட்டுமல்ல, சில உணர்வுகளை ஊட்டுவதும் தேவை என்பதைத் தயவுசெய்து மறந்து விடக் கூடாது. இந்த உணர்வுகளை ஊட்டுவதிலே எல்லோரும் பங்கு கொள்ள வேண்டும், எல்லோரும் கடமையாற்ற வேண்டும். திரைப்படக் கொட்டகைகள் மூலம் இப்படிப்பட்ட காரியங்கள் நடக்க வேண்டும்.

அதைப் போல் பார்க்கிறேன்—தெருக்கள் தோறும் மன்றங்கள். அரசியல் தலைவர்கள் பெயரிலே மன்றங்கள். இந்த அரசியல் தலைவர்கள் பெயரிலே மன்றங்களை ஆசைப்படுபவர்கள் வைக்கட்டும், அதுவும் உயர்ந்த தலைவர்கள் பெயரில் வைக்கட்டும். ஆனால் ஒரு பகுதியிலே "கீரைச் சங்கம்" என்ற ஒன்று வந்து மழை பெய்தால் கீரை விதைகளை வீட்டுக்கு வீடு கொடுக்கிற உறுப்பினர்களைச் சேர்த்து வைத்து ஒரு கீரைச் சங்கம் வரட்டும். மழை பெய்தால் முருங்கைக் கொம்பைக் கொண்டு போய்க் கொடுக்கின்ற "முருங்கைச் சங்கம்" வரட்டும். முருங்கை மன்றம் வரட்டும். இப்படிப்பட்ட மன்றங்கள் வருவது நாட்டு மக்கள் அவ்வளவு பேருக்கும் தேவை. இதன் மூலம் சத்துணவுத் திட்டம் தானே வந்துவிடும். எனவே, நோய் வாராமலே தடுக்கின்ற சூழ்நிலையை நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன். ஒன்றை மறக்காமல் செய்யவேண்டியது நம் அனைவருடைய கடமை, அது எது என்றால் வாழ்க்கையிலே நலிந்து இருக்கின்ற மக்களுக்கு நன்மை செய்ய வேண்டுமென்று எண்ணிக்கொண்டிருக்கின்ற நாம் இன்று கூட பிச்சைக்காரர்கள், விதவைப் பெண்கள், கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்கள், இவர்களுடைய வாழ்விலே புதிய மறுவாழ்வு திட்டங்கள் இல்லை என்பதை மறந்துவிடக்கூடாது. கலப்புத் திருமணம் செய்து கொண்டிருக்கிறவர்கள் அரசினுடைய பரிசுக்காகக் காத்திருக்கிறவர்கள் காத்தே இருக்கிறார்கள். விதவைகள் இருக்கிறார்களே, பாரதிதாசன் சொன்னானே, கோரிக்கையற்றுக் கிடக்குதண்ணே, வேரில் பழுத்த பலா என்று, அந்த வேரில் பழுத்த பலாவை தன்னுடைய மனைவியாக்கிக்

கொண்டிருக்கிறவன் எந்தவிதமான நன்மைகளையும் பெறமுடியாமல் அரசாங்கம் அளிக்கின்ற சலுகைகளைப் பெறமுடியாமல் இருப்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். பிச்சைக்காரர்களை எடுத்துக்கொண்டால் பீச்சிலேயே அவர்களுடைய தொல்லை வந்துவிட்டது, இரவு நெடுநேரத்திற்குப் பின்னால்கூட காற்று வாங்கச் செல்கிறவர்களிடத்திலே பிச்சைக்காரர்கள் வருவதைப் பார்த்தால் அவர்கள் வைக்கப்பட வேண்டிய இடத்திலே வைக்கப்படவில்லை என்பதையும் அரசு நினைவில் கொண்டு சமூக நலத் திட்டம், கால்நடைப் பராமரிப்பு இந்த இரண்டும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்திருக்கின்றன என்ற காரணத்திற்காக—அவை பின்னிப் பிணைந்திருக்கின்றன என்பது மட்டுமல்ல—வருங்கால சந்ததியினருக்கு வாழ்வு அளிக்கிற திட்டங்களை அவைகள் கொடுக்கிறவைகள் என்ற காரணத்திற்காக சமுதாயத்திலே ஊனமுற்றோர், குருடர்கள், செவிடர்கள், ஊமைகள் போன்ற அங்கஹீனமாக இருக்கிறவர்களுக்கு வாழ்வு அளிக்கிற துறை என்ற காரணத்திற்காக நல்ல வகையிலே சிந்தித்து, ஆழ்ந்த வகையிலே சிந்தித்து, நல்லதைச் செய்ய வேண்டுமென்று சிந்தித்து இங்கே இந்தப் பக்கங்களை எழுதியிருக்கிறார்களே, அவை ஏழைகள் பக்கம் போய்ச் சேரவேண்டுமென்ற முறையிலே காரியங்களைச் செய்ய வேண்டுமென்று சொல்லி அமர்கிறேன். வணக்கம்.

* திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய தற்காலிக சபாநாயகர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கைகளை ஆதரித்து என்னுடைய கருத்துக்களை நான் சொல்ல விரும்புகிறேன்.

"ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்"

என்று சொல்லப்படுவதைப் போல் அந்தத் தாய்மையின் அடிப்படையிலே நான் சொல்கிறேன். தந்தை என்று சொல்லவில்லை, அதற்காக நான் ஆண்களைக் குறை சொல்லவில்லை. அந்தத் தாய் என்ற முறையிலே நான் சொல்கிறேன். நேற்றைய தினம் நான் இங்கே சபாநாயகர் அவர்களிடத்திலே சென்று எங்கே பார்த்தாலும் கற்பழிப்பு நடக்கிறது, குழந்தைகளை நரபலி கொடுக்கிறார்கள், பல அக்கிரமங்கள் நடக்கின்றன எங்கள் தாய்க்குலத்திற்கு—நாங்கள் அரிசனச் சமுதாயத்தைச் சேர்ந்த பெண்கள் 3, 4 பேர்கள் இங்கே இருக்கிறோம். இங்கே பெண்கள் அதிகமாக இல்லை—தயவுசெய்து ஒரு ஐந்து ஐந்து நிமிடம் கொடுங்கள், நாங்கள் பேசுவது எல்லாம் 13 வயதுக் குழந்தை, அந்தக் குழந்தை பட்டப்பகலிலேயே கற்பழிக்கப்படுகிறது, தன்னுடைய கணவனோடு படுத்துத் தூங்கிக்கொண்டிருந்த ஒரு குடும்பத்தைச் சேர்ந்த பெண்ணை பல வெறியர்கள் தூக்கிக்கொண்டுபோய் 7 பேர்கள், 8 பேர்கள்



என்று அவளுடைய கற்பைச் சூறையாடி அவள் சின்னாபின்னமாக்கப் படுகிறாள், அதற்காக அவள் தன்னுடைய உயிரையே மாய்த்துக்கொள்ளக் கூடிய சூழ்நிலை வருகிறது. ஆகவே நான் ஏற்கெனவே பேசியிருப்பதைப் போன்று யார் அந்தத் தவறைச் செய்தார்களோ அவர்களுக்கு தூக்குத் தண்டனை கொடுக்கவேண்டுமென்று பேசவேண்டுமென்ற காரணத்தால் கனம் சபாநாயகர் அவர்களிடம் எனக்கு ஐந்து நிமிடம் கொடுங்கள், என்னுடைய அன்புச் சகோதரிகள் மாற்றுக்கட்சியிலே இருந்தாலும் அவர்களுக்கும் ஐந்து நிமிடம் கொடுங்கள் என்று கெஞ்சி கேட்டு பணிந்து கேட்டுக்கொண்டதால் நேற்றையதினம் ஐந்து நிமிடம் கொடுக்கப்பட்டது.

இன்றைக்கு இப்பேர்ப்பட்ட ஒரு நல்ல மானியக் கோரிக்கையின்மீது மாற்றுக் கட்சியைச் சேர்ந்தவர்கள்—1957-லிருந்து நான் சட்ட மன்ற உறுப்பினராக இருந்திருக்கிறேன், மதிப்பிற்குரிய எதிர்க் கட்சித் தலைவராக இருக்கிறவரும் ஏழு ஆண்டுகள் முதலமைச்சராக இருந்தவர், சட்ட மன்றத்திலே இருந்திருக்கிறார்கள் இவர்கள் எல்லாம் நல்ல விளக்கங்களைச் சொல்வார்கள் என்று எதிர்பார்த்தேன். அவர்கள் எல்லாம் பல நல்ல காரியங்களை பெண்களுக்காக எடுத்துச் சொல்வார்கள் என்று நினைத்தேன். தமிழ்நாட்டிலே இன்றைக்கு அமைச்சராக இருக்கிறார்களே இவர்களைப் பார்த்து தமிழ்நாட்டிலே சட்டமன்றத்திற்கு அனுப்பிவைத்தார்களே—தாய்க் குலத்தை சேர்ந்த பல மக்களை ஈன்றெடுத்துக் கொடுத்தவள் என்ற காரணத்தால்—தாய்மைக்கு பெருமைகொடுக்கிற முக்கியமான பெரிய மானியக் கோரிக்கையின்மீது பேசாமல், அதில் பேசுவதற்குரிய நேரத்தை வீணடிக்கக் கூடிய அளவுக்கு இங்கே பேசிவிட்டு அவர்கள் எல்லாம் இங்கே வாக்-அவுட் செய்தார்கள் என்பதை நினைத்துப் பார்த்து, தாய் என்ற அடிப்படையிலே நான் கேட்க ஆசைப்படுகிறேன், தாய்க்குலத்தின் சார்பிலே நான் உங்களை மன்றாடிக் கேட்க விரும்புகிறேன், இதற்காகத்தானா தாய்மார்கள் உங்களைப் பெற்று, உங்களை ஆளாக்கி, ஈ கடிக்காமல், எறும்பு கடிக்காமல் உங்களை வளர்த்து, சீராட்டிப் பாராட்டிப் பக்குவப்படுத்தி உங்களை வளர்த்தார்களா என்று கேட்க ஆசைப்படுகிறேன். இவ்வளவு பெரிய சிறப்பான மானியக் கோரிக்கை—காங்கிரஸ் அரசாங்கம் இருந்தபோதும் இதிலே நல்ல காரியங்களைச் செய்தார்கள், நான் இல்லையென்று சொல்லவில்லை—இருந்தாலும் இந்த அளவுக்கு இந்தத் துறையை தனி மானியமாக வைத்து தனியாக ஒரு நாளை ஒதுக்கி அதைப் பேசக்கூடிய நிலைமையை உண்டாக்க வில்லை. அதிலும் குறிப்பாக நம்முடைய முதலமைச்சர் அவர்களைப்பற்றி நான் சொல்லாமல் இருக்கமுடியாது. தாய்க்குலம் இன்றைக்கு உங்களை நம்பிக்

[திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்] [1980 ஜூலை 26

(பிற்பகல் 1-10)

கொண்டிருக்கிறது, இன்னும் என்னென்ன வழிவகைகளைச் செய்வீர்கள் என்று. எத்தனை பெண்களுக்கு, 35 வயது, 40 வயது ஆகியும் கூட அவர்களுக்கு வேலையில்லாமல் சித்திரவதைப்படுகின்ற நிலைமை இருக்கிறது. கல்யாணம் செய்து கொள்ளப் போகின்ற மாப்பிள்ளை கேட்பது, இந்தப் பெண் வேலை பார்க்கிறாளா ? 500 ரூபாய், 1,000 ரூபாய் சம்பளம் வாங்குகிறாளா ? எங்களுக்கு டவுரி கொடுப்பதைப் பணமாகக் கொடுக்க வேண்டாம், மோட்டார் கார், ஸ்கூட்டர் என்று பொருளாக வாங்கிக் கொடுக்க முடியுமா என்ற கேள்விகளைத்தான் கேட்கக்கூடிய அவல நிலை, கீழான நிலை தமிழகத்தில் இருக்கிறது.

எத்தனையோ பெண்கள், சட்டமன்றத்தில்கூட, பல பெண்கள் டெம்பரரியாக வேலை செய்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் நிரந்தர வேலை கொடுக்க வேண்டும். நாற்பது வயதுக்கு மேலாகியும் கல்யாணம் ஆகாத நிலைமைகள் இருக்கின்றன. இந்தச் சூழ்நிலைகளை மாற்றிக் கொடுக்க, இந்த அரசுக்கு நல்ல யோசனைகளைச் சொல்லுகின்ற அளவிற்கு மாற்றுக் கட்சிக்காரர்கள் இருப்பார்கள் என்று நான் நினைத்தேன். ஆனால் அவர்கள் இப்படிப்பட்ட மானியத்தில் பங்கெடுத்துக் கொள்ளாமல் வெளியே சென்றிருப்பதைப் பார்க்கின்றபொழுது அவர்களைப் பெற்றெடுத்த தாய்க்குலம் கண்ணீர் வடிக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இவ்வாறு அவர்கள் வெளியே சென்றது வருந்தத் தக்கது என்பதைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

தினசரி எங்களிடத்தில் வருகிறார்கள், என்னுடைய கணவர் என்னை விட்டுவிட்டுப் போய்விட்டார், எனக்கு நான்கு குழந்தைகள் இருக்கின்றன, எனக்கு ஐந்து குழந்தைகள் இருக்கின்றன, எனக்கு இரண்டு குழந்தைகள் இருக்கின்றன, என்னுடைய கணவர் இறந்து இரண்டு மூன்று ஆண்டுகள் ஆகிவிட்டன, பிழைக்க வழியில்லை என்று சொல்லிக்கொண்டு தினசரி பெண்கள் வருகிறார்கள். ஊரிலேயும் வந்தார்கள், இப்பொழுது சட்டமன்றத்திற்கு வந்தபொழுதும், தினசரி கியூவிலே நிற்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு வழிவகை செய்யும் விதத்தில் நல்ல பல திட்டங்களைப் போட்டு, பெண்களின் வாழ்வை உயர்த்த, பெண்கள் மானத்தோடு வாழ வேண்டுமென்று, பெண்களைச் சின்னாபின்னமாக்காமல், அவர்கள் நல்ல முறையிலே வாழவேண்டுமென்ற முறையிலே திட்டம் போட்டிருப்பதைப் பார்த்து மகிழ்ச்சியடைகிறேன், பெருமைப்படுகிறேன், பாராட்டுகிறேன், வரவேற்கிறேன்.



1980 ஜூலை 26] [திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்]

அதேநேரத்தில் இந்தப் பெண்களுக்கு வேலைவாய்ப்பு கொடுப்பதைப் பொறுத்தவரையில் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். 374 பஞ்சாயத்து யூனியன்கள் இருக்கின்றன. ரெஜிஸ்தர் செய்யப்பட்ட மாதர் சங்கங்கள் ஒவ்வொரு யூனியனிலும் இருக்கின்றன. நோட்டு புத்தகங்களுக்காக பத்து கோடி, பதினைந்து கோடிக்குப் பேப்பர் வாங்கி தனியாரிடத்திலே கொடுத்து, அவர்கள் பைண்டிங் செய்து, அவர்களிடத்திலேயிருந்து விலைக்கு வாங்கும் அந்த நிலைமைகளை மாற்றி, ஒவ்வொரு யூனியனிலும் கூட்டுறவு முறையிலே, பெண்களுக்கு என்று ஸ்தாபனங்களை ஏற்படுத்தி, அந்தந்தப் பஞ்சாயத்து யூனியன்களைச் சேர்ந்த பெண்கள் மூலம் பைண்டிங் செய்வதன் மூலம் நிச்சயமாகப் பல ஆயிரக்கணக்கான பெண்களுக்கு, இலட்சக்கணக்கான பெண்களுக்கு வேலைவாய்ப்பு கொடுத்தவர்கள் ஆவோம் என்பதனை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதற்கடுத்தபடியாக, இன்றைக்கு நாம் தையல் மெஷின்கள் கொடுக்கின்றோம். மாதர் சங்கங்களுக்குக் கொடுக்கின்றோம். அதைக்கூட, அரிஜன் வெல்ஃபேர் போர்டின் மூலம், பள்ளிக்குழந்தைகளுக்கு சீருடை வழங்குகின்றோம். சோஷியல் வெல்ஃபேர் போர்டிலே நான் மெம்பராக இருந்த பொழுது ஒரு நிலைமை வந்தது. என்னவென்றால், ஒரேயொரு தையல்கடைக்காரருக்கு ஒன்றேகால் இலட்சம் ரூபாய் தையல் கூலியாகக் கொடுக்கப்பட்ட நிலைமை வந்தது. இப்படி ஒன்றேகால் இலட்சம் ரூபாய் ஒரேயொரு தையல்காரருக்குக் கொடுப்பது என்ற நிலைமை வராதபடி, இப்படிப்பட்ட மாதர் சங்கங்களின் மூலம், ஒவ்வொரு யூனியனிலும் முப்பதோ அல்லது ஐம்பதோ மெஷின்களை வாங்கிக் கொடுத்து, அரிஜன் குழந்தைகளுக்குத் தைக்கக் கொடுக்கின்ற துணியை, போலீஸ் இலாக்காவிற்குத் தைத்துக் கொடுக்க வேண்டிய துணியை, ஆஸ்பத்திரிகளுக்கு வேண்டிய துணியை, பஸ் ஊழியர்களுக்குத் தேவைப்படுகின்ற துணியைத் தைத்துக் கொடுக்கின்ற வேலையை இதன் மூலமாகத் தைக்கச் சொல்லி, அதை வாங்கி விநியோகம் செய்தால் நிச்சயமாக பெண்களுக்கு வேலைவாய்ப்பு கொடுத்தவர்கள் ஆவோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதற்கடுத்தபடியாக, சத்துணவு பற்றிச் சில திட்டங்களைப் போட்டிருக்கிறோம். அதைப்பற்றி ஜனங்களுக்குச் சரியாகத் தெரிவதில்லை. ஐ.சி.டி. எஸ் ஸ்கீம் என்று இருக்கிறது குழந்தைகளுக்காக. ஆனால் இவைகளைப்பற்றியெல்லாம் செய்யப்பட்டிருக்கின்ற விளம்பரங்கள் போதாது. காந்தி-காமராஜ் தேசீய காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. குமரி அனந்தன் அவர்கள்கூடச் சொன்னார்கள். சத்துணவுத் திட்டத்தைப் பற்றி விளம்பரம் போதாது என்று. படக்காட்சி நடக்கின்ற கொட்டகைகளிலும் இதற்கு இடமில்லை. எனவே,

அங்கு இன்டர்வெலின்போது சத்துணவு பற்றியும், குழந்தைகளுக்கு என்னென்ன ஆகாரம் கொடுக்கப்பட வேண்டும், கர்ப்ப ஸ்திரிகளுக்கு என்னென்ன கொடுக்கப்பட வேண்டும், கிராமங்களில் என்னென்ன காய்கறிகளின் மூலம் இந்தச் சத்துணவு கிடைக்கிறது என்பதைப்பற்றியெல்லாம் விளம்பரப்படுத்த வேண்டும். அதைப்போலவே இப்பொழுது ஆரம்பித்திருக்கிறோமே பல இன்ஸ்டிடியூஷன்கள், அதைப்பற்றியும் அங்கு விளம்பரம் செய்ய வேண்டும். கணவனை இழந்த பெண்கள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், முடமாகியிருக்கும் பெண்கள், கண் தெரியாதவர்கள் ஆகியவர்களுக்காகத் திட்டம் போட்டுப் பல ஹாஸ்டல்களை வைத்திருக்கிறோமே, இவைகளெல்லாம் எங்கெங்கு இருக்கின்றன, எப்படியெப்படி இருக்கின்றன என்பதைப்பற்றியெல்லாம் படக்காட்சியின் மூலமாக நிச்சயமாக விளம்பரம் செய்தாக வேண்டும். இதனால், ஆங்காங்கே கஷ்டப்பட்டுக் கொண்டிருப்பவர்கள் சுலபமாக இவைகளைப்பற்றித் தெரிந்துகொண்டு பலன் அடையவும், அரசியலில் உள்ள எங்களைப் போன்றவர்கள் யாரையும் கேட்டு அலைந்து கொண்டிராமல் உடனடியாகச் சேர்ப்பதற்கு வாய்ப்பாகவும் இருக்கும் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதற்கடுத்தபடியாக, 5 வயதிலிருந்து 18 வயதிற்குள் உள்ள அனாதைக் குழந்தைகளை அந்த சென்டர்களில் சேர்க்கிறோம். அதற்கு சென்ட்ரல் எய்ட் 90 சதவிகிதம் இருக்கிறது. நாம், 10 சதவிகிதம் கொடுக்கிறோம். அந்தமாதிரி சென்டர்களை, ஒவ்வொரு ஜில்லாவிற்கு ஒன்று என்று நாம் அமைத்தோமானால், அது சாலச் சிறந்ததாக இருக்கும்.

அதேபோல், ஃபாஸ்டர் கேர் சர்வீஸ் சென்டர்கள் மூன்றும் சென்னையிலேயே இருக்கின்றன. அதற்கும் மத்திய அரசு 90 சதவிகிதம் மானியமாகக் கொடுக்கிறது. அவைகளை ஒரே இடத்திலே வைக்காமல், மதுரை, கோவை போன்ற இடங்களிலே வைக்க நாம் ஏற்பாடு செய்தால், இன்னும் சாலச் சிறந்ததாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

பெண்களுக்கு மறுவாழ்வுத் திட்டம் என்று கொடுத்திருக்கிறார்கள். அதிலே, கணவனால் கைவிடப்பட்டவர்கள், குழந்தைகளோடு இருக்கக்கூடிய விதவைகள் எல்லாம் எவ்வளவு பேர்கள் இருக்கிறார்கள் என்று அந்தந்த யூனியனிலே கணக்கெடுக்கச் சொல்லி, பணம் கொடுத்தால், பாதுகாப்போடு வாழ்க்கை நடத்தக்கூடியவர்கள் எத்தனை பேர் என்று பார்த்து, அதில் இளம் வயதைச் சேர்ந்தவர்களைப் பிரித்து, 30 வயதுக்கு, 40 வயதுக்குக் கீழே உள்ளவர்களுக்கு சர்வீஸ் சென்டரிலே தொழில் கற்றுக் கொடுத்தால், நிச்சயமாக அந்த பெண்கள் எந்த விதமான தவறும் செய்யாமல் குழந்தைகளை வளர்க்க வாய்ப்பிருக்கும் என்று நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.





அடுத்து, கால்நடை பராமரிப்பு. கால்நடைப் பராமரிப்பின்கீழ், நாம் நிறைய கால்நடைகளை வாங்கிக் கொடுக்கிறோம். அதிலே பல தவறுகள் நடக்கின்றன என்று நான் ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். நாம் யாருக்காக, ரூ. 500, 1,000 இனாமாகக் கொடுக்க வேண்டுமென்று திட்டமிடுகிறோமோ, அந்த இனாமை வாங்க வேண்டிய அரிசன ஏழை மக்கள், பிற சமூக ஏழைகள் அதன் பலனை பெறமுடியாமல், இடையிலே இருக்கக்கூடியவர்கள் அடித்துக் கொண்டு போய்விடுகிறார்கள். தலைவர்களும், டைரக்டர்களும், அதோடு மாத்திரமல்ல, கீழே இருக்கிற அதிகாரிகளும் அந்தக் கொள்ளை அடிக்கிறார்கள். அந்தக் கொள்ளை நடக்காத முறையிலே நாம் சிறப்பான முறையிலே கண்காணித்து, தவறு செய்தவர் யார் என்று தெரிந்தால், அவர்களை உடனடியாக ஜெயிலுக்கு அனுப்புவதோடு மட்டுமல்லாமல், அவர்களது சொத்தைப் பறிமுதல் செய்து, அவர்கள் கொள்ளை அடித்த பணத்தைப் பெறவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கால்நடைகளுக்குத் தீனியில்லாமல் ரொம்பச் சிரமமாக இருக்கிறது. அதற்காக, தீனியாக புல், யானைப் புல், என். பி. 21 புல்கள் எல்லாம் இருக்கின்றன. பஞ்சாயத்துக்களிலே, எங்கெங்கே கண்மாய் இருக்கிறதோ, எங்கெங்கே புறம்போக்கு நிலம் இருக்கிறதோ அங்கு அந்தப் புல்களை வளர்த்து, மாட்டுத் தீவனம் கேட்பவர்களுக்கு, குறைந்த விலைக்குக் கொடுத்தால், சாலச் சிறந்ததாக இருக்கும் என்று நான் கூறிக்கொள்கிறேன்.

ரின்டர்பெஸ்ட் நோய் வந்தால் மாடு உடனே செத்துப் போய்விடுகிறது. இப்பொழுது அதைக் கட்டுப்படுத்தியிருக்கிறோம். ஆகவே, ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும் ஒவ்வொரு டாக்டர் போடுவதோடு மாத்திரமல்லாமல், கால்நடை இன்ஷூரன்ஸ் திட்டத்தை எல்லா இடங்களிலும் தீவிரமாக அமுல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த அமைச்சரவை, இந்த ஆண்டு ஏழைப் பெண்களுக்கு, வாழ்வை இழந்த பெண்களுக்கு ஏராளமான திட்டங்களைப் போட்டிருக்கிறார்கள். இவ்வளவு சிறப்பான திட்டங்களைப் போட்டிருக்கிற அமைச்சரவையையும், முதலமைச்சரையும், அமைச்சரையும் பாராட்டுவதோடு பெண்களுக்கு வேலை வாய்ப்பை அதிக அளவிலே ஏற்படுத்திக் கொடுத்து, அவர்கள் வாழ்விலே எந்தவிதக் கோளாறும் இல்லாமல் வாழ வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

* திரு. கோவைத்தம்பி : மாண்புமிகு பேரவைத் தற்காலிகத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கால்நடை, சமுதாய நலத்துறை அமைச்சர் கொண்டு வந்திருக்கிற இந்த மானியக் கோரிக்கையை வரவேற்றுப் பாராட்டி

என்னுடைய ஒருசில கருத்துக்களை அவை முன்பு வைக்க நான் கடமைப் பட்டிருக்கிறேன். கால்நடையைப் பற்றி, அவைகளுடைய எண்ணிக்கையைப் பற்றி கொள்கை விளக்கப் புத்தகத்தில் மாண்புமிகு அமைச்சரவர்கள் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். கால்நடைப் பராமரிப்பு என்ற முறையில் எதிர்காலத்தில் ஏற்படுத்த இருக்கின்ற திட்டங்களுக்கு ஒருசில ஆலோசனைகளை இந்த மாமன்றத்திற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்திற்கும் கொண்டு வர நான் கடமைப்பட்டிருக்கிறேன். தற்பொழுது செயல்படாமல் மூடிக் கிடக்கும் கால்நடை கிளை மருந்தகங்களை உடனடியாகத் திறந்து, கிராமப்புற மக்கள் உடனடி வசதி பெற, கால்நடை ஆய்வாளர் பயிற்சியைத் துவக்குதல் அவசியம் என்பதை நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். இதனால், மேற்படிப்புக்குச் செல்ல இயலாத நிலையில் உள்ள இளைஞர்கள் 750 பேருக்கு வேலை கிடைக்கும் வாய்ப்பு இந்தத் துறையிலே இருக்கிறது என்பதையும் தமிழகம் முழுவதும் 500-க்கு மேற்பட்ட கூடங்கள் மூடிக் கிடக்கின்றன என்பதையும் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 1-20)

உயர் கல்வி, தொழில் கல்வி பயிற்சி அளிக்கும் முறையில் ஓராண்டு பயிற்சி பெற்றுப் பணியைத் தொடங்கும் கால்நடை ஆய்வாளர்களுக்கு அவ்வப்போது புதிதாக அறிவிக்கப்படுகின்ற வளர்ச்சி அறிவு பெறவும், பொது மக்களோடு தொடர்பு கொள்ளவும், சிறப்பாகப் பணியாற்றவும், பீஸ் பதனிடுதல், மருத்துவம் போன்ற பயிற்சிகளைப் பெறவும், இன்று கிராம சேவக்குகளாக, கிராம நல அலுவலர்களாக இருக்கின்றவர்கள் பெற்றிருக் கிறார்களோ அந்தப் பயிற்சியையும் கூட இவர்களுக்கு அளிக்கலாம் என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயமாகும்.

கிளை மருந்தகங்களில் போதிய மருந்துகள், உபகரணங்கள் இன்மையால் பணியாற்றும் கால்நடை ஆய்வாளர்களும், பொது மக்களும் திருப்தி அடையாத சூழ்நிலையில் இருக்கிறார்கள் என்பதையும் அவை இல்லாததால் அங்குள்ள பொது மக்கள் 5 மைல் 10 மைல் செல்லவேண்டிய கட்டாயம் இருக்கிறது என்பதையும் இந்தக் குறைகளைப் போக்குவதற்கு அமைச்சர் அவர்கள் முயற்சிக்கவேண்டும் என்று இந்த நேரத்தில் நான் பணிவோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.





பல்வேறு மாவட்டங்களில் 7 மைல் முதல் 10 மைல் வரையில் சென்று பொதுமக்கள் பயன்பெறும் வகையில் கால்நடை மருத்துவ நிலையங்கள் இருக்கின்றன. அவைகளை எல்லாம் போக்கி குறுகிய கட்டத்திற்குள், வட்டத்திற்குள் கால்நடை அலுவலகங்களைத் திறக்கவேண்டும் என்று பணிவோடு வேண்டிக் கொள்கிறேன்.

வேளாண்மையும், கால்நடை வளர்ப்பும் நன்கு வளம்பெற கோவை மாவட்டத்தில் தீவிரக் கால்நடை அபிவிருத்தித் திட்டம் செயல்படுத்தி. தஞ்சை, திருச்சி போன்ற மாவட்டத்தில் இருப்பதைப்போல ஏற்படுத்தித் தர வேண்டும் என்று அமைச்சர் அவர்களைப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

இவைகளுக்கும் மேலாக ஒரு சில கருத்துக்களை இந்த மாமன்றத்தில் வைப்பதற்கு நாங்கள் கடமைப்பட்டிருக்கிறோம். இங்கே பேசிய உறுப்பினர்கள் கூட தங்களுக்கு இருக்கிற அறிவு வளர்ச்சியைப் பெற்று தாங்கள், ஆதரிக்கின்ற ஆதரவாளர்களைப் பற்றி, ஆய்வாளர்களா, இல்லை படித்துப் பட்டம் பெற்ற டாக்டர்களா என்ற பிரச்சினையில் ஈடுபட்டார்கள், என்பதையும் புத்திசாலித் தனமாக அரசு அலுவலர்கள் அரசியல்வாதிகளை இந்தத் துறையிலே நாடி இருக்கிறார்கள் என்பதையும் நம்மைப் போன்றவர்கள் நன்றாக உணர்ந்திருக் கிறார்கள் என்பதை இந்த மாமன்றத்தில் நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இதில் ஒரு விசித்திரம் என்னவென்றால் டாக்டர் பட்டம் பெற்றவர்கள் கம்பவுண்டர்களாகப் பணியாற்றுவதற்கும், கம்பவுண்டர்கள் டாக்டர்களாகப் பணியாற்றுவதற்கும் முயற்சிக்கிறார்கள் என்பதுதான் இதன் முடிவு, என்பது என்னுடைய அபிப்பிராயம்.

எம்.பி.பி.எஸ். பட்டம் பெற், வர்கள் நாங்கள் கம்பவுண்டர்களாக இருக்க வேண்டும் என்றும், நாங்கள் 20 ஆண்டுகளாகக் கம்பவுண்டர்களாக இருக்கிறோம் அதனால் நாங்கள் டாக்டராக வேண்டும் என்ற நிலையில் போராடுவதைப்போல, இந்த அளவிலே படித்துப் பட்டம் பெற்ற டாக்டர்கள் போராடுகிறார்கள் என்பதையும், இந்தப் போராட்டத்தின் மீது அரசு எப்படி நடவடிக்கை எடுத்தாலும் இது அரசு ஊழியர்களுக்கு சாதகமாக இருக்கும் என்பது எனது அபிப்பிராயம். போராட்டம் என்ற பெயரால் கடந்த காலகட்டத்திலே நிர்வாக இயந்திரத்தை ஸ்தம்பிக்கச் செய்த அவர்களை இந்த அரசு விடக்கூடாது என்பதை நான் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். கிராமப் புறங்களிலே வாழ்கின்ற எங்களைப் போன்றவர்கள் இந்தப் போராட்டத்தின் பிரதிபலிப்பான கடந்த காலகட்டத்தில் எப்படி அனுபவித்தோம் என்பதை இந்த அரசுக்கும் அமைச்சரின் கவனத்திற்கும் கொண்டு வரவேண்டியது என் கடமை. கோப்புகள் என்பதும், அரசு

ஆணைகள் என்பதும், ஜனநாயகத்தில் தேர்ந்தெடுக்கப்படுகின்ற ஒரு ஆட்சி கொடுக்கின்ற ஒரு உத்தரவு என்பதும், வெறும் காகிதங்கள் அல்லது கோப்புகளாக வெள்ளை பேப்பரிலே கையால் எழுதப்பட்ட கறுப்புக் கோடுகளாகக் கருதாமல் அவைகள் ஜீவன்களாக, உயிருள்ள ஜீவன்கள் என்று நினைக்கப்பட்டு அரசு அலுவலர்கள் பணியாற்றினால்தான் அந்தத் திட்டங்களை மக்களுடைய வாக்குகளைப் பெற்று இந்த மாமன்றத்திற்கு வந்திருக்கின்ற ஆட்சி நிறைவேற்ற முடியும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இதை நான் ஏன் குறிப்பிடுகிறேன் என்றால், பேரறிஞர் அண்ணா அவர்கள் 1967-லே ஆட்சிப் பொறுப்பை ஏற்ற உடனே ஒரு நிகழ்ச்சிக்கு சென்றிருந்தார்கள். அந்த நிகழ்ச்சியில் சைதாப்பேட்டை கால்நடை மருந்தகத்தை திறந்து வைத்து அண்ணா அவர்கள் பேருரை ஆற்றினார்கள். அப்போது குறிப்பிட்டார்கள், "இன்றைய இந்தியாவின் பொருளாதார தன்மையின் படி, தமிழக அரசின் நிதி ஒதுக்கீட்டின்படி, கால்நடை மருந்துகளை நவீன முறையில் வழங்குவதற்கு செலவு அதிகமாகும். அந்த செலவைச் சரிகட்ட வேண்டுமானால், கால்நடைத் துறையில் இருக்கின்றவர்கள், மூலிகைகளைப் பயன்படுத்தி, கிராமங்களிலே கடந்த காலங்களில் பயன்படுத்தியதைப்போல சித்த வைத்தியத்தின் மூலமாக மருத்துவம் செய்வது போன்ற ஒரு நிலைமையை அரசுத் துறையில் இருக்கின்றவர்கள் ஆலோசித்து முயற்சி எடுத்து, கால்நடைகளுக்குச் சித்த வைத்திய முறைப்படி சிகிச்சை அளிக்கவேண்டும்" என்று சைதாப்பேட்டையில் 1967-லே அண்ணா அவர்கள் சொன்னார்கள்.

நாட்டுக்கு வந்த புதிய முதலமைச்சர் என்ற அடிப்படையில் மிக வேகமாக கால்நடைத் துறையில் பணியாற்றும் அதிகாரிகள் டப்பாக்களில் சுக்கையும் மிளகையும் அடைத்து வைத்து, ஒவ்வொரு கால்நடைப்பண்ணையிலும் வைத்தார்கள். காலப்போக்கில் அவர் சொன்ன உத்தரவிற்கு சுற்று வட்டாரத்தில் உள்ள அதிகாரிகள் ஆர்வம் காட்டாததால் அந்தத் திட்டம் பெற வேண்டிய பரிணாம வளர்ச்சியைப் பெறமுடியவில்லை.

குறிப்பாக, கால்நடைகளுக்கு வயிற்றில் பொறுமல் என்று சொன்னால், 50 பைசா கொடுத்து சுக்கும், மிளகும் வாங்கி, அரைத்து கால்நடைகளுக்குக் கொடுத்தால் அந்தப் பொறுமல் நின்று விடும். அதற்கு பதிலாக அலோபதிக் மருத்துவ முறையில் பல்கித் ஜிஞ்சர் வாங்கிக்கொடுத்தால் அதன் விலை ரூ. 10, 50 பைசா செலவில் சித்த வைத்திய முறைப்படி குணப்படுத்த வேண்டிய ஒரு நோய்க்கு ரூ. 10 செலவு செய்யக்கூடிய முறையில் நம்முடைய



தமிழகத்தின் பொருளாதாரம் இல்லை என்பதை நாம் அறிந்துள்ள காரணத்தால், சித்த வைத்திய முறைகளில் கால்நடைகளுக்கு வரும் நோயை குணப்படுத்தவேண்டும் என்று அதனை ஊக்குவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சமுதாய மறுமலர்ச்சி பற்றி மாண்புமிகு பெண் உறுப்பினர் குறிப்பிடும் போது, வெளிநடப்புச் செய்தவர்களைப்பற்றி வேதனையோடு குறிப் பிட்டார்கள். தாய்க்குலத்திற்காகத்தானே நாங்கள் பேசினோம் என்று குறிப்பிட்டார்கள். இந்தத் தமிழக மக்கள் நாம் சில நல்ல திட்டங்களை நிறைவேற்றுவோம் என்ற நம்பிக்கையில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை பதவிக்கு அனுப்பியிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் நாங்கள் காரியம் செய்து கொண்டு இருக்கிறோம். திட்டமிட்டு எதையாவது ஒரு காரியத்தைச் செய்து முடிக்கவேண்டும் என்ற எண்ணத்தில் உள்ளே வந்து இருக்கின்ற என்னைப்போன்றவர்கள் திட்டமிட்டுப் பணியாற்று கிறோம். யார் யார் எந்தெந்தத் திட்டத்தோடு பணியாற்றவேண்டும் என்று நினைத்துப் பணியாற்றுகிறார்களோ அவர்கள் அந்தந்தத் திட்டங்களை நிறைவேற்றுகிற வகையில் மகிழ்ச்சி அடைகிறார்கள்.

அந்த அடிப்படையில் தாய்மார்களானாலும் சரி, விதவைகள் ஆனாலும் சரி, கைம்பெண்கள் என்று அழைக்கப்படுகிற, அந்தப் பெண்களானாலும் சரி, இந்தச் சர்க்கார் அவர்களுக்குச் செய்யவேண்டிய வசதிகள் அத்தனையும் செய்யவேண்டும் என்று கேட்டு, அந்த மறுவாழ்வுத் திட்டம் சீரும், சிறப்பும் பெறுவதற்கு குழந்தைகள் காப்பகம், சத்துணவுத் திட்டம், கைம்பெண் காப்பாற்றும் திட்டம் ஆகியவற்றைச் சிறந்த முறையில் நிறைவேற்ற முயற்சி எடுத்து ஆவன செய்யவேண்டும் என்று கேட்டு விடைபெறுகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் கால்நடை, சமூக நலத்துறை, ஆகிய வற்றின் மீதான மானியக் கோரிக்கை பற்றி பாராட்டியும், குறைத்தும் பேசி னார்கள். பாராட்டியதைக் கேட்டு நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். குறைகளைப் போக்க முயற்சிகளை மேற்கொள்வேன் என்பதை இந்த அவை முன் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சி அடைவதற்கு கால்நடை மிகவும் முக்கியமானதொன்றாகும். கிராமப்புறங்களின் பொருளாதார முன்னேற்றத் திற்கும், கிராம முன்னேற்றத்திற்கும் கால்நடைச் செல்வம் முக்கிய பங்கு

வசிக்கிறது. ஆகவே, ஆடு, மாடு, கோழி ஆகியவற்றை லாபகரமான முறையில் செய்வதற்கு நோய் நீக்கப் பணிகள், இனவிருத்திப் பணிகள், ஆகியவை முக்கிய மானது. அதை மனதில் கொண்டு நமது தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்கள் தமிழகத்தில் ஆங்காங்கு மருத்துவமனைகளை, குறிப்பாக கால்நடை மருத்துவமனைகளை ஏற்படுத்த வேண்டும் என்று கூறி, இந்த ஆண்டு 1980-81-ம் ஆண்டில் கால்நடை பராமரிப்புத் திட்டத்திற்காக 15.19 கோடி ரூபாய் ஒதுக்க திட்டமிடப்பட்டுள்ளது.

சில மாண்புமிகு உறுப்பினர்கள் கால்நடை செயற்கை முறை கருவூட்டல் திட்டத்தைப்பற்றி சொன்னார்கள். கால்நடை செயற்கை முறை கருவூட்டல் முறை வெற்றிகரமாக கால்நடை மருத்துவ கிளை நிலையங்களில் செயல் படுத்தப்பட்டு வருகிறது.

(பிற்பகல் 1-30)

தமிழ் நாட்டில் 509 கால்நடை மருத்துவ மனைகளும் 2,906 கிளை நிலையங் களும் செயல்பட்டு வருகின்றன. கால்நடைகளுக்கு ஏற்படுகின்ற வெக்கை நோய் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள கால்நடை நோய் தடுப்பு நிறு வனம் செயல்படுகிறது.

அடுத்து, மாண்புமிகு உறுப்பினர்கள் சிலர் கால்நடை மருத்துவமனைகளில் உள்ள மருந்துகள் பிரச்சனைகளைப்பற்றிச் சொன்னார்கள். இராணிப் பேட்டையில் உள்ள கால்நடை நோய்த் தடுப்பு மருந்து நிலையம் 28 வகையான மருந்துகளை தயாரிக்கிறது. ஆண்டு ஒன்றுக்கு கால்நடை மருத்துவமனைக்கு ரூபாய் 15,000 பெறுமானமுள்ள மருந்துகளும், மருத்துவ நிலையத்திற்கு ரூபாய் 10,000 பெறுமானமுள்ள மருந்துகளும் வழங்கப்படுகிறது. கிளை நிலையத்திற்கு ரூபாய் 1,500 பெறுமானமுள்ள மருந்துகள் ஆண்டுதோறும் வழங்கப்படுகிறது.

அடுத்தபடியாக, கால்நடை ஆயுள் காப்புறுதித் திட்டம்பற்றி பல உறுப் பினர்கள் கூறினார்கள். கால்நடை இறப்புகளினால் ஏற்படும் நஷ்டத்தைத் தடுக்க கால்நடை காப்புத் திட்டத்தை நல்லமுறையிலே மக்கள் அறிந்து கொள்ளவும் தமிழக அரசு தக்க முயற்சி செய்து வருகிறது.

அடுத்து, ஊசி போடுவதற்கு ஒரு ரூபாய் வாங்கக் கூடாது என்று உறுப் பினர்கள் பலர் கூறினார்கள். செயற்கை முறை இனப்பெருக்கத்திற்கு ஊசி போடுவதற்கு ஒரு ரூபாய் மட்டும் வசூல் செய்யப்படுகிறது ; இது வருவாயை அடிப்படையாகக் கொண்டு வசூல் செய்யப்படவில்லை என்பதை குறிப்பிட விரும்புகிறேன்.



கன்று கன்றுகளை வளர்த்து, விரிவுபடுத்தும் திட்டத்தின்கீழ் அரசு மானியம் வழங்கி வருகிறது. இராமநாதபுரம், தர்மபுரி மாவட்டங்களிலும், மலைவாழ் மக்கள் வசிக்கக்கூடிய மாவட்டங்களிலும் வறுமைக் கோட்டிற்கு கீழே இருக்கிற மக்களுக்கு கறவை மாடுகள் வழங்கப்படுகின்றன. கால்நடை வளர்ப்புத் திட்டத்தின் கீழ் இந்தக் கறவை மாடுகள் வழங்கப்படுகின்றன.

அடுத்து, ஆடுகள் வளர்ப்புக்கு கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் தமிழக அரசு நிதி உதவியும், மருந்து உதவியும் அளித்து வருகிறது. ஏறத்தாழ 350 ஆடு வளர்ப்பு நிலையங்கள் செயல்படுகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அவையின் அனுமதியுடன் நேரத்தை சிறிது நீட்டிக்கிறேன்.

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** கால்நடை பராமரிப்புத் துறை யின் உதவியுடன் உயரின கன்றுகள் வளர்க்கப்படுகின்றன.

அடுத்து, கோழிப் பண்ணைகள்பற்றி கூறினார்கள். சிறப்பு கால்நடை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் 2,022 கோழிப் பண்ணைகள் திறக்கப் பட்டுள்ளன. தமிழ்நாட்டிலிருந்து கேரளத்திற்கு கால்நடைகளைக் கொண்டு செல்வதற்கு 23 வழிகள் உள்ளன. மதுரை மாவட்டத்தில் மட்டும் 3 வழிகள் உள்ளன. மிகுந்த வயதான 47,613 கால்நடைகள் தமிழகத்திலிருந்து கேரளாவுக்குக் கொண்டு செல்லப்பட்டன. ஒரு மாநிலத்திலிருந்து மற்றொரு மாநிலத்திற்கு கால்நடைகளைக் கொண்டு செல்வதை மத்திய அரசு தடை செய்யவில்லை. அதனால் நமக்கு இழப்பும் இல்லை.

சில நாட்களுக்கு முன்பு, அதாவது நாங்கள் பதவி ஏற்பதற்கு முன்பு கால் நடை பராமரிப்புத் துறையில் இரண்டு பிரிவு ஊழியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தார்கள். முதலில் கால்நடை ஆய்வாளர்கள் போராட்டத்தை நடத்தினார்கள். அவர்களுடைய கோரிக்கைகளை இடைக்கால அரசு ஏற்றுக் கொண்டு, அவர்கள் கால்நடைகளுக்கு ஊசி போட, அதாவது 'வாக்சினேஷன் சர்டிபிகேட்' பெற்று ஊசி போட இடைக்கால அரசு உரிமை கொடுத்தது. இதை கால்நடை உதவி மருத்துவர்கள், தங்களுடைய உரிமை பறிபோய் விட்டது என்று எண்ணி, ஆட்சேபிக்கும் வகையில் போராட்டத்தை ஆரம்பித் தார்கள். தற்போது அவர்களுடைய கோரிக்கைகளை பரிசீலனை செய்து, போராட்டங்கள் திரும்பப் பெறப்பட்டுள்ளன. இப்போது சுமுகமான நிலை ஏற்பட்டிருக்கிறது. வெட்டரினரி கவுன்சில் ஏற்படுத்த அரசு முடிவு செய் திருக்கிறது ; இது விரைவிலே அமுல் செய்யப்படும்.

[திருமதி கோமதி சீனிவாசன்] [1980 ஜூலை 26

1980-81 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட இருக்கும் புதிய திட்டங்கள். இரண்டு இடங்களில் இளம் கிடேரிகள் உற்பத்திச் செய்யும் நிலையம். பெரியார் மாவட்டத்தில் காங்கேயம் இனத்திற்குத் தனிப் பண்ணை. புதுக்கோட்டையிலுள்ள கால்நடை பண்ணையில் வெள்ளாடு வளர்ப்புக்கு ரூபாய் 17 இலட்சம் செலவில் ஒரு நிலையம்.

சின்னசேலத்தில் உள்ள ஆட்டுப் பண்ணையில் ஓங்கூர் கால்நடை வளர்ச்சிக்கு தனிப் பிரிவு.

ஈச்சங்கோட்டையில் உள்ள கால்நடை பண்ணையில் மருந்து தயாரிக்கும் நிலையம்.

குருசெல்லான் நோய் தடுப்பு மருந்து 6.6 இலட்சம் ரூபாய் செலவில் பெருமளவில் உற்பத்தி செய்தல்.

கோழி மருந்துகள் அதிகளவில் தயாரிக்க 7.43 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

ரூபாய் 10 இலட்சம் செலவில் கேந்திர கிராம வட்டாரங்கள் ஏற்படுத்துதல், 3.76 இலட்சம் ரூபாய் செலவில் குடற்புழு நீக்கும் திட்டம், மூன்று இலட்சம் ரூபாய் செலவில் கால்நடைத் தீவனப் பயிர் உற்பத்தி நிலையம் அமைத்தல், 5.5 இலட்சம் ரூபாய் செலவில் வெக்கை நோய்த் தடுப்பு மாவட்டக் குழுக்கள், 10 புதிய கால்நடை மருந்தகங்களை ஏற்படுத்துதல், ஐந்து கால்நடை மருந்தகங்களை மருத்துவமனைகளாகத் தரம் உயர்த்துதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படும். இரண்டு கால்நடை மருத்துவமனைகள் பிரதம மருத்துவமனைகளாகத் தரம் உயர்த்தப்படும். பத்து புதிய கால்நடை மருந்தகங்களின் பெயர்களாவன: வாய்மேடு—தஞ்சை மாவட்டம், வலங்கைமான்—தஞ்சை மாவட்டம், தொங்குச்சேரி—மதுரை மாவட்டம், திருத்தங்கோடு—கன்னியாகுமரி மாவட்டம், கடம்பூர்—திருநெல்வேலி மாவட்டம், திருப்புக்குழி—செங்கற்பட்டு மாவட்டம், கோபாலசமுத்திரம்—திருநெல்வேலி மாவட்டம், லத்தேரி—வட ஆற்காடு மாவட்டம், சன்னம்பட்டி—கோயம்புத்தூர் மாவட்டம், நாகுடி—புதுக்கோட்டை மாவட்டம்.

அடுத்து, தமிழகத்தின் மொத்த ஜனத்தொகையில் இரண்டு கோடி மக்கள் மகளிராவர். அதில் 1½ கோடி மகளிர் கிராமவாசிகள். அதில் பெரும்பாலோர் கூலி வேலை செய்பவர்களாக இருக்கிறார்கள். கிராம மகளிருக்கு குடும்பக் கலை, சத்துணவு, குழந்தை வளர்ப்பு, தையல், பாய் முடைதல் போன்ற பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. இந்த ஆண்டு மதுரை, இராமநாதபுரம்,



1980 ஜூலை 26] [திருமதி கோமதி சீனிவாசன்]

புதுக்கோட்டை, தர்மபுரி, தஞ்சாவூர், சேலம், கன்னியாகுமரி, திருநெல்வேலி, கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களில் ஆறு தீப்பெட்டிக் கூட்டுறவுச் சங்கங்களை அமைப்பதன் மூலம் 12,000 பெண்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்படுகிறது. பனைமரத் தொழில் கூட்டுறவுப் பயிற்சி அளிக்கப்படுகிறது. எழுது பொருள் தயாரிக்கக் கூட்டுறவுச் சங்கங்கள் சென்னையிலும், மதுரையிலும் இயங்கி வருகின்றன. இந்த ஆண்டு தஞ்சை, திருச்சி, செங்கற்பட்டு, தர்மபுரி ஆகிய மாவட்டங்களில் அமைக்கப்படும். சாக்கட்டி உற்பத்தி செய்யும் கூட்டுறவுச் சங்கங்கள் தர்மபுரி, சேலம், திருச்சி, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ளன. இந்த ஆண்டு தஞ்சை, செங்கற்பட்டு, பெரியார், திருநெல்வேலி போன்ற மாவட்டங்களில் அமைக்கப்படும். இதற்காக இவ்வாண்டு 20 இலட்ச ரூபாய் இந்தத் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டிருக்கின்றது.

ஒவ்வொரு ஊராட்சி மன்றத்திலும் 30 மகளிர் மன்றங்கள் இயங்கி வருகின்றன. மொத்தம் 11,220 மகளிர் மன்றங்கள் இயங்கி வருகின்றன. அதே போல் பாலசேவிகாக்களும், கிராம சேவிகாக்களும் குடும்பக் கட்டுப்பாடு, குழந்தைகள் வளர்ப்பு முறை ஆகியவற்றில் ஈடுபட்டு தங்கள் பணிகளைச் சிறப்பாகச் செய்கிறார்கள்.

(பிற்பகல் 1.40)

தமிழகம் எங்கும் 4,433 பாலர் பள்ளிகள் நடைபெற்று வருகின்றன. மத்திய அரசின் ஆதரவில் ஒருங்கிணைந்த குழந்தைகள் நல திட்டத்தின்கீழ் சென்னை, தர்மபுரி, மதுரை மாவட்டங்களில் 300 பாலர் பள்ளிகள் உள்ளன. இந்தியாவிலேயே முதன் முதலாக தமிழ்நாட்டில் உலக வங்கியின் உதவியுடன் 40 கோடி ரூபாய் செலவில் சத்துணவுத் திட்டம் செங்கற்பட்டு, மதுரை, வட ஆற்காடு, இராமநாதபுரம், திருநெல்வேலி, புதுக்கோட்டை ஆகிய ஆறு மாவட்டங்களில் 1980-85 ஆம் ஆண்டில் அமுல் நடத்தப்படும். இதன் மூலம் குழந்தைகள் ஊட்ட நிலையும், ஆரோக்கியமும் உயர்த்துவதே முக்கிய நோக்கமாகும்.

1980-81 ஆம் ஆண்டில் மதுரை மாவட்டத்தில் ஒட்டாம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் முன்னோடி திட்டமாக அமுல் ஆக்கப்படும். படிப்படியாக எல்லா மாவட்டங்களிலும் 1985-க்குள் அமுல் ஆக்கப்படும். அதற்காக இந்த ஆண்டில் 2½ கோடி ரூபாய் செலவிடப்படும். வாழ்க்கையில் உடல் ஊனம் உற்றோர்கள், விழி இழந்தோர்கள், வாய் பேச இயலாதவர்கள், காது கேளாதவர்கள், தொழு நோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகள், வசதியற்ற முதிய

வர்கள், விதவைகள் சமூகத்தில் சுமையாகக் கருதப்படுவார்கள். அவர்களுடைய உள்ளங்களில் தன்னம்பிக்கையை வளர்க்க ஊனம் உற்றோருக்கு முத்துக்காட்டில் 35 லட்சம் ரூபாய் செலவில் நவீன முறை பயிற்சி உற்பத்தி சாலை ஆரம்பிக்கப்பட்டு உதிரி பாகங்கள் தயார் செய்யப் பெறுகின்றன. உடல் ஊனம் உற்றோருக்கு 4,000 மூன்று சக்கர வண்டிகள் வழங்கப்பட்டிருக்கின்றன. இந்த ஆண்டு ஆயிரம் மூன்று சக்கர வண்டிகள் இலவசமாக வழங்கப்பட இருக்கின்றன.

காது கேளாத ஏழை குழந்தைகளுக்கு செவி புலன் கருவிகள் இலவசமாக வழங்கப்பட்டன. ஊனமுற்றோருக்கு, ஊனம் உற்றோர் மாநில வாரியம் மூலமாக பெட்டிக்கடை வைத்து தொழில் செய்தல், பயிற்சி பெற்றுள்ள ஊனம் உற்றோர்களை பயிற்சியில் அமர்த்துதல், உடல் ஊனமுற்ற குழந்தைகளுக்கு இரும்பு கவசமிட்ட காலணிகளை வழங்குதல் ஆகியவை குறிப்பிடத்தக்கவையாகும். ஊனம் உற்றோர் தொழில் நிலையம் ஒன்று மதுரையில் துவங்கும் உத்தேசம் அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

உடல் ஊனமுற்ற குழந்தைகளுக்கு கல்வி அறிவு புகட்டும் பொருட்டு, மருத்துவ மனைகளுடன் இணைந்த பள்ளிகளுக்கு 40 லட்சம் ரூபாய் செலவிடப்படும். ஆதரவற்ற குழந்தைகளுக்கு அவர்களை பேணிகாக்க இடம் அளிக்கும் வகையில் முதல்வர் அவர்களால் ஒரு சிறப்பு திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. அதற்காக 8 லட்சம் ரூபாய் செலவிடப்படும். விதவைப் பெண்கள், உடல் ஊனம் உற்றோர் ஆகியவர்களுக்காக சென்ற ஆண்டு 2,500 தையல் இயந்திரங்கள் அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் இந்த ஆண்டும் தொடரும்.

விதவை மறுமணம் செய்த தம்பதிகளுக்கு 5 ஆயிரம் ரூபாய்க்கு பத்திரம் வழங்கப்பட்டிருக்கிறது. விதவைகளின் ஆண்டு வருமானம் 3,000-க்குக் குறைவாக இருந்தால் அவர்களின் குழந்தைகளுக்கு புத்தகங்கள் இலவசமாக வழங்கப்படும்.

சிறு வயதில் குற்றம் செய்தவர்கள், வாழ்வில் வழி தவறிய மகளிர் ஆகியோர்களுக்காக அரசு புனர் வாழ்வு இல்லங்களை நடத்தி வருகிறது. அதற்காக இந்த ஆண்டு சுமார் 104 லட்சம் ரூபாய் செலவு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. சீர்திருத்த இல்லங்கள் அமைக்க மேலும் 1 கோடி ரூபாய் அளவில் திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளது.



மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த விளக்கத்தை தன்னிலை விளக்கமாக ஏற்றுக்கொண்டு, தங்களுடைய வெட்டுத் தீர்மானங்களை வற்புறுத்தாது திரும்பப் பெற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**கோரிக்கை எண் 22.**

திருவாளர்கள் என். வரதராஜன், மு. அப்பாதுரை ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி—

"மானியக் கோரிக்கை எண் 22—கால்நடை வளர்ப்பு என்ற தலைப்பின் கீழ் ரூ. 15,18,19,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப்பெற்றது.

**கோரிக்கை எண் 30.**

திருவாளர்கள் என். வரதராஜன், எம். ஆறுமுகம் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி—

"மானியக் கோரிக்கை எண் 30—சமூக நலன் என்ற தலைப்பின் கீழ் ரூபாய் 10,22,30,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப்பெற்றது.

2. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஈ) பேரவை அலுவல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்று நடைபெற்ற அலுவல் ஆய்வுக் குழு கூட்டத்தில் பேரவையின் இதர அலுவல்கள் கீழ்க்கண்டவாறு தீர்மானிக்கப்பட்டன :—

| | |
|---|---|
| 28—7—1980 (திங்கட் கிழமை) | ஏற்கெனவே அறிவித்தபடி உள்ள மானியக் கோரிக்கைகள் 36—பாசனம், 50—பாசனம் குறித்த மூலதனச் செலவு விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும். |
| 29—7—1980 (செவ்வாய்க் கிழமை) | அவை காலையிலும் மாலையிலும் கூடும் |

காலை :

25—7—1980 ஆம் தேதியன்று விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பெற்ற மானியக் கோரிக்கைகள் 9, 11, 15, 16, 37, 38 மற்றும் 51 ஆகியவற்றின் மீதான விவாதம் தொடரும்.

மாலை :

4 மணி முதல் 5 மணி வரை

1. 32. பின்தங்கிய வகுப்பினர் நலன்

5 மணி முதல் 7 மணி வரை

7. மாநில சட்டமன்றம்

8. தேர்தல்கள்

மற்ற மானியக் கோரிக்கைகளைப் பொறுத்த வரை விவாதமின்றி அன்று (29—7—1980) மாலை 7 மணிக்கு வாக்கெடுக்கப்படும்.

2. வாக்கெடுப்பிற்குப் பின்

நிதி ஒதுக்க சட்ட முன்வடிவை அறிமுகம் செய்தல்.









| | |
|---|---|
| 30—7—1980 (புதன் கிழமை) | நிதி ஒதுக்க சட்ட முன்வடிவை ஆய்வு செய்தலும் நிறைவேற்றுதலும் |
| 31—7—1980 (வியாழக் கிழமை) | தனியார் அலுவல்கள் |
| 1—8—1980 (வெள்ளிக் கிழமை) | அரசினர் சட்ட முன்வடிவுகள்— ஆய்வு செய்தலும் நிறைவேற்றுதலும்<br>(1) தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு நகர்புற நில வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 27/80).<br>(2) தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு நகர்புற நிலம் (உச்சவரம்பு, முறைப்படுத்துதல்) பற்றிய திருத்த சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 23/80). |
| 2—8—1980 (சனிக் கிழமை) | பேரவைக் கூட்டம் இல்லை. |
| 3—8—1980 (ஞாயிற்றுக் கிழமை) | விடுமுறை |
| 4—8—1980 (திங்கட் கிழமை) | பேரவைக் கூட்டம் இல்லை. |
| 5—8—1980 (செவ்வாய்க் கிழமை) | அரசினர் சட்ட முன்வடிவுகள்—ஆய்வு செய்தலும் நிறைவேற்றுதலும் |
| 6—8—1980 (புதன் கிழமை) | |

(1) தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் குத்தகை பாக்கிகள் (நிவாரண) திருத்த சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 30/80).

[பேரவைத் தலைவர்] [1980 ஜூலை 26

(2) தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் பயிரிடும் குத்தகைதாரர்கள் குத்தகை பாக்கிகள் (நிவாரண) திருத்த சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 31/80).

(3) தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு வணிகப் பயிர்கள் வரி விதிப்பு (ரத்து) சட்ட முன் வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 18/80).

(4) தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு கூடுதல் நஞ்சைத் தீர்வை, கூடுதல் தண்ணீர் வரி, தனி நஞ்சைத் தீர்வை, தனித் தண்ணீர் மேல் வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 24/80).

(5) தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு அடகுக் கடைக்காரர்கள்—கடன் நிவாரணச் சட்டங் கள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண். 28/80).

(6) தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு வருவாய் வாரிய நீக்க சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 29/80).

7—8—1980 (வியாழக் கிழமை)

தனியார் அலுவல்கள்

8—8—1980 (வெள்ளிக் கிழமை)

அரசினர் சட்ட முன்வடிவுகள் — ஆய்வு செய்தலும் நிறைவேற்றுதலும்—

9—8—1980 (சனிக் கிழமை)

(1) தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத் தங்கள் (நிலத்திற்கு உச்ச வரம்பு கட்டுதல்) இரண்டாவது திருத்த சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 26/1980).



1980 ஜூலை 26] [பேரவைத் தலைவர்]

(2) 1980 ஆம் ஆண்டு நிலம் கையகப் படுத்துதல் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 21/1980).

(3) தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 29/1980).

(4) தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் (திருத்தம்—சிறப்பு விதித் துறைகள்) திருத்த சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 25/1980).

வேறு அரசு அலுவல்கள் ஏதேனும் இருப்பின் அவை எடுத்துக்கொள்ளப்படும்.

10—8—1980 (ஞாயிற்றுக் கிழமை) விடுமுறை

11—8—1980 (திங்கட் கிழமை)

12—8—1980 (செவ்வாய்க் கிழமை)

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1980-81 ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையின் மீதும் மற்றும் 1979-80 ஆம் ஆண்டிற்கான துணை நிதி நிலை அறிக்கையின் மீதும் விவாதம்.

குறிப்பிட்ட தேதிகளின் சட்ட முன்வடிவுகள் ஆய்வு செய்து நிறைவேற்ற முடியாத நிலை இருப்பின், அச்சட்ட முன்வடிவுகள் மறுநாள் அவையில் முன்னுரிமை கொடுத்து எடுத்துக் கொள்ளப்படும்.

(உ) அலுவல் ஆய்வுக் குழுவிற்கு நியமனம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு மற்றுமோர் அறிவிப்பு.

பேரவையின் 256 (1)-வது விதியின்கீழ் திரு. நா. சுந்தரராஜ் அவர்களை அலுவல் ஆய்வுக் குழுவின் உறுப்பினராக நியமனம் செய்கிறேன்.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை மறுநாள் (28—7—1980) காலை 9.00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-48 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

63. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1977-78 ஆம் ஆண்டிற்கான ஆண்டு நிர்வாக அறிக்கை (தமிழ், ஆங்கிலம்) [1948 ஆம் ஆண்டு மின்சாரச் (வழங்கல்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 54/1948) 75—(I அ) பிரிவின் கீழே பேரவை முன் வைக்கப்பெற்றது].

64. தமிழ்நாடு வனத் தோட்டக் கழகத்தின் 1977-78 ஆம் ஆண்டிற்கான ஐந்தாவது ஆண்டு அறிக்கையும் கணக்குகளும் (தமிழ்) [1956 ஆம் ஆண்டு நிறுவனச் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-அ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

### ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

*110. கோரிக்கை எண். 30, சமூக நலம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1980-81 (தமிழ், ஆங்கிலம்).

†111. கோரிக்கை எண். 22, கால்நடைப் பராமரிப்பு பற்றிய கொள்கை விளக்கம், 1980-81 (தமிழ், ஆங்கிலம்).

*112. 1980-81 ஆம் ஆண்டில் சமூக நலத்துறை பற்றிய செயல்வினை முறைத் திட்டம் (ஆங்கிலம்).

†113. 1980-81 ஆம் ஆண்டில் கால்நடை பராமரிப்புத் துறை பற்றிய செயல்வினை முறைத் திட்டம் (தமிழ், ஆங்கிலம்).

†114. 1979-80 ஆம் ஆண்டில் தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவனத்தின் நடவடிக்கைகள் (தமிழ், ஆங்கிலம்).

* 23—7—1980-ம் நாளன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப் பெற்றுள்ளது.

† 25—7—1980-ம் நாளன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப்பெற்றுள்ளது.



## இணைப்பு

[62 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

### கோரிக்கை எண் 22—கால்நடைப் பராமரிப்பு.

### கொள்கை விளக்கம்.

#### 1 முன்னுரை:

கால்நடை செல்வத்தின் வளர்ச்சியே வளமுள்ள நாட்டின் அடையாள மாகும். ஊட்டச் சத்துணவுக் குறைவினால் வாடும் நமது மக்களுக்குத் தேவையான சிறந்த உணவை கால்நடைச் செல்வம் அளிப்பதுடன், பயிர் விளைச்சலுக்குத் தேவையான உழைப்புத் திறனுக்கும் கிராமப்புறங்களில் போக்குவரத்துக்கும் கால்நடைச் செல்வம் உதவுகிறது. எனவே, நாட்டின் கால்நடை உற்பத்தியை மேம்படுத்துவதில் கால்நடைப் பராமரிப்புத் துறை ஈடுபட்டுள்ளது. கால்நடை அபிவிருத்தி முயற்சிகள், முக்கியமாக மாடு, ஆடு, பன்றி, கோழி ஆகியவற்றின் உற்பத்தித் திறனை அதிகரிப்பதில் செலுத்தப் படுகின்றன. இதன் மூலம் பால், இறைச்சி, முட்டை, உழைப்புத் திறன் ஆகிய வற்றின் தேவை பூர்த்தி செய்யப்படும்.

2. தமிழ் நாட்டில் 24.14 மில்லியன் கால்நடைகள் உள்ளன. கிராமப் புறங்களில், கால்நடை வளர்ப்பது ஒரு முக்கிய தொழிலாகும். கால்நடை வளர்ப்பில், கிராமப்புறங்களில் கையாளப்படும் பாரம்பரிய முறைகளினால், உற்பத்தி திறமை குறைவாக உள்ளது. கால்நடைப் பராமரிப்பில் நவீன தொழில் நுட்ப முறைகளையும் பராமரிப்பு முறைகளையும் பயன்படுத்திக் கொள்ள கால்நடைப் பராமரிப்புத் திட்டங்கள் உறுதுணையாக உள்ளன. கால் நடைப் பராமரிப்புத் துறை மூலம் உற்பத்தியை அதிகரிக்க பல்வேறு பிரிவு கள் ஏற்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகின்றன. குறைந்த வட்டியில் கட னுதவி அளிப்பதற்கும், அபிவிருத்தி ஆக்கப் பணிகளில் மேலும் முன்னேற்றம் காண தேவையான வசதிகளை அளிப்பதற்கும் கால்நடைப் பராமரிப்புத் திட்டங்கள் பல செயல் படுத்தப்படுகின்றன. தீவிர கால்நடை வளர்ப்புத் திட்டம், கேந்திர கிராமத் திட்டம், ஆடுவளர்ப்புத் திட்டம் (வேளாண்மை மறுநிதி வளர்ச்சிக் கழகத்தின் மூலம்), கால்நடை வளர்ப்புச் சிறப்புத் திட்டம், சிறு உழவர்கள் மேம்பாட்டுத் திட்டம், மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம், மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம், பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம், வறட்சிப் பாங்கான பகுதி

மேம்பாட்டுத் திட்டம், ஒருங்கிணைந்த கிராம அபிவிருத்தித் திட்டம், உறைவிந்து வங்கி நிறுவுதல் போன்ற பல தீவிர கால்நடை வளர்ப்புத் திட்டங்கள் மூலம் கால்நடை வளர்ப்பினைப் பெருக்க மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் அபரிமிதமாக பயன் அளித்துள்ளதுடன், கால்நடை வளர்ப்புத் திட்டங்களில் முதலீட்டு வாய்ப்புக்களையும், கால்நடை வளர்ப்பில் மிகு பயன்தரும் நடைமுறைகளைப் பரந்த அளவில் கடைப் பிடிக்கவும் வழிகோலியுள்ளது. இந்த அபிவிருத்தித் திட்டங்களில் காணக்கூடிய பலனாகப் பரிமளிப்பது மாநிலமெங்கும் காணப்படும் கலப்பின உயர்ரக மாடுகள், உற்பத்தியில் சிறந்த கோழிகள், சிறந்த இன ஆடுகள் முதலானவையாகும். இத்திட்டங்களை செயல்படுத்துவதினால் சிறு உழவர், குறுநில உழவர் மற்றும் நிலமற்ற விவசாய தொழிலாளர்களின் வருவாய் கூடுதலாவதுடன், கிராமப்புற வேலை வாய்ப்புகளும் பெருகும்.

## II. வளர்ப்புத் திட்டங்கள்.

### 1. பொதுவானது.

கால்நடைகளின் உற்பத்தித் திறனை அபிவிருத்தி செய்யும் பொருட்டு கால்நடைப் பராமரிப்புத் துறை பல்வேறு திட்டங்களை செயல்படுத்துகிறது. கால்நடைப் பராமரிப்பில் நவீன முறைகளைப் பின்பற்றி உற்பத்தித் திட்டங்களை தீவிரப்படுத்துவதற்கு தற்போது இருக்கும் அடிப்படை வசதிகளை அதிகரிப்பது வலியுறுத்தப்படுகிறது. செயல் படுத்தப்படும் பல்வேறு திட்டங்களின் நோக்கமும், முன்னேற்றமும் கீழே விவரிக்கப்பட்டுள்ளன.

### 2. கேந்திர கிராமத் திட்டம்.

கால்நடை வளர்ப்புக்கேற்ற வசதிகளுள்ள பகுதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதிகளிலுள்ள தரமற்ற பசுக்கள்/எருமைகள் சிறந்த திறனுள்ள காளைகளிலிருந்து பெறப்படும் விந்தின் மூலம் செயற்கை இன விருத்தி முறையில் தரம் உயர்த்தப்படுகின்றன. மேலும், அப்பசுக்கள்/எருமைகள் மூலம் கிடைக்கும் கன்றுகளின் தகுந்த பராமரிப்பையும் உபயோகத்தையும் உறுதி செய்யும் நோக்குடன் செயற்கை முறை இன விருத்தி ஊசி போடப்பட்ட பசுக்கள்/எருமைகள் தொடர்ந்து கண்காணிக்கப்படுகின்றன. ஒவ்வொரு கேந்திர கிராம வளர்ச்சி வட்டாரமும் ஒரு முக்கிய நிலையத்தையும், பத்து கிளை நிலையங்களையும் கொண்டு ஒருங்கிணைந்த பகுதியில் இனவிருத்தி மூலம் பால் உற்பத்திக்குப் பொருத்தமான மொத்தம் 10,000 பசுக்களையும்,



எருமைகளையும் கொண்டதாகும். தற்போது மதுரை, திருச்சிராப்பள்ளி, புதுக்காட்டை, கன்னியாகுமரி, திருநெல்வேலி, இராமநாதபுரம் மாவட்டங்களில் 57 கேந்திர கிராம வளர்ச்சி வட்டாரங்கள் 570 கிளை நிலையங்களுடன் இயங்கி வருகின்றன.

### 3. தீவிர கால்நடை வளர்ப்புத் திட்டம்.

இனப் பெருக்க ஆற்றல், பால்வளம், விற்பனை வசதி, தீவனப் பயிர் பெருக்குதல், காலமுறை மதிப்பீடு, கால்நடை வளர்ப்பு கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்தல் போன்ற கால்நடை ஆக்கப் பணிகள் தீவிர கால்நடை வளர்ப்புத் திட்டத்தின் மூலம் செயற்படுத்தப்படுகின்றன. பால் வர்க்கப் பசுக்கள், எருமைகளின் தரமுயர்த்தி பால் உற்பத்தியைப் பெருக்கும் பொருட்டு கால்நடை வளர்ப்போருக்கு கூட்டுச் சேவை அளிக்கப்படுகிறது. தற்சமயம் மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, தஞ்சாவூர், புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களில் 7 தீவிர கால்நடை வளர்ப்புத் திட்டங்கள் 400 கிளை நிலையங்களுடன் இயங்கி வருகின்றன.

### 4. பொலிகாளை நிலையங்கள் மற்றும் உறைவிந்து வங்கி.

மாவட்டங்களில் வெவ்வேறு பகுதிகளில் 59 பொலி காளை நிலையங்கள் இயங்கி வருகின்றன. இவைகளில் உயர் அயலினங்களான பிரிசியன், ஜெர்சி, பிரவுன் ஸ்விஸ், ரெட்டேன் போன்ற இனங்களும், உயர்ரக இந்திய இனங்களான சிந்தி, தார்பார்க்கர், காங்கேயம், முர்ரா மற்றும் உயர் அயல் கலப்பினங்களும் பராமரிக்கப்படுகின்றன. இப் பொலிகாளைகளில் சில நமது சொந்த கால்நடைப் பண்ணைகளில் உற்பத்தி செய்யப்பட்டதாகும். சில காளைகள் வெளிநாட்டிலிருந்தும், மற்றும் சில பிற மாநில கால்நடைப் பண்ணைகளிலிருந்தும் வாங்கப்பட்டவையாகும். இக்காளைகள் கிராம, நகரப் புறங்களிலுள்ள செயற்கை முறை இனவிருத்திப் பணிக்காகப் பயன்படுத்தப்படுகின்றன. இப்பொலி காளை நிலையங்களில் சேகரிக்கப்படும் விந்து, துறையின் பல்வேறு செயற்கை இனவிருத்தி நிலையங்களுக்கு அனுப்பப்படுகின்றன. செயற்கை முறை கருவூட்டல் ஒன்றுக்கு, பெயரளவில் சிறு தொகையான ரூபாய் 1 மட்டும் கால்நடை சொந்தக்காரரிடமிருந்து வசூலிக்கப்படுகிறது.

[1980 ஜூலை 26

கால்நடை வளர்ப்பில் கையாளப்படும் பாரம்பரிய முறைகளினால் உற்பத்தித் திறனும், கால்நடை வளர்ப்பவர்கள் பெறும் பயனும் குறைவாகவே உள்ளது. எனவே இனவிருத்தித் திட்டங்களில் நவீன தொழில் முறைகள் பின்பற்றப்படுகின்றன. சிறந்த பொலி காளைகளை அதிக அளவு பயன்படுத்தி நாளடைவில் செலவினை குறைப்பதற்காகவும் சிறந்த திறனுடன் அதிக அளவில் கால்நடைகள் உண்டாக்கும் பொருட்டும் வருங்காலத்தில் செயற்கை முறை இனவிருத்திப் பணியில் உறைவித்து முறை மேற்கொள்ளப்படும். இம்முறையினால், சிறந்த பொலி காளைகளின் விந்து பல ஆண்டுகளுக்குப் பாதுகாக்கப்பட்டு உபயோகப்படுத்த முடியும்.

திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள அபிஷேகப்பட்டி மாவட்ட கால்நடைப் பண்ணையில் திரவ நைட்ரஜன் நிலையம் ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஈச்சங்கோட்டையிலுள்ள உயர்ரக அயலின கால்நடைப் பண்ணையிலும், டென்மார்க் அரசு உதவியுடன் உறைவித்து வங்கி ஏற்படுத்தப்பட உள்ளது. 1980-81 ஆம் ஆண்டு முதல் இந் நிலையங்களில் உற்பத்தி ஆரம்பிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. வறட்சிப் பாங்கான பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் தருமபுரி மாவட்டத்தில் உறைவித்து முறை இவ்வாண்டு முதல் பின்பற்றப்படும்.

அதிகப்படியான பால் உற்பத்திக்காக, கால்நடை வளர்ப்பு மாநில முழுவதும் தீவிரப்படுத்தப்பட்டு, உறைவித்து முறை படிப்படியாக விஸ்தரிக்கப்படும்.

## 5. ஒருங்கிணைந்த கால்நடை வளர்ப்புத் திட்டம் வம்சாவழி ஆய்வுத் திட்டம்.

மத்திய அரசு நிதி உதவி செய்யும் பொலி காளைகளை வரிசைப்படுத்தும் வம்சாவழி ஆய்வுத் திட்டம் 1972 ஆம் ஆண்டு முதல் ஓசூரிலுள்ள மாவட்ட கால்நடைப் பண்ணையில் செயல்பட்டு வருகிறது. 1979 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1 ஆம் நாள் முதல் திட்டம் மாநில அரசு திட்டமாக செயல்பட்டு வருகிறது. இங்கு உற்பத்தியாகும் பொலி காளைகள், துறை நிலையங்களில் சிந்தி இன, மற்றும் உள்ளூர் கால்நடை வளர்ச்சிக்காகப் பயன்படுத்தப்படுகின்றன. பெங்களூரிலுள்ள இந்திய அரசின் மத்தியப் பண்ணை, இப் பொலி காளைகளிலிருந்து விந்தை சேகரித்து, உறைவித்து முறைப்படி பாதுகாத்து வருகிறது.



1980 ஜூலை 26]

## 6. ஆநிரைக் காப்பகங்கள்.

தனிப்பட்ட அறக்கொடை நிறுவனங்களில் நிறுவப்பட்டுள்ள சிறிய அளவிலான பால்பண்ணைகளே ஆநிரைக் காப்பகங்கள் ஆகும். இந்நிலையங்களுக்கு உதவித் தொகை அளிக்கப்படுவதுடன், கால்நடை வளர்ப்பு பற்றிய உதவியும் அளிக்கப்படுகிறது. தற்போது 5 ஆநிரைக் காப்பகங்கள் அரசின் நிதி உதவியைப் பெற்று வருகின்றன. தொடரா மானிய உதவித் தொகையாக ரூபாய் 5,000, 10 பசுக்களும் மற்றும் பத்து ஆண்டுகளுக்கு ஆண்டு பராமரிப்பு மானியமாக ரூ. 2,000 ஒவ்வொரு நிலையமும் பெறுகின்றன.

## 7. கால்நடை கண்காட்சிகளும் விளக்கக் காட்சிகளும்.

நவீன முறையில் கால்நடை இனப் பெருக்கம் செய்தல் தீவனமிடுதல், பராமரித்தல் போன்றவற்றை மக்களிடையே பரப்பும் நோக்குடன் கால்நடை கண்காட்சிகள், விளக்கக்காட்சிகள் ஆகியவை நடத்தப்படுகின்றன. இதன் மூலம் பொதுமக்களின் மனதில் கால்நடை வளர்ப்பைப் பற்றிய ஆர்வம் உண்டாவதுடன், கால்நடை வளர்ப்போரிடையே போட்டி மனப்பான்மையும் உருவாக்கப்படுகிறது. 1979-80 ஆம் ஆண்டில் மதுரை, சேலம், கோயமுத்தூர் ஆகிய இடங்களில் 3 கண்காட்சிகள் நடைபெற்றன. இது தவிர ஒவ்வொரு ஆண்டும் தீவிர கால்நடை வளர்ப்புத் திட்டப் பகுதிகளிலும், கேந்திர கிராமப் பகுதிகளிலும் கன்று அணிவகுப்புகள் நடைபெறுகின்றன. ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியப் பகுதியிலும் மனுநீதித்திட்டம் நடைபெறும் காலத்தில் மா, கன்று அணிவகுப்புகள் சிறிய அளவில் நடத்தப்படுகின்றன.

## 8. ஆடு வளர்ப்பு.

கால்நடை வளர்ப்போர்களில், ஆடு வளர்ப்போரே கிராமப்புறங்களிலுள்ள நலிந்த பிரிவினர் ஆவர். எனவே, இம்மாநிலத்தில் ஆடு வளர்ப்பில் சிறப்பு நடவடிக்கை எடுக்கப் படுகிறது. கிராமப் புறங்களிலும் மலைப் பகுதிகளிலுள்ள நலிந்த சமுதாயத்தினர் தங்களின் வாழ்க்கைக்கான வருமானத்தைக் கணிசமாக அதிகரிக்கும் பொருட்டு, அதிக வாய்ப்புக்களை அளிக்கும் நோக்குடன் ஆடு வளர்ப்புத் திட்டங்கள் திட்டப்படுகின்றன. நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள், வேளாண்மை மறுநிதி வளர்ச்சிக் கழகம், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் மூலமாக நிதி உதவி பெறுவதற்கு வழிகள் வகுக்கப்படுகின்றன. குறைந்த வட்டியில் கடன் உதவி அளிக்கப்படுகிறது.

ஆடு வளர்ப்போருக்கு விஞ்ஞான முறையில் ஆடு வளர்க்க தொழில் முறை உதவியும் அளிக்கப்படுகிறது. சாத்தூர், சின்னசேலம் ஆகிய இடங்களில் இயங்கும் ஆட்டுப் பண்ணைகளிலும், ஓசூர், செட்டிநாடு, அபிஷேகப்பட்டி, புதுக்கோட்டை ஆகிய இடங்களில் உள்ள மாவட்ட பண்ணைகளில் இயங்கும் நான்கு ஆடு வளர்ப்பு பிரிவுகளிலும், மாண்டியா, மேச்சேரி, சென்னை சிகப்பு ஆடு, கிழக்கரிசல் ஆடுகளும் மற்றும் அயலின காரிடேல் இனமும் பராமரிக்கப்படுகின்றன. ஓசூரில் உள்ள மாவட்ட கால்நடைப் பண்ணையில் உள்நாட்டு ஆடுகளின் தரத்தை உயர்த்தும் பொருட்டு காரிடேல் இனம் பயன் படுத்தப்படுகிறது.

ஆடு வளர்ப்போரும் மற்றும் பிற முற்போக்கு விவசாயிகளும் ஆடு வளர்ப்புத் தொழிலில் அதிக ஆதாயம் பெறவும், தங்களது பொருளாதார நிலைமையை மேம்படுத்திக் கொள்ளவும் ஆடு வளர்ப்பு கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்படுகின்றன. தற்போது, வேளாண்மை மறுநிதி வளர்ச்சிக் கழகத்தின் கடனுதவியுடன் 39 ஆடு வளர்ப்பு கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வருகின்றன. மேலும் பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம், வறட்சிப் பாங்கான பகுதி மேம்பாட்டுத் திட்டம் போன்ற சிறப்புத் திட்டங்களின் மூலம் 228 சங்கங்களும், பிற பகுதிகளில் 83 சங்கங்களும் ஏற்படுத்தப்பட்டு ஆடு வளர்ப்போருக்கு உதவி செய்யப்படுகிறது. 1979—80ஆம் ஆண்டில், 123 சங்கங்கள் பதிவு செய்யப்பட்டன.

இறைச்சி உற்பத்தியைப் பெருக்கும் நோக்குடன் 1979—80-ம் ஆண்டில் 1.25 இலட்சம் ரூபாய் செலவில், பெருமளவில் குடற்புழு நீக்கத் திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. இத் திட்டத்தின் கீழ் மருந்து வாங்கப்பட்டு, பெருமளவில் ஆடுகளுக்கு குடற்புழு நீக்க மருந்து கொடுக்கப்பட்டு இதன் மூலம் இறைச்சி உற்பத்தி அதிகரிக்கப்படும். இம்முறையினால் ஆட்டின் எடை கணிசமாக உயர்த்தப்படுவதுடன் ஆடு வளர்ப்போரும் நல்ல இலாபம் அடைவார்கள். 1979—80-ல் 62,269 ஆடுகளுக்கு குடற்புழு நீக்கம் செய்யப் பட்டுள்ளது.

## 9. கோழி வளர்ப்பு.

(அ) கால்நடைப் பராமரிப்புத் துறையின் கீழ் 29 கோழி விரிவாக்க நிலையங்களும், 2 குஞ்சு பொரிப்பு நிலையங்கள் ஒன்று ஓசூரிலும் மற்றது காட்டுப்பாக்கத்திலும் இருக்கின்றன. ஓசூர், ஒரத்தநாடு, புதுக்கோட்டை, செட்டிநாடு, அபிஷேகப்பட்டி ஆகிய இடங்களில் உள்ள மாவட்ட கால்நடைப்



பண்ணைகளுடனும் சாத்தூர், சின்னசேலம் ஆட்டுப் பண்ணைகளுடனும், கோழி வளர்ப்புப் பிரிவுகள் இணைக்கப்பட்டுள்ளன. இந்நிலையங்களின் முக்கிய நோக்கங்கள் கோழி வளர்ப்பைத் தீவிரப்படுத்துவதும், தடுப்பூசிகள் போடுவதன் மூலம் நோய் நீக்கத் திட்டத்தைச் செயல்படுத்துவதும், கோழி வளர்ப்பில் ஊக்கமளிக்கும் வகையில் கோழி வளர்ப்போருக்கு கடன் வசதிகள் பெற உதவி செய்வதும் ஆகும். கோழி விரிவாக்க நிலையங்களைச் சுற்றிலும் முட்டை உற்பத்திக்காகக் கொல்லைப்புற கோழி வளர்ப்புப் பிரிவுகள் ஆரம்பிக் கப்பட்டுள்ளன. இதன் மூலம் தரமுள்ள சத்துணவு கிடைப்பதுடன் கோழி வளர்ப்போரின் வருமானமும் அதிகரிக்க ஏதுவாகிறது.

தற்சமயம் தமிழ்நாட்டில் 5 கோழி வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களும், 1 கோழி வளர்ப்போர் கூட்டு விற்பனைச் சங்கமும் இருக்கின்றன. கோழி வளர்ப்பு தொடர்பான வணிகமுறைக் கூறுகளைத் தமிழ்நாடு கோழி வளர்ச்சி நிறுவனம் கவனிக்கிறது.

## (ஆ) தமிழ்நாடு கோழி வளர்ச்சி நிறுவனம்.

கோழி அபிவிருத்திக்கென தமிழக அரசு, தமிழ்நாடு கோழி அபிவிருத்தி நிறுவனம் ஒன்று ஏற்படுத்தி உள்ளது. இந்தக் கோழி அபிவிருத்தி நிறுவனம் மாவட்டங்கள் தோறும் விற்பனைக் கூடங்களை ஏற்படுத்தி அதன் வழியே முட்டைகளை வாங்கி விற்பனை செய்யக்கூடிய பணியை ஏற்றுக்கொண் டுள்ளது. இதனால் விவசாயிகள் பெருமளவு பயனடைந்துள்ளார்கள். முட்டை களைச் சீரான விலைக்கு வாங்குவதிலும், சீரான விலைக்கு விற்பதிலும், தமிழ் நாடு கோழி அபிவிருத்தி நிறுவனம் அதிகக் கவனம் செலுத்தி வருகிறது.

கோழிக் குஞ்சுகளை உற்பத்தி செய்வதற்காக மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த கப்பலூரிலும், கோவை மாவட்டத்தைச் சேர்ந்த அரசூரிலும், கோழிக் குஞ்சு பொரிக்கும் நிலையங்கள் ஏற்படுத்தி, அதன் மூலம் உயரின கோழிக் குஞ்சுகள் உற்பத்தி செய்து, விவசாயிகளுக்கு விற்கும் பணியை மேற்கொண் டுள்ளது.

கோழிகளுக்கு வேண்டிய தீவனத்தை தமிழ்நாடு கோழி அபிவிருத்தி நிறுவனமே தயார் செய்கின்றது. இந்தத் தீவனத்திற்கு மத்திய அரசிட மிருந்து, "நல்ல தரமுள்ள தீவனம்" (ஐ.எஸ்.ஐ.) என்று சான்றிதழ் பெற்றுள்ளது.

[1980 ஜூலை 26

சிறப்புக் கால்நடை வளர்ப்புத் திட்டத்தின்கீழ், தமிழ்நாடு கோழி அபிவிருத்தி நிறுவனம், சிறு விவசாயிகள், குறுநில விவசாயிகள் மற்றும் வேளாண்மை தொழிலாளர்கள் முன்னேற்றத்திற்காக கோழிப் பண்ணைகள் ஏற்படுத்தித் தரக்கூடிய பெரும் பொறுப்பை ஏற்றுள்ளது. 1978-79 ஆம் ஆண்டு முதல், 31—3—1980 வரை வட ஆற்காடு, செங்கல்பட்டு, சேலம், மதுரை முதலிய மாவட்டங்களில் 3,611 கோழிப் பண்ணைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. 1980-81-ல் இன்னும் 2,000 கோழி வளர்ப்பு நிலையங்கள் இத்திட்டத்தின்கீழ் ஏற்படுத்தப்படும்.

அடுத்த ஆண்டில் விற்பனைத் திட்டத்தை விரிவுபடுத்தவும், கோழி உற்பத்தியை அதிகப்படுத்தவும், தமிழ்நாடு கோழி அபிவிருத்தி நிறுவனம் உத்தேசித்துள்ளது.

### 10. தமிழ்நாடு இறைச்சி நிறுவனம்.

தரமான, சுத்தமான இறைச்சி சென்னை நகர மக்களுக்கு கிடைக்கச் செய்ய, நவீன முறையில் தொழில்நுட்பம் பொருந்திய இறைச்சிக் கொட்டில் அமைப்பது அவசியமாகிறது. அதற்காக ஒரு இறைச்சி நிறுவனம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந் நிறுவனத்தின் கட்டுப்பாட்டின் கீழ் நவீன இறைச்சி கொட்டில் ஒன்று ஏற்படுத்தப்பட உள்ளது. இதன் மூலம் இடைத் தரகர்களை அகற்றி, முறையானதொரு விற்பனை வசதியை அளிப்பதன் மூலம் கால்நடை தொழிலினை விரிவாக்குவதுடன், உப பொருள்களான இரத்தம், சுரப்பி, எலும்பு போன்றவை தகுந்த முறையில் பயன்படுத்தப்படும்.

### 11. பன்றி வளர்ப்பு.

இம்மாநிலத்தில் 6 பன்றி வளர்ப்புப் பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன. இவைகளில் வெள்ளை யார்க்ஷயர் பன்றிகள் பராமரிக்கப்படுகின்றன. விவசாயிகள் சொந்தமாகப் பன்றிப் பிரிவுகளை ஏற்படுத்தும் பொருட்டு, இனப் பெருக்கத்திற்கான பன்றிகளை இந்நிலையங்கள் விநியோகிக்கின்றன. 1978-79 ஆம் ஆண்டில், 28 வெள்ளை யார்க்ஷயர் பன்றிகள் இறக்குமதி செய்யப்பட்டு இனப் பெருக்கத்திற்காக துறை நிலையங்களில் பராமரிக்கப்படுகின்றன. புரதச் சத்துக் குறைவை நீக்குவதற்காக, விரிவாக்கப் பணியின் மூலமாக துறை கடைகளிலிருந்து பன்றி இறைச்சி வாங்கி உண்ணும்படி மக்கள் அறிவுறுத்தப்பட்டு, ஊக்கமும் அளிக்கப்படுகின்றனர். ஒருங்கிணைந்த கிராம அபிவிருத்தித் திட்டம், பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் போன்ற பல அபிவிருத்தித் திட்டங்களின் மூலமும் பன்றி வளர்ப்பு ஊக்குவிக்கப்படுகிறது.



1980 ஜூலை 26]

### 12. தீவனப் பயிர் அபிவிருத்தி.

கால்நடைப் பராமரிப்பில் தீவனப் பயிர் அபிவிருத்தி முக்கியப் பணியாகும். எனவே, கால்நடைப் பண்ணைகள், தீவிர கால்நடை அபிவிருத்திப் பகுதிகள், கேந்திர கிராமப் பகுதிகள் ஆகியவற்றில் இவ்விஷயத்தில் தனிக் கவனம் செலுத்தப்படுகிறது. தவிர 4 கால்நடை தீவனப் பயிர் உற்பத்திப் பிரிவுகள் உள்ளன. இந்நிலையங்கள் மூலம் தீவனப் பயிர் நாற்றுகள் விவசாயிகள் பயிரிடுவதற்காக விநியோகிக்கப்படுகின்றன. தரமுள்ள புல் நாற்றுகள், தீவனப் பயிர் வளர்க்க விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. 1978-79 ஆம் ஆண்டில் தீவனப் பயிர் விஸ்தரிப்புத் திட்டத்தின்கீழ் மாதிரிப் பாத்திகள் போடும்படி ரூபாய் ஒரு இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது. விவசாயிகள் புல் உற்பத்தியைப் பெருக்கி, அதன் மூலம் கால்நடைகளின் தீவனச் செலவைக் குறைக்கும் நோக்குடன், கணிசமான வழியில் கணிசமான விலையில் புல் நாற்றுகள் விநியோகிக்கப்படுகின்றன. தீவனப் பயிர் இளஞ் செடிகளும், விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன. வறட்சிப் பாங்கான பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் தீவனப் பயிர் அபிவிருத்தி பற்றி கூட்டமொன்று 1979-80 ஆம் ஆண்டில் நடத்தப்பட்டது. இதில் கால்நடை பராமரிப்புத் துறை அலுவலர்களும், மாநில மற்றும் இந்திய அரசு அலுவலர்களும் பங்கேற்றனர். சத்துணவு பயிர்களை உற்பத்தி செய்வதில் விவசாயிகளை ஊக்குவிப்பதே இக்கூட்டத்தின் நோக்கமாகும்.

### 13. சிறப்புத் திட்டங்கள்.

#### (1) கால்நடை வளர்ப்புச் சிறப்புத் திட்டம்.

சமுதாயத்தில் நலிந்த பகுதியினரான சிறு உழவர்கள், குறுநில உழவர்கள், நிலமற்ற விவசாய தொழிலாளர்களின் ஊதியத்தை உயர்த்தும் துணைத் தொழிலாக இருப்பது இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டம் செயற்படும் மாவட்டங்களின் விவரங்கள் பின் வருமாறு :—

| திட்டம். | மாவட்டம். |
|---|---|
| (அ) கன்று வளர்ப்புத் திட்டம். | சேலம், வட ஆற்காடு, மதுரை, தென் ஆற்காடு, கோயம்புத்தூர். |
| (ஆ) கோழியினப் பெருக்கத் திட்டம். | சேலம், வட ஆற்காடு, மதுரை, செங்கல்பட்டு. |
| (இ) ஆட்டினப் பெருக்கத் திட்டம். | சேலம், வட ஆற்காடு, திருநெல்வேலி. |

இந்திய அரசிடமிருந்து 50 சத வீதம் நிதி உதவி பெறும்பொருட்டு, 1980-81 ஆம் ஆண்டிற்கு 244.94 இலட்சம் ரூபாயில் திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு, இந்திய அரசுக்கு அனுப்பப்பட உள்ளது. 1980-81 ஆம் ஆண்டில் மேற்படி திட்டத்தினைத் தொடர்ந்து செயல்படுத்துவதற்கு மத்திய அரசின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது.

### (அ) கன்று வளர்ப்புத் திட்டம்.

இத்திட்டத்தினை தமிழ்நாடு பால் பண்ணை வளர்ச்சி நிறுவனம் செயல்படுத்தி வருகிறது. மூன்றாம் மாதம் முதல் 28 ஆம் மாதம் வரையில் தேவையான உதவியை மானியமாகத் தீவன வடிவில், தேர்ந்தெடுக்கப்பட்ட சிறு/குறுநில உழவர்களுக்கும், விவசாயத் தொழிலாளர்களுக்கும் இத்திட்டத்தின் கீழ் அளிக்கப்படும். சிறு/குறுநில உழவர் உதவித் தொகையாக 800 ரூபாயையும் மீதித் தொகை 800 ரூபாயை, கடனாகவும் பெறுகின்றனர். விவசாயத் தொழிலாளர் உதவித் தொகையாக 1,066 ரூபாயையும் மீதித் தொகை 534 ரூபாயை கடனாகவும் பெறுகின்றனர். மேற்படித் திட்டத்தில் 1979-80 ஆம் ஆண்டில் 5,418 கன்றுகள் சேர்க்கப்பட்டுள்ளன. இந்திய அரசு தமது மறு ஆய்வில் இத்திட்டம் சிறந்த முறையில் செயலாற்றப்பட்டுள்ளது எனக் குறிப்பிட்டுள்ளது.

### (ஆ) ஆட்டினப் பெருக்கத் திட்டம்.

இத்திட்டத்தினை கால்நடைப் பராமரிப்புத் துறை செயல்படுத்தி வருகிறது. செம்மறி ஆட்டுப் பிரிவு ஒவ்வொன்றிலும் 20 செம்மறி ஆடுகளும் ஒரு ஆட்டுக் கிடாவும் இருக்கும். அப்பிரிவின் மொத்த மூலதனச் செலவு ரூ. 3,000 ஆகும். அத்தொகையில் சிறு உழவர் உதவித் தொகையாக 750 ரூபாயும், குறுநில உழவர், வேளாண்மைத் தொழிலாளர் உதவித் தொகையாக 1,000 ரூபாயும் பெறுகின்றனர். மீதித் தொகை தேசியமயமாக்கப்பட்ட மற்றும் கூட்டுறவு வங்கிகள் மூலம் கடனாகக் கொடுக்கப்படுகிறது. மேற்படித் திட்டத்தில் 1979-80 ஆம் ஆண்டில் 2,822 பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இந்திய அரசு தமது மறு ஆய்வில் இத்திட்டம் சிறந்த முறையில் செயலாற்றியிருப்பதாகக் குறிப்பிட்டுள்ளது.



### (இ) கோழியினப் பெருக்கத் திட்டம்.

இத்திட்டத்தினை தமிழ்நாடு கோழி வளர்ச்சி நிறுவனம் செயற்படுத்தி வருகிறது. கோழி வளர்ப்புப் பிரிவு ஒவ்வொன்றிலும் முட்டையிடும் 100 கோழிகள் உள்ளன. ஒரு பிரிவுக்கு ஆகும் மூலதனச் செலவு சுமார் 5,330 ரூபாய் ஆகும். இத்தொகையில் சிறு உழவர் உதவித் தொகையாக 1,330 ரூபாயும், குறுநில உழவர், வேளாண்மைத் தொழிலாளர் உதவித் தொகையாக 1,776 ரூபாயும் பெறுகின்றனர். மீதித் தொகை தேசியமயமாக்கப்பட்ட மற்றும் கூட்டுறவு வங்கிகள் மூலம் கடனாகக் கொடுக்கப்படுகின்றன. மேற்படி திட்டத்தில் 1979-80 ஆம் ஆண்டில் 2,022 பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

### (2) மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம்.

இத்திட்டம் மத்திய சிறப்பு உதவியின் மூலம் நிதியுதவி பெறுகிறது. இத்திட்டத்தின் மூலம் பயனடைவோர் கோடைக்கானல் பகுதியிலுள்ள சிறு/குறுநில உழவர்களும், வேளாண்மைத் தொழிலாளர்களும் ஆவர். கலப்பினக் கன்றுகளை வளர்ப்பதற்காகத் தீவன வடிவில் 25 மாதங்கள் வரை மானியமாக தேர்ந்தெடுக்கப்பட்ட ஒவ்வொரு உழவருக்கும் அளிக்கப்படுகிறது. இத்தீவனத்தைத் தமிழ்நாடு பால் பண்ணை வளர்ச்சி நிறுவனம் விநியோகிக்கிறது. 1,000 கன்றுகள் வளர்ப்பதற்கான இலக்கு எட்டப்பட்டிருக்கிறது.

### (3) மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்.

இத்திட்டமும் மத்திய சிறப்பு நிதி உதவி மூலம் செயல்படுத்தப்படுகிறது. நீலகிரி மாவட்டத்திலுள்ள சிறு/குறுநில உழவர்களும், வேளாண்மைத் தொழிலாளர்களும் இத்திட்டத்தின் மூலம் பயன் பெறுகின்றனர். இத்திட்டத்தின் மூலம் 399 ஆடு வளர்ப்புப் பிரிவுகளும், 4 ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. 1980-81 ஆம் ஆண்டில் 10 ஆடு வளர்ப்புப் பிரிவுகள் ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் உதகமண்டலம் மாவட்ட கால்நடைப் பண்ணை விரிவாக்கப்பட்டுள்ளது. 16 பிரிசியன் மாடுகள் வாங்கப்பட்டு இப்பண்ணையில் பராமரிக்கப்படுகின்றன. மீதி மாடுகள் விரைவில் வாங்கப்படும். இம்மாவட்டத்தில் பிரிசியன் இனங்களுடன் மட்டுமே இனவிருத்தி செய்யப்பட வேண்டும் என்ற, அரசின் கொள்கைப்படி, இம்மாடுகளின் மூலம் இம்மாவட்டத்தில் கலப்பின விருத்தி செய்யப்படும்.

சந்தைகளில் மருத்துவ வசதிகள் அளிக்க அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. கலப்பினக் கன்றுகள் உற்பத்தி செய்ய வசதிகளைச் செய்து கொடுக்கவும், தருமபுரி மாவட்டத்தில் ரூ. 3,500 செலவில் புல் வளர்ப்பு நிலையங்களோடுகூடிய ஆடு வளர்ப்பு கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கவும், வழங்கப்பட்டுள்ள தொகை பயன் படுத்தப்படும்.

(6) சிறு உழவர்கள் மேம்பாட்டுத் திட்டம்.

தமிழ்நாட்டில் இத்திட்டத்தின் மூலம் சென்னை, இராமநாதபுரம், தருமபுரி தவிர பிற மாவட்டங்களில் கால்நடை பராமரிப்புத் திட்டங்கள் செயல்படுத்தப் படுகின்றன. இத்திட்டத்தின் கீழ் உதவி பெறத் தகுதியுள்ள விவசாயிகள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இவ்விதம் தேர்ந்தெடுக்கப்பட்ட சிறு உழவர் களுக்கு 25 சத விதம் நிதி உதவியும் குறுநில உழவர் மற்றும் நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கு 33 1/3 சத வித நிதி உதவியும் அளிக்கப்படு கிறது. இத்திட்ட காலத்தில் எந்தவொரு விவசாயிக்கும் கொடுக்கப்படுகிற அதிக பட்ச உதவித் தொகை 3,000 ரூபாய் ஆகும்.

(7) ஒருங்கிணைந்த கிராம அபிவிருத்தித் திட்டம்.

சமுதாயத்தின் நலிந்த வர்க்கத்தைச் சேர்ந்தவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதும், அதிகமான வேலை வாய்ப்பு வசதிகளை நல்குவதும் இத்திட்டத்தின் நோக்கம் ஆகும். இத் திட்டத்தின்கீழ் கறவை மாடுகள், ஆடு, பன்றிகள், கோழிகள் வழங்குவது போன்ற கால்நடை பராமரிப்புப் பணி கள் செயல்படுத்தப்படுகின்றன. சிறு உழவர்கள் 25 சத விதம் உதவித் தொகையும், குறுநில உழவர்கள் மற்றும் வேளாண்மைத் தொழிலாளர்கள் 33 1/3 சத வித உதவித் தொகையும் பெறுவர். 1978-79 ஆம் ஆண்டில் 161 தேர்ந்தெடுக்கப்பட்ட வட்டாரங்களில் இது செயல்படுத்தப்படுகின்றது. 1979-80 ஆம் ஆண்டில் மேலும் இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக 26 வட்டாரங் கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

(8) ஒருங்கிணைந்த மாதிரிப் பொருள் ஆய்வுத் திட்டம்.

பால், முட்டை, இறைச்சி, மற்றும் கம்பளி போன்ற முக்கிய கால்நடை விளைப் பொருட்களைப் பற்றிய புள்ளி விவரம் சேகரிக்கும் இத்திட்டம் இந்திய அரசு ஆதரவு பெற்று செயல்படுத்தப்படும் திட்டம் ஆகும். 1977-78, 1978-79 ஆம் ஆண்டுகளில் 450 கிராமங்களில் ஆய்வு வேலை முடிவு பெற்றது. 1977-78

ஆம் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட பால் மதிப்பீடு 1,680 ஆயிரம் டன், 1978-79 ஆம் ஆண்டில் 1,727 ஆயிரம் டன்னாக அதிகரித்துள்ளது. இது முந்திய வருட மதிப்பீட்டில் 2.77 சத விதம் அதிகம் ஆகும். இத்திட்டம் தற்போது மாநிலத் திட்டமாக 1—4—1979 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

## III கால்நடைப் பண்ணைகள்.

கால்நடைப் பராமரிப்புத் துறையின்கீழ் உள்ள பொலி காளை நிலையங்களுக்கும், ஊராட்சி ஒன்றியத் திட்டங்களின் மூலம் பொதுமக்களுக்கு வழங்குவதற்கும் தேவையான பால் மாடுகள், உழைப்பு வர்க்கக் காளைகளைத் தொடர்ந்து கால்நடைப் பண்ணைகள் உற்பத்தி செய்கின்றன. மேலும், இவைகள் மாதிரிப் பண்ணைகளாகத் திகழ்கின்றன. உயிரினக் கலப்பினக் கால்நடைகள் தவிர, இந்திய பால் வர்க்க கால்நடைகளான சிந்தி, தார்பார்க்கர் போன்றவைகளும் உழைப்பு வர்க்கங்களான காங்கேயம், ஆலம்பாடி, உம்பளாச்சேரி போன்றவைகளும் இப்பண்ணைகளில் பராமரிக்கப்படுகின்றன. இனப்பெருக்க கொள்கைப்படியும், திட்டப்படியும், எருமைகளின் தரம் முர்ரா இனத்துடன் உயர்த்தப்பட வேண்டும். ஆகவே, புதுக்கோட்டை, ஒரத்தநாடு, செட்டிநாடு திருநெல்வேலி மாவட்ட கால்நடைப் பண்ணைகளில் முர்ரா எருமைகள் பராமரிக்கப்படுகின்றன. மேலும் பால் பண்ணை அபிவிருத்தி துறையின்கீழ் இயங்கிவந்த மாதவரம் பால் பண்ணை, கால்நடை பராமரிப்புத் துறைக்கு 1—7—1979 முதல் மாற்றப்பட்டு உள்ளது.

கலப்பினப் பண்ணை பற்றி மக்களிடையே பரவச் செய்யும் நோக்குடன் இப்பண்ணைகள் அனைத்திலும் மாடுகள் மட்டுமல்லாது, நவீன முறையில் ஆடு, பன்றி, கோழி போன்றவைகளும் பராமரிக்கப்படுகின்றன. ஐந்து கோழி விருத்தி நிலையங்கள், 1 குஞ்சு பொரிக்கும் நிலையம், 5 பன்றி வளர்ப்புப் பிரிவுகள், 4 ஆடு வளர்ப்புப் பிரிவுகள் ஆகியவை இப்பண்ணைகளுடன் இணைக்கப்பட்டிருக்கின்றன. மேலும் பண்ணை மாடுகளின் தீவனத்திற்காகவும், தீவனப் பயிர்களை வளர்த்து சிக்கன முறையில் மாடுகளைப் பேணும் முறைகளை மக்களிடையே பரவச் செய்யும் நோக்கங்களுடன் உபரி பயிரை கனிசமான விலையில் பொதுமக்களுக்கு விற்கும் நோக்கங்களுடனும் பண்ணைகள் அனைத்திலும் அப்பகுதியிலுள்ள சீதோஷ்ண நிலைக்கேற்ப தீவனப் பயிர்கள் பயிரிடப்படுகின்றன.

அரசால் நிறுவப்பட்டுள்ளன "பண்ணை புனரமைப்புக் குழுவினர்" பண்ணை பராமரிப்பு, நிர்வாகம், வரவு, செலவு போன்றவைகளை ஆய்ந்துள்ளனர். அவர்களின் அறிக்கை கூடிய விரைவில் கிடைக்கப்பெறும்.



### அயல் இன கால்நடைப் பண்ணை, ஈச்சங்கோட்டை.

மத்திய அரசின் 75 சத வீத மானியத்துடனும், 25 சத வீத கடன் உதவியுடனும், ஆரம்பிக்கப்பட்ட இப்பண்ணை கால்நடை அபிவிருத்திக்கென இப்போதுள்ள வசதிகளை அதிகரிப்பதில் தன் பங்கை செவ்வனே நிறைவேற்றி வருகிறது. மத்திய அரசின் மூலம் ஆஸ்திரேலியாவிலிருந்து 152 உயர் அயலின ஜெர்சி கால்நடைகள் பெறப்பட்டு இப்பண்ணையில் பராமரிக்கப்படுகின்றன. தமிழகத்திலுள்ள பல்வேறு திட்டங்களுக்குத் தேவையான இனவிருத்தி மாடுகளை வழங்கும் விதத்தில் உற்பத்தி செய்யப்படும். இப்பண்ணையின் தற்போதைய இருப்பு 84 இளைய மாடுகளும் 165 முதியவைகளுமாகும். 1—4—1979 முதல் மத்திய அரசின் நிதி உதவி நிறுத்தப்பட்டதால், மாநிலத் திட்டமாக இயங்கி வருகிறது. மேலும் உறை விந்து நிலையமொன்றும் இப்பண்ணையில் டென்மார்க் அரசின் உதவியோடு எற்படுத்தப்படும்.

## IV கால்நடை நோய் நீக்கப் பணிகள்.

கால்நடைகள் நலமுடனிருந்தால் மட்டுமே மிகுதியான அளவு உற்பத்தியை எதிர்பார்க்க முடியும். நோய்கள் மீண்டும் மீண்டும் ஏற்படலாம். நோயுற்ற கால்நடைகள் மீண்டும் நோயுறுவது முன்கூட்டியே அறிய முடியாத ஒன்று, எனவே, தடுப்பு மற்றும் சிகிச்சை நடவடிக்கைகள் கால்நடை பராமரிப்பில் முக்கியமானவையாகும்.

### (அ) கால்நடை மருந்தகங்கள்/மருத்துவ மனைகள்.

தமிழ்நாட்டில் 522 கால்நடை மருந்தகங்களும், 77 கால்நடை மருந்தக கேந்திர கிராம நிலையங்களும், 44 கால்நடை மருத்துவ மனைகளும், ஆறு கால்நடை மருத்துவமனை-கேந்திர கிராம நிலையங்களும், 10 பிரதம மருத்துவ மனைகளும் கால்நடை நோய் நீக்கப் பணிகளை மேற்கொள்கின்றன. தீவிர கால்நடை வளர்ப்புத் திட்டப் பகுதிகள், கேந்திர கிராம வளர்ச்சி வட்டாரங்களில் உள்ள கிளை நிலையங்களும் கால்நடை நோய் நீக்கப் பணிகளை மேற்கொள்கின்றன. இம்மாநிலத்தில் உள்ள 2,096 கிளை நிலையங்களின் முக்கிய பணி நோய்வாய்ப்பட்ட கால்நடைகளுக்கு முதல் உதவி அளிப்பதும், செயற்கை முறை இனவிருத்தி பணி புரிவதும் ஆகும்.

### (ஆ) பிரதம மருத்துவ மனைகள்.

கால்நடைகளில் பொதுவான நோய் நீக்கப் பணிகள் தவிர மாவட்ட தலைமையிடங்களில் உள்ள கால்நடை மருத்துவ நிலையங்களில் நவீன முறை நோய் ஆய்வு, இரத்தப் பரிசோதனை போன்ற வசதிகள் செய்யப்பட வேண்டும். மேலும், இந்நிலையங்களில் நவீன உபகரணங்களும், சிறந்த தொழில் நுட்ப வசதிகளும் செய்யப்பட வேண்டியது அவசியமாகும். தற்போது சென்னை நகரில் சைதாப்பேட்டை, கோயம்புத்தூர், திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், மதுரை நகரில் தல்லாக்குளம், வேலூர், சேலம், அருப்புக்கோட்டை, தருமபுரி ஆகிய இடங்களில் பிரதம மருத்துவ மனைகள் செயல்படுகின்றன.

### (இ) கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுகள்.

கால்நடை நோய் புலனாய்வு பிரிவுகள் கவனத்துடன் விரைவாகவும் நவீன முறைகளில் நோய்களைக் கண்டுபிடிக்கவும் புதிய மருந்துகள் முதலியவற்றைப் புகுத்தவும் நிறுவப்பட்டுள்ளன. இத்தகைய ஆறு பிரிவுகள் வேலூர், மதுரை, திருநெல்வேலி, கோயம்புத்தூர், கடலூர், உதகமண்டலம் ஆகிய இடங்களில் செயல்படுகின்றன. ஒவ்வொரு பிரிவிலும் (1) நுண்மை ஆய்வு/ஒட்டுயிர் ஆய்வு, (2) இயற்கை முறை நோய்க்குறி ஆய்வு, (3) தடுப்பு மருந்து ஆகிய மூன்று பிரிவுகள் கொண்ட ஒரு மருத்துவ பரிசோதனைக் கூடம் உள்ளது. மருத்துவ பரிசோதனை வசதிகளைக் கொண்ட நடமாடும் ஊர்தி ஒவ்வொரு பிரிவுடனும் இணைக்கப்பட்டு, சாதாரண நோய்களைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன், கொடிய குடற்புழுக்களின் தாக்குதல் பற்றிய அளவிடும் மேற்கொள்ளப்படுகிறது. 1979-80 ஆம் ஆண்டில் திருச்சிராப் பள்ளி, இராமநாதபுரம் ஆகிய இடங்களில் இரண்டு நோய்ப் புலனாய்வு நிலையங்கள் ஏற்படுத்த ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளன.

### (ஈ) வெக்கை நோய் ஒழிப்புத் திட்டம்.

வெக்கை நோய் ஒரு கொடிய தொற்று நோய். இந்நோய் ஏராளமான கால்நடைகள் இழப்புக்கு காரணமாவதுடன், பால், இறைச்சி உற்பத்தியைக் குறைத்து விடுகிறது. இந்நோயைத் தடுப்பதற்கும், ஒழிப்பதற்கும் அனைத்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. எனவே உரிய காலமுறைப்படி மாவட்டக் குழுக்கள், கண்காணிப்புப் பிரிவுகள், சோதனைச் சாவடிகள் மூலம் வெக்கை நோய்த் தடுப்பூசிகள் போடப்படுகின்றன. மாநில எல்லையோரங்



களிலுள்ள சோதனைச் சாவடிகளில் மாநிலத்திற்குள் நுழையும் கால்நடைகளுக்கு உடனடியாக தடுப்பூசிகள் போடப்படுகின்றன. தற்சமயம் இப்பணியில் ஈடுபட்டுள்ள பிரிவுகளின் விவரம் பின்வருமாறு :—

| | |
|---|---|
| (1) வெக்கை நோய் தடுப்பூசி குத்தும் மாநில குழுக்கள் | 14 |
| (2) கண்காணிப்புப் பிரிவுகள் | 10 |
| (3) சோதனைச் சாவடிகள் | 13 |

### (உ) இராணிப்பேட்டை கால்நடை நோய்த் தடுப்பு மருந்து நிலையம்.

இராணிப்பேட்டையிலுள்ள இந் நிலையம் நோய்த் தடுப்பு மருந்துகளை உற்பத்தி செய்வதோடு, நோய்த் தடுப்பு மருந்தின் தரத்தை உயர்த்துதல், நோய்த் தடுப்பு மருந்துகளைப் புதிதாகக் கண்டுபிடித்தல், பல்வேறு நோய்க்கான காரணங்கள், அவற்றைத் தடுப்பதற்கான முறைகள் ஆகியவை குறித்து ஆய்வு செய்தல் முதலிய ஆராய்ச்சிப் பணிகளில் தொடர்ந்து ஈடுபட்டுள்ளது. இந் நிலையத்தில் 27 உயிரியல் பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இவற்றைக் கொண்டு நமது மாநிலத்தின் தேவைகளை நிறைவு செய்வதோடு மட்டுமல்லாது அண்டை மாநிலங்களுக்கும் வழங்கப்படுகின்றன. சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் பயிலும் பட்ட மேற்படிப்பு மாணவர்கள், பட்டப்படிப்பு இறுதியாண்டு மாணவர்களைக் கொண்ட குழுவினர் பல்வேறு உயிரியல் பொருட்களைத் தயாரிக்கும் முறையையும், அவற்றை எவ்வாறு பயன் படுத்துவது என்பது பற்றியும் அறிந்துகொண்டு அவற்றில் பயிற்சி பெற ஒவ்வோராண்டும் அனுப்பப்படுகின்றனர். 1978-79 மற்றும் 1979-80 ஆம் ஆண்டுகளில் தடுப்பூசி மருந்துகள் குறிப்பிடத்தக்க அளவில் தயாரிக்கப்பட்டன. இது மாநில மற்றும் அண்டை மாநிலங்களின் தேவைகளை பூர்த்தி செய்துள்ளது.

### (ஊ) பரிசோதனைக் கூடங்கள்.

தற்போது சென்னை நகரில் சைதாப்பேட்டை, காஞ்சிபுரம், வேலூர், கடலூர், கோயம்புத்தூர், சேலம், நாகர்கோவில், திருநெல்வேலி, மதுரை நகரில் தல்லாகுளம், சிவகங்கை, ஓசூர், ஒரத்தநாடு, புதுக்கோட்டை ஆகிய 13 இடங்களில் பரிசோதனைக் கூடங்கள் செயல்படுகின்றன. இப்பரிசோதனைக்கூடங்கள் மூலம் நோய்க்கான காரணம் உடனடியாக கண்டுபிடிக்கப் படுவதுடன், தகுந்த சிகிச்சையும், தடுப்புப் பணிகளை மேற்கொள்ளவும் துறை அலுவலர்களுக்கு உதவுகின்றன.

### (எ) நடமாடும் நிலையங்கள்.

தமிழ்நாட்டில் சென்னை, விருதுநகர், சிவகங்கை ஆகிய மூன்று இடங்களிலுமுள்ள நடமாடும் நிலையங்கள் கால்நடை வளர்ப்போரின் வாசலிலேயே மருத்துவ சிகிச்சை செய்யும் பணியில் தொடர்ந்து ஈடுபட்டுள்ளன. 1979-80-ம் ஆண்டில் வறட்சிப் பாங்கான பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் தருமபுரி மாவட்டத்திற்காக இரு நடமாடும் கால்நடை நிலையங்களும், இராமநாதபுரம் மாவட்டத்திற்காக ஒரு நடமாடும் கால்நடை நிலையமும் ஒப்பளிப்பு வழங்கப்பட்டன.

## V. கால்நடைப் பராமரிப்புத் துறையின் நிர்வாக அமைப்பு.

கால்நடைப் பராமரிப்புத் துறை இந்திய ஆட்சிப் பணி அமைப்பில் உள்ள அலுவலரை இயக்குநராகக் கொண்டுள்ளது. அவருக்கு தொழில் நுட்ப நிர்வாகப் பணிகளில் இரண்டு கூடுதல் கால்நடைப் பராமரிப்பு இயக்குநர்கள் உதவி புரிகின்றனர். ஈச்சங்கோட்டையிலுள்ள உயரின கால்நடைப் பராமரிப்புப் பண்ணையும், இராணிப்பேட்டை கால்நடை நோய் தடுப்பு மருந்து நிலையமும், புதுக்கோட்டை மாவட்டக் கால்நடைப் பண்ணையும், தற்போது ஒவ்வொரு கால்நடைப் பராராமரிப்பு கூடுதல் இயக்குநரின் பொறுப்பிலுள்ளது. மாதவரம் பால் பண்ணை, பால் வள துறையிலிருந்து கால்நடை பராமரிப்புத் துறைக்கு மாற்றப்பட்டு கால்நடைப் பராமரிப்பு இணை இயக்குநர் ஒருவரின் பொறுப்பில் உள்ளது. தீவிர கால்நடை வளர்ப்பு திட்டங்கள், கேந்திர கிராம திட்டங்கள் ஒவ்வொன்றும் கால்நடைப் பராமரிப்பு துணை இயக்குநரின்கீழ் இயங்கி வருகிறது. மற்றப் பணிகளெல்லாம் மண்டல அடிப்படையில் செயல்படுகின்றன. நிர்வாக வசதிக்காக மாநிலம் எட்டு மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு மண்டலமும் ஒரு கால்நடைப் பராமரிப்பு இணை இயக்குநரின் பொறுப்பிலுள்ளது.

தஞ்சாவூர், வேலூர் மண்டல கால்நடை இணை இயக்குநர்களுக்கு இரண்டு சிறப்பறிஞர்கள் உதவி புரிகின்றனர். மற்ற கால்நடை இணை இயக்குநர்களுக்கு ஒரு சிறப்பறிஞர் உதவி புரிகிறார். வறட்சிப் பாங்கான பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் கிருஷ்ணகிரியில் கூடுதலாக கால்நடைப் பராமரிப்பு கோட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தற்போது 60 கால்நடைப் பராமரிப்பு கோட்டங்கள் உள்ளன. ஒவ்வொன்றும் ஒரு உதவி கால்நடைப் பராமரிப்பு இயக்குநரின் கீழ் இயங்கி வருகின்றன.





## VI. வருங்காலத் திட்டங்கள்.

1980-81 ஆம் ஆண்டில் கீழ்க்கண்டுள்ள திட்டங்களை செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது :—

| வரிசை எண். | திட்டத்தின் பெயர். | கூறுகள். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 | ஈச்சங்கோட்டையில் மருந்து தயாரிக்கும் நிலையம் ஏற்படுத்துதல். | 1 |
| 2 | இராணிப்பேட்டை கால்நடை நோய்த் தடுப்பு மருந்து நிலையத்தில் கருச்சிதைவு நோய்த் தடுப்புப் பிரிவை விஸ்தரிப்பு செய்தல். | 1 |
| 3 | இராணிப்பேட்டை கால்நடை நோய்த் தடுப்பு மருந்து நிலையத்தில் உள்ள கோழியின நோய்த் தடுப்பு மருந்து தயாரிக்கும் பிரிவை விரிவாக்குதல். | 1 |
| 4 | இராணிப்பேட்டை கால்நடை நோய்த் தடுப்பு மருந்து நிலையத்தில் வாத்து ப்ளேக் நோய்த் தடுப்பு மருந்து தயாரிக்கும் திட்டம். | 1 |
| 5 | திசு வளர் கோழி அம்மை தடுப்பு மருந்து தயாரிக்கும் திட்டம். | 1 |
| 6 | புதுக்கோட்டை மற்றும் உதகமண்டலம் கால்நடைப் பண்ணையில் இளங்கிடேரி வளர்ப்புத் திட்டம். | 2 |
| 7 | கால்நடை உதவி இயக்குநர் அலுவலகங்களுக்கு கூடுதல் பணியாளர்களை நியமித்தல். | 30 |

[1980 ஜூலை 26

| வரிசை எண். | திட்டத்தின் பெயர். | கூறுகள். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 8 | திருச்சிராப்பள்ளி தீவிரக் கால்நடை அபிவிருத்தி திட்ட அலுவலகத்திற்குக் கூடுதல் பணியாளர்களை நியமித்தல். | |
| 9 | கால்நடைப் பண்ணைகள் புனரமைப்பு | |
| 10 | கோழி விஸ்தரிப்பு நிலையங்களில் கொட்டகை கட்டுதல். | |
| 11 | உறைவிந்து தொழிலில் பயிற்சி அளித்தல். | 540 |
| 12 | கால்நடைப் பண்ணையில் பசுந் தீவன புல் விதைகளை உற்பத்தி செய்தல். | 1 |
| 13 | புதிய கால்நடை மருந்தகங்கள் ஆரம்பித்தல். | 10 |
| 14 | கால்நடை மருந்தகங்களை மருத்துவ மனைகளாக நிலை உயர்த்துதல் | 5 |
| 15 | கால்நடை மருத்துவமனைகளை பிரதம மருத்துவ நிலையங்களாக நிலை உயர்த்துதல். | 2 |
| 16 | மருந்து கிடங்குகள் கட்டுதல். | 4 |
| 17 | இராணிப்பேட்டை கால்நடை நோய்த் தடுப்பு மருந்து உற்பத்தி நிலையத்தில் அலுவலர் குடியிருப்பு கட்டுதல். | |
| 18 | ஆடுகளுக்கு குடற்புழு நீக்குதல் | |
| 19 | கடலூர், சேலம், தருமபுரி, தஞ்சாவூர், மதுரை, இராமநாதபுரம் மற்றும் கன்னியாகுமரியிலுள்ள வெக்கை நோய்த் தடுப்புப் பிரிவிற்கு கூடுதல் வசதிகள் செய்தல். | |



1980 ஜூலை 26]

| வரிசை எண். | திட்டத்தின் பெயர். | கூறுகள். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 20 | புதுக்கோட்டை, பெரியார் மாவட்டங்களுக்காக புதிய வெக்கை நோய்த் தடுப்புப் பிரிவுகள் மற்றும் இராமநாதபுரம் மாவட்டத்தில் சிவகங்கையை தலைமையிடமாகக் கொண்டு இரண்டாவது வெக்கை நோய்த் தடுப்புப் பிரிவு ஏற்படுத்துதல். | 3 |
| 21 | வம்சாவழித் திட்டம் (எருமையினம்). | |
| 22 | காங்கேய இன கால்நடை வளர்ப்புப் பண்ணை. | 1 |
| 23 | கேந்திர கிராம வளர்ச்சி வட்டாரங்கள் ஏற்படுத்துதல். | 5 |
| 24 | ஓங்கோல் இன கால்நடை வளர்ப்பு. | |
| 25 | தேர்ந்தெடுக்கப்பட்ட 26 கால்நடை மருந்தகங்களுக்கு கூடுதல் பணியாளர்களை நியமனம் செய்தல். | |
| 26 | எம்.வி.எஸ்ஸி, பட்டப் படிப்பிற்கு அலுவலர்களை அனுப்புதல். | 10 |
| 27 | காட்டுப்பாக்கத்தில் நாய் வளர்ப்புப் பிரிவு ஏற்படுத்துதல். | 1 |
| 28 | புதுக்கோட்டை மாவட்ட கால்நடைப் பண்ணையில் வெள்ளாடு வளர்ப்புப் பிரிவு ஏற்படுத்துதல். | 1 |

1980 ஜூலை 28]

கவனிக்க ஒரு உதவி இயக்குநர், ஒரு செயலர் உடல் ஊனமுற்றோர் வாரியம், ஒரு கணக்கு அலுவலர் மற்றும் ஒரு உதவி கணக்கு அலுவலர் ஆகியோர் பல்வேறு திட்டங்களை செயல்படுத்துவதில் இயக்குநருக்கு உதவி புரிகின்றனர்.

3. மாவட்ட அளவில் இத்துறையின் பணிகள் அனைத்திற்கும் மாவட்ட சமூக நல அலுவலர்கள், குழந்தைகள் வளர்ச்சித் திட்ட அலுவலர்கள், சிறப்பு அலுவலர்கள் (வழிகாட்டு நிலையம்) பொறுப்பாளர்கள், ஊராட்சி ஒன்றியங்களுடன் இணைந்து பணியாற்றும் சமூக நல விரிவாக்க அலுவலர்கள், ஊர் நலப் பணியாளர்கள், குழந்தைகள் காப்பகங்களில் பணியாற்றி வரும் குழந்தைகள் நல அமைப்பாளர்கள் மற்றும் நகர்ப்புறப் பகுதிகளில் பணியாற்றி வரும் சமூக நல அமைப்பாளர்கள், கைத் தொழில் ஆசிரியைகள் ஆகியோர் இத்துறையின் பல்வேறு திட்டங்களை நேரடியாக கவனிக்கும் களப் பணியாளர்களாவர்.

### 1. மகளிர் நலம்.

**சேவை இல்லங்கள் :**

4. இம்மாநிலத்தில் தாம்பரம், தஞ்சாவூர், கடலூர், திருநெல்வேலி மற்றும் சேலம் ஆகிய ஐந்து இடங்களில் சேவை இல்லங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. அவற்றில் தாம்பரம் சேவை இல்லம் 1948 ஆம் ஆண்டிலேயே தொடங்கப்பட்டதாகும். தஞ்சாவூர், கடலூர் ஆகிய இடங்களில் நடைபெற்று வரும் சேவை இல்லங்கள் முறையே 1962 மற்றும் 1964-ம் ஆண்டிலும் திருநெல்வேலி, சேலம் ஆகிய இடங்களில் நடைபெற்று வரும் இல்லங்கள் 1978—79-ம் ஆண்டிலும் தொடங்கப்பட்டவையாகும். சமூகத்தில் ஆதரவற்ற நிலையிலுள்ள 18 முதல் 40 வயது வரையிலான பெண்களுக்கு ஆதரவளிப்பதே இவ்வில்லங்கள் நடத்தப்படுவதன் நோக்கமாகும். பெண்களுக்கு மூன்றாண்டுகள் கல்வி கற்பிக்கவும் ஓராண்டு தொழிற்பயிற்சி அளிக்கவும் இவ்வில்லங்களில் வசதி செய்யப்பட்டுள்ளது. இவ்வில்லங்களில் சேர்த்துக் கொள்ளப்படும் பெண்களின் குழந்தைகள் இங்கேயே தங்கி 8-ம் வகுப்பு வரை கல்வி கற்கவும் வசதியுள்ளது.

5. உடல் ஊனமுற்ற மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான தனிப்பிரிவு ஒன்று இயங்கி வருவது தாம்பரம் சேவை இல்லத்தின் சிறப்பம்சமாகும். இப்பிரிவில் 30 பெண்களும், 20 சிறார்களும் பயில வாய்ப்புள்ளது.

6. சேலம் இவ்வில்லத்தில் விடுதிக்காப்பாளர் பயிற்சி வகுப்பு ஒன்றும் நடைபெற்று வருகிறது. இவ்வகுப்பில் இதுவரை 164 பெண்கள் பயிற்சி பெற்று மறுவாழ்வு பெற்றுள்ளனர்.

7. இவ்வில்லங்களில் தங்கும் மகளிர் ஒவ்வொருவருக்கும் மாதம் ரூ. 50 விதமும் சிறார்களுக்கு மாதம் ரூ. 36 விதமும் உதவித்தொகை வழங்கப்படுகிறது. இது தவிர ஒவ்வொரு மகளிருக்கும் ஆண்டொன்றுக்கு ரூ. 60 விதமும் சிறார்களுக்கு ரூ. 35 விதமும் உடைகளுக்காக மானியம் வழங்கப்படுகிறது.

8. தாம்பரம் சேவை இல்லத்தில் தயார் நிலை உடைகள் தைக்கும் நிலையம் ஒன்று நடைபெற்று வருகிறது. இதில் பதினைந்து பெண்கள் பணி புரிந்து வருகின்றனர். ஒவ்வொரு பணியாளருக்கும் நாளொன்றுக்கு ரூ. 3 விதம் கூலி வழங்கப்பட்டு வருகிறது.

9. மேலும் 1979-80ல் முதுநிலை மற்றும் இளநிலை இல்லத் தலைவிகள் தங்குவதற்காக ரூ. 73,000 செலவில் குடியிருப்புகள் கட்டவும் திட்டமிடப்பட்டுள்ளது.

10. இரண்டாண்டுகளில் எஸ்.எஸ்.எல்.சி. எழுதத் தக்க வகையில் குறுகிய கால பயிற்சி வகுப்புகள் எல்லா சேவை இல்லங்களிலும் நடைபெற்று வருகின்றது.

11. மேலும் இந்நிலையங்களில் பயிற்சியளிக்கப்பட்ட மகளிர் அரசு தொழில் நுட்பத் தேர்வுகளுக்கு அனுப்பப்படுகின்றனர். தாம்பரம், தஞ்சாவூர், கடலூர், ஆகிய இடங்களில் செயற்பட்டு வரும் சேவை இல்லங்களிலும் சென்னையிலுள்ள ஸ்திரி சேவா மந்திர் என்னும் தனியார் நிறுவனத்திலும் சுருக்கெழுத்து போன்ற செயலக பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றது. ஒவ்வொரு நிலையத்திலும் 20 பெண்கள் பயிற்சி பெற அனுமதிக்கப்படுகின்றனர். இப்பயிற்சியாளர்களுக்கு மாதம் ரூ 20 விதம் உதவித்தொகை வழங்கப்படுகின்றது. நடப்பு ஆண்டிலும் இத்திட்டம் செயல்பட்டு வருகின்றது.

**இடைநிலை ஆசிரியை பயிற்சி பள்ளி :**

12. இடைநிலை ஆசிரியர் பயிற்சி வகுப்பு ஒன்று பெண்களுக்காகவே பல்லாவரத்தில் நடத்தப்பட்டு வருகிறது. இவ்வகுப்பில் முதுநிலைப் பிரிவில் 40 பேர். இளநிலைப் பிரிவில் 40 பேர் ஆக 80 பெண்கள் பயிற்சி பெற அனுமதிக்கப்பட்டுள்ளனர், ஒவ்வொருவருக்கும் மாதம் ரூ. 50 விதம் உதவித்தொகை வழங்கப்படுகிறது. நடப்பு ஆண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து செயல்பட்டு வருகின்றது.



**தட்டச்சுப் பயிற்சி :**

13. ரூ. 3,000க்கும் குறைவான ஆண்டு வருமானமுள்ள குடும்பங்களைச் சேர்ந்த 16 முதல் 30 வயதுள்ள 1,000 ஏழை பெண்கள் வேலை வாய்ப்பு வசதி பெறுவதற்காக தட்டச்சு பயிற்சி பெற, உதவித் தொகையாக ஆண்டொன்றுக்கு ரூ. 150 வழங்கப்படும் புதிய திட்டமொன்று 1978 ஜனவரி முதல் செயற்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் இதுவரை சுமார் 1,600 பெண்கள் பயன் பெற்றுள்ளனர். இத்திட்டம் இவ்வாண்டும் தொடர்ந்து செயற்படுத்தப்பட்டு வருகிறது.

**பணிபுரியும் பெண்கள் விடுதிகள் :**

14. பணிபுரியும் பெண்கள் 25 பேர் தங்கும் அளவில் சென்னை நகரில் ஒரு விடுதி இத்துறையால் நடத்தப்பட்டு வருகிறது. உணவுக் கட்டணமாக ரூ. 80ம் தங்கும் அறை வாடகை மற்றும் மின்சார கட்டணமாக ரூ. 33ம் இவர்களிடமிருந்து வசூலிக்கப்படுகிறது.

15. சென்னை, திருச்சி, மதுரை, கோயம்புத்தூர், சேலம் அல்லது திருநெல்வேலி ஆகிய இடங்களில் பணிபுரியும் பெண்கள் இல்லங்கள் ஆரம்பிக்க 1980-81ம் ஆண்டு இரண்டாம் பகுதி திட்டங்களில் ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது.

16. சமூகநலப் பணிகளில் ஈடுபட்டு இருக்கும் தனியார் தொண்டு நிறுவனங்கள் பணிபுரியும் பெண்கள் விடுதிகள் நடத்துவதற்கு ஊக்குவிக்கப்படுகின்றன. இதன்மூலம் மத்திய அரசு பணிபுரியும், பெண்கள் விடுதி கட்டிடம் கட்டுவதற்கான மொத்த மதிப்பீட்டில் 75 சதவிகிதம் மானியமாக வழங்குகின்றது. இத்திட்டத்தின் கீழ் இதுவரை 17 தனியார் நிறுவனங்கள் மான்யம் பெற்றுள்ளன. இவற்றுள் சில கட்டிடங்கள் முடிவடைந்து இல்லங்கள் ஆரம்பித்து நடத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டத்திற்காக தமிழக அரசு கட்டிடத்தின் மதிப்பில் 15 சதவிகிதம் அதிக பட்சம் ரூ. 35,000 தனியார் நிறுவனங்களுக்கு மான்யம் அளிக்கிறது. இதுவரை 13 நிறுவனங்களுக்கு மாநில அரசு மான்யம் வழங்கியுள்ளது. நடப்பு ஆண்டிலும் இத்திட்டம் செயல்படும்.

**பயிற்சி நிலையங்களும் உற்பத்தி நிலையங்களும் :**

17. தங்கள் குடும்ப வருவாயைப் பெருக்கிக் கொள்ளும் வகையில் கிராமப்புற மக்களுக்கு தையல், கம்பளி ஜமுக்காளம் நெய்தல், பனை ஓலைப் பாய் முடைதல் போன்ற எளிதான குடிசைத் தொழில்களில் தீவிர பயிற்சியளிக்கும் பொருட்டு பயிற்சி நிலையங்கள் தொடரப்பட்டன.

18. தற்போது சமூகநலத்துறையின் நிதியின் கீழ் 26 பயிற்சி நிலையங்களும் 4 உற்பத்தி நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன.

19. மேலும் மாநில துறைத்திட்டத்தில் மலைவாழ் பெண்களின் நலனுக்காக ஏற்கனவே வட ஆற்காடு மாவட்டத்தில் ஜமுனா மருதூரில் தையல் பயிற்சி நிலையம் ஒன்று செயல்பட்டு வருவதுடன் சேலம் மாவட்டத்தில் கொல்லிமலை, ஏற்காடு, கல்ராயன்மலை ஆகிய 3 இடங்களில் 1—1—1980 முதல் 3 தையல் பயிற்சி நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இப் பயிற்சியின் காலம் ஒரு ஆண்டு. பயிற்சி காலத்தில் ஏற்படும் எதிர்பாராத செலவுகளை சமாளிப்பதற்காக இவர்களுக்கு மாதம் ரூ. 30 வீதம் உதவித் தொகை வழங்கப்படுகிறது.

20. வட ஆற்காடு மாவட்டத்தில் இரண்டும் பெரியார் மாவட்டத்தில் ஒன்றும் ஆக மூன்று தையல் பயிற்சி நிலையங்கள் ஆரம்பிக்க 1980-81-ம் ஆண்டு இரண்டாம் பகுதி திட்டங்களில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

21. மேற்கண்ட திட்டங்கள் நீங்கலாக அரிசன நலத்துறை நிதியின் மூலம் 15 பயிற்சி நிலையங்களும் பிற்பட்டோர் நலத் துறையின் மூலம் 7 பயிற்சி நிலையங்களும் மறு வாழ்வுத் துறை மூலம் 2 பயிற்சி நிலையங்களும் இம்மாநிலத்தில் நடைபெற்று வருகின்றன.

**ஊரகப் பெண்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் சிறப்புத் திட்டங்கள் :—**

22. அரசு ரூ. 25 இலட்சங்கள் செலவில் சிறப்புத் திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்துள்ளது. இச்சிறப்பு திட்டங்களின் மூலம் 20,000-க்கும் அதிகமான பெண்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது. 1979-80-ம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 20 இலட்சங்கள் ஒதுக்கியுள்ளது. இத்திட்டத்தின் கீழ் ஊரகப் பெண்கள், கிராம, குடிசை கைத்தொழில்களில் பயிற்சியளிக்கப்பட்டு, தொழில் கூட்டுறவு சங்கங்கள் அமைப்பதன் மூலம் வேலைக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறார்கள். இந்தப் பயிற்சிக் காலங்களில் மாதம் ரூ. 50-லிருந்து ரூ. 75-வரை உதவித்தொகை அளிக்கப்படுகிறது. சிறப்புத் திட்டங்களின்கீழ் அமுலாக்கப்பட்டுள்ள முக்கியமான திட்டங்கள் வருமாறு :—

**தீப்பெட்டித் தொழில் :—**

23 இத்தொழிலின் மூலமாக 12,000 ஊரகப் பெண்களுக்கு பயிற்சி அளித்து வேலை கொடுப்பது இதன் நோக்கமாகும். இதற்காக மதுரை, இராமநாதபுரம், புதுக்கோட்டை, தருமபுரி, தஞ்சாவூர், சேலம், கன்னியா



குமரி, திருநெல்வேலி, கோயம்புத்தூர் மாவட்டங்களில் 600 தீப்பெட்டி தொழில் கூட்டுறவு சங்கங்கள் அமைக்கப்படுகின்றன. இதைத்தவிர கூட்டுறவு சங்கங்கள் மறைமுகமாக மேலும் 12,000 பேருக்கு வேலை அளிக்க வாய்ப்புண்டு. 1979-80-ம் வருடத்தில் இதுவரை 133 பெண்கள் தொழில் கூட்டுறவு சங்கமும் மத்திய சேவை தொழில் கூட்டுறவு சங்கமும் அமைத்து பதிவு செய்யப்பட்டுள்ளது. 2,360 ஊரகப் பெண்களுக்கு இத்தொழில் இதுவரை பயிற்சியளிக்கப்பட்டு உள்ளது. 19 சங்கங்கள் உற்பத்தியை துவங்கி உள்ளன.

24. மத்தியச் சங்கம் கச்சாப் பொருள்கள் வாங்கி கூட்டுறவு சங்கங்களுக்கு விநியோகம் செய்வதுடன், உற்பத்தி செய்யப்பட்ட தீப்பெட்டிகளை விற்பனை செய்யவும் ஆரம்பித்துள்ளது.

25. 1980-81-ம் வருடத்தில் மேலும் 267 தொழிற் கூட்டுறவு சங்கங்கள் அமைக்கப்படும். இந்த சங்கங்கள் 5,340 ஊரகப் பெண்களுக்கு தீப்பெட்டி தொழிலில் பயிற்சியளிக்கும்.

**பனை மரத்தொழில்கள்.**

26. ரூ. 85,250,00 செலவில் 250 ஊரகப் பெண்களுக்கு பனை மரத் தொழில்களில் பயிற்சி அளிக்க தருமபுரி வட்டத்தில் பயிற்சி நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் இத்தொழிலில் 10 உற்பத்தி நிலையங்கள் அமைப்பதற்கான செயல்குறிப்புகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. 1980-81-ம் வருடத்தில் 250 ஊரகப் பெண்களுக்கு பனைமரத் தொழில்களில் வேலை வாய்ப்புகள் அளிக்கப்படும்.

**எழுதுபொருள் உற்பத்தி.**

27. 750 பெண்களுக்கு எழுதுபொருள்கள் தயாரிப்பதில் பயிற்சியளித்து வேலை அளிக்க 15 தொழில் கூட்டுறவு சங்கங்கள் அமைக்க ஒரு செயற்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இதில் இரண்டு சங்கங்கள் சென்னையிலும், மதுரையிலும் துவங்கப்பட்டுள்ளன. 1980-81 ஆம் வருடத்தில் மீதமுள்ள சங்கங்கள் கோவை, நெல்லை, செங்கை, தஞ்சை, முகவை, திருச்சி; தர்மபுரி போன்ற மாவட்டங்களில் அமைக்கப்படும்.

### சாக்கட்டி உற்பத்தி.

28. சாக்கட்டி உற்பத்தியில் 250 பெண்களுக்கு வேலையளிக்க 10 தொழில் கூட்டுறவு சங்கங்கள் அமைப்பதற்கான செயற்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டுள்ளது. தருமபுரி, சேலம், திருச்சி மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் 6 கூட்டுறவு சங்கங்கள் ஏற்கெனவே அமைக்கப்பட்டுவிட்டன. இவைகள் விரைவில் உற்பத்தியை துவக்கும். மீதமுள்ள 4 சங்கங்கள் தஞ்சாவூர், செங்கல்பட்டு, பெரியார், திருநெல்வேலி மாவட்டங்களில் 1980-81 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்படும்.

### பயிற்சி நிலையங்களும், உற்பத்தி நிலையங்களும்.

29. இராமநாதபுரம், மதுரை, தஞ்சாவூர் மாவட்டங்களில் மூன்று சாக்கட்டி நிலையங்களும் கன்னியாகுமரி, திருநெல்வேலி, தஞ்சாவூரில் 3 மெழுகுவர்த்தி உற்பத்தி நிலையங்களும் அமைக்கப்பட்டுள்ளன. இவை 120 ஊரகப் பெண்களுக்கு வேலையளிக்கும்.

### சமூக நலக் கிளைகள் :

30. மாநிலம் முழுவதும் 50 சமூக நலக் கிளைகள் 1947-லிருந்து செயல்பட்டு வருகின்றன. ஒவ்வொரு கிளையும் ஒரு மகளிர் நல அமைப்பாளரின் மேற்பார்வையில் உள்ளது. அரசு ஒவ்வொரு கிளைக்கும் ஆண்டுதோறும் சுமார் ரூ. 8,000 செலவு செய்துகொண்டு வருகிறது. ஆரம்பத்தில் சமூக நலக்கிளைகள் நகரங்களில் மட்டுமே செயல்பட்டு வந்தன. பின்பு இக்கிளைகள் பின்தங்கிய மக்கள் வசிக்கும் நகரசபை பகுதிகளுக்கும் மற்றும் நகரங்களில் உள்ள குடிசைப் பகுதிகளுக்கும் மாற்றப்பட்டன. இக்கிளைகளின் மூலம் கிராமப்புற மகளிர் முக்கியமாக பிற்படுத்தப்பட்டோர், ஆதரவற்றோர், விதவைகள், கணவனால் கைவிடப்பட்டவர், மிக ஏழ்மை நிலையில் உள்ளவர்கள் அதிகம் பயன்பெற்று வருகின்றனர். ஒவ்வொரு சமூகநலக்கிளைகளிலும் குழந்தைகள் காப்பகங்கள் பாலசேவிகாவின் மேற்பார்வையில் இயங்கி வருகின்றன. காலை வேலைகளில் இக்குழந்தைகள் காப்பகங்களை சமூகநல அமைப்பாளர்கள் மேற்பார்வையிடுகின்றனர். குழந்தைகள் காப்பகங்கள் நல்ல முறையில் இயங்குவதற்கு அவ்வப்போது ஆலோசனைகள் கூறியும் செயல்முறைகள் செய்து காட்டியும் பால் சேவிகாக்களை சமூகநல அமைப்பாளர்கள் ஊக்குவிக்கின்றனர். மாலை வேலைகளில் மகளிர் நல அமைப்பாளர்கள் மாதர்களை ஒன்றாக கூட்டி அவர்களுக்கு குடும்ப கலைகளாகிய



குழந்தை வளர்ப்பு, சத்துணவு தயாரித்தல், வீடும் சுற்றுபுறமும் சுத்தமாக வைத்தல், வீட்டு வைத்தியம், முதியோர் கல்வி கர்ப்பிணிகளை பராமரிக்கும் முறைகள் இவற்றில் பயிற்சி அளிக்கிறார்கள். மேலும் குடும்ப வருமானம் அதிகரிக்க காய்கறி தோட்டம் அமைத்தல் பனை ஓலையை பயன்படுத்தி பாய், கூடை முதலியன முடைதல் துணிகள் தைத்துகொடுத்தல், கோழிப் பண்ணை, பால்பண்ணை போன்றவைகளை மகளிர்கள் கூட்டாக சேர்ந்து அமைத்து லாபம் அடைதல், பூ வேலைகள் செய்தல் இவைகளை நல்லமுறையில் கற்றுக் கொடுத்து வருகின்றனர். அரசு ஆணை எண் 778, சமூகநலத்துறை, நாள் 1—10—1975-ன் படி 50 சமூகநலக் கிளைகளிலும் பாலவிஹார் உணவூட்டும் திட்டம் செயல்பட்டு வருகின்றது.

### தனியார் நிறுவனங்களுக்கு கொடுக்கப்படும் மான்யம் பற்றி.

31. சமுதாயத்தில் பொருளாதாரத்தில் நொடிந்தோர் மற்றும் உடல் ஊனமுற்றோர் நலங்களை பேணிவளர்ப்பது சமூக நலத்துறையின் செயல்களாகும். இவற்றில் சில தனியார் நிறுவனங்கள்மூலம் அந்நிறுவனங்களின் அதிகபட்ச சேவையினை ஊக்கப்படுத்தும் வகையில் செயல்படுத்தப்படுகின்றன. கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், விதவைகள் மற்றும் அனாதை பெண்களுக்கு மறுவாழ்வளிக்க இந்நிறுவனங்களுக்கு மானிய உதவி அளிக்கப்படுகின்றது. கீழே குறிப்பிட்டுள்ள தனியார் நிறுவனங்களால் நடத்தப்பட்டுவரும் சேவை இல்லங்களுக்கு அரசு ஆணை எண் 2464, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறை, நாள் 5—12—1968-ல் வயது வந்த ஆதரவற்ற பெண்களுக்கு இரண்டு வருட எஸ். எஸ். எல். சி பயிற்சி கொடுப்பதற்காக உபகாரச் சம்பளமும், சில்லரை செலவினமும், ஆசிரியர்களுக்கு சம்பளமும், மானியமாக வழங்க அனுமதிக்கப்பட்டுள்ளன. ஒரு நபருக்கு ரூ. 50 வீதம் உதவித்தொகை அளிக்கப்படுகிறது.

1. அவ்வை ஆஸ்ரமம், சிவசைலம், திருநெல்வேலி.
2. கஸ்தூரிபா சேவாஸ்ரமம், காந்திகிராமம், மதுரை.
3. சேவாஸ்ரமம், மதுரை.
4. திருச்சி சேவா சங்கம், திருச்சிராப்பள்ளி.

32. மேலும் ஏழைப் பெண்களுக்கு தட்டெழுத்து, சுருக்கெழுத்து செயலக பயிற்சி வகுப்புகள் நடத்துவதற்கான ஸ்திரி சேவா மந்திர் என்ற நிறுவனத்திற்கு ஒரு பயிற்சியாளருக்கு மாதமொன்றிற்கு ரூ. 20-வீதம் 20 பயிற்சியாளருக்கு உதவித்தொகை வழங்கவும் ஒரு பயிற்சியாளருக்கு பராமரிப்பு செலவுக்கென மாதம் ரூ. 5 வீதம் வழங்கவும் அரசு மான்யம் வழங்குகிறது. அரசு

அரசு ஆணை எண் 236, சமூகநலத்துறை நாள் 19—4—1969-ல் இரண்டு தொழிற் பயிற்சி ஆசிரியர்களுக்கு ரூ. 275—10—375—15—450 என்ற விகிதத்தில் ஊதியம் வழங்கவும் ஒரு ஆங்கில ஆசிரியருக்கு மாதம் 100 வீதம் ஊதியம் வழங்கவும் அனுமதி வழங்கப்படுகிறது.

33. மேலும் இந்தியன் கௌன்சில் ஆப் சோசியல் வெல்பேர், பம்பாய் இந்தியன் கௌன்சில் ஆப் சோசியல் வெல்பேர், தமிழ்நாடு டாட்டா இன்ஸ்டிடியூட்டு ஆப் சோசியல்சர்வீஸ், பம்பாய் போன்ற நிறுவனங்களுக்கு சமூக நலப்பணிகள் தொடர்ந்து நடத்துவதற்காக ஒவ்வொன்றிற்கும் ஆண்டொன்றுக்கு ரூ. 2,000 வீதம் வருடாந்திர மானியமாக வழங்கப் படுகிறது.

விஷ சாராயத்தால் உயிரிழந்த குடும்பங்களுக்கு மான்யம்.

34. 1976 லிருந்து விஷ சாராயத்தால் உயிரிழந்த குடும்பத்தைச் சேர்ந்த குழந்தைகளை பராமரிக்கவும், கல்வி புகட்டவும் 14—12—1976-ம் தேதியிட்ட சமூகநலத்துறை அரசு ஆணை எண். 1046-ன்படி ஒருவருக்கு மாதத்திற்கு ரூ. 30 வீதம் மான்யம் வழங்க அனுமதி தந்துள்ளது.

சமூகநல வாரியத்தின் மூலம் தனியார் தொண்டு நிறுவனங்களுக்கு அரசு மான்யம் அளித்தல்.

35. கிராமப்புறங்களில் மகளிர் நலத்திற்காகவும், ஆறு வயதிற்குட்பட்ட குழந்தைகளின் நலத்திற்காகவும், உடல் ஊனமுற்றோரின் நலத்திற்காகவும் தொண்டு செய்து வரும் தனியார் நிறுவனங்களை ஊக்குவிப்பது அவசியமெனக் கருதப்பட்டு அந்த வகையில் கிராமப்புறங்களில் தொண்டு செய்துவரும் நிறுவனங்களுக்கு சமூகநல வாரியத்தின் மூலம் மானியம் வழங்க அரசு ரூ. 1.00 லட்சம் அனுமதி வழங்கியுள்ளது.

36. கீழ்க்கண்ட பணிகளில் ஈடுபட்டு வரும் நிறுவனங்களுக்கே இம்மான்யம் வழங்கப்பட வேண்டுமென வரையறுக்கப்பட்டுள்ளது. அவைகளாவன :—

1. குழந்தைகள் காப்பகங்கள்.
2. பாலர் பள்ளிகள்.
3. குழந்தைகளுக்கான மனமகிழ் மன்றங்கள்.
4. குழந்தைகளுக்கான வழிகாட்டி நிலையங்கள்.





5. தாய்-சேய் பராமரிப்பு, சுகாதாரம், சத்துணவு, கலை மற்றும் கைத்தொழில் ஆகியவற்றில் பயிற்சியளித்தல்.
6. மகப்பேறு மற்றும் நல்வாழ்வுப் பணிகள்.
7. மகளிருக்கான மனமகிழ் பணிகள்.
8. முதியோர் மற்றும் தள்ளாத வயதினருக்கான நல்வாழ்வுப் பணிகள்.
9. தொழுநோய் மற்றும் எலும்புருக்கி நோயிலிருந்து குண மடைந்தவருக்கான நல்வாழ்வுப் பணிகள்.
10. உடல் ஊனமுற்றோருக்கான நல்வாழ்வுப் பணிகள்.
11. மகளிருக்கான எழுத்தறிவிப்புத் திட்டங்கள்.

மகளிர் மன்றங்கள்.

37. மகளிர் நலத்திட்டத்தில் மகளிர் மன்றங்கள் மிகப்பெரிய பங்கு வகிக்கின்றன. கிராமப் புறங்களிலுள்ள மக்கள் ஒன்று கூட்டி பயனுள்ள சில கைத்தொழில்களை கற்பிப்பதன் மூலம் தங்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்ளவும் அதன் மூலம் ஓரளவு கூலி பெற்று தங்கள் குடும்ப வருவாயைப் பெருக்கிக் கொள்ளவும் இத்திட்டம் வழி வகுக்கின்றது. மாநில மெங்கும் 11,220 மகளிர் மன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. ஊராட்சி ஒன்றியம் ஒன்றிற்கு ஆண்டொன்றுக்கு ரூ. 4,000 வீதம் இவ்வகைக்காக ஒதுக்கீடு செய்யப்படுகின்றது. நடப்பு ஆண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து செயல் பட்டு வருகின்றது.

மகளிர் மன்றம் மூலமாகப் பொருளாதார நடவடிக்கைகளை ஊக்குவித்தல்.

38. பல்வேறு வகையான பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வகையில் மகளிர் மன்றங்களை ஊக்குவிப்பதற்காக பொருளாதார நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ள சிறந்த மகளிர் மன்றங்களுக்கு ரொக்க பரிசுகள் வழங்கப்படுகின்றன. மகளிர் மன்றங்கள் மூன்று வகையாகத் தரம் பிரிக்கப்பட்டு ரொக்கப் பரிசாக முறையே ரூ. 1000, ரூ. 600, ரூ. 400 வழங்கப்படுகிறது இத்திட்டத்தின் கீழ் 1979-80-ல் 112 ரொக்கப்பரிசுகள் வழங்குவதற்காக ரூ. 66,400 ஒதுக்கப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படும்.

## சிறந்த ஊர்ப் பணியாளருக்கான பரிசுத்திட்டம்.

39. கிராமப்புறங்களில் மெச்சத் தகுந்த அளவில் பணி புரிந்து வரும் பணியாளர்களிடையே தங்கள் பணியில் போட்டி மனப்பான்மையை ஏற்படுத்தும் நோக்கத்துடன் மத்திய அரசு ஊர்ப்பணியாளர்களிடையே தேசிய அளவில் மாநில அளவில் மற்றும் மாவட்ட அளவில் பரிசுப்போட்டித் திட்டம் ஒன்றை உருவாக்கியுள்ளது.

40. இப்போட்டியில் கலந்து கொள்ள எல்லா ஊர்நலப் பணியாளரும் தகுதி உடையோர் ஆவர். சிறந்த ஊர்நலப்பணியாளர் தேர்வுக்கென வரையறுக்கப்பட்ட காலம் ஒவ்வொரு நிதி ஆண்டுமாகும். முந்திய ஆண்டு சாதனைகள் கணக்கிலெடுத்துக் கொள்ளப்படும். இப்போட்டியில் கலந்து கொள்ள நுழைவுக் கட்டணம் ஏதும் இல்லை.

41. மாவட்ட, மாநில மற்றும் தேசிய அளவிலான வெவ்வேறு குழுக்கள் சிறந்த ஊர்நலப்பணியாளரை தேர்வு செய்யும். தேசிய அளவில் சிறந்த ஊர்நலப்பணியாளருக்கு முதற்பரிசுத் தொகையாக ரூ. 5,000 வழங்கப்படுகிறது. இத்தொகையில் நல்ல சைக்கிள் ஒன்று வாங்கி வழங்கிவிட்டு மீதித் தொகையை தேசிய சேமிப்புப் பத்திரமாகக் கொடுக்கப்படுகிறது. மாநில அளவில் சிறந்த ஊர் நலப்பணியாளருக்கு முதற் பரிசான ரூ. 1,500-ம் இரண்டாவது பரிசாக ரூ. 1,000-ம் வழங்கப்படுகிறது. இத்துடன் தகுதிச் சான்றிதழ்களும் வழங்கப்படுகின்றன.

## மகளிர் மன்றங்களின் முன்னேற்றமும், வளர்ச்சியும்.

42. 1976-77-ல் மத்திய அரசு "மகிளா மண்டல்களின் முன்னேற்றமும் வளர்ச்சியும்" என்னும் புதுத்திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்தியது. இத்திட்டம் மதுரை மாவட்டம் உசிலம்பட்டி, தஞ்சை மாவட்டம் முத்துப்பேட்டை, தருமபுரி மாவட்டம் தளி, திருநெல்வேலி மாவட்டம் மேலநீலிதநல்லூர் மற்றும் மதுரை மாவட்டம் நிலக்கோட்டை ஆகிய இடங்களில் அமுல் படுத்தப்பட்டது. இத்திட்டத்தில் மகிளா மண்டல் நிர்வாகிகளுக்கு பயிற்சியளித்தல், சமயல் கருவிகள் வாங்குதல், சில்லரை செலவினங்கள் முதலியன அடங்கும். இத்திட்டம் 1979-80-ம் ஆண்டில் மேலும் 36 ஊராட்சி ஒன்றியங்களுக்கு விஸ்தரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ரூ. 6,575 வீதம் 1978-80-ம் ஆண்டு வரை உதவித்தொகையாக மத்திய அரசு வழங்கியது. 1979-80 ம் ஆண்டு முதல் மாநில அரசால் இந்த உதவித்தொகை வழங்கப்படும். நடப்பு ஆண்டிலும் இத்திட்டம் செயல்படும்.



## குழந்தைகள் நலம்.

### குழந்தைகள் நல நிலையங்கள்.

43. குழந்தைகள் நலத் திட்டம் 1962-ம் ஆண்டு தொடங்கப்பட்டு, இன்றைய தினம் மாநிலமெங்கும் பரவலாக 4,433 குழந்தைகள் நல நிலையங்கள் நடைபெற்று வருகின்றன. வேலைக்குச் செல்லும் கிராமப்புற பெண்களுக்கு, உதவுவதும், பள்ளி செல்லும் குழந்தைகள் மனதில் அப்பழக்கத்தை ஏற்படுத்துவதுமே இத்திட்டத்தின் நோக்கமாகும். இக்குழந்தைகள் நல நிலையங்களில் விளையாட்டின் மூலமாகக்கல்வி கற்பிக்கப் படுகிறது. பள்ளிக் குழந்தைகளுக்கும் பாடங்கள், கதைகள் முதலியவற்றுடன் நல்ல பழக்க வழக்கங்களும் பயிற்றுவிக்கப்படுகின்றன. மொத்தமுள்ள குழந்தைகள் நல நிலையங்களில் அரிசனங்களுக்காக நடத்தப்பட்டு வரும் 300 பள்ளிகள், மலை வாசிகளுக்காக நடத்தப்பட்டுவரும் 109 பள்ளிகள், பணியர் குழந்தைகளுக்காக நடத்தப்பட்டு வரும் 10 பாலர் பள்ளிகள் இலங்கை அகதிகளில் குழந்தைகளுக்காக நடத்தப்பட்டு வரும் 5 பள்ளிகள் குற்றப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டவர்களுக்காக நடத்தப்பட்டு வரும் குழந்தைகள் நல நிலையங்கள் முதலியன அடங்கும்.

44. இவ்வெல்லா குழந்தைகள் நல நிலையங்களிலும் "கேர்" நிறுவனத்தின் உதவியுடன் "பாலஹார்" ஊட்டு உணவுத் திட்டம் அமுல்படுத்தப்பட்டு வருகிறது. ஒவ்வொரு பள்ளியிலும் சராசரி 70 குழந்தைகளுக்கு 80 கிராம் "பாலஹார்" உணவும், 7 கிராம் "சாலட்" எண்ணெயும் ஆண்டிற்கு 300 தினங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. மொத்தத்தில் இக்குழந்தைகள் காப்பகங்களில் 3 லட்சம் குழந்தைகள் சத்துணவு பெற்று வருகின்றனர். ஆரம்ப சுகாதார நிலைய பணியாளர்கள் மூலம் பாலர் பள்ளிகளில் இயன்ற வரை மருத்துவ ஆய்வும் மேற்கொள்ளப்படுகிறது.

45. இத்திட்டம் ஒவ்வொரு ஆண்டும் விரிவுபடுத்தப்பட்டு வருகிறது. 1977-78-ல் 100 குழந்தைகள் நல நிலையங்கள் 1978-79-ல் 150 பாலர் பள்ளிகளும் தொடங்கப்பட்டன. 1979-80-ல் 100 குழந்தைகள் நல நிலையங்கள் தொடங்கப் பட்டன. ஒவ்வொரு பஞ்சாயத்திலும் குறைந்த பட்சம் ஒரு குழந்தைகள் நல நிலையம் தொடங்குவதே இத்திட்டத்தின் இறுதி நோக்கமாகும்.

46. எல்லாப் பஞ்சாயத்துக்களிலும் குழந்தைகள் நல நிலையங்கள் அமையத் தக்கவகையில் சர்வதேச குழந்தைகள் ஆண்டில் தொடங்கி 5 ஆண்டுகளில் 9,000 குழந்தைகள் நல நிலையங்கள் தொடங்கவும் திட்டமிடப் பட்டுள்ளது.

47. ஒரு முன்னோடி திட்டமாக மத்திய அரசின் முழு மான்யம் பெற்று தொடங்கப்பட்ட "ஒருங்கிணைந்த குழந்தைகள் நல செயற்விளக்கத் **திட்டம்" பூவிருந்தவல்லி** தற்போது மாநில அரசால் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கிழ் 50 குழந்தைகள் நல நிலையங்களும், 10 குழந்தைகள் காப்பகங்களும் நடைபெற்று வருகின்றன. மேலும் முன்னாதாரக் **கல்வியும் சத்துணவும் அளிக்கப்படுவதுடன்**, நல்வாழ்வுப் பணிகளாலும் குழந்தைகள் பயனடைகின்றனர். அரசாணை எண் 1968, சமூக நலத்துறை, நாள் 6—12—1979-ல் 50 குழந்தைகள் காப்பகங்களையும், 10 சிறார் பள்ளிகளையும் மற்ற பஞ்சாயத்துக்களில் நடைபெறும் குழந்தைகள் காப்பகங்களைப் போல மாற்றி அரசு உத்தரவு வழங்கியுள்ளது.

### ஒருங்கிணைந்த குழந்தைகள் நலத்திட்டம்.

48. மத்திய அரசின் ஆதரவால் நடைபெற்றுவரும் ஒருங்கிணைந்த குழந்தைகள் நலத்திட்டத்தின்கீழ் சென்னை நகரம், தருமபுரி மாவட்டம் தளி, மதுரை மாவட்டம் நிலக்கோட்டை ஆகிய மூன்று இடங்களில் ஒரு இடத்திற்கு 100 வீதம் மொத்தம் 300 குழந்தைகள் நல நிலையங்கள் தொடங்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின்கீழ் பாலர் பள்ளி சிறார்கள், கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார்கள் சத்துணவு, மருத்துவ ஆய்வு நோய்த் தடுப்பு ஆலோசனை கூறுதல் ஆகிய பணிகளின் மூலம் 30,000 பேர் பயனடைகின்றனர். இத்திட்டத்தின் கீழ் தேவையான சத்துணவுப்பொருட்கள் வழங்குவது மாநில நிதி அரசின் பொறுப்பாகும். இத்தகைய பல்வேறு திட்டங்கள் மூலம் 1,31,00 குழந்தைகள் பயனடைவர்.

49. இத்திட்டத்தின்கீழ் செயல்பட்டு வரும் மையங்களில் உள்நாட்டிலேயே **உற்பத்தியாகும் உணவுப்** பொருட்கள் வழங்கப்படுகின்றன. ஒரு குழந்தைக்கு நாளொன்றுக்கு 25 பைசாவும், ஒரு பெண்மணிக்கு 40 பைசாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இதைத் தவிர உணவில்லாச் செலவினமாக நபர் ஒன்றுக்கு 4.5 பைசாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தற்போது இந்திய உணவுக் கார்ப்பரேஷன் வழங்கும் பாலஹார் உணவு, மூன்று ஒருங்கிணைந்த குழந்தைகள் நலத்திட்டங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. 1979-80 ஆம் ஆண்டு முதல் ஊட்டச்சத்து குறைவான குழந்தைகள் தாய்மார்கள் ஆகியோருக்கு (மொத்த எண்ணிக்கையில் 15 சத விகிதம்) பாலமூல் அல்லது தொரபெடிக் உணவு அளிப்பதற்கான திட்டம் செயல்பட்டு வருகின்றது. 15 முதல் 44 வயது வரையுள்ள பெண்கள் பயன் பெறத்தக்க வகையில் இம்மூன்று திட்டங்களிலும் செயல் முறை கல்விகற்பிக்கும் திட்டம் ஒன்றும் செயற்படுத்தப்பட்டு வருகிறது.



### மலைவாழ் மக்களுக்கானத் திட்டங்கள்.

50. பழங்குடியினர் துணைத்திட்டத்தின்கிழ் பழங்குடி வகுப்பைச் சேர்ந்த குழந்தைகள் பயன்பெறத்தக்க அளவில் 79 குழந்தைகள் நல நிலையங்கள் தொடங்கப்பட்டுள்ளன. 1979-80-ல் இதுபோன்று மேலும் 30 குழந்தைகள் நல நிலையங்கள் தொடங்கப்பட்டன. அத்துடன் 1978-83-க்கான இடைக்கால துணைத்திட்டத்தின்கீழ் 250 குழந்தைகள் நல நிலையங்கள் தொடங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் 61 குழந்தைகள் நல நிலையங்களில் கட்டடங்கள் கட்டப்பட்டு இயங்கி வருகின்றன.

51. கிராமப் புறங்களிலுள்ள குழந்தைகள் நல நிலையங்கள் உள்ளூர் மக்களால் வழங்கப்பட்டுள்ள இடங்களில் நடைபெற்று வருகின்றன. பல இடங்களில் இப்பள்ளிகள் சத்திரங்களிலும், சாவடிகளிலும் இயங்கி வருகின்றன. பல, போதுமான இடவசதி கொண்டதாக இல்லாத இடங்களிலும் இருந்து வருகின்றன. 1974 முதல் 1979 வரையுள்ள ஐந்தாண்டுகளில் படிப்படியாக 1,000 கட்டிடங்கள் கட்ட உதவிட "கேர்" நிறுவனம் முன்வந்தது. 1974-75 முதல் ஒவ்வொரு ஆண்டும் 200 கட்டடங்கள் வீதம் கட்ட அனுமதிக்கப்பட்டது. இவற்றில் 50 கட்டடங்கள் அரிசன காலனிகளிலும், 50 ஒருங்கிணைந்த குழந்தைகள் நலத்திட்டப் பகுதிகளிலும், மீதி 100 ஏற்கனவே நடைபெற்று வரும் குழந்தைகள் நல நிலையங்களுக்காகவும் கட்டப்படுகின்றன. 1978-79-ல் 400 கட்டடங்கள் கட்ட அனுமதிக்கப்பட்டது. இக்கட்டடங்களுக்கு அடியிற்கண்ட வண்ணம் நிதி உதவி கிடைக்கப்பெறுகிறது :—

| | ரூ. |
|---|---|
| கேர் நிறுவனம் | 3,000 |
| ஊராட்சி ஒன்றியம் | 3,000 |
| மாநில அரசு | 3,000 |

### தாய் சேய் நலத் திட்டங்கள் (சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டங்கள்.

52. (அ) உலக வங்கியின் உதவியுடன் இயங்கும் சென்னை நகர மேம்பாட்டுத் திட்டத்தின் ஆதரவுடன் நடைபெறும் மற்றொரு திட்டம் தாய் சேய் நலத் திட்டமாகும். இத்திட்டத்தின்கீழ் வில்லிவாக்கம், அரும்பாக்கம், கொடுங்கையூர் ஆகிய இடங்களில் 200 பாலர் பள்ளிகள் 1979-80-ல் தொடங்கப்படவுள்ளன. ஒவ்வொரு நிலையத்திலும் 70 குழந்தைகள் (40 பேர் பாலர் பள்ளியிலும், 30 பேர் குழந்தைகள் காப்பகங்களிலும்) பயனடைவர். 1977-78-ல் இதுபோன்ற 30 நிலையங்கள் தொடங்கப்பட்டன. எல்லா நிலையங்களிலும்,

துணைச் சத்துணவு வழங்கப்படுகிறது. நடமாடும் மருத்தகம் செயல்பட்டு வருகிறது. இந்த நிலையங்களுக்காக ஒவ்வொன்றும் ரூ. 20,000 மதிப்புள்ள கட்டடங்கள் கட்டுதலும் இத்திட்டத்தில் அடங்கியுள்ளது. 1978-79 ஆம் ஆண்டில் 53 நிலையங்களும் 1979-80-இல் 17 நிலையங்களும் தொடங்கப் பட்டு ஆக மொத்தம் 100 நிலையங்கள் நடைபெற்று வருகின்றன. மேலும் 50 நிலையங்கள் விரைவில் தொடங்கப்பட இருக்கின்றன.

(ஆ) இத்திட்டத்தின் மூலம் அடியிற்கண்ட வகையில் மக்கள் பயன டைவர் :—

1. துணைச் சத்துணவு.
2. உடல் நல ஆய்வு மற்றும் அது பற்றிய ஆலோசனை கூறுதல்.
3. நோய் தடுப்பு.
4. பாலர் கல்வி.
5. சத்துணவு மற்றும் உடல் நலக் கல்வி.
6. செயல் முறைக்கல்வி.

(இ) இத்திட்டம் சமூகநல இயக்குநர் மூலம் செயற்படுத்தப்பட்டு வரு கிறது. சென்னை நகர மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நடைபெற்று வரும் எல்லாத் திட்டங்களுக்கும் இணைப்பு பாலமாக சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் இருந்து வருகிறது.

### உலக வங்கி உதவியுடன் செயல்படும் தமிழ்நாடு ஊட்டச் சத்துத்திட்டம்.

53. உலக வங்கி உதவியுடன் ரூ. 39.50 கோடி செலவில் தமிழ்நாட்டிலுள்ள செங்கல்பட்டு, மதுரை, வட ஆற்காடு, இராமநாதபுரம், திருநெல்வேலி, புதுக்கோட்டை ஆகிய ஆறு மாவட்டங்களில் ஒருங்கிணைந்த சத்துணவுத் திட்டம் 1980-85 ஆண்டுகளில் அமுல் நடத்தப்படும். ஆறு முதல் 36 மாதங்கள் வரை வயதுள்ள குழந்தைகளின் ஊட்ட நிலையையும், ஆரோக்கியத்தையும் உயர்த்துவதும், கருவுற்ற மற்றும் பால் கொடுக்கும் தாய்மார்களின் ஆரோக்கியத்தையும் ஊட்ட நிலையையும், உயர்த்துவதும் இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்களாகும். சத்துணவு வழங்குதல், சத்துணவுக் கல்வி போதித் தல், சுகாதார நடவடிக்கைகளை அமுல்படுத்துதல் ஆகியவை இத்திட்டத்தின் முக்கிய பகுதிகளாகும். முதலிரண்டு பாகங்கள் சமூக நலத்துறையாலும்,



மூன்றாவது பாகம் சுகாதாரம் மற்றும் குடும்பநலத் துறையாலும் செயல் நடத்தப்படும். இத்திட்டத்தின் பல்வேறு பாகங்களை ஒருங்கிணைத்து செயல் படுத்த திட்ட ஒருங்கிணைப்பாளர் அலுவலகம் ஒன்றும் நிறுவப்பட்டு, செயல் பட்டு வருகிறது.

54. இத்திட்டத்தின் முன்னோடியாக 1980-81 ஆம் ஆண்டில் மதுரை மாவட்டத்திலுள்ள கொட்டாம்பட்டி ஒன்றியத்தில் ஒரு முன்னோடித் திட்டம் ஓராண்டுக்கு செயல் நடத்தப்படும். பிறகு நான்காண்டுகளில் இத்திட்டம் படிப்படியாக ஆறு மாவட்டங்களிலுள்ள 170 ஒன்றியங்களுக்கும் விரிவு படுத்தப்படும். இந்த ஆண்டுக்கு இந்த ஒருங்கிணைந்த சத்துணவுத் திட்டத்திற்கு மொத்தமாக ரூ. 2.13 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

### சிறப்புச் சத்துணவுத் திட்டம்.

55. பொருளாதாரத்தில் நலிவுற்ற சமூகத்தைச் சேர்ந்த சிறார்களுக்கு சரியான பருவத்தில் அதாவது ஆறு வயதுக்குள் சத்துணவு வழங்குதல் மூலம் அவர்களின் மன வளர்ச்சியையும் உடல் வளர்ச்சியையும் ஊக்குவிப்பதே சிறப்புச் சத்துணவுத் திட்டத்தின் நோக்கமாகும். சென்னை, மதுரை மாநகராட்சிகள் 33 நகரசபைகள், 25 ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாக 1979-80 முதல் இத்திட்டம் அமுல்படுத்தப் படுகிறது. ஆறு மாதத்திற்கும் ஆறு வயதிற்கும் இடைப்பட்ட வயது தொகுதியைச் சேர்ந்த குழந்தைகள், கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார்கள் ஆக 2,76,530 பேர் இத்திட்டத்தின் மூலம் பயன்பெறுகிறார்கள்.

56. சென்னை, மதுரை மாநகராட்சிகளும், கோவை சிங்காநல்லூர் மற்றும் புதுக்கோட்டை நகராட்சிகளும் நீங்கலாக பிற இடங்களில் நாளொன்றுக்கு 80 கிராம் பாலஹார், 7 கிராம் சாலட் எண்ணெய் என்ற விகிதத்தில் சமைக்கப் பட்ட பாலஹார் உணவு ஒவ்வொருவருக்கும் வழங்கப்படுகிறது. தேவையான அளவு நோய்த்தடுப்பு பணிகளும் மதிப்பீட்டு பணிகளும் நகராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்களில் மருத்துவ அலுவலர்கள் மூலமாய் மேற்கொள்ளப் படுகின்றன.

57. சென்னை மற்றும் மதுரை மாநகராட்சிப் பகுதிகளுக்கும் கோயம்பத்தூர், சிங்காநல்லூர் மற்றும் புதுக்கோட்டை நகராட்சி பகுதி களுக்கும் இச்சிறப்பு சத்துணவுத்திட்டம் தேவையான மருத்துவ வசதியுடன் அமுல்படுத்தப்படுகிறது. இப்பகுதிகளிலுள்ள ஒவ்வொரு பயனடைவோருக்கும் வீட்டிற்கு எடுத்துச் செல்லும் வகையில் வாரம் 700 கிராம் சமைக்கப்படாத

பாலஹார் வழங்கப்படுகிறது. தேவையான அளவு நோய் தடுப்பு பணிகளும் மதிப்பீட்டு பணிகளும் இப்பகுதியில் பயன் பெறுவோர்களுக்கு இத்திட்டத்திற் கென்று நியமனம் செய்யப்பட்ட மருத்துவர்களால் மேற்கொள்ளப்படுகின்றன.

**சத்தூட்ட உப்பு.**

58. (அ) ஊட்டக் குறைவினை எதிர்த்துப் போராட சாதாரணமாக உபயோகத்தில் இருந்து வரும் உணவு பண்டங்களில் வீரிய சத்துள்ளவற்றை மக்களுக்கு அறிமுகப்படுத்த ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டன. இவ்வாராய்ச்சிக்கு சென்னையைச் சேர்ந்த சூளை மற்றும் புதுப்பேட்டைப் பகுதிகள் எடுத்துக் கொள்ளப்பட்டன.

(ஆ) சாதாரண உப்பில் சத்தூட்டப்படுவதற்குரிய ஆராய்ச்சினை மேற்கொள்ளும் பொருட்டு மத்திய அரசு ஒரு முன்னோடித்திட்டத்தினை தமிழகத்திற்கு அளித்தது. இவ்வாராய்ச்சியின் நோக்கங்களாவன :—

1. சாதாரண உப்போடு இரும்பு சத்துக்கள் சேர்ந்து வீரியப் படுத்தினால் சமூகம் எந்த அளவுக்கு ஏற்றுக்கொள்ளும் என தெரிந்துக் கொள்ளுதல்.

2. வீரியப்படுத்தப்பட்ட உப்பை சேமித்து வைப்பதால் அதில் ஏற்படும் பௌதீக மாற்றங்களை கண்டறிதல்.

3. வீரியப்படுத்தப்பட்ட உப்பில் ரத்தக் குறைவை எதிர்த்துப் போரிடும் சக்தி எந்த அளவுக்கு உள்ளது என தெரிந்துக் கொள்ளுதல்.

(இ) இவ்வாராய்ச்சிக்காக நான்கு பகுதிகள் (டெல்லி, கல்கத்தா, ஐதராபாத், சென்னை) தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளன. சென்னை பகுதியில் சூளை சாதாரண ஆய்வுக்கும் மற்றும் வரையறுக்கப்பட்ட ஆய்வுக்கு புதுப்பேட்டையும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இவ்விரு இடங்களும் அடர்த்தி யான மக்கள் தொகையுள்ள இடமாகும். குறைந்த மற்றும் நடுத்தர வருவாய் கொண்ட மக்கள் அதிகமாக வாழ்வதோடு இவ்விரு இடங்களும் இவ்வாராய்ச் சியை மேற்கொள்ளும் சிறார் நல நிலையத்திலிருந்து முறையே மூன்று கிலோ மீட்டர் மற்றும் 1.5 கிலோ மீட்டர் தூரத்திலேயே உள்ளன. இவ்வாராய்ச்சி இரண்டாண்டு காலம் நடைபெறும். வீரியப்படுத்தப்பட்ட வினியாகம் 1—6—1977 அன்று தொடங்கியது.

(ஈ) சூளையிலுள்ள 558 குடும்பங்களிலுள்ள 3,123 பேரில் 526 குடும்பத்தைச் சேர்ந்த 1,677 பேர் விசாரிக்கப்பட்டனர். புதுப்பேட்டை யிலுள்ள 542 குடும்பங்களிலுள்ள 3,295 பேர்களில் 509 குடும்பங்களைச் சேர்ந்த 1,496 பேர் இவ்வாராய்ச்சிக்கு உட்படுத்தப்பட்டனர்.



(உ) இவ்வாராய்ச்சியின் முடிவில் சராசரியாக 25 சதவீதம் பேர்களுக்கு இரத்தக் குறைவு நோய் உள்ளது என தெரியவந்துள்ளது. 5—10 வயதுத் தொகுதியைச் சேர்ந்த சிறார்களிடையே இரத்தக் குறைவு நோயின் சதவீதம் குறைந்த அளவே உள்ளது. இவ்வயதுத் தொகுதி சிறார்களிடையே இந்நோய் சூளையில் 13.6 சதவீதம் என்ற விகிதத்திலேயே இருந்தன. இந்த ஆராய்ச்சிகள் முடிவடைந்த பின்னர், இந்நாட்டிலுள்ள பெருவாரியான மக்கள் பயன் பெறத்தக்க வகையில் வீரியப்படுத்தப்பட்ட உப்பு பெருமளவில் வர்த்தக ரீதியில் உற்பத்தி செய்யப்படும்.

**3. உடல் ஊனமுற்றோர்.**

59. உடல் ஊனமுற்றோர் நலனுக்காக நிறைவேற்றப்பட்டு வரும், நிறைவேற்றப்படவிருக்கும் திட்டங்கள் பின்வருமாறு :—

**நவீன முறைப்பயிற்சி உற்பத்தி தொழிற்சாலை, முத்துக்காடு.**

60. இத்தொழிற்சாலை, செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள முத்துக்காடு என்னுமிடத்தில் உடலூனமுற்றோருக்கு பயிற்சி மற்றும் நிரந்தர மறுவாழ் வளிக்கும் நோக்குடன் 1975 ஆம் ஆண்டு ஜூன் திங்களில் 30 லட்சம் ரூபாய் செலவில் துவங்கப்பட்டது. இதுவரை 70 உடலூனமுற்ற நபர்கள் பயிற்சி அளிக்கப்பட்டு இத்தொழிற்சாலையிலேயே வேலைக்கு அமர்த்தப் பட்டுள்ளனர். இத்தொழிற்சாலையில் இலேசான பொறியியல் ரகங்கள், கட்டுமானப் பணிகள், உதிரி பாகங்கள் செய்தல் போன்ற உற்பத்திப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**ஸ்திரி சேவா மந்திர் பயிற்சி நிலையம்.**

61. உடலூனமுற்ற பெண்களுக்கு பலதரப்பட்ட தொழில்களில் சென்னை யிலுள்ள ஸ்திரி சேவா மந்திரில் பயிற்சியளிக்கப்படுகிறது. 1978 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முடிவு பெற்ற முதல் பிரிவில் 29 உடலூனமுற்ற மகளிர் பயிற்சி பெற்றனர். இரண்டாவது பிரிவு ஜூலை 1979-ல் துவக்கப்பட்டு 29 உடலூன முற்ற மகளிர் பயிற்சி பெற்றுவருகின்றனர். உடலூனமுற்ற மகளிர் சுருக்கெழுத்து, தட்டெழுத்துப் பயிற்சிகளிலும், காதுகேளாத மகளிர் பொம்மை செய்தல், நூல் வேலை செய்தல், ஆடைகள் தைத்தல் போன்ற தொழில்களிலும் பயிற்சி பெற்று வருகின்றனர். பாய் முடைதல் மற்றும்

கைத்தறி ஆடை நெய்தல் போன்றவற்றில் அளிக்கப்பட்ட பயிற்சிக்கு பார்வையற்ற மகளிரிடமிருந்து போதிய ஆதரவின்மையால் பார்வையற்றோர்க்கான இப்பயிற்சி இரண்டாம் பிரிவில் கைவிடப்பட்டது.

62. விடுதியில் தங்கிப்படிப்போருக்கு மாதம் ரூ. 75-ம் வெளியிடத்திலிருந்து வந்து நிலையத்தில் பயில்வோருக்கு மாதம் ரூ. 40-ம் உதவித் தொகையாக அளிக்கப்பட்டு வருகிறது.

### முச்சக்கர வண்டி மற்றும் செவிபுலன் கருவி வழங்குதல்.

63. பயனுள்ள வாழ்க்கை மேற்கொள்ள உடலூனமுற்ற ஏழை நபர்கட்கு முச்சக்கர வண்டிகள் இலவசமாக வழங்கப்படுகிறது. மாவட்டங்களில் மாவட்ட ஆட்சித் தலைவரை தலைவராகவும் நகரில் சமூகநல இயக்குநரைத் தலைவராகவும் கொண்ட குழுவினரால் தகுதி பெற்ற ஊனமுற்றோர் தேர்ந்தெடுக்கப் படுகிறார்கள். 1975 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை 4,000 முச்சக்கர வண்டிகள் ஏற்கெனவே விநியோகிக்கப்பட்டுள்ளன. 1979-80 ஆம் ஆண்டிற்கு 1,000 முச்சக்கர வண்டிகளை விநியோகிக்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது. அவை பல்வேறு மாவட்டங்களில் விநியோகிக்கப்பட்டு வருகின்றது. 1980-81-ல் 1,000 முச்சக்கர வண்டிகள் வழங்கப்படும்.

64. பெற்றோர்/காப்பாளரின் மாத வருமானம் ரூ. 500க்கு மேற்படாத பள்ளி செல்லும் காது கேளாத ஏழைக் குழந்தைகளுக்கு செவிபுலன்' கருவிகள் இலவசமாக வழங்கப்படுகிறது. இலவச செவிபுலன் கருவிகள் விநியோகிப்பதற்காக மனுதாரர்கள் அரசு மருத்துவ மனையிலுள்ள காது, மூக்கு, தொண்டை E.N.T கிளையில் பரிசீலிக்கப்பட்டு மாவட்டங்களில் மாவட்ட ஆட்சியராலும் சென்னையில் சமூகநல இயக்குநராலும் இக்கருவிகள் வழங்கப்படுகின்றன. 1975 ஆம் ஆண்டு முதல் இதுவரை 1,625 செவிபுலன் கருவிகள் விநியோகிக்கப்பட்டுள்ளன. 1979-80 ஆம் ஆண்டிற்கு, அரசு 700 செவிபுலன் கருவிகளை வழங்க ஆணை பிறப்பித்துள்ளது; இவை விநியோகிக்கப்பட்டு வருகின்றன. நடப்பு ஆண்டிலும் இத்திட்டம் தொடரும்.

### தனியார் நிறுவனங்களுக்கு மானிய உதவி.

65. (அ) உடலூனமுற்றோர் நலனுக்காக இயங்கும் தனியார் தொண்டு நிறுவனங்களுக்கு அந்நிறுவனங்களை விரிவுபடுத்தவும் பணியின் தரத்தை உயர்த்தவும், மாநில அரசு நிதி உதவி அளித்து வருகிறது. இதுவரை 20 தொண்டு நிறுவனங்களுக்கு கட்டிடம் கட்டவும் உபகரணங்கள் மற்றும் **மேஜை நாற்காலிகள்** வாங்கவும் ரூ. 3,35,200 அரசு நிதியுதவி அளித்துள்ளது.



(ஆ) எட்டு முதல் பதினாறு வயதிற்குட்பட்ட இளம் பிள்ளைவாதம், முடக்கு வாதம், வாய்பேச இயலாமை, காது கேளாமை, பார்வை இன்மை போன்ற உடல் ஊனமுற்ற குழந்தைகளையும் மூளை வளர்ச்சி குன்றிய குழந்தைகள், தொழுநோயால் பாதிக்கப்பட்டோரின் குழந்தைகளையும் பராமரிக்க ஒரு குழந்தைக்கு ரூ. 30 வீதம் மானியத்தொகையாக தொண்டு நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. அரசு ஆணை எண் 1899, சமூக நலத்துறை, நாள் 15—12—1979-ல் அரசு அனுமதித்துள்ள ரூ. 1,03,000 தற்போது பல்வேறு நிறுவனங்களுக்கு விநியோகிக்கப்பட்டு வருகிறது.

(இ) சென்னை தேனாம்பேட்டையிலுள்ள சிறு மலர் காது கேளாதோர் பள்ளியில் காது கேளாத குழந்தைகளுக்கு நவீன முறையில் பயிற்றுவிக்கும் வழிமுறைகளில் பல்வேறு காது கேளாதோர் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு ஒரு வருட காலத்திற்கு பயிற்சியளிக்கப்படுகிறது. பயிற்சி காலத்தில் பயிற்சியில் சேருவதற்கு முன்பு இறுதியாக அவர்கள் பெற்றுக் கொண்டிருந்த சம்பள விகிதத்தில் உபகாரச் சம்பளமும் மேலும் சிறப்பு ஊதியமாக மாதம் ரூ. 25 அளிக்கப்பட்டு வருகிறது. இப்பயிற்சி திட்டம் 1979-80 ஆம் ஆண்டில் தொடரப்பட்டு நடப்பு ஆண்டிலும் தொடர்ந்து செயல்படும்.

66. மன நோயினால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு கல்வி அளிக்கும் வழி முறைகளில் தகுதி வாய்ந்த ஆசிரியர்களுக்கு சென்னையிலுள்ள பாலவிஹார் நிறுவனத்தின் மூலம் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. ஆண்டொன்றுக்கு ரூ. 45,600 மானியமாக இந்நிறுவனத்திற்கு வழங்கப்பட்டு வருகிறது. ஒரு வருடத்திற்கு அளிக்கப்படும் இப்பயிற்சியில் பயிற்சி பெறுவோருக்கு பயிற்சி காலத்தில் மாதம் ரூ. 100 உதவித்தொகை வழங்கப்படுகிறது. தற்போது 19 பேர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர். நடப்பு ஆண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படும்.

### பார்வையற்ற பிரிவினருக்கான மறுவாழ்வு இல்லம் மற்றும் தொழிற்சாலை.

67. தமிழக அரசு பார்வையற்ற மகளிருக்காக விடுதி வசதிகளுடன்கூடிய ஒரு மறுவாழ்வு இல்லம் தொடங்க அனுமதித்துள்ளது. இந்நிலையம் 1978 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்திலிருந்து சென்னை மயிலைப் பகுதியில் சாந்தோம் நெடுஞ்சாலையில் செயல்பட்டு வருகிறது. நாற்பது வயதுக்குட்பட்ட ஏழை, ஆதரவற்ற பார்வையற்ற மகளிர் இவ்வில்லத்தில் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். இவ்வில்லத்தில் தங்கும் பார்வையற்ற மகளிர் துணி நெய்தல்,

சரக்கட்டி செய்தல் போன்ற தொழில்களில் ஆறு மாதங்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டபின் இவ்வில்லத்திலேயே வேலை கொடுக்கப்பட்டு ஊதியம் பெறுகின்றனர். பயிற்சி காலத்தில் மாதந்தோறும் ரூ. 50 உதவித்தொகை அளிக்கப்படுகிறது. அவர்களுடைய உதவித் தொகையில் இருந்து அவர்கள் உணவிற்கு ஆகும் செலவு கழித்துக்கொள்ளப்படுகிறது. ஏழாவது மாதத் திலிருந்து விடுதிச் செலவுகளில் 50 சதவீதத்தை அவர்கள் பெறும் ஊதியத்திலிருந்து ஏற்றுக்கொள்ள வேண்டும். இந்த விடுதியில் அனுமதிக்கப் பட்ட நபர்கள் 40. தற்போது 40 பார்வையற்ற மகளிர் இருந்து வருகின்றனர். நடப்பு ஆண்டிலும் இத்திட்டம் தொடரப்படுகிறது.

மனவளர்ச்சி பாதிக்கப்பட்டோர் தொழில் நிலையம்.

68. சமுதாயத்தில் உடல் ஊனமுற்றோர் பின்தங்கிய நிலையினராக இருக்கின்றனரென்றால், அதில் மனவளர்ச்சி பாதிக்கப்பட்டோர் அதைவிட பின்தங்கிய நிலையிலுள்ளவர்களாவர். தற்போது, மனவளர்ச்சி குன்றியோர்க்கு கல்வி மற்றும் தொழிற் பயிற்சி அளிக்கும் தனியார் நிறுவனங்களில் எண்ணிக்கை மிகக் குறைவாக உள்ளது. இந்நிலையங்கள் நபர் ஒருவருக்கு மாதத்திற்கு ரூ. 200-ம் அதற்கு மேலும் பயிற்சி கட்டணம் வசூலிக்கின்றனர். இதன் காரணமாக இப்பள்ளிகளில் பயிற்சி பெறும் நன்மை சமுதாயத்தில் உயர்மட்டத்திலுள்ளோருக்கு மட்டுமே கிடைக்கிறது. மனவளர்ச்சி பாதிக்கப் பட்ட தாழ்வு நிலையில் உள்ளவர்கள் கவனிப்பாரின்றி ஒதுக்கப்பட்ட நிலையில் இருந்து வருகின்றனர். பலவீன பகுதியினராக விளங்கும் இவர்கட்கு விசேஷ கவனம் மற்றும் பராமரிப்பு அளிக்கும் நோக்கத்துடன் 100 மன நோயுற்ற குழந்தைகளுக்காக திருநெல்வேலியில் ஒரு நிலையத்தை ரூ. 5.00 லட்சம் செலவில் ஏற்படுத்த நடப்பு ஆண்டில் திட்டமிடப்பட்டுள்ளது.

படிப்பு உதவித்தொகை.

69. இந்திய அரசினால் வழங்கப்படும் இத்திட்டத்தின்கீழ் 14-ல் இருந்து 40 வயதிற்குட்பட்ட உடலூனமுற்ற மாணவ மாணவியர்கட்கு கல்வி பயிலவும் தொழிற்பயிற்சி பெறவும் 14-ல் இருந்து 30 வயது கல்வி பயில 14-ல் இருந்து 40 வயது தொழிற் பயிற்சி பெற மாதாந்திர படிப்பு உதவித்தொகை வழங்கப் படுகிறது. அவர்கள் படிப்பிற்கு ஏற்றவாறு உதவித்தொகை மாதம் ரூ. 40-லிருந்து ரூ. 125 வரை வழங்கப்படுகிறது. 1978-79-ல் 561 நபர்கட்கு 3.13 லட்சம் ரூபாய் உதவித்தொகையும் 1979-80-ல் (ஜனவரி 1980 வரை) 879 நபர்கட்கு ரூ. 4,91,392 உதவித்தொகையும் வழங்கப்பட்டுள்ளன.





1. ஊனமுற்றோர் மாநில வாரியம்.

70. (அ) வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின் கீழ் இயங்கி வந்த ஊனமுற்றோர் மாநில வாரியம் கடந்த 1979 ஆம் ஆண்டு ஜனவரி முதல் ஊன முற்றோருக்கு மருத்துவ, சமுதாய மற்றும் பொருளாதார மறுவாழ்வு அளிக்கும் திட்டங்களை மேலும் சிறப்பான முறையில் செயல்படுத்தும் பொருட்டு சமூக நலத்துறை இயக்கத்தில் நேரடி நிர்வாகத்தின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது.

(ஆ) இவ்வாரியத்தின் நலப்பணிகளுக்கு அரசினால் ஒதுக்கப்பட்ட ரூபாய் 60,000த்தில் 54 உடல் ஊனமுற்ற நபர்களுக்கு சுய தொழில் நடத்தும் பொருட்டு மானிய உதவி அளிக்கப்பட்டது. இவ்வாறு வழங்கப்பட்ட மொத்த தொகையின் மதிப்பு ரூ. 25,330 ஆகும். இதுபோன்ற உடல் ஊனமுற்றோர் நலனுக்காக பணிபுரியும் 5 தனியார் நிறுவனங்களுக்கு ரூ. 20,500 மானியமாக வழங்கப்பட்டது. மேலும் செயற்கை அவையவங்கள், செயற்கை கால் உறுப்பு கள் வாங்குவதற்கு 147 ஏழை உடல் ஊனமுற்றோருக்கு இவ்வாரியத்தின் மூலம் உதவித்தொகை அளிக்கப்பட்டது.

(இ) ஊனமுற்றோர்க்கு மறுவாழ்வு அளிக்கும் திட்டங்களை மேலும் விரைவுபடுத்தும் பொருட்டு இவ்வாரியத்திற்கு ரூ. 3,00,000 மானியமாக வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

1. ஊனமுற்றோர் நலனுக்காக, ஊனமுற்றோர் மாநில வாரியத்தால் நிறை வேற்றப்பட்டு வரும் திட்டங்கள்.

71. பெட்டிக்கடை வைத்துத் தொழில் செய்ய இத்திட்டத்தின் கீழ் 1,000 ஊனமுற்றோர்க்கு உதவுவது.

(அ) இத்திட்டத்தின் கீழ் சமூக நலத்துறையின் சார்பாக ஊனமுற்றோர் மாநில வாரியம் ஊனமுற்றோர்கள் பெட்டிக்கடை வைத்து நடத்த உதவி புரிகின்றது. ஒவ்வொரு ஊனமுற்றோருக்கும் பெட்டிக்கடை வைத்து நடத்த வங்கிகள் மூலம் ரூ. 4,000 கடனுதவி அளிக்கப்படுகிறது. அரசு ரூ. 500 ஒவ் வொரு ஊனமுற்றோருக்கும் உதவி நிதியாக அளிக்கிறது. பெட்டிக்கடை வைக்க தகுதியான இடங்கள் சென்னை மாநகராட்சி மற்றும் காவல்துறை ஆகியவற்றுடன் கலந்தாலோசிக்கப்பட்டு, சென்னை நகரில் சமூக நலத் துறை யினராலும், மாவட்டங்களில் மாவட்ட ஆட்சியாளர்களாலும் ஒதுக்கப்படு கின்றன. இத்திட்டத்திற்காக 1979-80 ஆம் ஆண்டிற்காக ரூபாய் 5 லட்சம் அரசினால் ஒதுக்கப்பட்டு உள்ளது. இத்திட்டத்தின்கீழ் இதுவரை பயனடைந்த ஊனமுற்றோர் 283 பேர் ஆவர். இத்திட்டம் நடப்பு ஆண்டிலும் செயல்படும்.

**(ஆ) பயிற்சி பெற்றுள்ள ஊனமுற்றோர்களைப் பயிற்சியாளர்களாக நியமனம் பெறுதல்.**—இத்திட்டத்தின்படி வேலை வாய்ப்பு அலுவலகங்களில் காத்திருப்போர் பட்டியலில் உள்ள 1,500 பல தொழில்களில் பயிற்சி பெற்ற ஊனமுற்றோர்கள் பல்வேறு நிறுவனங்களில் ஓராண்டுப் பயிற்சிக்குப் பிறகு நிரந்தரமாக்கப்பட வேண்டும். இந்த ஓராண்டுப் பயிற்சி காலத்தில் ஒவ்வொரு ஊனமுற்ற பயிற்சியாளருக்கும் ரூ. 150 உதவித் தொகையாக அரசினரால் வழங்கப்படும். ஓராண்டு பயிற்சிக்குப் பிறகு அந்தந்த நிறுவனங்கள் ஊனமுற்ற பயிற்சியாளர்களைப் பணியில் அமர்த்திக் கொள்ள வேண்டும். இத்திட்டத்தின்கீழ் இதுவரை 30 ஊனமுற்றோர்கள் பயிற்சியில் அமர்த்தப்பட்டுள்ளனர். அரசு இத்திட்டத்திற்காக 1979-80 ஆம் ஆண்டிற்காக ரூ. 2.70 லட்சமும் 1980-81 ஆம் ஆண்டிற்கு ரூ. 3.00 லட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளது.

**(இ) 1,000 உடல் உறுப்புக் குறைந்த குழந்தைகளுக்கு இரும்புக் கவசமிட்ட காலணிகள் வழங்குதல்.**—இவ்வாண்டில் 1,000 உடல் உறுப்புக் குறைந்த குழந்தைகளுக்கு இரும்புக் கவசமிட்ட காலணிகள் இலவசமாக வழங்கப்படவிருக்கிறது. இத்திட்டத்திற்காக அரசு ரூ. 2.5 லட்சம் ஒதுக்கியிருக்கிறது. செயற்கை அவையவங்கள் தயாரித்து அளிக்கப்படும் பொறுப்பு சென்னை, மதுரை, கோயம்புத்தூர், மற்றும் தஞ்சாவூர் ஆகிய இடங்களில் உள்ள செயற்கை அவையவங்கள் பொருத்தும் நிலைகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. முன்பணமாக செயற்கை அவையவங்கள் தயாரித்து அளிப்பதற்காக ரூபாய் 2 லட்சம் இந்த நான்கு செயற்கை அவையவங்கள் பொருத்தும் நிலையங்களுக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது.

## III நிறைவேற்றப்படவிருக்கும் திட்டங்கள்.

(அ) மதுரையில் உற்பத்தித் தொழிற்சாலை தொடங்குதல்.

72. அரசு மருத்துவ மனைகள் மற்றும் மருந்தகங்களுக்குத் தேவைப்படும் கட்டு கட்டும் துணி, போர்வை மற்றும் பலவகையான துணிகளை உற்பத்தி செய்வதற்காக பயிற்சி மற்றும் கூட்டுறவு நெசவு உற்பத்திச் சங்கம் அமைத்திட அரசு திட்டமிட்டுள்ளது. ஆரம்ப கட்டமாக ஒரு பிரிவிற்கு 30 பேர்கள் வீதம் 120 பார்வையற்றவர்கள் நான்கு பிரிவுகளில் ஆறு மாதங்களுக்கு பயிற்சியளிக்கப்படவிருக்கிறார்கள். பயிற்சிக்குப் பின் பயிற்சி பெற்ற பார்வையற்றவர்கள் மேற்கண்ட கூட்டுறவுச் சங்கத்தின் அங்கத்தினர்களாகச் சேர்க்கப்படுவர். ஒவ்வொரு பார்வையற்றோருக்கும் ரூபாய் 100 பங்கு முதல்



டாக ஊனமுற்றோர் மாநில வாரியத்தால் வாரிய நிதியிலிருந்து அளிக்கப்படும். நெசவுப் பயிற்சியில் சேர விருப்பமுள்ள மற்றும் தகுதி உள்ள பார்வையற்றவர்களை தேர்ந்தெடுக்க தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**(ஆ) மதுரையில் ஊனமுற்றோர்க்கான தொழில் மற்றும் புனர்வாழ்வு நிலையம் தொடங்குதல்.**—மத்திய அரசின்கீழ் இயங்கிவரும் ஊனமுற்றோர் தொழில் மற்றும் புனர்வாழ்வு நிலையத்தின் அடிப்படையில் மதுரையில் ஒரு ஊனமுற்றோர் தொழில் மற்றும் புனர்வாழ்வு நிலையம் தொடங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறது. இந்த நிலையம் ஊனமுற்றோர்களின் உற்பத்தித் திறனை அறிதல் மற்றும் அவர்களுக்கு குறிப்பிட்ட தொழில் பயிற்சி அளித்தல் ஆகிய பணிகளை மேற்கொள்ளும். ஊனமுற்றோர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் பொருட்டு மேற்கொள்ளும் இத்திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டால் இதன்மூலம் ரூபாய் 1.94 லட்சம் தொடர் நிதியாகவும் மற்றும் ரூபாய் 0.98 லட்சம் தொடரா நிதியாகவும் செலவிடப்படும் என உத்தேசிக்கப்பட்டுள்ளது.

73. **உடல் ஊனமுற்ற மாணவ/மாணவிகளுக்கானத் தனிப்பள்ளிகளின் நிர்வாகம்.**—உடல் ஊனமுற்ற மாணவமாணவிகளுக்கான கீழ்க் குறிப்பிட்டுள்ள தனிப்பள்ளிகள் நடைபெற்று வருகின்றன. இவை இதுகாறும் பள்ளிக்கல்வி இயக்குநரின்கீழ் இயங்கி வந்தன. இவையாவும் கல்வித் துறையிலிருந்து சமூக நலத் துறைக்கு அரசாணை எண் 1767, சமூக நலம், நாள் 31—10—79ன் படி மாற்றப்பட்டு விட்டன. இப்பள்ளிகளை நன்முறையில் செயல்படுத்த சமூக நல இயக்குநரின் கீழ் பணிபுரிய மாவட்ட கல்வி அலுவலரின் பணிக்கு ஒப்ப ஒரு மேற்பார்வையாளரும் மற்றும் அவருக்கு உதவி புரிய வேறு சில பணியாளர்களையும் நியமனம் செய்ய அரசு ஆணையிட்டுள்ளது.

74. தற்போது இத்திட்டத்தின் கீழ் இயங்கி வரும் சிறப்பு பள்ளிகளாவன :

| | |
|---|---|
| (1) பார்வை இழந்தோர் பள்ளிகள் | 18 |
| (2) காது கேளாதோர் பள்ளிகள் | 19 |
| (3) தொழுநோயுற்றவர்களுக்கான பள்ளி | 1 |
| (4) மனநிலை குன்றியவர்களுக்கான பள்ளி | 1 |
| (5) மனநிலை குன்றியவர்களுக்கான பள்ளி ஆசிரியர் பயிற்சி நிறுவனம். | |
| (6) உடல் ஊனமுற்றோர்களுக்கான பள்ளி | 1 |

75. இவைகள் தவிர நீண்ட நாள் மருத்துவ சிகிச்சை பெற்று வரும் ஊனமுற்ற குழந்தைகளுக்குக் கல்வி அறிவு புகட்டும் பொருட்டு கீழ்க் குறிப்பிட்ட மருத்துவ மனையுடன் இணைந்து சிறப்புப் பள்ளிகள் நடைபெற்று வருகின்றன.

(1) அரசினர் பொது மருத்துவ மனை, சென்னை.

(2) ஸ்டான்லி அரசினர் மருத்துவ மனை, சென்னை.

(3) அரசினர் குழந்தைகள் மருத்துவ மனை, சென்னை.

(4) இராயப்பேட்டை அரசினர் மருத்துவ மனை, சென்னை.

(5) தஞ்சை மருத்துவ கல்லூரி மருத்துவ மனை, தஞ்சாவூர்.

(6) மதுரை மருத்துவ கல்லூரி மருத்துவ மனை, மதுரை.

(7) நெல்லை மருத்துவக் கல்லூரி மருத்துவ மனை, நெல்லை.

(8) கோவை மருத்துவ கல்லூரி மருத்துவ மனை, கோவை.

76. மேற்குறிப்பிட்ட பள்ளிகள் யாவும் அந்தந்த மருத்துவ மனை தலைமையின்கீழ் நடைபெற்று வருகிறது. இப்பள்ளிகளுக்கு ஏற்படும் செலவினை சமூக நலத்துறையின்கீழ் செலவிடப்படுகிறது.

77. 1979-80 ஆம் ஆண்டில் மொத்தம் (விழி இழந்தோர், காது கேளாதோர் மற்றும் உடல் ஊனமுற்றோர்) 4,275 மாணவ/மாணவியவர்கள் கல்வி பயிலுகின்றனர். தற்போது இப்பள்ளிகளில் 422 ஆசிரியர்கள் பணியாற்றுகின்றனர்.

78. இப்பள்ளிகளுக்காக 1978-79 ஆம் ஆண்டில் ரூ. 32.30 லட்சங்கள் செலவிடப்பட்டன. 1979-80 ஆம் ஆண்டில் ரூ. 35.43 லட்சங்கள் செலவிட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் ரூ. 40 லட்சம் ஒதுக்கப் பட்டுள்ளது.

**79. வயது வந்த பார்வை இழந்தோர்களுக்கான சிறு பொறியியற் பயிற்சி திட்டம்.**—பொதுக் கல்வியை முடித்த பார்வை இழந்த வயது வந்தவர்கள் மேலும் வாழ்க்கையில் சுயவேலை வாய்ப்பு பெறுவதற்கு பயிற்சி அளிக்க கிண்டி தொழிற்பேட்டையில் சிறு பொறியியற் கூடம் 1—5—1967-ல் ஏற்படுத்தப்பட்டது. இத்தொழிற்கூடம் தமிழக அரசினரால் நடத்தப்படுகிறது. இத்தொழிற்சாலையில் ஆறு மாதத்திற்கு பார்வை இழந்தோர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சி காலத்தில் பயிற்சி பெறும் மாணவர்களுக்கு





உணவும் மற்றும் இருப்பிடமும் இலவசமாக அளிக்கப்படுகிறது. இவை தவிர சில்லறை செலவினத்திற்காக வாரத்திற்கு ஒரு மாணவனுக்கு ரூபாய் 2 வீதம் அளிக்கப்படுகிறது. பயிற்சிக் காலத்தில் ஒரு பிரிவிற்கு 16 மாணவர்கள் வீதம் பயிற்சி அளிக்கப்படுகிறது.

80. இத்தொழில் கூடத்திற்கு 1978-79 ஆம் ஆண்டில் ரூபாய் 1,32,000 செலவிடப்பட்டது.

81. 1979-80 ஆம் ஆண்டில் இத்தொழில் கூடத்திற்காக ரூபாய் 1,37,000 செலவிட திட்ட மதிப்பீட்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் ரூ. 1.48 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**82. மண்டல பிரெய்லி அச்சகம். பூவிருந்தவல்லி, சென்னை-56.**—பார்வை இழந்த மாணவர்களுக்கான பள்ளி நூல்களை தென் மாநிலத்திலுள்ள அதாவது தமிழ், தெலுங்கு, மலையாளம் மற்றும் கன்னடம் ஆகிய மொழிகளில் அச்சிடுவதற்கு மைய அரசினரால் 1968-69 ஆம் ஆண்டில் பூவிருந்தவல்லி, அரசினர் விழி இழந்தோர் பள்ளி கட்டிட வளைவிற்கு பிரெய்லி அச்சகம் ஏற்படுத்தப் பட்டது. 1976 ஆம் ஆண்டு வரை மேற்குறிப்பிட்ட அச்சகத்திற்கு ஏற்படும் பராமரிப்பு செலவை மைய அரசே ஏற்றுக்கொண்டது. அதன்பின் ஏற்பட்டு வரும் செலவினை தமிழ்நாடு அரசு ஏற்று வருகிறது. அது மற்ற தென் மாநிலங்களால் பகிர்ந்து கொள்ளப்படும். இவ்வச்சகத்திற்காக 1978-79 ஆம் ஆண்டில் ரூ. 2.28 லட்சங்கள் செலவிடப்பட்டது.

1979-80 ஆம் ஆண்டில் ரூ. 1.36 லட்சங்கள் செலவிட நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் இத்திட்டத்திற்காக ரூ. 1.50 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**83. மண்டல ஆசிரியர் பயிற்சி நிலையம் குறித்து.**—பார்வையிழந்தோர் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்க 1969 ஆம் ஆண்டு பூவிருந்தவல்லி அரசினர் பார்வை இழந்தோர் பள்ளிக் கட்டிட வளைவிற்குள் மண்டல பயிற்சி நிலையம் ஏற்படுத்தப்பட்டது. இதற்கு கௌரவ இயக்குநராக அரசினர் பார்வை இழந்தோர் பள்ளி முதல்வர் இருந்து வருகிறார். தென் மாநிலத்திலுள்ள நான்கு (அதாவது ஆந்திரம், கேரளம், கர்நாடகம் மற்றும் தமிழகம்) மாநிலத்திலிருந்து மேற்குறிப்பிட்ட பயிற்சி நிறுவனத்தில் ஆசிரியர்கள் பயிற்சி பெறுகின்றனர். பயிற்சி காலம் பத்து மாதங்களாகும். பன்னிரெண்டு ஆசிரியர்கள் ஒவ்வொரு பயிற்சி காலத்திலும் பயிற்சி அளிக்கப் படுகிறார்கள். அன்னார்களுக்கு கீழ்குறிப்பிட்டுள்ளபடி உதவித் தொகை

அளிக்கப்படுகிறது. தமிழ்நாட்டைத் தவிர வெளி மாநிலங்களில் இருந்து பயிற்சி பெறுபவர்களுக்கு ரூ. 100-ம் தமிழ் நாட்டிலுள்ளவர்களுக்கு ரூ. 25-ம் பார்வை இழந்த ஆசிரியர்களுக்கு மேற்குறிப்பிட்டுள்ள உதவித் தொகை அல்லா மல் விழியிழந்த ஆசிரியர் பயிற்சியாளர்களுக்கு படிப்பு உதவியாக ரூபாய் 53 Reading Allowance வழங்கப்படுகிறது. இந்நிறுவனத்திற்கு ஏற்படும் செலவினை மைய அரசே ஏற்றுக் கொள்கிறது.

84. 1978-79 ஆம் ஆண்டில் ரூ. 50,000 செலவிடப்பட்டது. 1979-80 ஆம் ஆண்டில் ரூ. 51,000 செலவிட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் ரூ. 48,000 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

85. **அனாதை குழந்தைகளுக்கான திட்டம்.**—ஆதரவற்ற அனாதைச் சிறுவர்களை பராமரித்து வரும் தனியார் தொண்டு நிறுவனங்களுக்கு அச் சிறார்களை பராமரிப்பதற்காக இந்தத் திட்டத்தின் கீழ் இந்திய அரசு மானியம் வழங்குகிறது. இந்நிறுவனங்களில் 5 முதல் 18 வயது வரையுள்ள ஆதரவற்ற ஏழை சிறார்கள் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். பராமரிப்பு மற்றும் கட்டிடம் கட்டுவதற்கான செலவினத் தொகையில் 90 சதவீதம் இந்திய அரசு இந்நிறுவனங்களுக்கு மானியமாக வழங்குகிறது. தொடர்செலவு மற்றும் தொடராச் செலவுத் தொகையில் 10 சதவீதம் அத்தொண்டு நிறுவனங்கள் ஏற்றுக் கொள்ளவேண்டும்.

86. இவ்வாய்ப்பைப் பயன்படுத்தி 57 நிறுவனங்கள் மானியம் பெற்றுள்ளன. இதன்மூலம் 3,404-க்கு மேற்பட்ட குழந்தைகள் பயனடைந்துள்ளனர்.

87. 1979-80 ஆம் ஆண்டில் ரூ. 38.00 லட்சமும் நடப்பு ஆண்டில் ரூ. 38.00 லட்சமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

88. **ஆதரவற்ற குழந்தைகள் நலத்திட்டம்.**—பதிவு செய்யப்பட்ட சமூக நல தனியார் நிறுவனங்கள் மூலம் ஆதரவற்ற குழந்தைகளை கவனிக்கவும், பராமரிக்கவும் கூடிய முன்னோடி திட்டமாகிய ஆதரவற்ற குழந்தைகளின் நலத் திட்டத்தில் ஒரு பகுதியாக (Foster Care Service) 1978-79 ஆம் ஆண்டில் திட்டம் ஒன்றை இந்திய அரசு தொடங்கியது. ஒவ்வொரு குழந்தைக்கும் மானியமாக ரூ. 75 வழங்கப்படுகிறது. இதில் 90 சத விகிதம் இந்திய அரசு மானியமாக வழங்கி வருகிறது. 1978-79-ல் மானியத் தொகை யாக கீழ்க்கண்ட மூன்று நிறுவனங்களுக்கும் முறையே சென்னை "சமூக நலப் பணி" பயிற்சிப் பள்ளிக்கு ரூ. 44,720-ம், சென்னை சேவா சமாஜத்திற்கு ரூ. 45,990-ம், சென்னை பஞ்சாப் அசோசியேசனுக்கு ரூ. 23,895-ம் வழங்கப் பட்டது.



89. **மறுவாழ்வுப் பயிற்சித் திட்டம்.**—இத்திட்டத்தின் கீழ், 1978-79-ல் தனியார் நிறுவனங்களான பஞ்சாப் அசோசியேஷன் என்ற நிறுவனத்திற்கு தையல் பயிற்சி, நூல்கட்டுப் பயிற்சிப் பிரிவிற்கு ரூ. 98,415 மானியமும் ஸ்திரி சேவா மந்திர் என்ற நிறுவனத்திற்கு ரூ. 85,590 மானியமும் (தையற் பயிற்சி மற்றும் நூல்கட்டுப் பயிற்சிப் பிரிவிற்கும்), முதல்பகுதியாக வழங்கப்பட் டுள்ளது. இதன் மூலம் 120 பெண்கள் பயன் அடைந்துள்ளனர் மேலும் இரண்டாவது பயிற்சி துவங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. நடப்பு ஆண்டில் இத்திட்டத்திற்கென ரூ. 2.52 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

90. **பிச்சைக்காரர்கள் இல்லம்.**—மேல்பாக்கத்திலுள்ள பாதுகாப்பு முகாம், பிச்சைக்காரர்களுக்காக ஓர் இல்லமாகும். 1945, தமிழ்நாடு பிச்சையெடுப்பு தடுப்புச் சட்டத்தின்கீழ் தண்டனை விதிக்கப்பட்ட பிச்சைக்காரர்களுக்காக அரசு இல்லத்தினை நடத்தி வருகிறது. இம்முகாம் 1973-ல் சமூக நலத்துறை யின் நிர்வாகத்தின்கீழ் கொண்டுவரப்பட்டது. இவ்வில்லத்தில் 770 ஆடவரும், 150 பெண்டிரும் தங்கியிருக்க அரசு அனுமதி உள்ளது. தற்போது 261 ஆடவரும், 43 பெண்டிரும் இம்முகாமில் உள்ளனர். இங்கு நெசவு. தச்சு வேலை, தையல் வேலை, புத்தகம் பைண்டிங் செய்தல் போன்ற தொழில்களில் பயிற்சி அளிக்கப்படுகின்றன. நடப்பு ஆண்டில் இவ்வில்லத்தைப் பராமரிப்ப தற்கு எழு லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

91. **குழந்தைகள் பராமரிப்பு இல்லம்.**—ஆதரவற்ற குழந்தைகளுக்கு புகலிடம் அளிக்கும் வகையில் ஒரு திட்டம் தீட்டப்பட்டுள்ளது. அதன் நோக்கம் ஆதரவற்ற குழந்தைகளுக்கு உணவு, உடை, உறைவிடம், மருத்துவ வசதி, கல்வி வசதியளித்து அவர்கள் வளர்ந்து பெரியவர்களாகும்போது வேலை பார்க்கவும், சொந்தமாக தொழில் நடத்தவும், தகுதியுடைய சிறந்த குடிமகனாக்குவது.

92. அதன்படி அரசினர் அரசு ஆணை பல்வகை எண் 1450, சமூக நலத் துறை, நாள் 22—8—1979-ல் 5 முதல் 18 வயது வரையிலுள்ள ஆதரவற்ற குழந்தைகளுக்காக நான்கு மாவட்டங்களில் நான்கு குழந்தைகள் பாதுகாப்பு விடுதிகள், காப்பகங்கள், ஒவ்வொன்றிலும் 250 குழந்தைகள் வீதம் நடத்த அரசு அனுமதி வழங்கியுள்ளனர். மேற்படி நான்கு குழந்தைகள் பாதுகாப்பு விடுதிகள் சென்னை நகரில் 14—11—1979 அன்றும், சேலத்தில் 11—11—1979 அன்றும் நாகர்கோவிலில் 21—11—1979 அன்றும் மதுரையில் 5—12—1979 அன்றும் துவக்கப்பட்டுள்ளன. நடப்பு ஆண்டில் இத்திட்டத்திற்காக எட்டு லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**96. விதவைகள் பயனடைய அரசு அளிக்கும் திட்டம்.**—கணவனை இழந்தும், சுற்றத்தார்களால் கைவிடப்பட்டும் அநேக பெண்கள் அவதியுறும் நிலையை உத்தேசித்து அவர்களுக்கு நிவாரணம் அளிக்க அரசு முன்வந்துள்ளது. அதன்படி அரசு ஆணை எண் 462, சமூக நலத்துறை, நாள் 24—6—1975-ல் 'விதவை மறுமணம்' செய்துகொண்ட தம்பதியர்களுக்கு ரூ. 5,000-க்கான ஐயாண்டு சேமிப்புப் பத்திரம் ஆண்டுதோறும் கொடுக்கப்பட்டு வருகிறது. இதுவரை இத்திட்டத்தின்கீழ் 328 விதவைகள் பயனடைந்துள்ளனர். 1979-80 ஆம் ஆண்டில் 100 தம்பதிகள் பயன் பெற்றனர். நடப்பு ஆண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படும்.

**97. பள்ளிக்குச் செல்லும் விதவைகளின் குழந்தைகளுக்கு உதவியளித்தல்.**—ஆண்டு வருமானம் ரூ. 3,000-க்கும் குறைவாக உள்ள விதவைகளின் குழந்தைகளுக்கு இலவசமாக புத்தகம், நோட்டுப் புத்தகம் ஆகியவை வழங்கும் திட்டம் 1978-79 கல்வியாண்டிலிருந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதற்காக ஆரம்ப பள்ளிகளில் பயிலும் சிறார்களுக்கு ஆண்டொன்றுக்கு ரூபாய் 1,500 விதமும், நடு நிலைப்பள்ளி சிறார்களுக்கு ரூபாய் 40 விதமும், உயர்நிலைப்பள்ளி மாணவ மாணவிகளுக்கு ரூ. 60 விதமும் வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின் மூலம் 1979-80 ஆம் ஆண்டில் 3,000 சிறார்கள் பயனடைந்தனர். இத்திட்டம் 1980-81 ஆம் ஆண்டிலும் செயல்படுத்தப்படும்.

## வழிகாட்டி நிலையங்கள்.

98. விதவைகள் மற்றும் அனாதை, ஆதரவற்ற பெண்களின் நலம் மற்றும் மறுவாழ்வு பரிதாபியானத்துடன் கவனமாகப் பரிசீலிக்க வேண்டிய விஷயமாகும். சமூக நிலையிலும், பொருளாதார நிலையிலும் அதனை மிகவும் பொறுப்பாகவும் தனிப்பட்ட கவனத்துடன் செயல்படுத்துதல் மிக அவசியம். குடும்பத்தில் மரணம் போன்ற திடீரென்று ஏற்படும் துன்பம் அவர்களின் வாழ்க்கை நிலையில் அந்நிவாரத்தையே ஆட்டுவிக்கும் சூழ்நிலையை உருவாக்கி விடுகிறது. அப்போது உதவிகரமான ஆதரவு கரங்களை சமூகம் எதிர்பார்க்கிறது. இப்படிப்பட்டவர்களின் மறுவாழ்வின் அவசியத்தையும் முக்கியத்துவத்தையும் உணர்ந்த தமிழக அரசு, முதன்மையாகக் கீழ்க்கண்ட இடங்களில்

விதவை மற்றும் ஆதரவற்றோரின் நல்வாழ்விற்கும், மறுவாழ்விற்கும் உதவி புரிந்திட வழிகாட்டி நிலையங்களை சமூக நலத்துறையின் கீழ் 1978 ஆம் ஆண்டு துவங்கியுள்ளது.

1. சென்னை நகரம்

2. தஞ்சாவூர்

3. மதுரை.

4. கோயம்புத்தூர்.

**வழிகாட்டி நிலையங்களின் நோக்கங்கள்**

99. 1. ஏழை விதவைத் தாய்மார்களின் குழந்தைகளுக்கு பாதுகாப்பும், கல்வியும் சமூக நல ஸ்தாபனங்கள் மூலம் அளித்தல்.

2. ஏழை விதவைகளுக்கு கல்வியும், வாழ்க்கைக்குத் தேவையான தொழிற்பயிற்சியும் அளித்தல்.

3. விதவைகளுக்கு அவர்களின் இறந்துபோன கணவன்கள் மூலமாய்ச் சேரவேண்டிய வைப்புநிதி, ஆயுட்கால வைப்பு நிதி ஆகியவற்றைப் பெற்றுத் தர ஏற்பாடு செய்தல்.

4. விதவைகள் மற்றும் ஆதரவற்றவர்கள் தங்கள் முயற்சியிலேயே வாழ்க்கையினை நடத்துவதற்கு உறுதுணையாக சுயவேலைவாய்ப்புத் திட்டத்தின் மூலம் ஏதேனும் தொழில் செய்வதற்கு பண உதவிகளை தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் கடனாக வழங்க ஏற்பாடு செய்தல்.

100. இந்த வழிகாட்டி நிலையங்கள் 1978 ஆம் ஆண்டு முதல் இயங்கி வருகிறது. அதற்கென சிறப்பு அலுவலர் (வழிகாட்டி நிலையம்) நியமிக்கப் பட்டு சென்னை நகரம் சிறப்பு அலுவலர் (வழிகாட்டி நிலையம்) அவர்களின் நேரடி பொறுப்பில் இயங்குகிறது. மற்ற மூன்று வழிகாட்டி நிலையங்களும் சிறப்பு அலுவலர் (வழிகாட்டி நிலையம்) அவர்களின் மேற்பார்வையில் அந்தந்த மாவட்டத்தில் இயங்குகின்றன.

101. இந்த நான்கு வழிகாட்டி நிலையங்களும் ஒருமித்த நிலையில் விதவைகள் மற்றும் ஆதரவற்றோர்களுக்கு சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் மூலம் முன்னேறுவதற்கு தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் கடனுதவி பெற்றுத் தருகிறது. சுமார் 3,000-க்கும் மேற்பட்ட ஏழை குடும்பங்கள்





இதனால் பயனடைந்துள்ளார்கள். இந்தத் திட்டம் சமுதாயம் மற்றும் பொருளாதாரத்தால் பின்தங்கிய பெண்களால் முழு மனதாலும் வரவேற்கப்படு கிறது. நடப்பு ஆண்டில் இத்திட்டத்திற்காக ரூ. 1.16 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**விதவைகளின் குழந்தைகளுக்கு உதவித் திட்டம் :**

102. 1979-80-ம் ஆண்டில் விதவைகளின் குழந்தைகளுக்கு உணவும் உறை விடமும் அளித்து கல்வி வசதியும் அளித்து தொண்டு நிறுவனங்களில் சேர்க்கப் பட்டுள்ளனர். இவர்களின் பராமரிப்புச் செலவிற்காக மாதம் ஒன்றுக்கு ரூ. 35 வீதம் மானியம் வழங்கப்பட்டு வருகிறது. ரூ. 22,000 நடப்பு ஆண்டிற்கு இத்திட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**விதவைகள் நலனுக்காக சமையலுக்குத் தேவையான பொருட்கள் தயாரித்தல் :**

103. விதவைகளுக்கும், ஆதரவற்றவர்களுக்கும் அப்பளம் தயாரிக்கும் வேலை வாய்ப்பு அளிக்க சென்னையில் ஒரு தொழிற்கூடம் 1979-80 ஆம் ஆண்டில் தொடங்கி நடத்தப்பட்டு வருகிறது. இது 15 பேருக்கு வேலை வாய்ப்பளிக்கிறது. இத்திட்டம் லாப நட்டம் நோக்கம் இல்லாமல் செயல் படும். நடப்பு ஆண்டிற்கு ரூ. 60,000 இத்திட்டத்திற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு சமூகநல வாரியம் :**

104. 1954-ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட தமிழ்நாடு சமூக நல வாரியம் தனியார் நிறுவனங்கள் வளர்ச்சியடையச் செய்வதிலும் அவற்றை ஊக்குவிப் திலும் முக்கிய பங்கு பெற்று வருகிறது. இவ்வாரியம் மூன்றாண்டுகளுக்கொரு முறை திருத்தியமைக்கப்படுகிறது. அதன் முக்கியப் பணிகளாவன :

(அ) சமூகநல நிறுவனங்களைத் தோற்றுவித்து அவற்றை ஊக்கு வித்தல்.

(ஆ) தொண்டு நிறுவனங்களின் பணியின் தரத்தையும் தன்மையையும் உயர்த்துதல், பொருளாதாரம் மற்றும் தொழில் நுட்பத் துறையில் உதவியளித்தல்.

(இ) மானியம் பெறும் நிறுவனங்களின் பணிகளை விரிவாக்குதல்.

(ஈ) களத்தில் தொண்டாற்றும் நிறுவனங்களுக்கும், மத்திய சமூகநல வாரியத்திற்கும் நடுவராக இருந்து திட்டங்களை செயலாற்றுதல்.

105. மகளிர், குழந்தைகள் மற்றும் உடல் ஊனமுற்றோர்களுக்காக தொண்டு செய்யும் நிறுவனங்களுக்கு உதவ இவ்வாரியம் செயல்பட்டு வருகிறது.

106. 1978 பிப்ரவரியில் இவ்வாரியம் 32 அலுவலர் சார்பற்ற அங்கத்தினர்களையும் 3 அலுவல் சார்புள்ள அங்கத்தினர்களையும் கொண்டு திருத்தியமைக்கப்பட்டது.

107. 1978-79-ல் 845 நிறுவனங்களுக்கு பல்வேறு பணிகளுக்காக ரூ. 40.90 லட்சம் மானியம் அனுமதித்துள்ளது. 1979-80 ஆம் ஆண்டில் ஜனவரி 1980 முடிய அடியிற்கண்ட வண்ணம் மானியம் அனுமதிக்கப்பட்டு உள்ளது.

| வரிசை எண். | மானியத்தின் வகை. | நிறுவனங்களின் எண்ணிக்கை. | அனுமதிக்கப் பட்ட மானியம். [ரூபாய் இலட்சத்தில்] |
|---|---|---|---|
| 1. | வருடாந்திர மானியம் | 234 | 3.60 |
| 2. | திட்ட கால மானியம் | 29 | 2.41 |
| 3. | மகிளா மண்டல் மானியம். | 12 | 1.18 |
| 4. | ஊட்டச் சத்துணவுத் திட்டம். | 145 | 3.80 |
| 5. | குழந்தைகள் காப்பகத் திட்டம். | 179 | 9.67 |
| 6. | விடுமுறை முகாம். | 100 | 3.00 |
| 7. | ஓராண்டு குறுகிய கல்வித் திட்டம். | 6 | 1.04 |
| 8. | மகளிர் தொழிற் பயிற்சித் திட்டம். | 43 | 6.93 |
| 9. | விரிவாக்க நலத்திட்டம் புறநகர். | 2 | 0.13 |
| 10. | பணிபுரியும் பெண்களுக்கான திட்டம். | 6 | 0.29 |
| 11. | சமூக பொருளாதாரத் திட்டம். | 5 | 2.55 |
| 12. | மாட்டு பண்ணைத் திட்டம். | 53 | 7.31 |
| 13. | துணைப் பகுதி. | 1 | 0.90 |
| 14. | கிராம மகளிர்க்கான பொதுஜன ஒத்துழைப்பு பயிற்சி முகாம். | 7 | 0.32 |
| | | 822 | 43.13 |



**முதியோர் ஓய்வு ஊதியத் திட்டம் :**

108. சுகமாக வாழ வழியில்லாத, ஆதரிக்க உறவினர் யாருமில்லாத முதியோர்க்கு சமூகப் பாதுகாப்பு அளிக்கும் பொருட்டு 1—4—1962 முதல் முதியோர் ஓய்வூதியத் திட்டம் அரசால் துவக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் 60 வயதிற்கு மேற்பட்ட, பார்வை இழப்பு, தொழுநோய், மனநோய், முடக்குவாதம், உடல் உறுப்பு இழத்தல் போன்ற காரணங்களால் இயலாமையாக்கப்பட்டவர்கள் மற்றும் 65 வயதிற்கு மேற்பட்ட மற்ற ஆதரவற்றவர்கள் ஆகியோருக்கு ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. ஆதரவற்ற கணவன் மனைவி இருவருக்கும் உறவினர் யாரும் இல்லாமல் இருந்தால் அவர்களுக்கும் தனித் தனியே ஓய்வூதியம் வழங்க இத்திட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் ஒவ்வொருவருக்கும் மாதம் ரூ. 25 அரசால் அஞ்சலகம் மூலம் அனுப்பிவைக்கப்படுகிறது. ஆதரவற்ற உடல் ஊனமுற்றவர்களுக்கும், ஆதரவற்ற விதவைகளுக்கும் இத்திட்டத்தின் கீழ் ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. 31—12—1979 முடிய இத்திட்டத்தின் கீழ் சுமார் 1,12,800 பேர் பயனடைந்துள்ளனர். இதில் 76,950 பேர் முதியோர், 24,450 பேர் உடல் ஊனமுற்றோர், 11,400 பேர் ஆதரவற்ற விதவைகள். பொங்கல் தினத்தன்றும், சுதந்திர தினத்தன்றும் ஆக ஆண்டுக்கு இருமுறை இலவச வேட்டி, புடவை இவர்களுக்கு வழங்கப்படுகிறது. வருவாய்த் துறையின் மூலம் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தை நடப்பாண்டிலும் தொடர்ந்து அரசு செயல்படுத்தும். மேலும் 3,000 நபர்களுக்கு நடப்பாண்டில் உதவித் தொகை வழங்கப்படும்.

### சீர்திருத்தப்பணித் துறை

109. சமூகத்திலும், பொருளாதாரத்திலும் கீழ்நிலையிலுள்ள எண்ணற்ற மக்களின் நலன்களை மேம்படுத்துவதிலும், அவர்களை உயர்நிலைக்குக் கொண்டு வருவதிலும், தமிழ்நாடு அரசு மிகுந்த கவனம் செலுத்தி வருகிறது. அரசினாலும், அரசு மான்யம் பெறும் தனியார் நிறுவனங்களினாலும், எண்ணற்ற சமூக நலத்திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. அரசினரின் நேரடிப்பொறுப்பிலிருக்கும் சீர்திருத்தப்பணித்துறை, 1920 ஆம் ஆண்டின் தமிழ்நாடு குழந்தைகள் சட்டத்தின்கீழ் தவறிழைத்ததாகக் கருதப்படும் இளங் குற்றவாளிகளையும், 1956 ஆம் ஆண்டின் மகளிர் பாத்தமைத் தடுப்புச் சட்டத்தின்கீழ் தவறிழைத்ததாக கருதப்படும் சிறுமிகள் மற்றும் பெண்களின் பொறுப்பினை ஏற்று அவர்களின் நலனுக்காகச் செயல்படுகிறது.

[1980 ஜூலை 26

## நிறுவன அமைப்பு.

110. சீர்திருத்தப்பணித்துறை இயக்குநர், இத்துறையின் தலைவராவார். அவர் சென்னை நகரத்தில் தலைமை அலுவலகம் ஏற்று, துறை நடவடிக்கைகளையும், அரசு மற்றும் அரசினர் மான்யத்துடன் இயங்கும் தனியார் சீர்திருத்தப்பள்ளிகள், வரவேற்பு இல்லங்கள், மகளிர் காப்பகங்கள், மீட்பு மனைகள் முதலியவற்றின் நடைமுறைகளையும் நிர்வகித்து வருகிறார். மாநில அளவில் பயணங்கள் மேற்கொண்டு, துறை மற்றும் தனியார் நிறுவனங்களின் ஆண்டு ஆய்வு மற்றும் திடீர் ஆய்வுகள் நடத்தி, அவற்றின் நடைமுறைகளைக் கண்காணித்தும் வருகிறார். 1—1—1979 முதல் சீர்திருத்தப்பணித்துறை இயக்குநர் பதவி, இந்திய ஆட்சிப்பணி பதவியாக உயர்த்தப்பட்டுள்ளது. தற்போது பிற்பட்டோர் நலத்துறை இயக்குநர், சீர்திருத்தப்பணித்துறை இயக்குநராகவும் பணியாற்றி வருகிறார்.

111. இயக்குநரின் நிர்வாகப் பணிகளுக்கு இரண்டு உதவி இயக்குநர்களும், ஓர் அரசிதழ் பதிவுப் பெற்ற நேர்முக உதவியாளரும் பணிபுரிகின்றனர். இயக்குநருக்கு அலுவலகச் செயல்முறைகளில் நேர்முக உதவியாளர் உதவியாய் இருப்பதுடன், மற்ற இரண்டு உதவி இயக்குநர்களும், துறைப் பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டுள்ள இல்லவாசிகளின் கல்விப் பயிற்சி மற்றும் தொழிற் பயிற்சி முறையில் ஊக்கம் செலுத்தி வருகின்றார்கள். தென் மாவட்டங்களிலுள்ள சார்நிலை அலுவலகங்களின் நேரடி மேற்பார்வைக்கென இயக்ககத்தின் உதவி வட்டார அலுவலகம், ஒன்றினை மதுரையில் துவக்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இவ்வலுவலகம் விரைவில் தொடங்க ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

112. கீழ்மட்டத்தில் கண்காணிப்பாளர்கள் நிறுவனங்களின் பொறுப்பினை ஏற்று நடத்தி வருகிறார்கள். அவர்களுக்கு உதவியாக நிர்வாக அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்கள் பணிபுரிகிறார்கள்.

## தமிழ்நாடு குழந்தைகள் சட்டம்.

113. தமிழ்நாடு குழந்தைகள் சட்டம், 1920-ன்கீழ், இம்மாநிலத்தில் இருபத்திரண்டு சீர்திருத்தப்பள்ளிகள் (நீண்டகால வரையறை நிறுவனங்கள்) இயங்கி வருகின்றன. இவற்றுள், எட்டுப் பள்ளிகள் அரசினராலும், பதினான்கு பள்ளிகள் அரசினரின் மானியம் பெறும் தனியார் நிறுவனங்களாலும் நடத்தப்படுகின்றன.



1980 ஜூலை 26]

114. மனவளர்ச்சி இல்லாத அல்லது குன்றிய, சிறார்களை தனியார் நிறுவன்மான பாலவிஹாரின் கீழியங்கும் இடைநிலை சீர்திருத்தப்பள்ளியும், மகாபோதி நிறுவனத்தின் கீழியங்கும் உடல் ஊனமுற்ற சிறார்களுக்கான பள்ளியும் பொறுப்பேற்று பயிற்றுவிக்கின்றன.

115. மாநில அளவில் பதின்மூன்று வரவேற்பு இல்லங்கள் (குறுகிய கால வரையறை) உள்ளன. இவை விசாரணைக்குட்படும், சிறுவர், சிறுமியர்களை சேர்த்துக் கொண்டு அவர்களை நீதிமன்றத்தின்முன் விசாரணைக்கு உட்படுத்துகின்றன. சீர்திருத்தப்பள்ளிகளுக்கு மாணவ மாணவிகள், இவ்வரவேற்பு இல்லங்களிலிருந்தும் அனுப்பப்படுகின்றனர். மேற்குறிப்பிட்ட பதிமூன்று இல்லங்களில் ஆறு வரவேற்பு இல்லங்கள் அரசினராலும், எஞ்சியவை குழந்தைகள் பாதுகாப்புச் சங்கம் மற்றும் விடுதலைப் பெற்ற கைதிகள் உதவிச் சங்கம், அரசினரின் மான்யம் பெறும் இன்னபிற தனியார் நிறுவனங்களாலும் நடத்தப்பட்டு வருகின்றன.

## மகளிர் பரத்தமைத் தடுப்புச் சட்டம், 1956.

116. 1956 ஆம் ஆண்டின் மகளிர் பரத்தமைத் தடுப்புச் சட்டத்தின்கீழ் அமைக்கப்பட்டுள்ள மூன்று (நீண்டகால வரையறை) மகளிர் காப்பகங்கள், மேற்குறிப்பிட்ட சட்டத்தின்கீழ் குற்றவாளிகளாகக் கருதப்படும் சிறுமியர் மற்றும் பெண்களுக்கு புகலிடம் தந்து அவர்களுக்கு கல்வி மற்றும் தொழிற் கல்விப் பயிற்சிகளை அளித்து வருகின்றன. இந்நிறுவனங்கள் பாதுகாப்புக் கருதி தாமாகவே முன்வந்து சேரும் சிறுமிகளையும் பெண்களையும் சேர்த்துக் கொள்கின்றன. இவற்றைத் தவிர குறுகிய கால வரையறை கொண்ட எட்டு மீட்பு மனைகள் இச்சட்டத்தின்கீழ் குற்றவாளிகளென விசாரணைக்குட் படுத்தப்படும் சிறுமிகளையும் பெண்களையும் பொறுப்பேற்று, அவர்களை விசாரணை முடியும் வரை பராமரிக்கின்றன. இக்குறுகிய கால மீட்பு மனைகள், மகளிர் காப்பகங்களுக்கு நுழைவாயிலாக அமைந்து செயல்படுகின்றன.

## பிற்காப்புத் திட்டங்கள்.

121. இத்துறையின் நடப்பு ஆண்டின் வரவு—செலவு மதிப்பீடு ரூபாய் 1,04.11 இலட்சமாகும். இதில் ஊழியர்கள் ஊதியம் மற்றும் இதர செலவினங்களுடன் தனியார் நிறுவனங்களுக்கு மான்யமாக வழங்கப்படும் தொகை ரூ. 11.22 இலட்சமும் இதில் அடங்கும்.

களுக்கான பிற்காப்பு இல்லம் வேலூரிலும், மாணவர்களுக்கான இல்லங்கள் செங்கற்பட்டு மாவட்டம் ஆத்தூர் கிராமம், மற்றும் மதுரையில் அமைந்துள்ளன. இவ்வில்லங்கள், சீர்திருத்த இல்லங்களினின்று பயிற்சிக்காலம் முடிவுற்று வெளியேறும் ஆதரவற்ற சிறுவர் சிறுமியர் மற்றும் பெண்கள் தங்களின் வாழ்க்கைக்குத் தேவையான தொழிற்கல்விப் பயிற்சியினைத் தொடர்ந்து பெற உதவுகின்றன. இதனைத் தவிர பெண்கள் பிற்காப்பு இல்லத்துடன் ஆடைகள் மற்றும் ஹோல்டால்கள் செய்வதற்கான பயிற்சி நிலையம் ஒன்றும் இணைக்கப்பட்டு, அந்நிலையத்தில் இல்லவாசிகள் பயிற்றுவிக்கப்படுகின்றனர்.

### கல்வி.

118. சீர்திருத்தப் பணித்துறையின் கீழியங்கும் நிறுவனங்கள் அனைத்துமே, தமிழ்நாடு கல்வி விதிகளின்படி, அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்களாகும். எல்லாப் பள்ளிகளிலும் எட்டாம் வகுப்பு வரை கல்வி கற்பிக்கப்படுகிறது. சிறப்பாக செங்கற்பட்டு, அரசினர் முதுநிலை சீர்திருத்தப் பள்ளியில் உயர்நிலைப் பள்ளி கல்வி வரை மாணவர்கள் பயிற்றுவிக்கப் படுகின்றனர்.

### தொழிற்கல்வி.

119. கீழே குறிப்பிட்டுள்ள வருவாய் பயக்கும் தொழிற்கல்விப் பயிற்சிகள் சீர்திருத்தப் பணித்துறை நிறுவனங்களில் கற்பிக்கப்படுகின்றன. இதனால், இல்லவாசிகள் பயனடைவதுடன், அவர்களது மறுவாழ்விப்புப் பணியும் இலகுவாகிவிடுகிறது.

**சீர்திருத்தப் பள்ளிகள் மற்றும் மகளிர் காப்பகங்கள் :—**

1. தச்சுவேலை
2. தையல் மற்றும் பூ வேலை
3. நெசவு
4. பாய் நெசவு
5. கருமாரப்பணி
6. உலோகப்பணி
7. தோட்டம் மற்றும் விவசாயம்
8. கொத்துவேலை
9. புத்தகம் கட்டுதல்
10. இசைக்கருவி இசைத்தல்
11. மாட்டுப்பண்ணை



**பிற்காப்பு இல்லங்கள்.**

12. புத்தகம் கட்டுதல்
13. கருமாரப்பணி
14. தையல் வேலை.

மேற்சொன்ன தொழிற்பட்டறைகளில் சென்னை, அரசினர் பெண்கள் சீர்திருத்தப் பள்ளி மற்றும் தஞ்சாவூர் அரசினர் இளநிலை சீர்திருத்தப் பள்ளியில் அமைக்கப்பட்டுள்ள தையற்கூடங்களும், செங்கற்பட்டு, அரசினர் முதுநிலை சீர்திருத்தப்பள்ளியில் அமைக்கப்பட்டுள்ள தச்சுத் தொழிற்கூடமும், இயந்திரமயமாக்கப்பட்டு, அப் பிரிவுகளில் பயிலும் மாணவர்கள் நவீன இயந்திரங்களைக் கையாண்டு, ' உற்பத்தியினைப் பெருக்கவும் பயிற்றுவிக்கப் படுகின்றனர். நவீன இயந்திரங்களில் பணிபுரிவதன் மூலம் அவர்கள் விடுதலைப் பெற்றுச் சென்ற பின்னர் தனியார் நிறுவனங்களில் வேலை பெற அதிக வாய்ப்புகள் ஏற்படுகின்றன.

### இளங்குற்றவாளிகளின் வழிகாட்டி நிலையம்.

120. சென்னை, மதுரை, வேலூர் ஆகிய மூன்று இடங்களில் இளங் குற்றவாளிகளுக்கான வழிகாட்டி நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்நிறுவனங்கள், இளைஞர் நீதிமன்றங்கள், தனியார் மற்றும் பொது நிறுவனங்கள் அனுப்பும் இளைஞர்களின் மனநிலையை ஆய்ந்து அவர்களைப் பற்றிய மனவியல் அறிக்கைகளை வழங்குகின்றன. இதனைத் தவிர இந் நிலையங்கள் சிறார்களின் குற்றவியல் தன்மை பற்றி ஆய்வு நடத்தி அறிக்கை தருகின்றன. அருகாமையிலிருக்கும் வரவேற்பில்லங்களின் கோரிக்கைகளை இந் நிலையங்கள் தீர்த்து வைக்கின்றன. இந் நிலையங் களை செயற்குழு உறுப்பினர்கள் நடத்தினாலும், மொத்தச் செலவினப் பொறுப்பும் அரசினால் மேற்கொள்ளப்படுகிறது.

### வரவு-செலவு மதிப்பீடு.

123. 1980-81 ஆம் ஆண்டின் இரண்டாம் பகுதி திட்டப் பணிகளாக இலட்சமாகும். இதில் ஊழியர்கள் ஊதியம் மற்றும் இதர செலவினங்களுடன் தனியார் நிறுவனங்களுக்கு மான்யமாக வழங்கப்படும் தொகை ரூ. 11.22 இலட்சமும் இதில் அடங்கும்.

## வரவினங்கள்.

122. 1980-81 ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்படும் வரவினம் ரூபாய் 5.60 இலட்சமாகும்.

| | ரூபாய் இலட்சத்தில். |
|---|---|
| (1) சீர்திருத்தப் பள்ளிகளின் உற்பத்தியாகிய பொருட்கள் விற்பனை மூலம். | 3.00 |
| (2) இதர பலவகை வரவினம் மூலம். | 2.00 |
| (3) மகளிர் காப்பகங்கள் மூலம். | 0.30 |
| (4) பிற்காப்பு இல்லங்கள் மூலம். | 0.30 |
| மொத்தம் . . | 5.60 |

## புதிய திட்டங்கள்.

123. 1980-81 ஆம் ஆண்டின் இரண்டாம் பகுதி திட்டப் பணிகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டவை :

| வரிசை எண்ணும், திட்ட விவரமும். | மதிப்பீடு. (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| (1) | (2) |
| 1. சென்னை, அரசினர் பெண்கள் சீர்திருத்தப் பள்ளியில் இல்லவாசிகளுக்காக உணவுக் கூடம், சமையல் அறை மற்றும் மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டிக் கட்டுதல். | 2.50 |
| 2. மல்லிப்புதூர், அரசினர் இளநிலை சீர்திருத்தப் பள்ளியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல் மற்றும் ஊழியர்களின் குடியிருப்புகளை செப்பனிடுதல். | 1.00 |



| வரிசை எண்ணும், திட்ட விவரமும். | மதிப்பீடு. (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| (1) | (2) |
| 3. சேலம் மற்றும் கோயம்புத்தூரில் உள்ள (குறுகிய கால) மகளிர் மீட்பு மனைகளை (நீண்ட கால) காப்பகங்களாக உயர்த்துதல். | 2.62 |
| 4. தர்மபுரி மாவட்டத்தில், பஞ்சம்பள்ளி கிராமத்தில் ஒரு சீர்திருத்தப் பள்ளி (இளநிலை மற்றும் முதுநிலை) துவக்குதல். | 2.35 |
| 5. மாவட்டங்களில் இரண்டு வரவேற்பில்லங்கள் திறப்பது. | 3.00 |
| மொத்தம் | 11.53 |

## ஐந்தாண்டுத் திட்டப்பணிகள்.

124. மேற்குறிப்பிட்டத் திட்டங்களைத் தவிர்த்து, ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் (1978-83) இத் துறையின் நடவடிக்கைகளை மேம்படுத்தவும், கூடுதலாக சீர்திருத்த இல்லங்கள் மற்றும் தொழிற் பட்டறைகளை அமைக்க வேண்டி, சமூக நலத் திட்ட செயற்குழு மாநில திட்டக் குழுவினருடன் விவாதித்து ரூபாய் 96.97 இலட்ச இலக்கை இத் துறைக்கு ஒதுக்கீடு செய்ய பரிந்துரைத்துள்ளது. இத் தொகையைக் கொண்டு சுமார் 16 திட்டங்கள் சீர்திருத்த இல்லங்களில் பயிற்சி பெறும் மாணவ, மாணவிகளுக்காகவும், ஏனையோருக்காகவும் திட்டப்பட்டுள்ளன. ஐந்தாண்டுக்கால வரையறையான 1978-83 ஆம் ஆண்டுகளில் இத் திட்டங்கள் செயல்படுத்த முன்னேற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

125. அரசு திட்டங்கள் மற்றும் திட்டத்தின் பார்ப்படாத பணிகள் மூலமாகவும், வேறு வகைகளிலேயும், சமுதாயத்தில் நலிவுற்ற இளங் குற்றவாளிகளை ஏற்று, அவர்களுக்கு கல்வி மற்றும் வாழ்க்கைக் கல்வி புகட்டி ஒளிமயமான ஒரு எதிர்காலம் அமைத்து, அவர்களையும் எதிர்காலத்தில் பயனுள்ள குடிமக்களாக்க அயாது பாடுபட்டு வருகின்றது.

123065